
சிவமயம்







தேவகோட்டை

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

மணிவிழா மலர்

1975 சனவரி

உ

சிவமயம்

ஞாலம் நின்புகழே ஆகவேண்டும் தென்
ஆலவாயில் உறை எம் ஆதியே

தேவகோட்டை
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
மணிவிழா மலர்

பதிப்பாசிரியர்:
ஈசான தேவ நாம
டாக்டர் சுப. அண்ணாமலை

துணையாசிரியர்:
திரு. ஆ. ஆனந்தராசன், எம். ஏ.

1975 சனவரி]   [விலை: ரூ. 5.

Statement about Ownership and other Particulars about Newspaper

FORM IV

(See Rule 8)

1.	Place of publication:	...	Madurai
2.	Periodicity of its publication:	...	Nil
3.	Printer's Name	...	Mrs Santhi Chandrakasan
	Nationality	...	Indian
	Address	...	THE PARAMOUNT PRINTERS, 47, South Krishnan Kovil Street, Madurai. 625001.
4.	Publisher's Name	...	Prof. Dr. SP. Annamalai,
	Nationality	...	Indian
	Address	...	98, Arignar Anna Nagar, Madurai - 625020.
5.	Editor's Name	...	Prof. Dr. SP. Annamalai,
	Nationality	...	Indian
	Address	...	98. Arignar Anna Nagar, Madurai - 625020.
6.	Name and addresses of individuals, who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.	}	Sivasri Tatpurusha Desikar Manivizha Kuzhu 98, Arignar Anna Nagar, Madurai - 625020.

I, Prof. Dr. Annamalai, hereby declare that the particulars given above are true to the best of my knowledge.

SP. ANNAMALAI
Signature of Publisher.

Date: 5-1-1975

பாரமவுண்ட் பிரிண்டர்ஸ், மதுரை - 625001.

உள்ளுறை

பொருள்	எழுதியவர்		பக்க எண்
பதிப்புரை			
ஆசியுரைகள்			
வாழ்த்துரைகள்			
மணிவிழாச் செல்வரின் வாழ்க்கை வரலாறு	டாக்டர் சுப. அண்ணுமலை	...	1
வயிநாகரம் குடும்பச் சிறப்பு	வித்துவான் தா. குருசாமி ஓதுவார்	...	12
என் குருநாதர்	பழ. சண்முகம் செட்டியார்	...	19
மணிவிழாச் செல்வரின் ஞானசிரியர்	தி. சு. கோவிந்த சுவாமி	...	24
எங்கள் ஞானசிரியர் இனிது வாழ்க	அ. கணபதி வீ. மாரியப்ப செட்டியார் சிவதீக்ஷாமண்டலத்தார், கரூர் சுப. அண்ணுமலை	...	31
மணிவிழாச் செல்வரின் பல்துறைப் புலமை	அ. ஞானசம்பந்தன்	...	35
நான் அறிந்த பாலகவி	கி. வா. ஜகந்நாதன்	...	38
மணிவிழாச் செல்வரின் புலமை	சோமலெ	...	40
உயர்வடைய ஒரு வழி	திருமுருக கிருபானந்த வாரியார்	...	41
மணிவிழாச் செல்வரைப் பற்றி		...	48
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் இயற்றிய நூல்கள்		...	52
சைவ சித்தாந்தம்	முரு. பழ. இரத்தினம் செட்டியார்	...	54
ஒன்பது நகரக் கோயில்கள்	சி. வீர. நடராஜன் செட்டியார்	...	61
சங்க இலக்கியங்களில் சைவம்	கு. சுந்தரமூர்த்தி	...	64
ஸ்ரீலஸ்ரீ தத்புருஷ தேசிகரின் சேவை	பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை	...	67
ஸ்ரீலஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம்	பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை	...	69
மணிவிழாச் செல்வரைப்பற்றி ஒரு விஞ்ஞாபனம்	பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை	...	71
நம்பனின் அருளினில் வாழி	வித்துவான் கா. சொக்கலிங்கம்	...	73
வாழ்க பாலகவி	சு. நடராஜன்	...	76
குருநாதர் தொடர்பு	அ. கணபதி ஐயா	...	80
மணிவிழாச் செல்வரின் இளமை	பண்டித மு. முத்து வேங்கடாசலமையர்	...	84
மணிவிழாச் செல்வரின் தமிழ்க் கல்வி	எஸ். ஆழ்வாரையங்கார்	...	88

பொருள்	எழுதியவர்	பக்க எண்
மணிவிழாச் செல்வரின் இயற்றமிழ் ஆசிரியர்	டாக்டர் சுப. அண்ணுமலை	... 92
சொல்லாமல் சொன்னவர்	அரு. இலக்குவன்	... 94
அந்தர்யாகம்	K. கணேச பட்டர்	... 98
வயிநாகரம் குடும்ப. வம்சாவளி		... 100
வீடு பேறு	நா. சா. சாத்தப்ப செட்டியார்	... 102
ஸ்ரீ வரமஹா கணபதி மந்த்ராக்ஷராவளி ஸ்தோத்திரம்	கா. ம. வேங்கடராமையா	... 104
தேடிக் கண்டு கொண்டேன்	இராம. சண்முகானந்தா	... 109
திருவருள் பெறும் வழி	இராமலிங்கம்	... 113
சக்தியாகிச் சிவமாய்	பழ. சூடிக்கொடுத்தாள்	... 118

மணிவிழாச் செயற்குழு

தலைவர் :

வாம தேவ நாம திரு. நா. சா. சாத்தப்ப செட்டியார், ஒக்கூர்.

துணைத்தலைவர் :

தத்புருஷ தேவ நாம திரு. வயிநாகரம் சோம. கருப்பன் செட்டியார், அமராவதி புதூர்.

துணைத்தலைவர் :

அகோர தேவ நாம திரு. அரு. மு. மு. அருணுசலம் செட்டியார், காரைக்குடி.

துணைத்தலைவர் :

திரு. பழ. சிதம்பரம் செட்டியார், மேலைச்சிவபுரி.

பொருளாளர் :


ஈசான தேவ நாம திரு. சொ. தீ. சொ. மு. சொக்கலிங்கம் செட்டியார், இராமச்சந்திரபுரம்.

செயலாளர் :

ஈசான தேவ நாம டாக்டர் சுப. அண்ணுமலை, தேவகோட்டை.

உ

சிவமயம்



நிலவுலகின் வாழ்வதனைத் தாழ்வகற்றி
மாண்புறுத்தி நெடிது காலம்
அலகின்றித் தொடர்ந்துவரு மூலமலத்
தொடர்பகற்று மறிவைக் காட்டி
நலந்தருமைந் தெழுத்தோதிப் பூசைசெயு
முறைதந்து நம்மைக் காக்கும்
வலமுடைய சிவகுருவாம் தத்புருஷ
தேசிகர்தாள் வணங்கி வாழ்வாம்

—ஈசான தேவர்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]


[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]—



சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
தேவகோட்டை

உ
சிவமயம்.

பதிப்புரை

சைவத்தமிழ் உலகில் புகழும் சிறப்பும் உற்றுத் திகழும் தேவகோட்டைச் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் என்னும் தீட்சா நாமத்தினராகிய பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்களின் மணிவிழாவில் (ஆனந்த ஆண்டு மார்கழி 22 ஆம்நாள்6--1-1975) மலர்கின்றது இத் தமிழ் மலர். தமிழ்மணத்தோடு சிவமணமும் பொதுள விரிவது இம்மலரின் தனிச்சிறப்பு.

நாற்பது ஆண்டுகளாகத் தமிழும் சைவமும் தழைக்கச் சொல்லாலும், எழுத்தாலும், உபதேசத்தாலும் பெரும்பணி யாற்றி, ஆயிரத்திற்கும் மேற்பட்ட சீடர்கட்குச் சிவஞான குரவராக விளங்கும் அப்பெருந்தகையாரின் தகவிற்கு ஏற்ப இம் மணிவிழா மலர் அமைதலை விரும்பினேம். சைவ ஆதீனங்களின் குருமகாசந்நிதானங்களாக அருளாட்சி புரியும் பரமாச்சாரி யார்கள் ஆசியுரை அருளியும், அறிஞர் பெருமக்கள் பாராட்டுரை, மணிவிழா நாயகர் பற்றிய கட்டுரைகள், சிவஞானச் செம்-பொருட் கட்டுரைகள் ஆகியன வழங்கியும், எம் நல்விருப்பை நனிசிறப்புற நிறைவேற்றினர். ஆதீனத் தலைவர்களின் மலரடி களை வணங்கி, அறிஞர் பெருமக்கட்கு எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலர் ஒரு சிறந்த வாழ்க்கை ஏடாக நிலவ, நிழற் படங்கள் தந்துதவிய மணிவிழாச் செல்வர் அவர்கட்கு எம் வணக்கமும் நன்றியும் உரியன.

விளம்பரம்நல்கி, மலர் ஆக்கத்தில் துணைபுரிந்த வணிகப் பெருமக்களுக்கும், மணிவிழாக் குழுவினர்க்கும், மலர்க்குழு வினர்க்கும், துணையாசிரியர் திரு. ஆ. ஆனந்தராசன் அவர் கட்கும் எம் நன்றி உரியது.

ஈசான தேவ நாம
டாக்டர் சுப. அண்ணாமலை,
பதிப்பாசிரியன்.

VICE-PRESIDENT
INDIA
NEW DELHI

I am glad to know that the 60th Birthday of Shri Balakavi Vainakaram V. Ramanathan Chettiar will be celebrated on the 6th January, 1975. I congratulate Shri Chettiar on this happy occasion and wish him many happy returns of the day. I send my best wishes for the success of the celebrations.

(B. D. Jatti)

உ

குருபாதம்

தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக
ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம் P. O.

"ஞாலம் நின் புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

நமது தருமையாதீனப்புலவர் பாலகவி. வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் தமிழிலக்கண இலக்கிய நூல்களைச் சிறப்புறக் கற்றவர். திருமுறைகளிலும், சைவசித்தாந்த சாத்திரங்களிலும் சிறப்பான மெய்யறிவுடையவராய் விளங்குபவர். வைதிக மார்க்கங்களை வழுவாது கடைப்பிடித்தொழுகுபவர். இயற்றமிழ்க்கவிஞர். கற்றதை மற்றவர் உளங்கொள விரித்துரைக்கும் ஆற்றலுடையவர். தமிழகத்தின் பல பகுதிகளிலும் கடல் கடந்த நாடுகளிலும் சமய விரிவுரைகளாற்றியும் சைவ சித்தாந்த வகுப்புக்கள் நிகழ்த்தியும் சமயத் தொண்டாற்றி வருபவர். திருமடங்களிடத்து நீங்காத பற்றுக்கொண்டவர். பாலகவி அவர்களின் அறுபதாண்டு நிறைவை முன்னிட்டு அவர்தம் மாணவர்களும், அன்பர்களும் மணிவிழா நிகழ்த்துவதும், மலர் வெளியிடுவதும் பாராட்டற்குரியன.

விழா சிறப்புற நிகழவும், செட்டியார் அவர்கள் நலம் பல பெற்று வாழவும், மணிவிழா மலர் நன்கு மலர்ந்து பயன்தரவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ
சிவமயம்

ஸ்ரீலஸ்ரீ
அம்பலவாண பண்டார
சந்நதி அவர்கள்,
ஆதீனகர்த்தர்
திருவாவடுதுறை மடம்.

திருவாவடுதுறை
(தஞ்சை மாவட்டம்)

நமது அன்பர் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் என்னும் தீக்ஷா நாமம் பெற்றுள்ள பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் தமிழ் நாட்டிலும், மலேயா, இலங்கை முதலிய கடல் கடந்த நாடுகளிலும் சென்று, சித்தாந்த சாத்திர பாடம், சமயவிரிவுரை என்றின்னவற்ருல் சித்தாந்த சைவ உண்மைகளையும், செந்தமிழ் அருட்பனுவல்களின் பெருமையினையும் பல்லோருக்கும் உணர்த்தி வருவது செயத்தக்க நற்செயல் ஆகும். அன்னுர் இவ்வாண்டு மார்கழித்திங்களில் அறுபதாண்டு நிறைவெய்தி மணிவிழாச்சிறப்புறும் செய்தி நமக்குப் பெரிதும் மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறது.

மணிவிழா நன்கினிது சிறப்பாக நடைபெறவும், விழா மலர் ஒண்தீந்தமிழ்க்கட்டுரைகளைத்தாங்கி அன்பர் உள்ளங்களை மலர்விக்கவும், மணிவிழாக் கொள்ளும் அன்பர் தம் குடும்பத்தினருடன் நீடினிது வாழ்ந்து இம்மைப்பேறுகளும், சிவஞானமும் மேன்மேலும் பெருகப்பெற்றின்புறவும் நமது பூஜாமூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் செம்பொற்கழல்களைச் சிந்தித்து ஆசீர்வதிக்கின்ருேம்.

உ
சிவ சிவ

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

வாழ்த்துரை

நமது திருவண்ணுமலை ஆதீன விரிவுரையரசு, பாலகவி, வே. இராமநாதன் செட்டியார் அவர்கள், மணிவிழாப் பொலிவுகாண இருப்பது மகிழ்வைத் தருகிறது. மணிவிழா இனிதே நிறைவெய்தத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்ரேம். !

'பாலகவி' பாலருவாயரைக் குருவாகக் கொண்டு போற்றுபவர், அதனுல், இவரும் மழலைப் பருவத்திலேயே கவிஞரானர். பாலகவியின் கவிதைத்திறன் கருவில் அமைந்தது. முன்னைப் பிறப்பின் ஈட்டம். எளிதில் வெண்பாப் பாடுவார். யாப்புமுறை பிறழாது செம்பொருள் நிறைந்த கவிதைகளை ஆன்ருேர் மரபின் வழிப் பாடுவோர் அருகியுள்ள இக்காலத்தில் பாலகவி தமிழ்க் கவிதை உலகத்திற்கோர் வைப்பு.

பழந்தமிழ்க் கவிதைகளைச் சுவைத்து அனுபவிப்பதில் பாலகவி ஆர்வலர்: அவர் ஐங்குறுநூறு, சிதம்பரச் செய்யுட் கோவை போன்ற நூல்களுக்கு எழுதிய உரை விளக்கம் பாலகவியின் சொற்பொருள் தெளிவுரைக்கும் திறனுக்கும் எடுத்துக்காட்டு.

பாலகவி விரிவுரையாற்றுவதில் வல்லவர். பொதுப்பேச்சிலலல்ல. பொதுப் பேச்சில் வல்லவராக யாரும் வரலாம். ஆனுல், எளிதில் விளக்கமுடியாத தத்துவங்களை, மெய்யுணர்வுத் தொடர்பான செய்திகளை யாவரும் எளிதில் மனங் கொள்ளத்தக்கவகையில் விரிவுரையாற்றுவதில் பாலகவி வல்லவர். அதனுலன்ருே நமது குன்றக்குடித் திருவண்ணுமலை ஆதீனம் பாலகவியை *'விரிவுரை அரசு'* என்று சிறப்பித்தது.

பாலகவி சித்தாந்தச் செந்நெறியில் நின்ருெழுகுபவர். பல ஆண்டுகளாகச் சிவ பூசைசெய்து வருபவர். பலருக்குப் பூசை செய்யும் வாய்ப்பை வழங்கி வருபவர். இங்ஙனம், செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் சிறந்த தொண்டுகளைச் செய்துவரும் பாலகவி அம்மையப்பன் திருவருளால் பல்லாண்டு வாழ்க ! — வாழ்க !! ... ...

என்றும் வேண்டும் இன்ப அன்பு.
அடிகளார்.



திருவருள் தவயோக

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்

மதுரை ஆதீனம்

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.

தங்களுடைய 8 தேதி கடிதமும், தேவகோட்டை "நமது ஆதீன சித்தாந்த சைவ வித்தகர்" சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர், பாலகவி வயிநாகரம். இராமநாதன் செட்டியார் அவர்களது மணிவிழா அழைப்பிதழும் கிடைத்து மகிழ்ந்தோம்.

நகரத்தார்களிலேயே முறையாகச் சமய, விசேட, நிர்வாண, ஆசாரிய அபிடேகமும் பெற்ற சிவஞானச் செல்வராகவும், சைவ சித்தாந்த வித்தகராகவும், பேராசிரியராகவும் திகழ்கின்ற செட்டியார் அவர்களுக்கு பக்தர்கள் சேர்ந்து சிறப்பாக மணிவிழாக் கொண்டாடுவது எல்லோராலும் போற்றற்குரிய வைபவமேயாகும்.

அன்னாருக்குச் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும், சிந்திதமனோரதசித்தியும், அரோகதிடகாத்திரமும், தீர்க்காயுளும், அஷ்ட ஐஸ்வரிய ஆதிக்கமும், நித்திய மங்கள குரு கடாக்ஷமும், மென்மேலும் பெருக உண்டாகத் திருவருள் பாலிக்குமாறு, எல்லாம் வல்ல எம் அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தனை செய்த, விபூதிப் பிரசாதமும், குங்குமப் பிரசாதமும் இத்துடன் எழுந்தருளச் செய்திருக்கிறோம். எல்லோரும் திருவருட்கவசமாக அணிந்து மேன்மையுறுவீர்களாக.

எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

உ
சிவமயம்

காஞ்சிபுரம், தொண்டைமண்டலாதீன குரு மகாசந்நிதானம்,
திருக்கயிலாயமரபு, மெய்கண்டதேவ சந்தானம், ஞானபீடம்,

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

அருளிய

வாழ்த்து

பூமகள் நாமகள் பொருப்பின் பெருமகள்
மாமகள் வெற்றி மடந்தையும் உறையும்
பெருமையன் நகரப் பெருங்குலத் தோன்றல்
அருமைநண் பினன்பல ஆண்டளவளாவினன்
பாலரு வாயர்தம் பதமலர் மறவாச்
சீலநோன் பினன்மிகச் சிறந்தபண் புருவினன்
விண்மாண் புறுநலம் மிகும்இன் புளங்கொளா
நுண்மாண் நுழைபுலம் நுவலரும் பேரள
வியல்பா வுடைய இன்றமிழ் நாவலன்
முயல்பாங் கினில்வட மொழியும் உணர்ந்தவன்
உயர்தீட் சையுடன் ஓங்கா சானுய்
மயர்தீர் வகைபலர் மாணவர்க் கூட்டினன்
தருமையா தீனத் தமிழ்ப்பெரும் புலவன்
ஒருமை யுணர்வொடும் உமாபதி திருவடி
வழிபடும் வகைநிகர் மாநிலத் திலாதவன்
கழிபடும் மும்மலக் கவினுறும் உயர்சிவ
வேடத் தினன்மொழி மெய்யுளம் குருவையே
நாடத் தந்த நற்பெருந் தகையவன்
இராம நாதன் எனும்உயர் சிரேட்டி
பால கவியெனப் படிபுகழ் முதுகவி
சால ஆயுளுஞ் சகலநல் வளங்களும்
கோல வாழ்க்கையும் குருதிரு வருளொடு
மேலதா உற்றுமா விளக்கம் எய்திச்
சூழ்கதிர் மதியம் துலங்குமெக் காலமும்
வாழ்க நீடுழி வாழ்கநன் கினிதே.

உ

சிவ சிவ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அதிபர், ஸ்ரீகாசிமடம்.



ஸ்ரீ காசி மடம்

திருப்பனந்தாள்

(தஞ்சை ஜில்லா)

அந்நாள் பாலகவி இந்நாளில் ஒரு பெருங்கவிஞர். அவர் பேசுவதை ஏட்டில் எழுதினுல் அவை பல பாடல்களாகவே அமையும். பேச்சு எளிய பேச்சும் அன்று; சைவசித்தாந்தத்தின் சாரமே அவர் பேச்சில் காணலாம். அவர் தொண்டு தமிழ் நாட்டில் மட்டும் அமையவில்லை. கடல்கடந்து சைவத் தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்கின்றனரோ அங்கெல்லாம் பரவியுள்ளது. அவர்தம் மாணுக்கர் தமிழ் இலக்கண இலக்கியம் மட்டும் கற்றவர் அல்லர்; மறுமைக்குரிய சித்தாந்த சாத்திரங்களையும் கற்று அவற்றின் பயனுகச் சிவ தீக்ஷை பெற்று முத்திக்கு வித்தைத் தேடியவர் ஆவர். எளிய தோற்றம்; இனிய பேச்சு; நல்ல பழக்கம்; யாவர் மாட்டும் அன்புடைமை-இவற்றின் உருவே பாலகவி-இந்நாள் தத் புருஷ தேசிகர் எனப்-பெறும் திரு. வே. வயிநாகரம் இராமநாதன் செட்டியார் ஆவர். அவர்கட்கு அறுபதாவது அகவை நிறைவு அண்மையில் வருகிறது. அம்முதுபெரும் சைவ சித்தாந்தப் பேரறிஞர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்வாராகுக எனச் செந்திலாண்டவன் திருவருளைச் சிந்திக்கின்ரேம்.

சுபம்

பேராசிரியர்

லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் சென்னை

என் நண்பர் பாலகவி திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கு அறுபது ஆண்டுகள் நிறைவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களின் அரும் பணிகளைப் பாராட்டும் மணிவிழா மலர் வெளிவருவது வரவேற்றற்குரியது. அவர்கள், அன்பும் பண்பும் நிறையப் பெற்றவர்கள்; இளமையிலிருந்தே கவிபாடும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர்கள் என்பதற்கு அவர்களின் நூல்கள் சான்று பகரும். அவர்கள் இயற்றிய தமிழ் இசைப் பாடல் தொகுதி ஒன்று, இசை அமைக்கப்பெற்று, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தினுல் வெளியிடப்பெற்றிருப்பது, சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. அவர்கள், பாடம் சொல்லியும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் சைவ சமய நூற்பயன்களைப் பலரும் பெறச் செய்தவர்கள். அவர்களின் சைவத் தமிழ்ப் பணிகள் மேலும் மேலும் வளரப் பெற்று, அவர்கள் நீடூழி வாழ அருள் புரிய இறைவனை வேண்டுகிறேன்.

லெ. ப. கரு. இராமநாதன்.

டாக்டர் வ. சுப மாணிக்கம், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

தமிழ்ப் பேராசிரியர், ஆட்சிக்குழு உறுப்பினர்,
முதன்மையர், இந்திய மொழிப் புலம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்.

தேசிகர் ஐயாவுக்கு வணக்கம்

சிவஞானகுரு பாலகவி வயிநாகரம் இராமநாதன் செட்டியார் அவர்கள் சைவசமயத் துறையில் பேரறிவும் பெருநிலையும் எய்தியவர்கள். தமிழ்ப்பற்றும், சமயப்பற்றும் இணைந்தவர். இலக்கண இலக்கிய நூல்களையும் சமய நூல்களையும் நன்கு கற்று அவற்றை இனிமையாக எடுத்துச் சொல்லுபவர். செட்டிநாடு என்ற வாரஇதழின் ஆசிரியராய்க் கருத்துக்களைப் பரப்பியவர். ஆரவாரமும் ஆசையும் துறந்து ஆற்றொழுக்குப்போலச் சைவப்பணியில் ஈடுபட்டவர். பல நெறிமுறைகள் படிப்படியாகக் கைவரப்பெற்று ஆணயாஞ் சிவத்தைச்சார அணைந்தவர். அம்மையின் ஞானப்பாலை உண்ட திருஞான சம்பந்தரிடம் தனிப்பற்றுடையவர். புதிய பாசுரங்களைப் படைத்தருளிய பாலகவி ஞானகுருவின் மணி விழா உயிர்களுக்கு இன்பம் பயப்பது; உள்ளங்களுக்குத் தெய்வவுணர்ச்சி நல்குவது; உடல்களுக்கு நோய் நீக்குவது.

மணிவிழாவிற்கு உரிய சைவஞான தேசிகர் எண்ணற்ற உயிர்கள் இறைபணி செய்வதற்கு இன்னும் நீடூழி வாழ்ந்து விளங்குக.

அன்பன்

வ. சுப. மாணிக்கம்.

அ. ச. ஞானசம்பந்தன்.

11-I Trust Link Street,
MANDAVELIPPAKKAM,
MADRAS-600028.

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள் அறுபதாண்டு நிறைவுற்ற இளைஞராக விளங்குகிருர். சமயம் பற்றிப் பேசுவதும் சமயத்தைப் பரப்ப முனைவதும் தவருன செயல்கள் என்று கருதப்பெறும் இற்றை நாளில் அறுபதாண்டு இளைஞர் ஒருவர் ஊர்தோறும் சென்று சமயப்பணி செய்கிருர் என்ருல், அது வியப்புக்குரியது. செல்லுமிடங்களில் எல்லாம் இளைஞர்கட்கும் முதியவர்கட்கும் வழிபாட்டின் இன்றியமையாமையை எடுத்துக் கூறி அவர்கட்குச் சிவதீட்சையும் செய்துவைக்கிருர் என்ருல் அவருடைய உறுதியைப் பாராட்டியே தீரல் வேண்டும்.

எதற்கும் அஞ்சாமல் இறைபணியை மேற்கொண்டு நடாத்தும் தேசிகர் போன்றவர் இருக்கும்வரை எத்துணைப் பேர்கள் நாத்திகவாதம் பேசினுலும் நாட்டுக்கு ஒரு தீமையும் விளையாதென்பது உறுதி.

இறைபணியைத் தம் கடமையாகவும், தொண்டாகவும் கொண்டுள்ள அவருக்கு எல்லா நலங்களும், நீண்ட ஆயுளும் இறைவன் அருள்புரிய அவன் திருவடிகளை இறைஞ்சுகிறேன்.

அன்பன்

அ. ச. ஞானசம்பந்தன்.

உ

சிவமயம்.

மணிவிழாச் செல்வரின் வாழ்க்கை வரலாறு

* டாக்டர் சுப. அண்ணுமலே

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பது திருவள்ளுவர் திருவாக்கு. படைப்புக்காலந்தொட்டு இந்நிலவுலகில் தோன்றியவர்களின் எண்ணிக்கை அளவில் அடங்காததாகும். அத்துணைத் தோற்றத்தைப் பெற்ற உலகத்தில் மிகச் சிலரே என்றும் நின்று நிலவுகின்ற புகழுடம்பு உடையவராக இருக்கின்றனர். உலகத்தில் நிகழும் படைப்பை இரண்டு வகைப்படுத்தி அருள் நூல்கள் கூறும். ஒன்று: பிரமதேவனுல் படைக்கப் பெறுவது. இன்னென்று: பரம்பொருளாகிய சிவபெருமானுலேயே படைக்கப் பெறுவது. முன்னேயதைப் பிரம சிருட்டி என்றும் பின்னேயதைச் சிவ சிருட்டி என்றும் சொல்லுவர். பிரமனுல் படைக்கப் பெற்றவரிற் பலர் வினே நுகர்ச்சியில் பெரும்பான்மையும் அருள் நுகர்ச்சியில் சிறுபான்மையும் உடையவராயிருப்பர். சிவ பெருமானுல் படைக்கப் பெற்றவரோ இருவினேயொப்பு முதலிய உயர்நலங்களேப் பெற்றுத் தாமும் அருள் வழியில் நின்று தம்மைச் சார்ந்தோரையும் அருள் வழியில் நிறுத்துவர். அத்தகைய சிவஞானச் செல்வராகிய சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களின் மணி விழா மலரில் அவர்களது வாழ்க்கை வரலாறு விரிவாக இடம் பெறுதல் வேண்டுமல்லவா? அதனே இங்கே ஒருவாருக எழுத முற்படுகிறேன்.

மரபுச் சிறப்பு:

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வழிவழியாகச் சிவ புண்ணியம் புரிவதில் பேருக்கம் கொண்டு வாழ்பவர்கள். சைவமுந்தமிழும் ஒருங்கே வளரும் பாண்டி நாட்டில் தாங்கள் வாழ்வதற்கெனத் தொண்ணூற்ருறு ஊர்களேத் திட்டஞ் செய்துகொண்டு தங்கள் குலதெய்வங்களாக ஒன்பது சிவாலயங்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளேப் போற்றி வழிபாடு செய்துவருபவர்கள். இவ்வொன்பது திருக்கோயில்களுள் மேற்கில் திருப்புத்தூரையும் கிழக்கில் குன்றக்குடியையும் கொண்டு நடுநாயகமாக விளங்குவது பிள்ளேயார்பட்டித்



திருக்கோயில். இந்தத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள கற்பக விநாயக மூர்த்தியையும் வாடாமலர் மங்கை உடனாய மருதீசரையும் குலதெய்வங்களாகக்கொண்டு வழிபடும் பிள்ளையார் பட்டித் திருக்கோயிலைச் 'சேர்ந்தவர்கள் நமது மணிவிழாச் செல்வர் பரம்பரையினர்.

குடும்பப் பெருமை :

நகரத்தார்களில் பெரும்பான்மையினர் திருக்கோயில் திருப்பணி அல்லாத மற்றைச் சிவ புண்ணியங்களை மட்டும் செய்துவந்த அந்த நாளில் (கி. பி. 1850) முதன் முதலாகத் திருவாலவாய் முதலிய பல திருத்தலங்களில் சிவாலயத் திருப்பணியைப் பெரும் பொருட் செலவில் செய்யத் தொடங்கி நிறைவேற்றியவர்கள் அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தினர். அந்தக் குடும்பத்தில் ஸ்ரீமீனாட்சி அம்மையின் பேரருளைப் பெற்று அந்த அருள் வடிவமாகவே வாழ்ந்திருந்த ஆன்மார்த்த சிவ பூஜா துரந்தரர் ஸ்ரீ நாகப்ப ஐயா அவர்களின் பேரனாரது திருமகனார் நமது மணி விழாச் செல்வர்.

தோற்றம் :

நகரத்தார்களது ஊர்களில் கோனாபட்டு என வழங்கும் கோ நகரும் ஒன்று. இவ்வூரில் வழி வழியாக ஆலயத் திருத்தொண்டு ஆதிய சமயப் பணிகளைச் செய்து வருகின்ற கோயில் செட்டியார் குடும்பத்தில் மகாதேவ முருகப்ப செட்டியார் அவர்களுக்கும் சீதை ஆச்சி அவர்களுக்கும் இரண்டாவது புதல்வராக ஆனந்த ஆண்டு மார்கழித் திங்கள் இருபத்தாறாம் நாள் (9—1—1915) சனிக்கிழமை சுவாதி நன்னாள் நவமிதிதி இரவு நாற்பத்தாறே முக்கால் நாழிகைக்குத் தேசிகர் அவர்கள் தோன்றினார்கள். அப்போதிருந்த கோள் நிலை :

			சனி
வி ரா	இராசி நிலை		
பு			கே
சூ செ	சுக்	ல சந்	

இவர்களது தோற்றக் காலத்தில் தந்தையார் மகாதேவா அவர்கள் கோனாபட்டில் பிள்ளையார்பட்டிக் கோயில் நகரத்தாருக்குச் சொந்தமாகிய கற்பகப் பிள்ளையார் கோயில் திருப்பணியிலும், தம் மூத்த புதல்வர் பழநியப்பச் செட்டியார் முறையாகக் கற்பதற்கென அமைத்த கற்பக விநாயகர் கலாசாலைத் திருப்பணியிலும் இடையீடின்றி ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். தெய்வ விளக்கமும், அறிவு விளக்கமும் தரும் திருப்பணிகளில் பெற்றோர்கள் ஊக்கமுடன் ஒன்றியிருந்த சமயத்தில் தோன்றியதனாலேயே அவ்விரு விளக்கங்களுக்கும் ஆதாரமாக நம் மணி விழாச் செல்வர் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். இஃது இவர்களது கருவிலே திருவுடைமையைக் காட்டுகின்றது.

இளமை வாய்ப்பு :

மகாதேவா அவர்கள் அந்த நாளில் சைவ ஆதீனங்களில் தலைவர்களாய் எழுந்தருளி இருந்தவர்களுடனும் சைவப் பெரும் புலவர்கள், தமிழ்ப் பெரும் புலவர்களுடனும் மற்றைச் சான்றோர்களுடனும் நெருங்கிப் பழகி அவர்களால் நன்கு மதிக்கப்பெற்று வாழ்ந்திருந்தவர்கள். அதனால் மிக்க இளமையிலேயே நம் மணிவிழாச் செல்வருக்குத் தமிழ்நாட்டுச் சான்றோர்கள் பலரைக் காணவும் தொடர்ந்து அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் வாய்த்தது. எடுத்துக்காட்டிற்கு ஒரு நிகழ்ச்சி :

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம். திருவாவடுதுறை ஆதீனத்தில் 17-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்து ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் அருட் செங்கோலோச்சிய காலம். அவர்களது அவதாரத் தலமாகிய குன்றக்குடியை அடுத்த துலாவூரில், அவர்களைச் சைவ உலகத்திற்கு வழங்கிய குடும்பத்தினருக்கும் மகாதேவா அவர்களுக்கும் இருந்த தொடர்பினால் மகா சந்நிதானம் அவர்களைத் தரிசிக்க அடிக்கடி மகாதேவா அவர்கள் திருவாவடுதுறைக்குச் செல்வதுண்டு. 1917-ஆம் ஆண்டில் மகாதேவா அவர்கள் மனைவியாருடனும் மைந்தராகிய 2 வயது நிரம்பிய நம் மணிவிழாச் செல்வருடனும் துறைசைத் திருமடத்திற்குச் சென்றிருந்தபோது ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் சம்பிரதாயத்தைக் கூடப் பொருட்படுத்தாது, திருவருள் உந்தியதாலோ என்னவோ நம் மணிவிழாச் செல்வரைத் தமது மடியிலிருத்தித் திருநீறு பூசி "இவன் திருஞான சம்பந்தரைப் போல வருவான்" என்று ஆசீர்வதித்தருளினார்கள். இச்செய்தியை நம் மணிவிழாச் செல்வரின் அன்னையார் சீதை ஆச்சி அவர்களும், திருவாவடுதுறை மடத்தில் இளமை முதல் வாழ்நாள் முழுவதும் பணியாற்றி வந்த ஸ்ரீ பொன்னுசாமி ஐயர் அவர்களும் அடிக்கடி சொல்வார்களாம். மகா சந்நிதானம் அவர்களின் அருளாசியே திருஞான சம்பந்தப் பெருமானின் கருணைக்கு ஆதாரமாக நம் மணி விழாச் செல்வருக்கு வாய்த்தது போலும்.

இளம் பருவ நற்செயல்:

மிக்க இளம் பருவத்திலிருந்தே தம்மோடொத்த சிறுவர்களுடன் கூடிவிளையாடுவதும் வீண்பொழுது போக்குவதுமாகியவற்றில் இவர்கள் மனம்சென்றதில்லை. நற்செயல்களைத் தாம் செய்வதும், அதற்குத் தம்மோடு இணங்கும் சிறுவர்களுடன் மட்டும் நெருங்கிப் பழகுவதும்தான் அப்போதிருந்த இயல்பு.

பள்ளிப்படிப்பு:

தந்தையார் நிறுவிய கற்பக விநாயக கலாசாலையில் உரிய பருவத்தில் வித்தியாரம்பம் செய்விக்கப் பெற்று உடன்பயிலும் மாணவர்கள் அனைவரிலும் தலைசிறந்த மாணவராகத் திகழ்ந்தார்கள். பன்னிரண்டாவது வயதில் கலாசாலைப்படிப்பு நிறைவெய்த, அதன்பின்னர் கலாசாலையில் தலைமை ஆசிரியராகவிருந்த வித்வான் எஸ். ஆழ்வாரய்யங்கார் அவர்களிடம் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பாடத் திட்டப்படி இலக்கண, இலக்கியங்களைப் பயின்றார்கள். வடமொழி, ஆங்கிலம், இசை ஆகியவற்றில் கலா

சாலையில் பெற்ற அறிவு பின்னர் முறையான பயிற்சியினால் மேம்பாட்டை அடைந்தது.

பேச்சுவன்மை:

தமது 14-வது ஆண்டில் அவையினர் மதித்துப் பாராட்டும் அளவுக்குச் சிறந்த பேச்சுவன்மை பெற்றார்கள். அந்த ஆண்டிலேயே சென்னையிலிருந்த கருணானந்த சுவாமிகள் கீழச்சிவற்பட்டியில் கூட்டிய சாதுசங்கமகா சபைக்குத் தலைமைவகித்து நம் மணிவிழாச்செல்வர் சிறப்புற நடத்தியமை குறிப்பிடத் தக்கது.

பாலகவிப்பட்டம்:

இளமையிலேயே சொற் பொருட் செறிவுள்ளவையும் யாப்பிலக்கண அமைதி வழுவாதவையுமான பல பாடல்களை விரைந்து இயற்றும் ஆற்றலைப் பாராட்டி ஆத்தங்குடி சனாதன தர்ம மகாசபையார், நீதிபதி கனம் K. S. இராமசாமி சாஸ்திரிகள் தலைமையில் "பாலகவி" என்னும் சிறப்புப் பெயரை வழங்கிச் சிறப்பித்தார்கள். இந்தச் சிறப்புப் பெயர் மிக்க இளமையிலேயே இவர்களுக்கு வந்துவிட்டபடியால் இயற்பெயரைக்கூட இது மறைத்துவிட்டது. இந்தச் சிறப்புப் பெயருக்குப் பிறகு இன்னும் பலசிறப்புப் பெயர்களை அன்பர்கள் இவர்களுக்கு வழங்கியுள்ளார்களாயினும் "பாலகவி" என்னும் இத் திருப்பெயரே உலகறிந்த ஒரு பேராக இருப்பது கண்கூடு.

சுவீகாரம்:

அமராவதி புதூர் வயிநாகரம் நாகப்ப ஐயா அவர்களின் பேரர் வேங்கடாசலம் செட்டியார் அவர்கள் தேவகோட்டையில் சிவபுண்ணியப் பெருங் குடும்பத்தில் வந்தவர்களாகிய சத்திரம் அருணசலம் செட்டியார் அவர்களின் பேத்தி அலர்மேலு ஆச்சி அவர்களைத் திருமணம் புரிந்து கொண்டு இல்வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அவர்கள் 1914-ம் ஆண்டு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருவடி நீழலை அடைந்த பின்னர், அலர்மேலு ஆச்சி அவர்கள் அமராவதி புதூரை விட்டுத் தேவகோட்டையில் தம் தாய் வீட்டில் இளைய சகோதரர் அருணசலம் செட்டியார் அவர்கள் (ரெட்டை அரு.) ஆதரவில் தங்கியிருந்தார்கள்.


1934-ம் ஆண்டில் ரெட்டைஅரு. அவர்களின் சைகோன் கடைக்கு அலுவலராக அனுப்பப்பெற வேண்டுமென்று தந்தையாருடன் தேவகோட்டை வந்த நம் மணிவிழாச் செல்வரின் அறிவாற்றல், நற்குண, நற்செய்கைகளை நேரில் கண்டறிந்த ரெட்டை அரு. அவர்கள் தம் தமக்கையார் அலர்மேலு ஆச்சி அவர்களின் சுவீகார புத்திரராக அழைத்துக்கொண்டார்கள். அதுபோழ்து, ரெட்டைஅரு. அவர்களின் நிருவாகத்தில் இருந்து வந்த தேவகோட்டை சைவப்பிரகாச வித்தியாசாலை, மெ. வகை அறுபத்து மூவர் குருபூசை மடம் ஆகிய அறநிறுவனங்களின் முழுப்பொறுப்பையும் ஏற்று நடத்த நம் தேசிகர் அவர்களை அரு. அவர்கள் நியமித்தார்கள்.

திருமணமும்
மாளிகை அமைப்பும்:

1935ம் ஆண்டில் தேவகோட்டை கு. கரு. வெ. அண்ணாமலை செட்டியார் அவர்களின் புதல்வி மீனாட்சிஆச்சியை நம் மணிவிழாச் செல்வர் அவர்கள்



◀— பள்ளிப் பருவம்




சமய தீட்சை
பெற்றவுடன் —▶



விசேட தீட்சை பெற்றவுடன் —▶

வண்டமிழ் ஞானசிரியர் வாழ்க்கை ஏடு




இசை அறிஞராக




இதழாசிரியராக




போதகாசிரியராக




பேச்சாளராக



திருமணம் ஆனவுடன்



அஸ்திராபிடேக யாகசாலையில்



நிருவாண தீட்சை பெற்றுச்
சிவலிங்க பூசை எழுந்தருளச் செய்துகொண்டபோது



59-ஆவது ஆண்டு நிறைவு அஸ்திராபிடேக விழா (1973, டிசம்பர்)

திருமணம் புரிந்து கொண்டார்கள். அந்த ஆண்டிலேயே தாம் வசிப்பதற்குப் "பாலருவாயர் நிலையம்" என்னும் பெயரிய திருமனையை உருவாக்கித் தமது தெருவிற்குச் "சம்பந்தர் தெரு" என்னும் பெயர் வழங்க ஆவன செய்தருளினார்கள்.

சான்றோர்தொடர்பு:

"பாலருவாயர் நிலையத்தில்" வசிக்கத் தொடங்கியதிலிருந்து பலமாணவர்களுக்கு இலக்கண, இலக்கியங்கள் சமய நூல்கள், சாத்திரநூல்களைத் தொடர்ந்து பாடம்சொல்லி வருகிறார்கள். இவர்களிடம் பயின்ற மாணவர்களில் பலர் பேராசிரியர்களாகவும், சிறந்த பாவலர்கள், பேச்சாளர்கள் எழுத்தாளர்களாகவும் இருந்து வருகிறார்கள். காரைக்குடியில் சைவ சித்தாந்தப் பெரும்புலவராகவும் நிர்வாண தீக்ஷைவரை பெற்றுச் சைவ சம்பிரதாயத்தை வழுவின்றிக் கடைப்பிடித்து வந்தவராகவும் இருந்த ஸ்ரீசொக்கலிங்க ஐயா அவர்கள், உலகன்பட்டி திரு. இலக்குமணசுவாமி அவர்கள், கொரடாச்சேரி வாலையானந்த சுவாமி அவர்கள், சூரியனார்கோவில் இலக்கணம் முத்துக்குமாரத்தம்பிரான்சுவாமி அவர்கள், ஆகியோர்களின் போதனைகளாலும் தேவகோட்டை பெரியமைனர், சிவாகம சங்கத்துச் சித்தாந்த சாத்திர போதகர் திரு. பொ. முத்தையாபிள்ளை, திருவாவடுதுறை ஆதீன வித்வானாயிருந்த திரு.சிதம்பரராமலிங்கம்பிள்ளை, தூத்துக்குடி திரு.ந.சிவகுருநாதபிள்ளை முதலிய சமயப்பேரறிஞர்களின் அளவளாவுதலாலும் கிடைத்ததெளிவினால் எத்தகைய அரும்பொருளையும் கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய் விளக்கும் வன்மை நம் மணிவிழாச் செல்வருக்கு அமைந்தது.

தருமையாதீனத் தொடர்பு:

1940 – ல் திருநெல்வேலி தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் கூட்டப்பெற்ற மெய்கண்ட சாத்திர மாநாட்டில் பதினான்கு சாத்திரங்களையும் பல புலவர்கள் விளக்கிப் பேசினார்கள். ஒவ்வொருவரின் பேச்சும் கட்டுரையாக எழுதிக் கொடுக்கப்பெற்றது. தருமபுர ஆதீனத்தில் அப்போது தலைவர்களாக எழுந்தருளி இருந்த ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் ஒவ்வொரு சாத்திரத்திலும் சிறந்ததாயிருக்கும் ஒவ்வொரு கட்டுரைக்கும் பரிசுகள் வழங்கத்திருவுளம் பற்றினார்கள். வினாவெண்பா என்னும் சாத்திர நூலுக்கு நம் மணிவிழாச்செல்வர் எழுதியகட்டுரையே பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றது. முன்னர் 1927–முதல் மதுரைதிருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்திலும் 1931 முதல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்திலும் மடாலயத் தலைவர்களால் நன்கு மதிக்கப்பெற்றிருந்த நம் மணிவிழாச் செல்வர் இப்போது தருமையாதீன கர்த்தர் அவர்களின் அருட்குறிப்புக்குப் பாத்திரமானார்கள். 1941 - ல் தருமை மடாலயத்தில் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்தாண்டு ஆட்சி விழாவும் ஆவணிமூலத் திருமுறைத் திருநாளும் பலபெரும் புலவர்களின் நிகழ்ச்சிகளோடு நடைபெற்றபோது நம் மணிவிழாச் செல்வரின் பேச்சைஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கேட்டுத் திருவுளம் மகிழ்ந்து தனியாக விரிவுரையாற்றப் பணித்து அதனையுங் கேட்டு மகிழ்ந்தும், ஆவணிமூல நன்னாளில் பூசைமடத்தில் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீசொக்கலிங்கப்பெருமானுக்கு

விசேட பூசை செய்து சந்நிதியிலேயே இண்டை சாத்தி, அருட்பிரசாதத்துடன் "ஆதீன வித்வான்" என்ற சிறப்புப்பெயர் வழங்கியும் பாராட்டியருளினார்கள்.

பெண்மகப்பேறு:

1946 இல் (பார்த்திப பங்குனித் திங்கள்) சுவாதிநாள் காரைக்கால் அம்மையார் திரு நட்சத்திரத்தில் நம் தேசிகர் அவர்கட்குத் தலைமகள் (மீனாட்சி) பிறந்தாள்.

தேர்வாளராக அரசினர் நியமனம்:

1940-இல் புதுக்கோட்டைத் தனியரசினர் நடத்திவந்த பண்டிதர் தேர்வுக்குத் தேர்வாளர் குழுத்தலைவராக நம் தேசிகர் அவர்களை நியமித்தனர். இவர்கள் அப்பதவியில் பல்லாண்டுகள் இருந்து தமிழ்ப்பணி புரிந்தனர்.

நிர்வாண தீட்சை:

சென்னிமலையில் திருவவதாரம் செய்து, தேவகோட்டைச் சிவாகம சங்கத்தில் சித்தாந்த சாத்திரம் பயின்று ஸ்ரீகாசி, நேபாளம், காஷ்மீர் ஆகிய இடங்களில் சிவாகமச் சுவடிகளைத் தேடிக் கொணர்ந்து சிவாகம ஞான பானுவாக விளங்கிய பழனி சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளின் அருள் நோக்கம் நம் மணி விழாச் செல்வரின் பத்தாவது ஆண்டுப் பருவத்திலேயே கிடைத்தது. அது முதல் அவர்கள்பால் சமயநுட்பங்களை வாய்க்கும் போதெல்லாம் கேட்டுவந்து சமய தீக்ஷை, திருமுறைப்பூசை ஆகியவற்றை அவர்களிடம் முறையாகப் பெற்றுக் கடைப்பிடித்து வந்தார்கள். திருமுறைப்பூசை எழுந்தருளுவித்துக் கொண்டதுமுதல் ஆண்டுதோறும் சித்திரை முதல் நாளில்தொடங்கி நாளுக்கு 50 பாடல்கள் வீதம் பாராயணம் செய்து பன்னிரு திருமுறைகளையும் பங்குனி இறுதி நாளில் நிறைவு செய்து வருகிறார்கள். இந்த முறையில் இப்பொழுது 42-வது சுற்று நடைபெற்றுவருகிறது. இதனுடன் மெய்கண்டசாத்திரங்களையும் ஆண்டுக்கு நான்கு முறை பாராயணம் செய்து முடித்து வருகிறார்கள். நம் மணிவிழாச் செல்வர், 1947-ஆம் ஆண்டு (விய) மகாசிவராத்திரி நன்னாளில் சிவபூசையுடன் நிர்வாணதீக்ஷைப் பேறும் பெற்றார்கள். மதுரை அம்மன் சந்நிதி அறுபத்து மூவர் குருபூசைமடத்தில் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளால் செய்துவைக்கப்பெற்ற இந் நிர்வாண தீக்ஷையின்போது பூர்வாங்க நாள் தொடங்கிப் பல அன்பர்களுக்குச் சமய, விசேட தீக்ஷைகள் நிகழ்ந்தன. மூன்று நாட்கள் சிவாகம விதிப்படி நிகழ்ந்த தீக்ஷையை மதுரையிலிருந்தும் மற்ற ஊர்களிலிருந்தும் தக்கார் பலர்வந்து தரிசித்துப் பயன்பெற்றார்கள்.

இதழாசிரியர்:

காரைக்குடியில் இயங்கிவந்த 'செட்டிநாடு' வார இதழின் நிருவாகப் பொறுப்பை 1948 இல் தேசிகர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, பின்னர் 1950 இல் அந்நிறுவனத்தை விலைக்கு வாங்கி உரிமையாளரும் ஆசிரியரும் ஆனார்கள். அதன் பின்னர் அவ்விதழ் ஐந்தாண்டுகள் இயங்கியபோது, இலக்கியம், சமயம், சாத்திரம் பற்றிய கட்டுரைகளை எழுதிவந்தார்கள். இவ்விதழிலேயே நற்றிணை முழுவதற்கும் தெளிவுரை எழுதி வெளியிட்டார்கள். இவர்

களின் கட்டுரைகள் பலவும் மற்ற திங்கள் இதழ்கள், மலர்கள் முதலியவற்றில் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஸ்ரீ வைகுண்டம் "குமரகுருபரன்" திங்கள் இதழில் குமரகுருபர சுவாமிகளின் பிரபந்தங்கள் அனைத்திற்கும் இவர்கள் உரை வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் அவை தனித் தனி நூல் வடிவிலும் வந்துள்ளன. இப்போது அவ்விதழில் மெய்கண்ட நூல்களில் முதலாவதாகிய திருவுந்தியாருக்கு உரைவிளக்கம் எழுதி வருகிறார்கள்.

சேக்கிழார் திருநாள்:

தேவகோட்டையில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணவராகவும் அழுத்தமான சைவப்பற்று உடையவராகவும் வன்றொண்டச் செட்டியார் என்று திருவாவடுதுறை ஆதீனம் 16-ஆவது பட்டம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அவர்களால் சிறப்புப்பெயர் அளிக்கப்பெற்றவராகவும் விளங்கிய திரு. நாராயணன் செட்டியார் அவர்கள் சேக்கிழார் பெருமானிடத்தில் எல்லையற்ற அன்பு உடையவர்களாக இருந்துவந்தார்கள். அவ்வன்பு சேக்கிழார் பெருமானுக்குத் தேவகோட்டையில் ஒரு திருக்கோவில் அமைக்கவும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களைக் கொண்டு சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடுவிக்கவும் தூண்டுகோலாயிருந்தது. வன்றொண்டர் அவர்கள் சேக்கிழார்பெருமான் திருக்கோயிலுக்கு என்று வாங்கி வைத்திருந்த இடத்தில்தான் நகரச் சிவன் கோயில் கட்டப் பெற்றுள்ளது. இக்கோயிலில் வன்றொண்டர் அவர்களின் விருப்பப்படி சேக்கிழாருக்குத் தனிக் கருவறையுடன் கோயிலும் நான்குகால நாட்பூசையும் அமைந்துள்ளன. இச்சிறப்பைக்கருதி இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் வைகாசிப்பூசத்தில் சேக்கிழார்விழா நடத்துதற்கு நம் மணிவிழாச் செல்வர் அவர்களும் தமிழ் வள்ளல் உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்களும் திட்டமிட்டு, நகரப் பெருமக்களையும் சேர்த்துச் சேக்கிழார் திருநாட்கழகத்தினை 1947இல் அமைத்தார்கள். தொடக்கவிழா சிவக்கவி மணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் தலைமையில், பழனி சிவஸ்ரீஈசான சிவாச்சாரிய சுவாமிகள் சேக்கிழார் பெருமான் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கவும் மகாமகோபாத்தியாய, பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் தொடக்கவுரை நிகழ்த்தவும், பல பேரறிஞர்கள் சிறப்புரை ஆற்றவும் நிகழ்ந்தது. திருக்கோயிலில் சேக்கிழார் பெருமான், சமயாச்சாரியர், அறுபான் மும்மை நாயன்மார்களுக்கு விசேடபூசை வழிபாடுகளும் திருமுறைகளுடன் சேக்கிழார் பெருமான் திருவீதி உலாவும் சிறப்பாக நடைபெற்றன. சேக்கிழார் விழா இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருவதற்கும் இனித் தொடர்ந்து நடைபெறுவதற்கும் நம் தேசிகர் அவர்கள் உறுதுணையாக இருந்து வருகின்றார்கள். இவ்விழாக்களில் பல ஆண்டுகள் தேசிகர் அவர்களே தலைமை ஏற்றுச் சிறப்புரையாற்றி வந்துள்ளார்கள். தமிழகத்தில் உள்ள பெரும்புலவர்கள் அனைவருமே இவ்விழாவில் பங்கு பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பேச்சாளராக

தேசிகர் அவர்களின் வாழ்க்கையில் சொற்பொழிவுகளே பெரும்பங்கு

பெறுவன. தமிழகத்தில் முக்கிய நகரங்களில் இதுவரை நடைபெற்ற இலக்கிய சமய, சாத்திர மாநாடுகளிலும், விழாக்களிலும் தலைமை தாங்கியும் விரிவுரையாற்றியும் உரைத் தொண்டாற்றியுள்ளார்கள்.

1950 முதல் புதுக்கோட்டை, நாகர்கோயில், தூத்துக்குடி, திருநெல்வேலி, சென்னை, தேவகோட்டை, திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, திருக்காருயில் முதலிய இடங்களில் நம் தேசிகர் அவர்கள் சாத்திர வகுப்புக்கள் நடத்தினுர்கள். தேவகோட்டையிலும், திருச்சிராப்பள்ளியிலும் இவ்வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புக்களில் திருமுறைகள், மெய்கண்ட நூல்கள், புராணங்கள் ஆகியவை விளக்கப் பெறுதல் குறிக்கத்தகும்.

பட்டங்கள்:

இச்சிறப்புப் பணிகளைக் கருதி 1950 இல் திருவண்ணுமலை ஆதீனம் 44 ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி ஆறுமுக தேசிகர் அவர்கள் "விரிவுரை அரசு" என்ற சிறப்புப் பெயரையும், 1951 இல் தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையினர், "சித்தாந்தப் புலவர் மாமணி" என்ற சிறப்புப் பெயரையும், 1955 இல் மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் "சித்தாந்த சைவ வித்தகர்" என்ற சிறப்புப் பெயரையும், 1966 இல் பிரான்மலையில் நிகழ்ந்த பாரிவிழாவில் முதன் முதலாகத் திருவண்ணுமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணுசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார்) "பெரும்புலவர்" என்ற சிறப்புப் பெயரையும் நம் தேசிகர் அவர்கட்கு வழங்கினுர்கள்.

இசைப்புலமை:

நம் தேசிகர் அவர்கள் கோனு பட்டுக் கலாசாலையில் பயின்ற போதே இசைப் பயிற்சியும் இசைப் புலமையும் பெற்றுர்கள். ஆர்மோனியம் வாசிக்கும் பயிற்சியும் பெற்றிருந்தார்கள். இசை பாடும் ஆற்றலுடன் இசைப் பாடல்கள் இயற்றும் திறனும் பெற்றுப் பல கீர்த்தனைகளைத் தீவிய செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார்கள். அவற்றுள் 51 கீர்த்தனைகளை 1944-ல் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் "இசைப்பாட்டு" என்னும் பெயரில் நூலாக வெளியிட்டார்கள். அந்நூலைப் பார்த்து அரசர் அண்ணுமலை செட்டியார் அவர்கள் விரும்பியபடி இவர்களியற்றிய மற்றும் 75 இசைப் பாடல்களைத் திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளையைக் கொண்டு ஸ்வரப்படுத்தி அண்ணுமலைப்பல்கலைக் கழகம் தமிழிசைப் பாடல்கள் 13-ம் தொகுதியாக வெளியிட்டுள்ளது. இவ்விரு நூல்களும் நம் தேசிகர் அவர்கள் தமிழிசை உலகிற்கு அளித்த நற்கொடைகளாகும். மேலும் தேவகோட்டையில் அரசர் அண்ணுமலை செட்டியார் விருப்பப்படி நிறுவப் பெற்ற தமிழிசைப் பள்ளிக்குத் தொடக்கமுதல் பல ஆண்டுகள் நம் தேசிகர் அவர்கள் தலைவராகவும், ஆலோசகராகவும் இருந்து நன்முறையில் நடத்தி வந்துள்ளார்கள்.

ஆண்மகப்பேறு:

1949 இல் (விரோதி ஆண்டு ஆனித் திங்கள்) மூலநாளில் நம் தேசிகர் அவர்கட்குத் தலைமகன் (சொக்கலிங்கம்) பிறந்தான்.

ஆச்சாரியாபிடேகம்:

1960 இல் நம் தேசிகர் அவர்கள் மலேசியாவில் சிரம்பான் நகர், அருள் நெறித் திருக் கூட்டச் சார்பில் சொற் பொழிவாற்ற வேண்டி, ஆவினிப்பட்டி, விவேகாநந்தர் கல்விக் கழக நிறுவனர் திரு. அ. பழ. பழனியப்ப செட்டியார் ஏற்பாடு செய்தார்கள். அப்போது மலேசியாவில் இருந்த தமிழர்கள் பலர் தாம் தீட்சை பெற்றுக் கொள்ள விரும்பி, அதனைச் செய்து வைக்கத் தக்க தகுதி யாகிய ஆச்சாரிய அபிடேகத்தையும் பெற்றுக் கொண்டு வருமாறு தேசிகர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். அவ்வேண்டுகோளை அறிந்த சிவஸ்ரீ ஈசானசிவாச்சாரிய சுவாமிகள் தேசிகர் அவர்கட்கு ஆசாரிய அபிடேகம் பெறு தற்குரிய தகுதி இருப்பதைத் திருவுளங் கொண்டு, 10-2-1960 இல் உலகன் பட்டி நகரச் சிவாலயக் கும்பாபிடேக விழாவில் ஆச்சாரிய அபிடேகம் செய்து வைத்தார்கள்.

மலேசியப் பயணம்:

நம் தேசிகர் அவர்கள் அவ்வாண்டு பிப்ரவரி இறுதியில் மலேசியாவிற்குப் புறப்பட்டார்கள். முதலில் சமய தீட்சை கோலாலம்பூரில் 15-4-60 இல் எட்டுப் பேர்க்கு நடை பெற்றது. அது முதல் 21-8-74 வரை, 1583 அன்பர்கள் நம் தேசிகர் அவர்களிடம் தீட்சைப் பேறு பெற்றுப் பயன் அடைந்து வருகின்றார் கள். கோலாலம்பூர் விவேகாநந்தாஸ்ர மத்தில் 42 நாட்கள் சிவஞான சித்தி யார்வகுப்பும், சிங்கப்பூர் தண்டாயுத பாணி திருக்கோயிலில் 10 நாட்கள் சிவபுராண வகுப்பும் நடைபெற்றன. பின்னர், செய்கோன் நகரத்தார்களின் அழைப்பை ஏற்று அங்கு ஒரு மாதம் தங்கிச் சொற்பொழிவுகளும், தீட்சை களும் நடத்திப் பின்பு கம்போடியாவில் அங்கோர் வாட் நகரில் உள்ள மிக்க பழைமையானதும் பெரியதுமான சிவா லயத்தைத் தரிசித்து, அங்கிருந்து தாய் லாந்து சென்று மலேசியா திரும்பினர் கள். இவ்வெல்லா இடங்களிலும், தமிழர்களும் தமிழன்பர்களும் இவர் களை மரியாதையுடன் வரவேற்று உப சரித்தார்கள். 1960 நவம்பரில் இவர் கள் நாடு திரும்பினர்.

பர்மாப்பயணம்:

1962 தைப்பூச விழாவில் பேசு தற்கு இரங்கூன் நகரத்தார்களின் அழைப்பினை ஏற்று, நம் தேசிகர் அவர் கள் பர்மாவிற்குப் பயணம் ஆனார்கள். அங்குப் பல இடங்களில் விரிவுரை களும் பாடவகுப்புக்களும் தீட்சை களும் நடைபெற்றன. அப்போது, காசி நகரச் சத்திரம் இரங்கூன் நகரத்தார் களின் நிருவாகத்தில் இருந்தது. அந் நிருவாகத்தினர் நம் தேசிகர் அவர் களின் காசி யாத்திரைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, வடநாட்டில் உள்ள நகரச் சத்திரங்களின் மேலாளர்கட்குச் செய்தி அனுப்பி, வரவேற்பு உபசரிப் பிற்கும் வழிபாட்டிற்கும் ஏற்பாடு செய் தார்கள். காசியில் தங்கியிருந்தபோது, ஸ்ரீ விசுவநாதப் பெருமானுக்கு ஓர் உச்சிக்கால விசேடபூசை சிவாகம விதிப்படி, பண்டாவும் உடனிருந்து உதவ, நம் தேசிகர் அவர்களால் செய்யப் பெற்றது.

மகள் திருமணம்:

1962 செப்டம்பரில் தேசிகர் அவர் களின் தலைமகள் மீனாட்சிக்கும் தேவ கோட்டை பழ. அழகப்ப செட்டியார் அவர்கள் மகன் அழகப்பனுக்கும்

சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்கள் எழுந்தருளியிருந்து, சிவாகம விதிப்படி திருமணம் நடத்தி வைத்தார்கள்.

இவ் வாண்டில் தேவகோட்டைச் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தின் எல்லாப் பொறுப்புக்களையும் அழ. சுப. பழ. திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் நம் தேசிகர் அவர்களிடமும், மெ. அரு. நா. கண்ணப்ப செட்டியார் அவர்களிடமும் அளித்தார்கள். இப்பொழுது சங்கத்தின் முழுப் பொறுப்பும் தேசிகர் அவர்களிடமே இருந்து வருகின்றது. இச்சங்கத்தின் சார்பில் நூல் வெளியீடுகளும் வார வகுப்புக்களும் சிவக்ஷேத்திர யாத்திரைகளும் நடைபெற்று வருகின்றன.

அவற்றுள் 1972-ல் தேசிகர் அவர்கள் தலைமையில் தனி இரயில் பெட்டிகள் இரண்டுக்கு ஏற்பாடு செய்து சீடர்களும் அன்பர்களும் 50 பேர் இமயமலையில் உள்ள திருக்கேதாரம், நேபாளம், வடநாட்டில் உள்ள வாரணாசி முதலிய திருத்தலங்களைத் தரிசித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கைப்பயணம்:

1968 இல் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் அழைப்பை ஏற்று நம் தேசிகர் அவர்கள் ஈழ நாட்டிற்குப் பயணம் ஆனார்கள். 17-4-1968 இல் இச்சபையினர் நடத்திய சைவ மாநாட்டில் தலைமை ஏற்று விரிவுரை யாற்றினார்கள். ஈழ நாட்டில் பல ஊர்களிலும் தீட்சைகளும் நிகழ்த்தினார்கள். யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலையில், ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பல பேராசிரியர்களும் பாடம் கேட்கச் சிவ ஞான சித்தியார் வகுப்பு 40 நாட்கள் நடைபெற்றது.

மகன் திருமணம்:

1969 பிப்ரவரித் திங்களில் தேசிகர் அவர்களின் தலைமகன் சொக்கலிங்கத்திற்கும் தேவகோட்டை வீர. ராம. ராம. இராமநாதன் செட்டியார் அவர்கள் மகள் விசாலாட்சிக்கும் சிவாகம விதிப்படி திருமணம் நடைபெற்றது.

இரண்டாம் முறை மலேசியப் பயணம்

1969-இல் மலேசியாவில் உள்ள அன்பர்களின் அழைப்பை ஏற்று, நம் தேசிகர் அவர்கள் இரண்டாம் முறையாக அந்த நாட்டிற்குச் சென்று, முன் போலவே, சொற்பொழிவுகளும், வகுப்புக்களும், தீட்சைகளும் நடத்தித் தாயகம் திரும்பினார்கள்.

அஸ்திராபிடேகம்:

1973 டிசம்பரில் நம் தேசிகர் அவர்கள் 59 ஆண்டு நிறைவெய்தினார்கள். அது போழ்து அவர்கட்கு மதுரை அம்மன் சந்நிதி அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் சிவாகம விதிப்படி 16 கலசங்கள் நிறுவிப் பூசிக்கப்பெற்றும், வேள்வி இயற்றப் பெற்றும் அஸ்திராபிடேகம் சிறப்புற நடைபெற்றது. அன்பர்களும், சீடர்களும், மாணவர்களும் வந்திருந்து தரிசித்து மகிழ்ந்தார்கள். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்களுடன் சிவாச்சாரியர்கள் அனைவரும் கோயில் மரியாதைகளுடன் வந்து தேசிகர் அவர்கட்குப் பிரசாதம் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மணிவிழாக்குழு அமைப்பு :

அன்று மாலை விழாவிற்கு வந்திருந் தோர் கூடி 60 ஆவது ஆண்டு விழா வினைச் சிறப்புற நடத்துவதற்கு மணி விழாக் குழு அமைத்தனர்.

நம் தேசிகர் அவர்கள் ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் திருவருளால் பல் லாண்டு வாழ்ந்து சிவஞானச் செல்வத் தை அன்பர்பலருக்கும் வாரி வழங்கி, ஞானசிரிய பீடத்தில் பீடு பெற்று வாழு மாறு வணங்கி, அவர்களின் வரலாறு பற்றிய இக்கட்டுரையினை முடிக் கிறேன்.

உ

நமச்சிவாய வாழ்க.

எளிவந்த குருபிரான்

24—2—1974-ல் நம் ஞானசாரியப் பெருந்தகை சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் திரு ஆலவாய் ஆலயத்தில் நடத்தப் பெற்ற சுற்றுலா விவரம் தரும் விளக்குனர் பயிற்சி வகுப்பில் 'தோத்திரங்களும் சாத்திரங்களும்' என்ற தலைப்பில் அருளுரை ஆற்றிய பின்னர், வினு விடை நேரத்தில் விளக்குனர்கள் வினவிய ஐயங்கள் அனைத்திற்கும் தங்கு தடையின்றி ஐயந்திரிபற விடையளித்ததுமல்லாமல், அனைவரும் தங்களை ஆசீர்வதித் தருள்புரியுமாறு வேண்டிட, உடனே இங்கே குறிப்பிடப்பெற் றுள்ள வாழ்த்து வெண்பாவினைக் கூறி எல்லோரும் காணும்படி கரும்பலகையில் எழுதுமாறு என்னைப் பணித்து எளி வந்த குரு பிரானுக விளங்கியருளியமை விளக்குனர்கள் அனைவருக்கும் வியப்பையும் பெருமகிழ்வையும் தந்தது.

உ

சிவமயம்

சைவசித் தாந்தத்தின் தத்துவங்கள் கேட்டு [வந்து
உய் வைத் திடம் பெறவே உண்டு பண்ணி - மெய்வைத்த
பெம்மான் திருவடியைப் பேணுகின்ற மாணவர் நீர்
செம்மாந் திருப்பீர் சிறந்து.

நலமே தழைக !

- கருவூரான்

வயிநாகரம் குடும்பச் சிறப்பு

திருநெறிய தமிழ்மணி
வித்துவான். தா. குருசாமி ஓதுவார்
மிராசு, தல ஓதுவார், ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரர் திருக்கோவில், மதுரை.

புண்ணியர்களுக்கு உறைவிடமாகிய நம் பாரத நாடு வழிவழியாக நல்லறப் பணிகளைச் செய்துவருகின்ற சான்ருேர் களைத் தொன்று தொட்டுத் தந்துவரு கின்ற பெருமையையுடையது. சிறப் பாக இந்தப் பெருமை தென்னுட்டுக்கு மிகுதியாக உண்டு. பல பிறவிகளில் செய்த பசுபுண்ணிய முதிர்ச்சியினு லேயே சிவ புண்ணியங்களைச் செய்யும் வாய்ப்பு ஒருவருக்குக்கிட்டும் என்று அருள் நூல்கள் கூறுகின்றன. சேர சோழ பாண்டியர்களாகிய தமிழ்நாட்டு முடியுடை வேந்தர்கள் மூவரும் அந்த நாளில் செய்த சிவாலயத் திருப்பணி அளவிடற்கரியது. அம்மன்னர்கள் மறைந்த பிறகு அவர்கள் செய்த அந்த அரிய செயலை நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தொடர்ந்து செய்து வந்ததனுலேயே தமிழ்நாட்டில் உள்ள எல்லாத் திருக்கோயில்களும் செம்மை யான முறையில் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. வைசியர்களுக்கு 'மன்னர் பின்னுேர்', 'இளங்கோக்கள்' முதலிய பெயர்கள் வழங்கி வருவதற் கேற்ப, நாட்டுக்கோட்டை நகரத்தார் கள் மட்டுமே மன்னர்களின் அறப்பணி களைக் கடைப்பிடித்து முறையாகச் செய்துவருவது பாராட்டுவதற்குரியது.

ஒன்பது சிவாலயம்:

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் முன்னர் சோழநாட்டுப் பூம்புகார்ப் பதியைத் தலைநகரமாகக் கொண்டு வாழ்ந்து, பின்னர், பாண்டியநாட்டை வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். சோழநாட்டில் வாழ்ந்து வந்த இவர்களைத் தன்னுட்டில் தங்கி யிருந்து வாணிப வளத்தைப் பெருக்க வேண்டும் என்று பாண்டிய மன்னன் கேட்டுக் கொண்டபோது, தங்கள் வழிபாட்டிற்கென ஒன்பது புராதனச் சிவாலயங்களை முழுவுரிமையுடன் தங்

களுக்குத் தரவேண்டும் என்று கேட்டு, அதற்கு மன்னன் இசைந்த பின்னரே இங்குக் குடியேறினர்கள் என்பது வரலாறு. அப்படிக் கிடைத்த சிவாலயங்கள் ஒன்று-இளையாற்றங் குடி, இரண்டு-மாற்றூர், மூன்று—வயிர வன்பட்டி, நான்கு-இரணியூர், ஐந்து-பிள்ளையார்பட்டி, ஆறு – இலுப்பைக் குடி, ஏழு-நேமம், எட்டு—சூரைக்குடி, ஒன்பது—வேலங்குடி ஆகிய ஊர்கள் இன்னும் நகரத்தார் பரிபாலனத்தில் இருந்து வருகின்றன.

நாகப்பர் பிறப்பும் தொழிலும்;

நகரத்தார்கள் முன்னர் 96 ஊர்களில் வாழ்ந்து வந்தனர். இப்போது அவர்கள் வாழ்விடங்கள் 78. கி.பி. 1800-ஆம் ஆண்டளவில் நகரத்தார்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சேர்ந்தணி என்ற ஊரில் இருந்தார்கள். அவ்வூரில் இருந்த அவர்கள் அனைவரும் பிள்ளையார்பட்டிக் கோயில் உரிமையாளர்கள். அவர்களில் இராமநாதன்செட்டியார் வள்ளியம்மை ஆச்சி இருவரும் செய்த தவத்தின் பயனாக நாகப்பன், வேங்கடாசலம் என்ற இருபுதல்வருடன், அண்ணாமலை, சுப்பிரமணியன் என்ற இரு புதல்வர்களும் தோன்றினர். இவர்கள் நால்வரும் சிவாகம விதிப்படி சமய, விசேட தீட்சை பெற்று ஆன்மார்த்த சிவ பூஜையை வழுவாது செய்து வந்ததுடன், திருமுறை, திருவிளையாடற் புராண பாராயணங்களையும், நியமமாகச் செய்துவந்தார்கள். மூத்தவராகிய நாகப்பச் செட்டியார், தமது இளம்பருவத்திலேயே தமக்கும் தம் தம்பியர்க்கும் சொந்தமாக மதுரை சடாமுனி சந்தில் நூல் வாணிகம், புடவை வாணிகம் நடத்திவந்தார்.

செல்வப் பெருக்கும் பத்திப் பெருக்கும்:

அப்போது ஸ்ரீ மீனுட்சியம்மை உடனுகிய சொக்கேசப் பெருமான் திருவருள் கூட்டநாள்தோறும் அபிஷேகத்திற்குப் பாலும், அலங்காரத்திற்கு மாலையும் அம்மையப்பருக்குக் கொடுத்து வந்தார்கள். அதன் பயனுக வாணிபம் செழித்து நாகப்பட்டினம், சென்னை, கும்பகோணம், தூத்துக்குடி, பம்பாய், கல்கத்தா, கொழும்பு, ரங்கூன், செய்கோன், பினுங்கு, சிங்கப்பூர் முதலிய ஊர்களில் வயிநாகரம் விலாசக் கடைகள் வைக்கும் வாய்ப்பு வந்தது. முத்துக் குளியல், சங்குக் குளியல் ஆகியவற்றிலும் பெரும் பொருளை ஈட்டினுர்கள். செல்வப் பெருக்கம் நிறைய நிறைய ஸ்ரீ மீனுட்சி சொக்கேசரிடத்தில் பத்திப் பெருக்கமும் இவர்களுக்கு நிறைந்து கொண்டே வந்தது. அப்போது மதுரைத் திருக்கோயிலில் பெருமான் பெருமாட்டியது திருவருள் நாளுளும் பெருகி நின்றதேயன்றி, திருக்கோயில் பெரிதும் சீர்கேடாய் இருந்துவந்தது.

கோயில் திருப்பணி:

கி. பி. 1863-ஆம் ஆண்டில் அரசாங்கத்தார் மதுரைத் திருக்கோயில் நிர்வாகத்திற்கென ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குழுவொன்றை நியமித்தனர். அக்குழுவிற்கு நாகப்ப செட்டியார் தலைவராய் அமைந்தார்கள். முன்னமேயே ஸ்ரீ மீனுட்சியம்மையின்பால் முகிழ்த்திருந்த அன்பு, திருக்கோயில் அறப்பணிக்குழுவில் இடம்

பெற்ற பிறகு முதிர்ச்சி பெற்றது. முதலில் பழுதடைந்திருந்த சித்தி விநாயகர் திருக்கோயிற் பணியைத் தொடங்கிச் செய்துமுடித்தார்கள். பின்னர் ஸ்ரீ மீனுட்சியம்மன் கோயில் முதற்பிரகாரத் திருமதில் செப்பஞ் செய்யப்பெற்று, பள்ளியறை புதுப்பிக்கப்பெற்று, திருவூசலுக்குப் பொற்றகடு போர்த்தப்பட்டது. திருக்கோயில் மேல்தளங்களில் தட்டோடுகள் முழுவதும் பழுது பார்க்கப்பட்டு வலிமை செய்யப்பெற்றன.

மொட்டைக் கோபுரப்பணி:

திருக்கோயில் மண்டபங்களில் இருள் நிறைந்திருந்த இடங்களில் எல்லாம் பாவு கற்களைத் தூக்கி, சுற்றிலும் பலகணிகள் அமைக்கப்பட்டு இருட் படலங்கள் நீக்கப்பெற்றன. இராச கோபுரங்கள் பன்னிரண்டிலும் பாரம் பரியமாக வாழ்ந்து கொண்டிருந்த குரங்குக் கூட்டங்களைத் தந்திரமாக அப்புறப் படுத்தி, கோபுரங்களுக்குச் சுதை வண்ணங்கள் தீட்டிச் சீர்செய் தார்கள். இப்பொழுது மொட்டைக் கோபுரம் என்று வழங்குகிற வடக்குக் கோபுரம் நிலைமட்டத்துக்கு மேல் புதிதாகக் கட்டப்பெற்றது. சித்திரை வீதியில் நான்கு திருமதில்களையும் ஒட்டி இப்போது வேலிச்சுவர் அமைத்திருக்கும் இடங்களை விலைகொடுத்து வாங்கி திருநந்தவனம் அமைப்பதற்குரிமை யாக்கினுர்கள். கோபுரங்கள் பழுது பார்ப்பதற்கு மட்டும் 8 லட்ச ரூபாயும், சித்திரைவீதி இடத்திற்கு விலை கொடுத்து வாங்கியது மட்டும் 1 லட்ச ரூபாயும் என்று சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

பிற திருப்பணிகள் :

திருக்கோயிலில் உள்ள பதினுறு கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், மீனுட்சி நாயக்கர் மண்டபம், அட்டசத்தி மண்டபம், பசுத்தொழு மண்டபம், யானை மகால் மண்டபம், கிளி மண்டபம், வசந்தராயர் மண்டபம், கழுவேற்ற மண்டபம், கொடித்தம்ப மண்டபம், ஆகியவை பழுது பார்க்கப் பெற்றுப் புதுப்பிக்கப்பட்டன. திருக் கல்யாண மண்டபம் பழுது பார்க்கப் பெற்று, அதன் முன்னுல் வேலைப்பாடுகள் அமைந்த *செப்போட்டு மண்டபம் சிறந்த முறையில் அமைக்கப் பெற்றது. பொற்றாமரைக் கரையின் தளவரிசைகளும், படித்துறை கைபிடிச் சுவர்களும், ஆடிவீதித்தளவரிசைகளும் போடப்பெற்றன. சுவாமி கோயில் முதல் பிரகாரத் திருமதிலாகிய கபாலி மதிலில் அறுபான் மும்மை நாயன்மார் வரலாற்றுச் சுதைச் சிற்பங்களும், கிளி மண்டபத்துத் தட்டோடு அடிப்பகுதியில் மகேசுவர மூர்த்தங்களின் சித்திரங்களும், பொற்றாமரை வடக்கு, கிழக்குத் திருமதில்களில் திருவிளையாடற் புராணச் சித்திரங்களும் கண் கவர் வனப்பினவாய் அமைக்கப் பட்டன.

வாகனுதிகள் செய்தது :

வண்டியூர் தெப்பக்குள மையமண்டபம் பிரித்துத் திருத்தப் பெற்றது. திருவிழாவிற்கென இரண்டு தங்கச்சப்பரங்கள், வெள்ளிப் பெருச்சாளி, மயில்வாகனங்கள், கற்பகவிருட்சம், சிம்மம், பூதம், அன்னம், கயிலாயம், காமதேனு

---

* இம்மண்டபத்தில் மேல்பகுதியில் நாகப்பையா, வேங்கடாசலமையா ஓவியம் முதலியவை இன்றும் இருப்பதைக் கண்டு மகிழலாம்.

ஆகியவாகனங்களும், இரண்டு தங்கப் பல்லக்குகளும், இரண்டு தங்கக்குதிரை வாகனங்களும், இரண்டு பெரிய வெள்ளி இடபவாகனங்களும், நந்திதேவர்வாகனமும், பட்டாபிடேகம் நிகழும் வெள்ளிச் சிம்மாசனம் இரண்டும், மற்றைய வாகனங்களும் செய்து வைத்தார்கள்,

திருவாபரணப்பணி :

தங்கத்தாலும், கல்லிழைக்கப் பெறும் பல திருவாபரணங்கள் செய்து வைக்கப் பெற்றன. மதுரைத்திருக் கோயில் திருப்பணி நடை பெற்றுக் கொண்டிருக்கும் போதே பாண்டிய நாட்டில் உள்ள பதிகம் பெற்றவையும், புராதன மானவையுமான திருக்கோயில் களைத் தொடர்ந்து திருப்பணி செய்ய வேண்டுமென்று இவர்கள் எண்ணினர் கள். மதுரை முதலிய திருத்தலங்களில் நித்திய நைமித்திக பூசைகளுக்கு இவர் கள் நியமித்துள்ள கட்டளைகள் 1875–ஆம் ஆண்டுக்கணக்குப்படி அந்நாளி லியே ஆண்டுக்கு சுமார் 50ஆயிரம் ரூபாயாகும். கட்டளைகள் நிரந்தரமாக நடைபெற்றுவருவதற்கு அந்தந்த திருக் கோயில்களுக்குப் படமாத்தூர், குருந்தம்பட்டு முதலிய கிராமங்கள் வாங்கிவைத்திருக்கிருர்கள்.

மற்றத்தலங்களில் திருப்பணி :

திருப்பரங்குன்றம், திருவாதவூர், திருப்புத்தூர் அம்பாள் கோயில்களும், திருவாப்பனூர்க்கோயில், திருக்கானப் பேர் சோமேசர்கோயில், திருவேடகம் கோயிலில் சிலபகுதி (அடிப்பகுதி) ஆகியவை திருப்பணி செய்யப் பெற்றன. மேலும் கண்டதேவி, விருத்தா சலம், அமராவதிபுத்தூர், காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரம் ஆகிய கோயில்கள் முழுமையாகத் திருப்பணி செய்யப்பெற்றன. திருவொற்றியூர், சீர் காழி ஆகியபலதிருத்தலங்களில் சிற்சில பகுதிகள் பழுதுபார்க்கப்பட்டன. இவ் வாறு சிவாலயத்திருப்பணிகளைச் செய் வதற்கென்றே சிவபெருமானுடைய திருவருள் நாகப்பசெட்டியாரை நமக்கு வழங்கியது என்றே சொல்ல வேண்டும். மதுரை அம்மன் சந்நிதி யில் வயிநாகரம் குடும்பத்தார் மெ. வகையாருடன் நிறுவிய அறுபத்து மூவர் குருபூசைமடம் இன்று செவ்வன் நடைபெற்றுவருகிறது.

செவிவழிச் செய்தி :

இப்பொழுது மதுரைத்திருக் கோயில் முதல் ஸ்தானீகம் சிவ ஸ்ரீ ம. க. சுந்தரேசப்பட்டர் அவர்கள் வயிநாகரம் குடும்பச்சிறப்புப்பற்றி என்னிடம் குறிப்பிட்டவைகள்:-

1. திருமாலைத் தொண்டு :

அர்த்தஜாமபூசைக்குச் சுவாமி அம் பாளுக்கு (இப்பொழுது கமிட்டிஆபீஸ்) ஜெவந்தீசுவர் கோயில் முன்னறையில் திருமாலைகட்டப்படும். திருப்பரங்குன் றத்தில் இருந்து நாடோறும் வெட்டி வேர், செவந்தி, முதலிய மலர்கள் கொண்டு வரப்படும். மதுரைத் தெப்பக் குளத்தருகில் உள்ள முத்தீச்சுரன் கோ யில் வலப்புறம் (இப்பொழுது மீனுட்சி உயர் பள்ளி உள்ள இடம்) இடத்தில் நந்தவனம் அமைக்கப் பெற்றிருந்தது. கழுநீர்ப்பூ, நந்தியாவட்டை, முல்லை, இருவாட்சி முதலிய மலர்களும் வில்வ மும் கொண்டு வரப்படும். இதைக் கண் காணித்தவர் தாணுப்பிள்ளை என் பவர். பதினறுசரமுடைய வில்வமாலை, சுவாமிக்கு இண்டைமாலை, கொண்டை

மாலை ஆகியவை இப் பூஜைக்கு பள்ளி யறைச் சொக்கருக்குச் சாத்தப்படும்.

2. அபிடேகத் திரவியம்:

அர்த்தசாமப்பூஜையில் சுவாமி அம் பாளுக்கு நெய்விளக்கு ஏற்றப்படும். பால், சந்தனம், பஞ்சாமிர்தம், தயிர் முதலிய அபிடேகத்திரவியங்கள் கொண்டுவரப்பட்டு முழுக்காட்டப் படும். அர்த்தசாமத்திற்குச் சம்பா நிவேதனம். அன்றன்றுடம் புதிய வெண்ணெய் உருக்கி மேற்படி நிவே தனம் செய்யப்படும். இதற்கென உக்கிராண அறை (தற்போது ஒலி பெருக்கி நிலைய அறை) இருந்தது. இதற்கெனப் பணியாளர் இருந்தனர். தனி மடைப்பள்ளியில் பிரசாதம் தயார் செய்யப்பட்டது. நாகப்பசெட்டி யார் கட்டின மடைப்பள்ளி என்று பெயர். நாகப்பசெட்டியார் பரிவட்டறை, நாகப்ப செட்டியார் வெஞ்சன அறை தனித்தனியே இருந் தன. அம்பாளுக்கு வெண்ணிறஆடை, சாமிக்குப் பட்டுக்கறை போட்ட பத்தாறு வேட்டி சாத்தப்படும். சுவாமி துடைக்கத் தும்பைப்பூ போன்ற நிறமுடைய துணி நாள் தோறும் தரப்படும். பள்ளியறையில் அலங்கார தீபம் காட்டப்படும்.

3. திருக்கல்யாணமண்டபஅலங்காரம்:

திருக்கல்யாணத்தன்று செட்டியார் கட்டளை சார்பில் மண்டபம் அலங்கரிக் கப்படும். லஸ்தர் - குளோப் - விளக்கு கள் ஏற்றப்படும். வாழைத்தோரணங் கள் கட்டப்படும். கல்யாண மண்டப அலங்காரச் சாமான்களை வைப்பதற் கெனச் செட்டியார் வசித்துவந்த வீட்டில் ஓர் அறை ஒதுக்கப்பட்டிருந் தது. திருக்கல்யாணத்தின் மத்தியானம் நகரத்தார் செலவில் வடக்கு ஆடி வீதியில் பிராமண போஜ னம் நடை பெற்றது. மற்றவர்களும் உண்டனர். தேருக்கும் அப்படியே நடைபெற்றது. தேர்நின்றுல்-அதுநிலை சேர்ந்த பிறகு தான் வயிநாகரம் குடும் பத்தார் உணவு உண்ணுவார்கள். தன் னுடைய சொந்தச்செலவில் பழம் நைவேத்யம் செய்வது வழக்கம்.

4. சிவாகமப் பாடசாலை:

வெகுகாலத்துக்குமுன்பு வடக்காடி வீதி ஆயிரங்கால் மண்டபம் பின்பகுதி யில் சிவாகமப் பாடசாலை நடத்தி வந்தனர். அங்குக் கிணறும் இருந்தது. அந்தப்பாடசாலையில் மதுரையிலுள்ள பட்டமார்களும், பிற குருக்கள்மாரும் படித்து வந்தனர். அங்குச்சிவராமசுப்ர மணிய சாஸ்திரி, வைத்தியநாத குருக் கள் ஆசிரியராய் இருந்தனர். அப்பாட சாலையில் வேதாகம சாஸ்திர வித்து வான் சிவஸ்ரீ ம. கல்யாணசுந்தரப் பட்டர் அவர்கள் பயின்றவர்கள். காலச்செலவில் பாடசாலை நின்றது.

5. அன்னம்பாலிப்பு:

கோயில் பணியாளர்களில் பூஜை முறைப் பட்டருக்கும் பரிசாரர்கள் பதி னறு பேர்க்கும் வடைபாயாசத்தோடு பகல் சாப்பாடு போடப்பட்டது. இது முப்பதாண்டுகட்கு முன்பு நின்றுவிட் டது. சுவாமி திருப்பரங்குன்றம் போய் வரும்போது செட்டியார் குடும்பத்தார் களில் தலைமையுடையவர் சிலர் நடந்தே போய்வருவதுண்டு. அப் பொழுதும் அன்னம்பாலிப்பு நடை பெறும். திருக்கல்யாணத்தன்று வழங் கப்படும் பொங்கல் மிகவும் சுவை யானது. தேர்க்குச்சுவாமி எழுந்தரு ளியவுடன் இரண்டு கோயில்கட்கும்

சந்தனக்காப்புச் செய்வது வழக்கம். பிரதோஷக் கட்டளை தனியாக ஏற்படுத்தி நடந்துவந்தது. கார்த்திகைச் சோமவாரக்கட்டளை நடந்தது. வசந்த உற்சவத்தில் மாம்பழம் நிவேதனம் செய்யப்பட்டது. இவ்வளவும் திரு. சுந்தரேசப்பட்டர் அவர்கள் கூறியவை.

6. திருமுறைகேட்டல்:

திருவிழாக் காலங்களில் வாஸ்து சாந்தி முதல் நாளின் போதும், நிறைவு நாளின் சூரண உற்சவத்தின் போதும், மதுரைத்தல ஓதுவார் பாடுகின்ற திருமுறைகளும், திருப்பொற்சுண்ணமும் கேட்பதுண்டு. நாடோறும் பள்ளியறையில் திருமுறை கேட்பதுண்டு. கழுவேற்ற நாளில் திருநீற்றுப்பையும், ஞானப்பாலும் வழங்குவதுண்டு. இவை பாரம்பரியமாக நடந்து வந்ததை—இவ்வாறு என் முன்னோர் கூறியிருக்கின்றனர்.

மதுரைத் திருப்பணியே முதன்மை :

நகரத்தார்களில் திருக்கோயிற்றிருப்பணியை முதன்முதலாகச் செய்தவர் வயிநாகரம் நாகப்பையா அவர்களே. அவர்கள் காலத்துக்குமுன்பு நகரத்தார்கள் சிவதர்மங்கள் பலவற்றைச் செய்து வந்தார்களேயாயினும் திருக்கோயில் திருப்பணி என்பது நாகப்ப செட்டியார் அவர்களாலேயே முதன்முதலாக மேற்கொள்ளப் பெற்றது என்பதும், அங்ஙனம் மேற்கொள்ளப்பெற்ற முதல் திருப்பணி மதுரைக் கோயில் திருப்பணியே என்பதும் குறிக்கத்தக்கவையாகும். நாகப்ப செட்டியாருக்குப் பிறகு அவர்கள்பரம்பரையில் வந்துள்ள அனைவரும் மதுரைத் திருத்தலத்தையும் மீனாட்சி சொக்கேசரையும் தங்களது உயிர்நாடியாக வைத்து வழிபட்டுவருகின்றார்கள்.

மணிவிழாச் செல்வர் தொடர்பு :

சிவபுண்ணியப் பெருஞ் செல்வராகிய நாகப்ப செட்டியார் அவர்கள் தவப்பயனாக நம் மணிவிழாச் செல்வர் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் ஐயா அவர்கள் விளங்குவதனாலேயே அவர்களது சிவப்பணி திகழ்ந்து கொண்டிருக்கின்றது. மணிவிழாக் கொள்ளும் ஐயா அவர்களின் முன்னோராகிய நாகப்ப செட்டியார் அவர்கள் மதுரைக்கோயிலில் செய்த திருப்பணிகள்பற்றி என் முன்னோர்தாண்டவ மூர்த்திக் கவிராய ஓதுவார் குறித்து வைத்துள்ள திருப்பதிகம் விண்ணப்பிக்கும் முறையிலிருந்தும், திருவிளையாடற் புராணம், திருப்பணி மாலை ஓதப்படும் நாள் பற்றி * அவர்களோடு கலந்தாய்ந்து முடிவு செய்ததுகொண்டும் எழுதப்பட்டவை நினைவு கூரத்தக்கனவாகும். இவ்வழியில் வந்த அடியேனுக்கும் இன்று மணிவிழாக்கொள்ளும் ஐயா அவர்கள் குருநாதராக இருந்து வழிகாட்டியருள்வதோடு, உலகுய்யும்படி பரமாசாரிய மூர்த்திகள் போல் தமிழ்நாடு முழுவதும் எழுந்தருளிச் சைவ பரிபாலனம் செய்து வருகின்றார்கள். இக்காலத்திற்கு மிகவும் வேண்டத்தக்க திருப்பணியை நம் ஐயா அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். என் குடும்பமும் ஐயா அவர்கள் குடும்பமும் திருமுறையால் முன்பு ஒன்று பட்டிருந்த தொடர்ச்சி இன்றும்

---

* **1974** மதுரைக் கும்பாபிடேக மலரில் இதன் விவரம் காண்க.

தொடர்வாக விளங்குவது கண்டு உளம் மகிழ்கின்றேன். தவச்சீலரின் குடும்பச் சிறப்பு முன்பு திருக்கோயில் திருப்பணியால் சிறப்புற்றது. இன்று அச்சிறப்பிற்கு முடிமணியாக இருந்து சைவபரிபாலனம் செய்யும் ஐயா அவர்களை இந்நாளில் வணங்கி வாழ்த்துகிறேன்.

முடிவுரை :

மதுரைத் திருக்கோயிலின் கபாலி முதற் பிரகாரத்துப் பெரிய புராண வரலாற்றுச் சுதைச் சிற்பங்கள் 1963ல் நடந்த கும்பாபிடேகத் திருப்பணியில் மாற்றம் செய்யப்பட்டுத் திருவிளையாடல் வரலாறாக மாற்றப்பட்டுவிட்டன. அம்மன்கோயிலில் எழுதப்பட்டிருந்த பெரியபுராணச் சுவர்ச்சித்திரமும் சிமிட்டியால் மறைத்துப் பூசப்பட்டது. பொற்றாமரையில் நாகப்பையா அவர்களால் வரைவிக்கப்பட்டிருந்த திருவிளையாடற் புராண ஓவியத்தை நாயக்கர் கால ஓவியம் என்று பிறழ உணர்த்தப்பட்டு, அதைக்காப்பாற்றுவார் போல இடம் பெயர்த்துள்ளனர். ஓவியச்சித்திரம் உரியவிடத்தில் வந்து சேர மீனாட்சிஅம்மையின் திருவருள் கூட்டி வைக்கவேண்டும்.

ஆழ்கதீயது! எல்லாம்!

அரன் நாமமே சூழ்க!

வையகமும் துயர் தீர்கவே!

என் குருநாதர்

பழ. சண்முகம் செட்டியார்,
தில்லையம்பதி.

கடல்கடந்த இரங்கூன். முதல் தெரு 112/122 எண். முருகப் பெருமான் திருமுன்னர் தைப்பூச நிகழ்ச்சி. சொல்மாரி பெய்தது கொண்டல். கேட்போர் தம்மை மறந்திருந்தனர். சொல்பொழிந்த உள்ளமோ "எத்தனை பேர் சமயதீக்கை முதலான படிகளுக்குத் தகுதி" என்று சிந்திக்கும். அடிக்கடி பெய்த அருள் மழையில் அன்பர்களின் நெஞ்சக் குளங்கள் நிரம்பின. "சைவக் கெளிறது படுக்க" சிவவலை, வலை வாணனால் வீசப்பட்டது. சிக்கிய மீனங்கள் பரியில் போடப் பட்டன. தப்பியோடியன குறிப்பில மர்ந்தன.

இவர்கள் வழிபாட்டில் உள்ளம் பறிகொடுத்தோர் பலர். தங்கள் தங்கள் உலகியல் குறைகளையும், வழிபாட்டில் உள்ள குறைகளையும் உள்ளதை உள்ளபடி இவர்களிடம் சொல்லி மாற்றம் வேண்டுவார்கள் அன்பர்கள். அனைத்திற்கும் திரு முறை ஆதாரங்கள் காட்டி, அக்குறைகள் நீங்க அந்தந்தத் திருமுறைத் திருக்கடைக்காப்பு, திருப்பாட்டின் பிடிப்புக்களை மந்திரமாக உணர்த்தி வழிபட்டு வரச் செய்தும், அந்தந்தத் திருத்தலங்களுக்கும் போய் வரச்செய்தும், செல்வம், தொழில் பெருக்கிக் கொண்ட அன்பர்கள் பலர். திருமணம் நிறைவுற்ற அன்பர்களும் பிள்ளைப்பேறு பெற்றவர்களும், சூல்காக்கப் பெற்றுக்குறைவில்லாத மகப்பேறு பெற்றவர்களும், உடல் நலக்குறைவு தீர்ந்து சுகவாழ்வு பெற்றவர்களும் எண்ணில்லாதவர்கள். அடிப்படைப் பலம் திருவைந்தெழுத்தே (யக்ஷிணி வித்தை அல்ல) விரைவினிலே பலன்

காணவில்லையே என அவசரப்பட்டோருக்கு ஆறுதல் கூறி, மேலும் மேலும் அழுத்தமாகத் தொடருமாறு வற்புறுத்திப் பயன் பெறச் செய்வார்கள்.

"இக்காலம் பயணமே ஒருஃபைல் பாக்ஸில் (சிறு பெட்டியில்) வைத்து ஒரு கால் குழாய், ஒரு பனியன் ஒருடெர்லின் சட்டை இரவிலும் பகலில் வீட்டிலும் உடுப்பதற்கு ஒரு கயிலி இவையுடன் அயலூர் போக்கு வரத்து முடிந்து விடுகிறதே. நீங்கள், சிவபூசைப்பொருள்களும் பெட்டிகளும் இவ்வளவு வைத்திருக்கிறீர்களே, உங்களுக்குத் தகுதி முதலிய எல்லா வாய்ப்பும் இருப்பதால்அதுபொருந்தும்.எங்களால் முடியுமா?" என்றால்வரும் பதில்:- "கேள்வி சரிதான். முகம் வழிப்புப் பெட்டி (Shaving Box) யை மறந்தாசெல்கிறீர்கள். முகத்தூசு டப்பா (Face Powder) இல்லா விட்டால் ஊருக்குள் நுழையும் போது கடையில் வாங்கிச் சேர்த்துக் கொள்கிறீர்களே, ஆர்வம் தான் எதற்கும் காரணம்" என்று மின்னல் போன்று பளிச்செனச் சொல்லி பிசிரில்லாமல் விளக்குவார்கள். சொல்லுக்கேற்ப ஒரு சிறு கூசாச்செம்பில் சிவ பூசைப்பொருள்களை அடக்கிக் கொஞ்சமேனும் சுமையில்லாமல் பெற்றுக் கொண்டவர்களில் பலர் நாளாக ஆகத் தமிழ் வள்ளல் சிவத்திரு சேவு. மெ. அவர்களின் வழிபாட்டுப் பொருள்களின் அளவில் பாதி, முக்கால் பங்கு வரை வளர்த்துக் கொண்டிருப்பதை நானறிவேன். இவர்களை என்ன ஐயா இப்படி வளர்த்து விட்டீர்களே கூசாச் செம்பு எங்கே என்றால்:- அழியும் இவ்வுடலுக்கும், வாழ்வுக்கும் எவ்வளவு தேட்டம், எவ்வளவு சுமை எவ்வளவு விரிவு செய்கிறோம். அழியா மெய்நிலைக்கு, மெய்த் தேவனுக்கு என்னசெய்யக் கூடாது. பொருளனைத்தும் அவன் தந்ததன்றோ. என்ன செய்தாலும் அவனுடைய பெருங்கருணைக்கு ஈடாகுமா? கூசாவிலடக்குவது வெட்கமாயிருக்கிறது. எல்லா உடைமைகளையும் கொடுத்த அவ்வள்ளலுக்கு என்ன செய்தாலும் அமைதி ஏது! என்று அநுபவ ஞானம் பேசுகிறார்கள்.

தேசிகர் பெருமானுடைய சிவ ஞான உறைப்புக்கண்டு உற்றாரும் மற்றாரும் இவர்களைக் குருபீடம் ஏற்க முன்னர் நேமங் கோவில் சிவபூசை விழாவில் வற்புறுத்திய போது மறுத்து விட்டார்கள். பின்னர் கடல் கடந்த மலேசியாப் பயணம் குறிப்பிடப் பெற்றதும் அயல் நாட்டிலுள்ள தமிழர் சமயம் பல்வேறு நிலையில் துண்டாடப் பட்டிருப்பதை அறிந்து, அதனை மாற்றுவான் வேண்டி, ஞானபீடம் (ஆச்சாரிய அபிடேகம்) ஏற்றார்கள். இளஞாயிறு செவ்வொளி வீசத் தொடங்கியது. பிறப்பால் மட்டும் உயர்வு தாழ்வு இல்லை என்ற நெறியுணர்ந்த இவர்களின் ஞானாசிரியப் பெருந்தகைத் தந்தையார் எம்மனோரின் தாத்தாவாம் (ஞானபரம்பரை உறவு) பழநி சைவசித்தாந்தச்சரபம் சிவாச்சாரியமூர்த்திகள், தம் மக்கட்கு திருநாவுக்கரசு என்றும் மெய்கண்டான் என்றும் பெயர் சூட்டியதோடல்லாது, சிவபூசையின் அங்கமாகவுள்ள அழலோம்புவதை வேதியர் குலத்தில் வாராதவர்களுக்கு இன்மை செய்துவரும் பொருளற்ற மரபை முறியடித்து இவ்வாசிரியப் பெருந்தகைக்கு எரியோம்புதல் முதலியனவற்றை எழுந்தருளுவித்தார்கள். இவர்களும் அவ்வாறே தகுதிகருதிச்

சீடர்களுக்கு எரிஓம்பலை எழுந்தருளச் செய்து வருகிறுர்கள். இதனுல் பலரிடம் கலிமெலிந்து அஞ்சிப் போவது கண்கூடு. கற்ருங் கெரிஓம்பி வளர்வதும் சிறப்பாகி வருகின்றது.

இவர்கள் சிவபரத்துவம் சொல்லும் வேளையில் எவ்வளவு நேரமாயினும், நேரமாக ஆக முதுகெலும்பு (Spinal Cord) நிமிர்ந்து முகமண்டலம் ஒளிவிடுவதை உற்று நோக்கியவர்கள் குண்டலினி ஆற்றல் (Serpent Power) தலை நிமிர்ந்து வளருகிறது எனக் கருதுகிருர்கள். இவர்கள் எழுந்தருளும் இல்லங்கள் தோறும் சிவமணம் கமழும் என்ருல் இவர்கள் இல்லத்தைப் பற்றிக் கூறவா வேண்டும்? தெருவே சம்பந்தர் தெரு. இல்லமோ பாலருவாயர் நிலையம். திருமுகப்போ, பேரருட் குழந்தையின் அருள்ஞானம் பொலிந்த நிழலோவியத்தால் வண்ணம் செய்தவாறு ஒளி விடுகிறது.

இவர்கள் இல்லத்தில் நிரந்தரமாக வேதிகையும் ஓமகுண்டமும் காட்சியளிக்கும். சாதாரண நாளிலேயே இல்லம், திருமடமாகவோ, ஆலயமாகவோ காட்சி அளிக்கும். தீக்கைநாளில் அளவிட முடியுமா அருள் நிலையை?

இரங்கூனில் தொடர்ந்த, ஓய்வு இல்லாத சொற்பொழிவால் உடல்நலம் சிறிது குறைந்தது. மருத்துவம் நடைபெற்றது. உடம்பைப் பரிசோதிக்கப் பல மெல்லிய சிறுமயிரிழை போன்ற குழாய்கள்(wire)இயந்திரத்திலிணைக்கப் பட்டன. இயந்திரத்திலிருந்து நீண்ட நீண்ட கட்டமிட்ட காகிதச் சுருள்கள் (graph paper) தேர்வடம் போன்று நீண்டுவெளிவரும். அதில் கோலங்கள் போலப் பல கீறல்களும் கோடுகளும் வடிவெடுக்கும். அதையெல்லாம்கண்டு மருத்துவர் ஏதேதோ செய்தார். ஓய்வு வேண்டுமென்ருர். ஓய்வு எப்படிக் கிடைக்கும். மருத்துவரும் சொற்பொழிவு தோறும் உடனுறைவர். இவருக்கும் மேடையிலே தனி நாற்காலியுண்டு. இவர்உடனுறைவதால், நோய் மிகுதிஎன்று பிறர் ஐயுறுவர். சந்தேகித்து மருத்துவரைக் கேட்டால் 'ஐயா, இவர்களுக்கு நோய் ஒன்றும்செய்யாது எந்த நோயும் தீண்டாது. காரணம், திருநீறு சண்ணித்த திருமேனி என்பார். அப்படியானுல் ஏன் உடனுறைகிறீர் என்ருல் சொற்பொழிவுக் கல்லவோ வருகிறேன் என்பார். உங்கட்கு மொழி தெரியாதேஎன்ருல் சொற்பொழிவின் சாரத்தை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லி விடுவார். இவர் ஒருவங்காளி. ஆங்கில எழுத்துக்களில் பாதிக்கு மேல் 17, 18, எழுத்துக்கள் இவருக்குவிருதாகப் பறைசாற்றி நிற்கும். மெல்லெனப் பேசுவர். சர்க்கார் பெரும் பதவியாளர்களுக்கு மருத்துவம் புரியும்வல்லுனர்களில் இவரும் ஒருவர். இவர் பெயரே டாக்டர் சர்க்கார். அமைதியான முகமுடையவர். கல்வித் திருவும் செல்வத் திருவும் இயல்பாகப் பெற்றவர். முத்தித் திருவுக்கு விழைபவர். பெரியதோர் விமானம் போன்ற "இம்பாலா" மோட்டார்கார் இவருக்கு உண்டு. இந்த ஊர்தியில் வந்து தேசிகர் பெருமகனுரைச் சொற் பொழிவுக்கு ஏற்றிச் செல்வர். கூர்ந்து சொற்பொழிவுகளை நோக்குவர். தேசிகர் பெருமான் தாயகம் திரும்பும் போது பெரியதோர் விருந்துபசாரம் செய்தார். அந்த லட்டுகளையும், ஜிலேபி, பாயாசத்தையும் நினைத்தால் வாயூறு-கிறது இப்போதும். வெள்ளித் தாம்பா

ளங்களில் உணவு படையல். பொற்காசுகளைப் பாத காணிக்கையாக வைத்தார். மருத்துவத்துக்கு நம்மிடமிருந்து பெறுபவர் அதற்கு மாற்றமாக ஏதே-தோ செய்தார்.

ஈழ நாட்டு யாழ்ப்பாணத்தில் ஒரு நிகழ்ச்சி. யாழை அடுத்த ஒரு தீவு ''புங்குடுதீவு'' என்பது அதன் பெயர். சிவ பரம் பொருளுக்குப் பெரு விழா நடைபெற்றது. (பிரம்மஉத்சவம்) 10 நாளும் பெரியபுராணச் சொற்பொழிவுகள். கடலில் வலை வாணனாக வந்தது போக இப்போது காட்டகத்து வேடனாகக் காட்சிகொடுத்தார்கள் உள்ளப் பாங்கில். முன்னர் மின்வலை விசியவனை இப்போதைய கானவன் அம்பில் எய்யப்பட்ட சிவக் களிறுகள் பலர். உடனடியாகத் தீக்ஷைக்கு நாள் குறிக்கப்பட்டது. காலை 7 மணிக்குத் தீக்ஷை தொடங்கியது. மாலை 4 மணிக்கு நிறைவெய்தியது. சாதகம் செய்தோர் உடனுறைய முடியவில்லை. பசியும் ஓமப் புகையும் மிகை. ஞானசிரியர் பெருந்தகை போட்ட கால்கள்கூட மாற்றாமல் ஓவியம் போல அமர்ந்தபடியே இறுதி வரையிலிருந்து ஒரேயடியாய்த் தீக்ஷை முடித்து 4½ மணிக்குத் தேநீர் மட்டும் அருந்தினர். வியப்புக்குரிய ஆற்றல்; அவர்கள் திருமுகம் இடையிடையே சீடர்கள் மாற்றும் போது, போடப்பட்டிருந்த கவசஆடை (ஆசிரியரும் சீடர்களும் உபதேச காலத்தில் போட்டு மூடும் பட்டாடை) நீங்கும் போதுமட்டும் கண்கள்மூடிப்புலனாகும்.

இந்தக் காட்சிகள் கண்டநுபவித்தவை. முகமனல்ல. சிவ தீக்கைகளில் பத்ததி எல்லோரும் கேட்கத் தமிழில் வாசிக்கப் பெற்று ஆங்காங்கே குறிப்புக்களும் பொருள்களும் சொலப் பெற்று அதற்குரிய திருமுறைகள் ஊற்றெடுத்துப் பிரவாகமாகிப் பொங்கும். நிருவாண தீக்கையில் சீடனின் ஆன்மாவை முதல் நாளிரவு வேதிகையில் சிவ பரம் பொருளின் திருவடியில் வைத்து

நாயிற் கடை ஆம் நாயேனை
நயந்து நீயே ஆட் கொண்டாய்
மாயப் பிறவிஉன் வசமே
வைத்திட்டு இருக்கும் அதுஅன்றி
ஆயக்கடவேன், நானோ தான்?
என்னதோ, இங்கு அதிகாரம்
காயத்து இடுவாய், உன்னுடைய
கழல்கீழ் வைப்பாய்
கண்ணுதலே!

என்ற மணிவாசகப் பொந்துத் தேன் பிலிற்றல் சுவைத்துணர நிகழும்.

திரு முறைகளுக்குச் சான்று திருமுறைகளிலிருந்தே கொணரப் பெறல் வேண்டும். ஏனைய நூற்சான்று கூடாவென்பார்கள் நம் ஞானசிரியர் அவர்கள்.

நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் தன்னடக்கம் மிகுந்தவர்கள். தங்கள் பெருமையைத் தாங்களே வெளிப்படுத்தக் கூடாது என்ற நிலையில் பிற பெரியோர்களையே ஏத்தி வந்ததால் தங்கள் மரபை மறந்தே விட்டார்கள். இப்போது தங்கள் தங்கள் குலத்தில் வந்த மகான்களை இலக்கியப் பேராசிரியர்களை, செல்வந்தர்களை, அவ்வக் குலத்தாரே ஏத்திச் சிறப்புச் செய்யும் கால நிலையை ஒட்டி உணர்ந்து, நகரத்தார்களும் செய்து வரவேண்டும். இந்த முறையில் நமது ஞானசிரியப் பெருந்தகைக்குத் தக்க முறையில் விழாவெடுக்க முன்வந்திருப்பது போற்றற்குரிய தாகும்.

மணிவிழாக் குழுவில் தக்கார்கள் பலர் இடம் பெற்றிருப்பது சிவசமயத்தார்க்குக் கிடைத்த பெரும் பேறாகும். "மன்னரும் முனிவரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்ற மூதுரைக் கிணங்க இருதிறத் திருவுடையார்களும் தோள் கொடுப்பது பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது.

அருள்தந்தை, சிவபூசை செய்பவர்களிடம் "பிராசாதநெறி" வேர்விட வேண்டும் என்றும் அது அவரவர்கள் ஊற்றத்தால் ஊற்றெடுக்க வேண்டுமென்றும் அடிக்கடி அருளுவார்கள். (பிராசாதம் என்பதற்குச் சிவஞான கதியைத் தருவது எனப் பொருள் கூறுவர்) பிரா - சிவஞானம்; சா - கதி; தம் - தருவது. பிராசாதம் யோக முறைகளுள் ஒன்று.

சிவபூசையில் அந்தர்யோகம் ஊன்ற ஊன்ற இயல்பாகப் பிராசாத நெறி வளர்ந்து உணரப் பெறும் என்பது இக்கட்டுரைக் குரிய ஞானாசிரிய வள்ளலின் உபதேசம்.

காட்டகத்து வேடனாகியும், கடலில் வலை வாணனாகவும் மிளிர்ந்த இவ்வருளாளர் இஞ்ஞான்று 'நாட்டில் பரிப்பாகனா'க இருப்பதை விட்டுவிடாமல் (மீனவனும் காண வல்லன் அல்லன் என்பது போன்றாகி விடாமல்) மூலபண்டாரம் வழங்குவதைப் பெற்றுய்வோமாக என்று கூத்தப்பெருமானின் எடுத்த பொற்பாதம் ஏத்தி மகிழ்வோமாக,

"உண்டுடுத்துப் பூண்டிங் குலகத்
தார் போற்றிரியும்
தொண்டர் விளையாட்டே சுகங்காண்
பர்ாபரமே"

—தாயுமானவம்

மணிவிழாச் செல்வரின் ஞானாசிரியர்

தி. சு. கோவிந்தசுவாமி,
செயலாளர்,
சைவ சித்தாந்த சபை, மதுரை.

மான்காட்டி மான்பிடிக்கும் வாய்ப்பை நினைப்பூட்டி
ஊன்காட்டி நம்போ லுருக்காட்டி — வான்காட்ட
வந்த ஈசான சிவ மாதேவன் பாதமலர்
சிந்தனையாற் சேருந்திரு * — [தத்புருஷ தேசிகர்]

ஈசான சிவாசாரிய சுவாமிகள் 16-6-1900ல் ஆனித்திருவோண நாளில் சென்னிமலையில் தோன்றினார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தாயார் வமிசபரம்பரையைச் சார்ந்தவர்கள். பூர்வம் திருக்கடவூரைச் சேர்ந்து பின்னர் சென்னிமலைக்கு வந்தவர்கள். இவர்கள் இளமையில் தந்தை சிவசுப்பிரமணியக் குருக்களிடம் தமிழும், காவேரி சுப்பிரமணியக் குருக்களிடம் வடமொழியும் நா. கதிரைவேற் பிள்ளையவர்களிடம் சமயக் கருவி நூல்களும் பயின்றார்கள். சென்னிமலையில் 'கலாஞான சங்கம்' என ஒரு சபை ஏற்படுத்தி ஒரு நூலகமும் வைத்தார்கள். அதில் சமய நூல்களைத் தொகுத்தார்கள்.

பின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களின் நேர் மாணவரான காசிவாசி செந்திநாதய்யரவர்கள் திருப்பரங்குன்றத்தில் அச்சகம் வைத்து 'நீலகண்டபாடியத் தமிழ் மொழி பெயர்ப்பு' 'சிவ ஞான போத வசனாலங்கார தீபம்' 'தேவாரம் வேத சாரம்' 'சைவ வேதாந்தம்' ஆகிய நூல்களை வெளியிட்ட சமயம் இவரும் மற்றும் அறுவரும் அவரிடம் சிறிது காலம் பயின்றனர். அப்போது ஐயரவர்கள் இவர்களை 'சப்த ரிஷிகள்' என அழைப்பாராம். நாவலரய்யாவின் வாழ்க்கை வரலாறுகளை ஐயரவர்களிடம் நேரில் கேட்டறிந்து பிற்றை ஞான்று நம்மனோர்க்கு உணர்த்திய பெரியார் இவர்.

மணிவிழாச் செல்வரின் ஞானாசிரியர்கள்




விண்ணாடும் காழிநகர்க் கோன்சம் பந்தன்
விளங்குபாற் கிண்ணமிடக் கரத்திற் காட்டி
அண்ணாவை வலக்கரத்தாற் சுட்டிக் காட்டி
அரையார்ந்த சதங்கைமணிக் கோவை காட்டிக்
கண்ணாடு திருவடியிற் சலங்கை காட்டிக்
கந்தரத்துப் பணிகள்பல கறங்கக் காட்டி
ஒண்ணாவில் தேவார ஓசை காட்டி
ஒளிர்காட்சி தரஎனக்கிங் குற்றான் மன்னே.



யாக்கைகொடுத் தெமையிங்கே
இவைநுகர்ந்து வருகவென எம்கரத்தில்
நோக்கிருநான் குடையான்முன் பெழுதும்எழுத்
தினைஞான நோக்கம் செய்து
பூக்குமலர்க் கரத்தாலே அழித்தென்றும்
சிவபோகம் பொலியும் வண்ணம்
தீக்கைபுரிந் தாண்டருளும் ஈசான
சிவகுரவன் திருத்தாள் போற்றி.

மணிவிழாச் செல்வரின் ஞானாசிரியர்
சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார்

கற்பக வள்ளலுடன் வயிநாகர வள்ளல்கள்



பிள்ளையார்பட்டிக் கற்பகப் பிள்ளையார்



நாகப்ப ஐயா



வேங்கடாசல ஐயா

தேவகோட்டைச் சிவாகம சங்கத்தில் திரு. பொ. முத்தையா பிள்ளையவர்களிடம் சைவ சித்தாந்த சாத்திர பாடம் கேட்டவர். அதுபோது அங்கு மற்றையோருக்கு வியாகரண பாடமும் நடத்தலாயினர். அதன்பின் இலக்கணம் முத்துக் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளிடமும் சைவ சாத்திர நுட்பங்களைக் கேட்டனர்.

பின்னர் ஆகமச் சுவடிகள் தேடும் பொருட்டு வடநாடு சென்றுர்கள். காசியிலிருந்து கொண்டு நேபாளம், காஷ்மீர் ஆகிய இடங்களுக்குச் சென்று அபூர்வமான சுவடிகளைச் சேகரித்தார்கள். இவர்கள் காசியில் தங்கி இருந்த காலத்தில் மணிவிழாச் செல்வரின் தாய்மாமஞரான ரெட்டை அரு அவர்களும் அவர்கள் பங்காளிகளில் ஒருவராகிய மு. ராம. சுப. சுப்பிரமணியம் செட்டியாரவர்களும் மாதந் தோறும் செலவுக்குத் தொகையனுப்பி வந்தனர். பண்டித மாளவியாவும் இவர்களது சைவ சித்தாந்த தத்துவ ஞானத்தை உணர்ந்து உதவி புரிந்துள்ளார். ரூ15,000/க்கு மேற்பட்ட செலவில் ஆகம ஏடுகளைத் தொகுத்து வைத்துள்ளார்கள். இம்மட்டோ! சைவ சமய நூல்கள் பலவற்றையும் சேமித்து வைத்துள்ளார்கள்.

கோர்ட்டிலிருந்த ஒரு ஆகமச் சுவடியைப் பெறப் பல நாட்கள் உண்ணு விரதமிருந்தார்கள். மருத்துவர் தனது பரிசோதனையில் உண்ணவில்லை என்று சான்று காட்ட அதன் மீது ஏடுகளைத் தர நீதிபதி உத்திரவிட்டாராம். அதன் பிறகு சுவடியைப் பெற்று உண்ணுவிரதத்தைக் கைவிட்டதாகச் சொல்லுவர்.

1934ம் ஆண்டில் பழநியை வாஸஸ்தானமாகக் கொண்டு 1939ல் ஓர் ஆண்டு பழநிக் கோவிலில் சிவாசாரியாராகப் பணியாற்றிஞர்கள். காசியில் 12 வருடங்கள் வசித்து "காசிவாசி" என்ற பட்டமுடைய இவர்கள் பழநியை வாஸஸ்தானமாகக் கொண்டது என்னையோ எனின் அருணகிரி நாத சுவாமிகள் திருப்புகழில் "காசியின் மீறிய பழநியங்கிரி" — என்று அருளியிருப்பதால் என்பர்.

தருமபுர ஆதீனம் 24 வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள் 1941ம் ஆண்டில் மெய்கண்டான் சித்தாந்த மகாநாட்டை இவர்களது ஆலோசனைக்கு இணங்கவும், தலைமையிலும் சிறப்புற நடத்தி இவர்களுக்குச் "சைவசித்தாந்த சரபம்" என்ற பட்டமும் வழங்கிஞர்கள்.

1958ம் ஆண்டு மதுரைச் சைவ சித்தாந்த சபையின் மகாநாட்டில் தலைமை வகித்தும், ஒவ்வோராண்டு வருகை தந்தும் சிறப்பித்தனர்.

குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம், நெல்லை சிவபூசகர் திருக்கூட்டம் போன்ற பல சமய நிறுவனங்களின் விழாக்களில் ஆண்டுதோறும் தலைமை வகித்துச் சமயப் பயிர் தழைக்கச் செய்தனர்.

1960ம் ஆண்டு இவர்களது சஷ்டி அப்த பூர்த்தி விழாவைத் தருமையாதீனம் 25ம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருக்கடவூரில் வைத்து

நடத்தச் செய்து சிறப்புச் செய்தனர். அந்த ஆண்டிலேயே 33 ஓம குண்டங்கள் அமைத்துச் செய்யப்படும் மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்தி வைத்தனர். அஞ்ஞான்று பத்திரிகைகள் இவரது வரலாற்றை வெளியிட்டன.

இலங்கைக்கும் கும்பாபிஷேகம், மாநாடு முதலிய நிகழ்ச்சிக்காக சில முறை சென்று வந்துள்ளனர். அங்கு ஆறுமுக நாவலரைப் பற்றி அவர் வரலாற்றில் கூறப்படாத செய்திகள் பலவற்றைக் கூறி இலங்கைத் தமிழர்களை ஆச்சரியத்தில் மூழ்கச் செய்தார். அங்கு பிரதமராக விருந்த டட்லி சேனநாயகாவினுல் பாராட்டப் பெற்ருர்.

கர்ண பரம்பரைச் செய்திகளையும் சைவ அறிஞர் கருத்துக்களையும் தொகுத்து வழங்கும் கருத்துக் கருவூலமாகத் திகழ்ந்தார்கள். நூல்கள் பலவும், கட்டுரைகள் பலவும், சைவ நூல்களுக்கு முன்னுரைகள் பலவும் வழங்கியுள்ளார்கள். அவைகளில் இவர்களது நுண் மாண் நுழை புலத்தை அறியலாம்.

திருவாவடுதுறை, மதுரை, திருப்பனந்தாள் மடாதிபதிகளாலும் கௌரவிக்கப் பெற்ற இவர்கள் பல நிறுவனங்களின் மூலம் மகாமகோபாத்யாய, சிவாகமக் கடல், சிவாகம ஞானபாநு முதலிய சிறப்புப் பட்டங்களும் பெற்றிருந்தார்கள்.

நினைத்தல், பேசுதல், செய்தல் இம் மூன்றிலும் பிறழாதவர்கள். இவர்களிடமிருந்த சீரிய குணம் தன் கொள்கையினின்றும் எதன் பொருட்டும் வளைந்து கொடுக்காத இயல்புடைமையாகும்.

" சிவ பூசை செய்யும் முன் மற்ருென்றும் செய்யேல்
சிவ பூசை செய்த பின் செய் " — என்பதற்கிணங்க நாடோறும்

மகா நைவேத்யத்துடன் சிவ பூசையும் அக்நி காரியமும் செய்தாலன்றி ஒன்றையும் உட்கொள்ளார்கள். நடிப்பின்றி இயல்பாகவே தவருது பூசை செய்யுமியல்பினர். தன்குல ஸ்வ தர்மத்தினின்றும் பிறழாதவர்.

இருபது ஆண்டுகளில் இவருக்குச் சேர்ந்த ஐஸ்வர்யத்தைக் குறித்து " நாம் என்ன செய்து விட்டோம் எல்லாம் சிவ பூஜையின் பயன் " — என்று வியந்து கூறுவார்கள்.

இவர்கள் நூல்களைக் கற்றலோடு நின்று விடாமல் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்துத் தம் போன்று பலரையும் சைவநெறியில் நிற்கச் செய்தமை அறிந்து இன்புறற்பாலது.

சிவ பெருமானை வழிபடுவதற்கு யோக்கியதையைப் பிறப்பிக்கும் கிரியையாகிய சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம் ஆகிய நான்கு வகைத் தீட்சை

களையும் சிவாகமோக்தமாகச் செய்து வைத்துச் சுமார் 45,000 * சீடர்களை உருவாக்கிச் சைவ நெறியில் நிற்கச் செய்தனர்.

தீக்ஷைக்குரிய தத்துவ விளக்கங்களைத் திருமுறை மேற்கோளுடன் கூறுவதில் அதி சமர்த்தர். அதில் இவர்கட்கு நிகர் இவர்களே.

இவர்களது இலட்சியம் சிவாகமங்களைப் பாதுகாத்து அவற்றின் புராதன கலாசாரத்தையும் பண்பாட்டையும் மக்கள் பெற வேண்டுமென்பதே.

"சாதனையின்றி சிந்தனையாற் பிரயோசனமில்லை"
என்பதும் இவர்களின் கோட்பாடாகும்.

இவர்கட்கு மனைவியாரும், திருநாவுக்கரசு, அருணந்தி, மெய்கண்டான் என்று பெயர் விளங்கும் குமாரர்களும் உள்ளனர்.

இவர்கள் 10-4-1963ல் சுத்தாத்துவித முத்தியை யெய்தினுர்கள். இவர்களது இடத்தை நிரப்ப ஒருவருமில்லை யென இரங்கற் கூட்டத்தில் பலர் கூறினர்.

இனி சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரை ஆட்கொண்ட வரலாற்றைக் கவனிப்போம்.

சிவாசாரிய சுவாமிகள் 23 வயது நிரம்பியுள்ள பருவத்திலேயே சிவாகம சங்கத்தில் பயிலுங்காலை தேசிகரவர்கட்கு வயது எட்டு. அப்போதே தேசிகர் அவர்கள் சுவாமிகளிடம் தொடர்பு கொண்டுள்ளனர். சுவாமிகளும் இவரது தமிழ்ப் பற்று, சைவப்பற்று, சிவபுண்ணியப்பற்று ஆகியவைகளைக் கண்டு வந்தனர்.

15 வயதுக்குள்ளாகவே தமிழ்ச் சங்க வித்வான் திரு ஆழ்வார் ஐயங்காரவர்களிடம் இயற்றமிழையும், காரைக்குடி ஸ்ரீமத் சொக்கலிங்கய்யா, கொரடாச்சேரி வாலையானந்த சுவாமிகள் முதலானேரிடம் சைவ சித்தாந்த சாத்திர பாடங்களையும் கேட்டுத் தெளிந்த தேசிகர் அவர்கள், 26 வயதில் 1941ம் ஆண்டு தருமபுர ஆதீன வித்வானுகி மெய்கண்டான் சித்தாந்த மகாநாட்டில் சொற்பொழிவும் செய்தனர்.

இளமையிலேயே கவிபுனையுமாற்றல் மிக்கிருந்தமையின் "பாலகவி" என்ற பட்டம் வழங்கப் பெற்றுச் சைவ உலகில் இவரது பெயர் பரவலாயிற்று.

மிகச் சிறிய வயதினராயிருந்த தேசிகரவர்களிடம் சிவாசாரியசுவாமிகள் அதிக மதிப்பு வைத்திருந்தார்கள் என்பதைப் பலருமறிவர். யானும் அறிவேன்.

---

* இவர்களில் திருமுருக கிருபானந்தவாரியார், தமிழ் வள்ளல் சேவு. மெ. மெய்யப்பச் செட்டியார் முதலானேருமாவர். யானும் ஒருவன். எனக்கு 1950ல் சமய தீட்சை செய்தும், 1954ல் திருமுறைகள் எழுந்தருளச் செய்து கொடுத்தும், 5-1-1955 ல் சிவ பூசை எழுந்தருளச் செய்து கொடுத்தும், 1-6-1955 ல் எனது திருமணத்தையும் செய்து வைத்தும் ஆட்கொண்டனர்.

தேசிகரவர்கட்கு 32 வயது வரவும் சத்திநிபாதம் நிகழவே ஆசாரியரின் திருநோக்கத்தை அவாவுற்றிருந்தனர்

தவத்தினுக் கரச தான சங்கரன் பூசை செய்யான்
கவர்த்ததீ நரகில் வீழ்வன் ஏறினும் காகம் போல
வலத்தனுய் நோயும் பேயும் அல்லலு மிடியுஞ் சுற்றிச்
சுவர்த்தலைப் பூனைபோலச் சுற்றுவன் யோனிதோறும்.

என்பதை உணர்ந்து தவத்தினுக்குள் அரசாகிய சிவபூசைத் தவமியற்ற விழைந்து குழைந்திருந்தனர்.

1947 பிப்ரவரி [விய ஞூ மாசி மீ 7வ] இவர்கட்கு மதுரை அறுபத்து மூவர் திருமடத்தில் ஈசான சிவாசாரிய சுவாமிகள் நிருவாண தீட்சை செய்து சிவலிங்க பூசை எழுந்தருளச் செய்து கொடுத்தார்கள். அஞ்ஞான்று தமிழ்ச் சங்க முது பெரும் புலவர்களாகிய N. R. கிருஷ்ணசாமி ஐயங்கார், ஆழ்வார் ஐயங்கார், அட்வகேட் டி. சி. சீனிவாச ஐயங்கார், சர். பி. டி. ராஜன், R. S. நாயுடு பார் அட்லா, M. V. நல்லமுத்துப் பிள்ளை போன்ற நகரப் பிரமுகர்களும் வந்து அங்கு நடந்த தீட்சை கிரியைகளையும் விளக்கங்களையும் கண்டும் கேட்டும் வியந்தனர்.

1958ல் தேசிகரவர்கள் மதுரைச் சைவ சித்தாந்த மாநாட்டில் பேசினர். அதுமுதல் ஆண்டு தோறும் ஷெ சபை நிகழ்ச்சிகளிற் கலந்து சொற் பொழிவாற்றிச் சிறப்பித்து வருகின்றனர்.

தேசிகரவர்கள் 1960ல் மலேயாவுக்குச் செல்ல இருந்தார்கள். அப்போது அங்கிருந்த பலபேர் சிவதீட்சை பெற ஆர்வங் கொண்டிருப்பதாகவும் அதற்குத் தக்க (அதாவது சிவ தீட்சை செய்து வைக்கத் தக்கதான) ஆசாரிய அபிடேகம் பெற்று வந்தால் நலம் எனவும் எழுதி இருந்தனர். இதைத் தெரிவித்த தேசிகரவர்கட்கு 10-2-1960ல் உலகம்பட்டி நகரச் சிவாலய மகா கும்பாபிடேக விழா வன்று ஆசார்ய அபிடேகம் செய்வித்து—

" நீங்கள் வெளிநாடு சென்று பல சொற்பொழிவுகள் செய்து புகழ் ஈட்டலாம். பலராலும் பாராட்டும் பெறலாம். இனி, அவற்றைக் குறிக்கோளாகக் கொள்ளலாகாது. நாம் எத்தனை பேருக்குத் தீட்சை செய்வித்து பஞ்சாட்சர ஜபம் செய்யவும், சிவபூசை செய்யவும், சைவ சமய நெறி நிற்றற்கு ஆட்படுத்தி இருக்கிறோம் என்பதையே குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும் ". — என வலியுறுத்தினர்கள். அதன்படி மலேயா, வியட்நாம், கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் 9 மாதம் சுற்றுப் பயணம் செய்து 250க்கு மேற்பட்டோருக்குச் சிவதீட்சை செய்து வைத்தும், பல சொற் பொழிவாற்றியும் திரும்ப வந்தனர்.

சிவாசாரிய சுவாமிகள் தத்புருஷ தேசிகரவர்கட்கு அவரது செயலைக் குறித்து ஒரு பாராட்டு விழா நடத்துமாறு மதுரை சைவ சித்தாந்த சபையின ராகிய எங்கட்கு கட்டளையிட்டனர்.

11-12-1960 ம் நாள் மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் சைவ சித்தாந்த சபைத் தலைவர் சிவஸ்ரீ கற்பூர சுந்தர சிவாசாரிய சுவாமிகள் தலைமையில் பாராட்டு விழாச் செய்தோம். மறுநாள் திருவருள் தவ நெறி மன்றச் சார்பிலும் சங்க உலா மண்டபத்தில் மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் தலைமையில் பாராட்டு நிகழ்ந்தது.

1962ல் தேசிகரவர்களின் புதல்வி மீனாட்சிக்குத் தேவகோட்டையில் திருமணம் நடந்தது. சிவாசாரிய சுவாமிகள் தலைமை வகித்து ஆசி கூறினார்கள். யானும் திருமணம் காணச் சென்றிருந்தேன். அப்போது அவர்கள் கூறியது எனக்கு ஞாபகம் வருகிறது.

" நகரத்தார்கள் சிவ தருமத்தை முன்னிட்டுக் கொண்டே வாழ்பவர்கள். இன்ன கோயிலுடையார் இவர்கள் என்று வழங்குவதே இதற்குச் சான்றாகும். வயிநாகரம் குடும்பத்தார் துவாதசாந்த க்ஷேத்திரமான மதுரையில் சென்ற நூற்றாண்டில் பல லட்ச ரூபாய் செலவழித்துத் திருப்பணி செய்த குடும்பத்தின ராவர். இக் குடும்பத்தின் பெருமை குறித்துச் சத்திரம் சோம. அவர்கள் " அமரா வதி புதூர்காரர்கள் சிவ புண்ணியத்தை மரக்காலால் அளந்தவர்கள் " என்று வியந்து கூறுவார்கள் " என்று எடுத்துக் காட்டினார்கள்.

இஞ்ஞான்று வட மொழி, தென் மொழி பயின்றும் சைவ சித்தாந்த சாத்திரங்களைக் கற்றுத் துறை போகியும், சம்பிரதாய விரோதமின்றியும், தருக்க நூல் முடிபுகட்கு இணங்கவும், சைவ நூற் கருத்துகட்குத் தங்கு தடையின்றி விளக்கங்கள் கூறுவதில் தேசிகரவர்கட்கு நிகர் அவரே என்பது மிகையாகாது. நோயினால் பீடிக்கப் பட்டவன் வைத்ய சாத்திரங்களைக் கற்று விட்டால் மட்டும் நோய் நீங்கி விடுமா? அது போலச் சைவ நூல்களைக் கற்று விட்டால் மட்டும் சைவ சமயத்தை அனுட்டிப்பதாகச் சொல்ல முடியாது.

வெறும் கற்றலோடு நில்லாது ஆசாரிய அபிடேகம் பெற்றுத் தான் அனுட்டித்து வருதலோடு இதுவரை சுமார் 1,500 பேருக்கு மேல் தீட்சைகளையும் நல்கி குருவசன பரிபாலனம் செய்து வரும் தேசிகரவர்களின் திருத்தொண்டை என்னென்று பாராட்டுவது ?

சைவ சமயம் செயல் முறைச் சமயம் (Practical Religion) என்று வாய் கிழியப் பேசி விடுவதால் மட்டும் சமயம் வளர்ச்சியடையாது.

கடவுளை வழிபடுவதற்குத் துணை செய்யாத கல்வியினால் பயனில்லை என்றார் திருவள்ளுவர்.

பூவைச் சாத்தித் தோத்திரம் செய்யாத உடம்பினால் பயனில்லை என்றார் திருநாவுக்கரசர்.

கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் ஒழுக்கமுமாகும் என்பதைக் கடைப் பிடித்து உய்வோமாக !

வாழ்க சிவஸ்ரீதத்புருஷ தேசிகர் !
வாழ்க ! அவர்தம் திருத் தொண்டு !

குறிப்பு: சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள் 13-3-1968ல் எனக்கு ஸ்படிகலிங்கம் எழுந்தருளச் செய்து கொடுத்து உடையவர் பூசை செய்துவர அனுக்கிரகித்துள்ளார்கள்.

சித்தாந்த போதகராக ... ...

நம் மணிவிழாச் செல்வர் 1950 முதல் புதுக்கோட்டை, நாகர்கோயில், தூத்துக்குடி, திருநெல்வேலி, சென்னை, திருவானைக்கா, திருக்காருயில் முதலிய ஊர்களில் சைவ சித்தாந்த வகுப்புக்கள் நடத்தினர். திருச்சிராப்பள்ளியிலும் தேவகோட்டையிலும் தொடர்ந்து வகுப்பு நடத்தி வருகிறர்.

இசையறிஞராக ... ...

இசைத் துறையிலும் வல்லவர் பாலகவி. அவர் இளமையில் ஆர்மோனியம் வாசித்தவர். அவர் இயற்றிய இசைப் பாடல்களைச் சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகமும் அண்ணுமலைப் பல்கலைக்கழகமும் வெளியிட்டுள்ளன. பின்னது, திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளையால் சுரப்படுத்தப்பட்ட பாடல்களைக் கொண்டது.

நாவுக்கிசைந்தது பாவுக்கிசையும்

நம் மணிவிழாச் செல்வர், தமது பத்தாம் வயதில், கட்டளைக் கலித்துறைப் பாட்டுப் புனைவதற்கு எழுத்து எண்ணிக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு வந்த வித்துவ சிரோமணி, வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார், "எழுத்தை எண்ணுவது ஏன்? நாவுக்கிசைந்தது பாவுக்கிசையும் ஓசையிலேயே பாவின் இலக்கணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றர். அன்று முதல் நம் மணிவிழாச் செல்வர் கட்டளைக் கலித்துறையைப் பாட எழுத்து எண்ணுவதில்லை.

எங்கள் ஞானுசிரியர் இனிது வாழ்க

சீர்மிகும் ஞான மூர்த்தி திகழுந்தத் புருஷ ஆசான்
ஏர்கெழும் அடிகள் போற்றி ஏத்துவன் வாழ்க நன்றே
பார்மிசைப் பற்பல் லாண்டு பசுபதி அருளை அன்பர்
ஆர்வுற அளித்துக் காக்கும் அருட்செயல் வாழி! வாழி!!

அக்கரம் ஐம்பா னென்றும் அருட்பிர ணவமோர் மூன்றும்
மிக்கஐந் தெழுத்தும் கூடும் மேன்மைசால் தொகைநல் லாண்டு
பக்குவ மாகும் ஏல்வை பதியருள் பதியும் தீக்கை
தொக்கஆ யிரத்தைந் நூறு தூயமா ணவர்க்கு நல்கி

பிறவியின் பயனும் தந்து பிறவாத நெறியும் காட்டிக்
குறைவிலா உபதே சங்கள் குழாத்தினர்க் கருளி நாளும்
நிறைவுறும் சைவ சீலம் நிகழ்சிவ பூசை என்றும்
இறையருள் ஆக மத்தின் இயல்புளி ஆற்றும் ஐயன்

கூடலம் பதியில் சொக்கர் குலவுமங் கயற்கண் ணுளோ(டு)
ஆடலில் அமர்ந்து வைகும் அருட்பதி அதனுள் அன்பர்
வீடலில் பரிவினேடும் மேதகப் பணியி யற்றப்
பாடலொ டாடல் மல்கப் பகர்சாந்தி காண்க மாதோ

மாதவத் தந்தை வாழி! மங்கலச் சீதை அன்னை
பாதபங் கயங்கள் வாழி! பாலராம் எங்கள் ஆசான்
போதமார் மூர்த்தி நம்தத் புருஷதே சிகர்தாள் வாழி!!
ஆதரத் தன்பு செய்யும் ஐயன தடியார் வாழி!!

அ. கணபதி.

தெய்வ நலங்கமழுஞ் செய்யதிருத் தாள்பணிவோம்
சைவ மணம்பரப்பும் தத்புருஷம் — உய்வுதரும்
ஆரா வமுதனைய அஞ்செழுத்தை நெஞ்சழுத்தும்
மாராம நாதகுரு மன்.

உருவமிலா ஒருபொருளை உளத்தே கொள்ள
உறுதுணையாய் ஓருருவம் வேண்டு மென்றும்
பருவமுறும் போததுவே அருவ மாகிப்
பரவெளியிற் பேரொளியைப் பயக்கு மென்றும்
அருமறையால் திருமுறையால் அநேக சான்ருல்
அருட்சைவ சித்தாந்த அருமை கூறும்
குருவடிவாய் வந்ததவ ராம நாதக்
குணக்கடலே நீ வாழ்க! கோடி காலம். 1

சமயநெறி யறியாத தமிழர் சில்லோர்
 தான்தோன்றித் தனமாகத் தருக்கம் பேசி
நமதுபரம் பரையதனை நாச கால
 நாத்திகத்தில் ஆழ்த்துசதி நடத்து நாளில்
அமைதியொடும் அறிவினொடும் அன்பி னேடும்
 ஆத்திகத்தைப் பரப்புமுன்றன் ஆற்றல் கண்டோம்
குமரனென இளமைதவழ் *ராம நாதக்*
 குணக்கடலே நீ வாழ்க ! கோடி காலம். 2

அடைவுடைய நல்லடியார் யாத்த நூல்கள்
 அத்தனையும் ஆராய்ந்தும் அனுப வித்தும்
கடையிடையு முதலுமிலாக் கடவுள் தன்னைக்
 கருத்திருத்திச் செபதபத்தைக் கடைப்பி டித்தும்
அடையமுடி யாதபயன் அடைந்த ஐயா !
 அவனருளால் யாமுனையிங் கடையப் பெற்றேம்
கொடையுடைய மரபிலுயர் *ராம நாதக்*
 குணக்கடலே நீ வாழ்க ! கோடி காலம். 3

பாலைநிலம் போல்வறண்ட நெற்றிக் கெல்லாம்
 பயன்விளையப் பரிந்துதிரு நீறு தந்தாய்
சீலமொரு சிறிதறியா நெஞ்சுக் கெல்லாம்
 சிவதீட்சை உபதேசம் செய்து காத்தாய்
ஞாலமதில் நன்றுரையா நாவுக் கெல்லாம்
 நமசிவயப் பெரும்பேற்றை நல்கி ஆண்டாய்
கோலமிகும் *பாலகவி ராம நாதக்*
 குணக்கடலே நீ வாழ்க ! கோடி காலம் 4

படியின்மிசை உருவெடுத்த உயிர்கள் எல்லாம்
 பரமசிவன் படைத்தளித்த பயனென் றெண்ணிக்
கொடியவன விலங்கெனினும் அதன்பா லன்பு
 கொள்ளுநில என்றுறுமோ அன்றே நந்தம்
அடிமனத்தில் ஒளிவிளங்கும் அமர வாழ்வை
 அடைந்திடலாம் என்றுறுதி அளிக்கும் சைவக்
கொடிபிடித்த *தத்புருஷ ராம நாதக்*
 குணக்கடலே நீ வாழ்க ! கோடி காலம். 5

" திருமுறைமணி "

வீ. மாரியப்ப செட்டியார்.

வானவரும் நனிவிரும்பும் வனப்புமிக்க வளஞ்செறியுந்
திருவினதாய் மன்னி ஓங்கும்
கோனகரில் தனவணிகர் குலமாணிக்கம் குணக்குன்றம் ஆகும்
மகாதேவா என்னும்
ஞானவுருச் சீதையன்னை நாளும்போற்றும் நற்றவத்தின் பயனாக
நானிலத்தில்
மோனவரம் பாஞ்சைவம் வளர்க்கஎன்றே முழுமுதல்வன்
திருவருளால் முகிழ்த்த அண்ணல்.

திகழ்மேனி வாக்குவளர் திங்கள் செம்மைத் தெளிவுரையால்
தினகரனே சிவனும் கல்வி
புகழ்வாணி திருநாவிற் புக்குநிற்கும் பொருள்பொதிந்த
சொன்மழையால் புவிவி யக்கும்
இகழ்பேணும் பகைவர்களும் இனிதாய்க்கேட்பர் இருமணலில்
நீர்வேண்டி இருகையாலும்
அகழ்கேணி சுரப்பதெனச் சொற்சு ரக்கும் அறிஞர்களும்
வியப்பரிவை அருளின் மாண்பே.

சென்னிமலை யீசானத் திருநாமத்துச் சிவமறையோர்தமைக்
குருவாய்ச் சிறக்கப்பெற்று
மன்னியுறை சிவகதிக்கு வழியாஞ்சைவ மலர்சமய விசேட
நிருவாணம் மற்றும்
தன்னிகரில் ஆச்சார்ய அபிஷேகங்கள் தாங்கிவரு தத்புருஷ
தேசிகப்பேர்
துன்னிய ஈராயிரவர் துகளில்சீடர் தூயசிவ பூசைசெய்து
துலங்கவைத்தார்.

சமயச் சொற்பொழிவையாயிரத்திரட்டி தாண்டுமவை
கோடிமக்கள் சார்ந்துகேட்டு
அமைதியுறப் புரிந்துவருமா சாற்கிந்நாள் ஆறுபத்தாண்டது
நிறைவுற்றதற்கு மேலும்
சமைவுறவே யோரறுபானுண்டும் ஈண்டுத் தகுதிபெற்ற
சீடர்பலர் சார்ந்துபோற்ற
உமையொருபால் திகழ்சொக்கர் அருளினாலே உயர்தவமும்
செல்வமும் பெற்றுகந்துவாழி.

ஆகமமந் தணரறைந்தா குதிகள்செய்ய அமுதகங்கை
முதல்தீர்த்தம் அபிடேகிக்க
மாகமுறச் சிவநாம ஒலியேமல்க மன்னுசிவ பூசைசெய்வோர்
மணிகளோசை

மேகமழை சொரிவதினும் மிக்கொலிக்க விண்ணவரும்
மண்ணுலகை மேலாய்ப்போற்ற
ஆகமெலாங்குழைந்துருகி அன்பர்கூட்டம் ஆசிரியர்
அடிக்கமலம் முடிக்கேபூண்டார்.

வாழிதிருத்தேவைநகர் மாண்புபெற்று மங்கலநன்மடந்தை
மீனுட்சியம்மை
வாழிதிருவலப்புறத்தே மகிழ்வோடென்றும் வாழியருட்
சைவநெறி அறங்கள்வாழி
பூழியர்தம் பெருநாடு பொற்பால் வாழிபுகழ்சமய சந்தானப்
புனிதர்வாழி
ஏழில்மறை யாகமங்கள் இலங்கிவாழி இறையருளால் குருநாதர்
என்றும் வாழி.

இங்ஙனம்,

சிவதீக்ஷா மண்டலத்தார், கருவூர்.

வருபவத்தின் தொடக்கறுத்து வல்வினையின் பிணிநீக்கி
வளரு ஞானப்
பெரியதவ நெறிகூட்டிப் பிறையணிந்த அருள்வடிவின்
பெருமை காட்டி
வருகவென ஆட்கொள்ளும் உடையானை எனக்காக்கி
வாழ வைக்கும்
குருமணியே தத்புருஷப் பெருநிதியே நின்னடியைக்
குறிக்கொண்டு ய்வேன்.

உய்வைத் தரும்பூசை உருவமிகு நன்மலரால் உஞற்றச் செய்து
மெய்வைத்த நன்னெறியாம் விசேடநிர்வா ணம்மெனவே
மிகுபேர் கொண்ட
நொய்வற்ற தீக்கையினை எனக்கருளிப் பிறப்பென்னும்
நோய்தான் நீங்கப்
பொய்வைத்த அறிவெல்லாம் போக்குகின்ற பொன்னடியைப்
போற்றி னேனே.

பூம்புகார்,
18—3—'74

சுப. அண்ணாமலை.

மணிவிழாச் செல்வரின் பல்துறைப் புலமை

அ. ஞானசம்பந்தன், ஈரோடு.

தேவாரம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருவாசகம்.

தேவதேவன் மெய்ச்சேவகன் றென்பெருந்துறை நாயகன்
மூவராலு மறியொணுமுத லாயவானந் தமூர்த்தியான்
யாவராயினு மன்பரன்றி யறியொணுமலர்ச் சோதியான்
தூயமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னித் திகழுமே.

திருச்சிற்றம்பலம்.

தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷதேசிகர், பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள், இவ்வானந்த ஆண்டு மார்கழித் திங்களில் அறுபதாண்டு நிறைவு பெற்று மணிவிழாக் கொள்ளுகின்ருர்கள். 1926-ம் ஆண்டு தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தில், சைவசித்தாந்தசரபம், எனது ஞானகுருபரர் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளுடன் ஒருங்கிருந்து, தூத்துக்குடி சைவசித்தாந்த ஞானபாநு ஸ்ரீ பொ. முத்தையா பிள்ளையவர்கள்பால் ஏழையேனும் சைவசித்தாந்த சாத்திரப் பயிற்சிமேற்-கொண்டிருந்த அந்நாளிலிருந்து இந்நாள்காறும் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகோத்தம ஐயா அவர்களின் தொடர்பு எனக்குண்டு என்று பெருமை கொள்ளுகிறேன்.

எனது ஞானகுருபரர் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகள்பால் ஐயா அவர்கள் சமய, விசேட, நிருவாண தீட்சை, ஆசாரியாபிடேகம், சைவ

சித்தாந்த சாத்திரக் கேள்வியாதியன மேற்கொண்ட போதிலிருந்து அவர்கள் பால் எனக்கிருந்த தொடர்பு மேலும் வலுப்பெற்றுள்ள தென்பதைக் கூற வேண்டுவதின்று.

ஐயா அவர்கள் தமது இளம்பருவத்திலேயே தமிழிலக்கண இலக்கியங்கள் நன்கு கற்றுத் தேர்ந்து தமது பெயருக்கேற்ப அப்போதிருந்தே பாவகைப் பனுவல்கள் பல இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். தமது 21, 22-ம் ஆண்டு நிறைவுகளுக்கு அறிகுறியாக அவர்களால் இயற்றப்பெற்று 1937-ம் ஆண்டு அச்சிடப்பெற்ற "ஞானசம்பந்தர் நான்மணிமாலையும், திருச்செந்திலிருபா விருபஃதும்" என்ற அரிய பாப்பனுவலே அதற்குச் சான்றுபகர்ந்து நிற்கும். அதற்கு முன்பும் பின்பும் அவர்களாலியற்றப் பெற்ற இனிய பாப்பனுவல்கள் பலப்பல. மேலும், திருமுறைக்கருத்துக்கள், சைவ சித்தாந்த உண்மைகள் முதலியன தெளிந்த முறையில் எடுத்துக் காட்டும் உரைநடை நூல்களும் அளப்பில செய்துள்ளார்கள். அன்றியும், சமய சம்பந்தமான பத்திரிகைகளிலே திருமுறைகள், சாத்திரங்களில் மக்கள் தெளிவு பெற்றுப் பயன் கொளும் வண்ணம் அரிய கட்டுரைகள் உபகரித்தும், சமய சம்பந்தப்பட்ட சபைகளிலே நுண்ணிய அரிய கருத்துக்களையும் எளிதில் விளக்கிப் பயனடையும் வண்ணம் கேட்பார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் உபந்யாச உபதேசங் கள் மேற்கொண்டிருப்பது உலகறிந்தவுண்மை. இவையெல்லாவற்றிற்கும் மேலாக நமது ஐயா அவர்கள் தாம் மேற்கொண்டிருக்கும் சிவதீட்சை ஆசாரியாபிடேகப் பேற்றினுக் கேற்பச் சைவாநுட்டானம் சிவபூசை முதலியன நாளும் வழாது விதிமுறையாற் செய்து வருதலோடமையாது, ஆங்காங்கே பலருக்கும் பஞ்சாட்சரோபதேசம், சிவதீட்சைப் பேறு, சிவபூசைப்பேறு முதலியன நல்கியருளி அவர்களும் உய்திபெறும் வண்ணம் அவர்களை ஞான நன்னெறியில் உய்த்துவரும் ஞானதான வள்ளலாகவும் விளங்குகிறார்கள்.

இவ்வாறு நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், ஞானாசிரியர் என்னும் நால்வகையாசிரியத்தன்மையும் தம்பால் ஒருங்கமையப் பெற்றதோர் உத்தமோத்தம ஞானுபானுவாக ஐயா அவர்கள் நம்மிடையே பிரகாசிக்கிறார்க ளென்பது நாம் முன்னையறிவினிற் செய்த முதுதவத்தின் பேறேயாகும்.

"அருளறி வொழுக்க மான மாசாரம் பொறைசீ ரன்பு
தருமநன் னெறிநற் றூனஞ் சத்தியந் தவத்தோ டாண்மை
விரதநோன் பிரக்க மீசன் மெய்யருட் பத்தி யுள்ளோர்
ஒருவரையு லகிற் காண்ப தரிதுகா ணுயர்த வத்தீர்"

என்றிங்ஙனங் கலியுக தருமத்தை நன்கு விளக்கிக் கூறிப்போந்த தென் றமிழ்க் கவியும் நன்றுநாண, அருளறிவாதிய உத்தமோத்தம குணங்களும், அத்தகைய ஒழுக்கமாதிய செயல்களும் ஒருங்கு குழுமிக் கரசரணாதிய வயவங்களைப் பொருந்தி ஒருரு வெடுத்தாற் போன்றவர், செந்தமிழிலும் வடமொழியிலும் பன்னூலாராய்ச்சி வல்லுநர், ஆராய்ச்சியா மாரமிர்தம் ஓயாது பொழியும் அறிவுமாமேகம், "தேருந்தோறு மினிதாந்தமிழ்" என்ற வண்ணம் பழகுந்

தோறும் பத்தியுமறிவும் பரத்தில் ஒத்திடும் பண்பினர்க்கெத்திறத்தானு மினிதாந் தன்மையர், புலவர் மாமணி, சைவசூளாமணி யென்றின்னனவாகப் புனைந்துரைத்து மெய்யறிவாளர் போற்றும் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகோத்தம சிவஞானச் செல்வப் பெரியார் அவர்கள் தமது அறுபதாண்டு நிறைவு மங்கலமணி விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடவும், பின்னர் மற்றுமோரறுபதும் பெற்று, மேலும் அரோகதிடகாத்திரர்களாய்ப் பூரணாயுளுடன் எக்குறையுமின்றி இன்பப் பெருவாழ்வெய்தி இன்னுமின்னும் மேற்கண்ட சிவஞானத்திருத் தொண்டினை ஆற்றிடவும், அதனால் யாவரும் ஆன்மலாபமடையவும் பெருங்கருணைபாலித்தருளுமாறு அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய திருச்சிற்றம்பலத் தெஞ்சிவக்கொழுந்தின் பொன்னார் திருவடிக் கமல மெமதொரு முடிக்கமலமாகக் கொண்டு முப்போதும் முக்கரணங்களானும் மூவிதவழி பாடுஞ் செய்கின்றோம்.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சடைமவுலிப் பிரானார் செய்ய
பிறங்கொளிசேர் நலங்குலவு கமலம் போலும்
வார்பூத்த கழலடியை மனத்து நிறீஇ
மறவாம லனுதினமு மதித்து வாழ்வாம்.

திருச்சிற்றம்பலம்.

நான் அறிந்த பாலகவி

கி. வா. ஜகந்நாதன்

பல ஆண்டுகளுக்கு முன் கோனுப்பட்டில் வாழ்ந்த திரு. மகாதேவ முருகப்ப செட்டியாரவர்களின் அறுபதாண்டு நிறைவுச் சாந்தி விழாவில் நடைபெற்ற தமிழ்ப் பேரவைக்கு எங்கள் ஆசிரியப் பெருமான் டாக்டர் மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் எழுந்தருளினுர்கள். அப்பொழுது அவர்களுடன் நானும் போயிருந்தேன் அப்பொழுது தான் இளம் பிள்ளையாகிய பாலகவியை நான் பார்த்தேன். மகாதேவ முருகப்ப செட்டியார் பாலகவியைப் பெற்ற தந்தையார். ஞானசம்பந்தப் பெருமானிடம் பாலகவிக்கு அளவு கடந்த பக்தி. அவருடைய பெயரையே தம் மாளிகைக்கு இட்டார். ''பாலருவாயர் நிலையம்'' பாலகவியின் நிலையம் என்பதைப் பலரும் அறிவர். அவர் வாழும் வீதியே சம்பந்தர் வீதி என்று நினைக்கிறேன். ஒவ்வோர் ஆண்டும் ஞான சம்பந்தரைப் பற்றிய பிரபந்தம் ஒன்றை இயற்றி வெளியிட்டார். சில வெளியீடுகளுக்கு ஐயரவர்களின் ஆசி கிடைத்திருக்கிறது.

நாளடைவில் பாலகவியின் இலக்கிய இலக்கண அறிவும் சாத்திர அறிவும் ஓங்கி வளர்ந்தன. சைவ சித்தாந்த சாத்திரம் அவருடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. முறையாகத் தீட்சைகளைப் பெற்ருர். மரபு பிறழ்ந்த செய்கைகளை அவர் விரும்புவதில்லை. இப்போது பிறருக்கும் சிவதீட்சை செய்விக்கும் தத்புருஷ தேசிகராக விளங்குகிருர்.

அன்று அவர் இளைஞர். சுறுசுறுப்பாக இருப்பார். உருத்திராக்கமும் திருநீறும் விளங்கும் திருக்கோலம் அன்றும் இருந்தது. அவரை யாரும் பாலகவி என்றே அழைத்தனர். பாலகவி வயிநாகரம் இராமநாதன் செட்டியார் என்பது அவருடைய முழுப் பெயராஞலும் அவ்வளவு நீளமான பெயரை யாரும் சொல்வதில்லை. பாலகவி என்பதில் அவருடைய திறமையும் பெருமையும் அடங்கியிருக்கின்றன. தமிழ் நூல்களைப் பயிலவும் தமிழ்ச் சொற்பொழிவுகளைக் கேட்கவும் தமிழ்ப் புலவர்களோடு பணிவாகப் பழகவும் அவருக்குப் பேரார்வம்.

மகா தேவ முருகப்ப செட்டியாரின் திருமகனுகப் பிறந்தவர் வயிநாகரம் குடும்பத்துக்குச் சுவீகாரப் பிள்ளை யாகப் போனுர். அந்தக் குடும்பத்தினர் மதுரையில் திருப்பணி செய்து பழங் காலத்தில் கும்பாபிஷேகம் செய்த வர்கள். வயிநாகரம் இராமநாதன் செட்டியார் என்ற கவிஞர் அந்தக் குடும்பத்தில் இருந்தார். அவர் மயிலா சலக் கலம்பகம் என்று குன்றக்குடிக்கு ஒரு கலம்பகம் பாடியிருக்கிருர். பல அருமையான தனிப் பாடல்களைப் பாடி யிருக்கிருர். பாலகவி சென்று சேர்ந்த குடும்பமும் கவிஞர்கள் பிறந்த குடும்பம்.

பாலகவியிடம் சில காலம் பாடம் கேட்டவர் இப்போது 'தமிழ் வாணன்' என்று இளைஞர் உலகம் பாராட்டும் திரு. லெ. ராமநாதன். அவர் அந்தக் காலத்தில் அடிக்கடி பாலகவியின் பெரு மையைச் சொல்வார். என்னிடம் பேசும் போதெல்லாம்; 'பாலகவி இப்படிச் சொல்வார், பாலகவி அப்படிச் சொல்வார்' என்று சொல் வார். வேறு பலருக்கும் பாலகவி பாடம் சொன்னதுண்டு.

இப்போது தமிழ் நூல்களை அவரி டம் கற்றுக் கொண்டவர்களை விட அவரிடம் தீட்சை பெற்றுக் கொண்ட வர்கள் மிகுதி; நூற்றுக்கணக்கான வர்கள் உண்டு. என்னுடைய உழுவலன்பர் திரு. பழ. சண்முகம் செட்டியாரவர்கள் பர்மாவில் இருந்த போது பாலகவியிடம் தீட்சை பெற்றுச் சிவபூஜை எழுந்தருளுவித்துக் கொண் டார். அவர் இப்போது தாடி வளர்த் துக் கொண்டு சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் சந்நிதியில் பெரும் பொழு தைக் கழித்து இன்புறுகிருர். அவரைப் பார்த்தால் முனிபுங்கவரைப் போல தோற்றம் அளிப்பார். அவரைக் கண்டு, அவருடைய தீட்சாகுரு தத்புருஷ தேசிகர்என்று தெரிந்து கொண்டால் பாலகவியின்பெருமையை உணரலாம்.

பாலகவி கவிஞர்; எழுத்தாளர். பத்திரிகை ஆசிரியராக இருந்திருக் கிருர். நல்ல சொற்பொழிவாளர். தேவ கோட்டையில் சேக்கிழார் திருநாளை மிகச் சிறப்பாகப் பல ஆண்டுகள் கொண்டாடினுர். பண்டித மணி, சிவக் கவிமணி கோவை சுப்பிரமணிய முதலி யார் முதலிய பலர் அந்த விழாவில் அரிய சொற்பொழிவுகளை ஆற்றியிருக் கிருர்கள்.

பாலகவியின் சொற் பொழிவுகளில் தொடக்கம், இடை, முடிவு என்ற பகுதிகள் கச்சிதமாக அமைந்திருக்கும். செய்யுட்களின் நுட்பங்களை நயமாக எடுத்துச் சொல்வார். பிற்காலங்களில் சித்தாந்தக் கருத்துக்கள் செறிந்த சொற் பொழிவுகளைச் செய்யலானுர். நுட்பமான சமயக் கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லுவார்.

இன்று சிவஸ்ரீ தத்புருஷராக விளங் கும் அவர் அறுபது ஆண்டுகள் நிறைந்து அறிவிலும், பக்தியிலும் சமய ஒழுக்கத்திலும் நிறைவு பெற்று விளங்குகிருர். அவரை நினைக்கும் போதெல்லாம் எனக்கு இளமை ததும்பிய கோலத்தோடு நிற்கும் பால கவியே நினைவுக்கு வருகிருர்.

இவர் இறைவன் திருவருளால் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் தொண் டாற்றி விளங்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

*

மணிவிழாச் செல்வரின் புலமை

"சோமலெ"

சைவ சமயத்தை, நாட்டுக் கோட்டை நகரத்தார் கண்ணை இமை காப்பது போல், காத்து வருகிறார்கள். பகுத்தறிவாளர் என்று சொல்லிக் கொள்பவர்கள், "நகரத்தார்களின் சமயப்பற்று அறிவின் அடிப்படையில் ஏற்பட்டது அன்று; அது மூட பக்தி; அவர்கள் அரைப் பார்ப்பனர்" என்று எல்லாம் கூறியும், எழுதியும் வந்துள்ளனர். ஏதோ சில கல்வெட்டுக்களை, நகரத்தார்கள் சிலர் தாங்கள் திருப்பணி செய்த கோயில்களில் பாதுகாக்கத் தவறியதற்காக, நகரத்தார்களைக் கல்வெட்டாய்வாளர் சிலர் கடுமையாகக் குறை கூறியதும் உண்டு.

நகரத்தார் சமூகத்தில் தோன்றிய தத்புருஷ தேசிகர் அவர்கள், தமிழ் இலக்கண இலக்கிய அறிவு மட்டும் இன்றி, சைவ சமயத்திலும் அழுத்தமான புலமை பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. சைவ சித்தாந்த தத்துவங்களை நன்கு அறிந்து, பிறருக்கு எடுத்துக்கூறும் ஆற்றலும், பாடம் நடத்தும் திறமையும், ஆகம அறிவும், குடமுழுக்கு விழா முதலிய சைவக் கிரியைகளை முறைப்படி நடத்தி வைக்கின்ற பேராற்றலும் இவர்களுக்குக் கைவரப் பெற்றவை. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல நூறு பேருக்கு இவர்கள் சிவ தீட்சை செய்து வைத்து இருக்கிறார்கள்.

கவிதைபடைக்கும் ஆற்றலும் இளம் வயதிலிருந்து இவர்களுக்குச் சிறப்பாக இருந்து வருகிறது. தெய்வப் புலவரும் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவருமான சேக்கிழார் பெருமானின் விழாக்களை இவர்கள் செம்மையாகக் கொண்டாடிவருவதும், இவர்கள் இல்லம் பாலருவாயர் நிலையம் என்ற பெயரால் விளங்குவதும், இவர்கள் வாழும் வீதிக்குச் சம்பந்தர் பெயர் இடப்பெற்றிருப்பதும் இவர்களுடைய சைவசமய ஈடுபாடுகளைப் புலப்படுத்தும். தமிழ்நாட்டுச் சைவ ஆதீனங்கள் இவர்களைத் தங்கள் ஆதீனப் புலவராக ஏற்றும் இவர்களுக்குப் பட்டங்கள் வழங்கியும் சிறப்பித்துள்ளன.

மேலும் இவர்கள் அறிவுக்கடலாக இருப்பது போல, குணக்கடலாகவும் விளங்குகிறார்கள். வாழ்க்கையில் பலருக்கும் ஏற்படும் சோதனைகளுக்கும் சிக்கல்களுக்கும் தகுந்தவாறு அனுபவமும், ஆன்மீகமும் கலந்து யோசனை சொல்லிப், பக்தர்களைக் கடையேற்றியும் வருகிறார்கள். இவர்கள் நீடு வாழ்ந்து, விரிந்து கிடக்கும் இவர்களுடைய சீடர்களையும் ஏனையோரையும் உய்விப்பார்களாக.

உ

முருகா.

உயர்வடைய ஒரு வழி.

கிருபானந்தவாரியார்.

நாம் எல்லோரும் உயர்ந்திருக்க வேண்டும், நம் வாழ்வு உயரவேண்டும் என்றுதான் கருதுகின்ருேம். ஆனுல் உயர்வு பெற்றவர் - பெறுகின்றவர் ஒரு சிலரேயாவார். அதற்கு என்ன காரணம்? உயர்வு அடையவேண்டும் என்று எண்ணுகிருேமேயன்றி அதற்குரிய வழி வகைகளை நாம் நன்கு சிந்திக்கின்ருேமில்லை. சிந்தித்து அதனைச் செயல் முறையில் கொண்டு வருகின்ருேமில்லை.

நாம் உயர்வுபெற வேண்டுமானுல் என்ன செய்ய வேண்டும்? பணத்திஞல் உயர்ந்தவர்களும், படிப்பினுல் உயர்ந்தவர்களும், குலத்தாலும் பிற நலத்தாலும் உயர்ந்தவர்களும் உலகம் போற்றும் உயர்வு பெறுகின்ருர்களில்லை. ஆகவே பணமும் படிப்பும் குலமும் பதவியும் நமக்கு நிச்சயமாக உயர்வைத் தரமாட்டா. எனவே அவைகளை உயர்த்தும் முயற்சியுடன் நாம் நின்றுவிடக்கூடாது.

வேறு என்ன செய்தால் விரைவில் உயர்ச்சி பெறலாம் என்று அறிவுள்ளவர்களுக்குத் தோன்றும்.

நமது உள்ளம் உயர்ந்தால் நாம் உயர்வு பெறமுடியும்.

ஒரு குளத்தில் பத்து அடி ஆழம் தண்ணீர் இருந்தது. அதில் உள்ள தாமரைத் தண்டின் நீளமும் பத்து

அடி இருக்கும். அத்தண்டினை நீளப் பண்ண வேண்டுமாயின் இரு பயில்வான்கள் இருபுறமும் பிடித்து நீட்டக் கூடாது. அது முறையன்று. தாமரைத் தண்டின் நீளம் அதிகமாக வேண்டுமாயின் அதற்கு வழி யாது? மழை பொழிந்தது. குளத்தின் தண்ணீர் இன்னும் பத்துஅடி உயர்ந்துவிட்டது. எனவே வெள்ளம் உயர உயர நமது உயர்வும் வளரும். இந்த அருமையான கருத்தை நமக்குத் திருவள்ளுவர்,

வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய (து) உயர்வு.

என்று அழகாக அறிவிக்கின்றார்.

இனி உள்ளம் எவ்வாறு உயரும்? என்று சிந்தித்தல் வேண்டும்.

நம்மை நாமே சோதித்துப் பார்க்கும் வழக்கம் ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும். அது அநேகரிடம் இல்லை. சட்டைப்பையில் மணிபர்சு இருக்கின்றதா? என்று அடிக்கடி சோதித்துக் கொள்ளுகின்றோம். பெட்டியில் வைத்த சாமான்கள் இருக்கின்றனவா? என்றும் சோதித்துப் பார்க்கின்றோம். நம்மை மட்டும் இன்னும் சோதித்துப் பார்க்கவில்லை.

காந்தியடிகள் கடைசிவரை தன் வாழ்க்கையையும் சத்தியத்தையும் சோதித்துக் கொண்டேயிருந்தார். அதனால் அவர் வரலாற்றுக்குச் சத்திய சோதனை என்ற பேர் உண்டாயிற்று.

அநேகர் மனைவியைச் சந்தேகித்து அவளைச் சோதிக்கின்றார்கள். மனைவி கணவனைச் சோதிக்கின்றாள். பணியாளனைச் சோதிக்கின்றார்கள். ஆனால் தன்னைச் சோதிப்பதில்லை. அன்பர்கள் நன்கு கவனியுங்கள். அடிக்கடி நம்மை நாமே சோதிப்பதனாலே உள்ளத்திலே உள்ள மாசுகள் நீங்கிப் புனிதம் உண்டாகும்.

முதலில் நம் உள்ளத்தில் என்ன இருக்கின்றன? என்ன இருக்க வேண்டும்? என்ன அகல வேண்டும்? என்று சோதிக்க வேண்டும்.

உயிரோடு கூடி வாழ்கின்றவன் யார்? மூச்சு விடுவதனாலும் நடமாட்டம் இருப்பதனாலும் ஒருவன் உயிர் வாழ்கின்றவனாக ஆக மாட்டான். அன்பு நிறைந்த உள்ளம் படைத்தவனே உண்மையாக உயிர் வாழ்க்கையுடையவனாவான். அன்பில்லாதவன் எலும்பின் மீது தோல் போர்த்த ஒரு பொம்மையேயாகும்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

என்கின்றார் திருவள்ளுவனார்.

அன்பு என்றால் என்ன? அதன் சொரூபம் எது? என்றும் நுணுக்கமாகச் சிந்திப்போமாக.

தொடர்புடையார் மாட்டு, உள்ளத்தில் நிகழும் விருப்பத்திற்கு அன்பு என்று பலர் கருதுகிறார்கள். அது பிழை. தொடர்புடைய மனைவி மக்கள் நண்பர் முதலியோர்களிடம் பயன் கருதி வைக்கும் விருப்பத்திற்கு ஆசை என்று பெயர். அது அன்பாகாது. மனைவிக்கு உயர்ந்த ஆடை அணிகலன்கள் எடுத்துக் கணவன் தருகின்றான். அது அன்பினாலன்று. தான் கண்டு மகிழவேண்டும் என்ற பயன் கருதிச் செய்வதினால் அது ஆசையே யாகும். அதுபடியே மகனை

நன்ருகப் படிக்க வைக்கின்ருன். முதுமைப் பருவத்தில் அவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற நோக்கத்தினு லேயே செய்வதனுல் அதுவும் அன் பாகாது. நண்பர்களுக்கு உயர்ந்த விருந்து வைக்கின்ருன். அவர்கள் தன்னை மெச்சிப் புகழ வேண்டும் என்ற நோக்கமே யாதலின் அதுவும் அன்பு அன்று.

பயன் கருதாமல் செய்கின்ற செயலே அன்பாகும். பலர் கோயிலுக்குப் போய்க் கடவுளைத் தொழுவதும் அன்பினுலன்று. கடவுள் நமக்கு வியாபார வளர்ச்சியும், புத்திரப் பேறும், உத்தியோக உயர்வும் தருவார் என்ற நோக்கத்தோடே கோயிலில் கடவுளை வழிபடுகின்ருர்கள். ஆகவே அது அன்பு வழிபாடன்று. ஆசை வழிபாடேயாகும்.

''ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனேடாயினும் ஆசையறுமின்கள்''

என்கின்ருர் திருமூலர்.

எனவே கடவுளிடத்தும், மனைவி மக்களிடத்தும் நண்பர்களிடத்தும் நமக்கு ஆசையிருக்கக்கூடாது. அன்பு இருக்க வேண்டும். இப்போது நீங்கள் உள்ளத்தைச் சோதித்துப் பாருங்கள். நம் உள்ளத்தில் அன்பு இருக்கின்றதா? ஆசையிருக்கின்றதா? என்பதை. அன்பு பிறவியைக் கெடுக்கும். ஆசை பிறவியைக் கொடுக்கும். ஆசை நிறைந்த உள்ளத்தில் நல்ல எண்ணங் கள் விளையமாட்டா. ஆசையுள்ள இடத்தில் கோபம் வரும். கோபத்தினுல் மயக்கம் வரும். ஆகவே நமது ஆசை யைக் கூடுமானவரை களைந்து எறிய வேண்டும். திடீர் என்று ஒரே நாளில் எல்லா ஆசைகளையும் விடமுடியாது. ஒவ்வொன்ருக விடவேண்டும். பணத்தின் மீது ஆசை; புகழ் மீது ஆசை; சிலர் தன்னைப்பற்றிச் செய்தித் தாளில் வந்தால் அதைக் கத்தரித்து எடுத்து வைத்துக் கொண்டு பலருக்கும் காட்டுவார்கள். ஏன்? பெருமையில் ஆசை. இவ்வாறு பலவழியிலும் உள்ள ஆசைகளைச் சிறிது சிறிதாக விடுத்து உள்ளத்தை உயர்த்த வேண்டும்.

''அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு'',

ஆசையால் அநேக அல்லல் விளையும். துன்பங்கள் அத்தனையும் ஆசையினு லேயே உண்டாவதால் ஆசையை யகற்றுந் தோறும் துன்பம் அகலும்.

''அவா வில்லார்க் கில்லாகுந் துன்பம் அஃதுண்டேல்
தவா அது மேன்மேல் வரும்''

''யாதனில்யாதனில் நீங்கியான் நோதல்
அதனில் அதனில் இலன்.''

என்ற பொதுமறை வாக்குகளால் அறிக.

இனி தொடர்புடையார் மாட்டு பயன் கருதாமல் வைக்கும் விருப்பத் திற்கு அன்பு என்று முன்னே சிந்தித் தோம். அந்த அன்பு தூயது. மனைவி யின் பால் பயன் கருதாமல் அன்பு வைக்க வேண்டும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது

ஆண்டவனிடத்தும் பயன் கருதாமல் அன்பு செய்ய வேண்டும்.

அன்புடையவர் தமது என்பையும் பிறர்க்குப் பயன்படுமாறு புரிவர். அன்புடையார்தான் உண்மையான மனிதர். ஆசையுடையவர் மனித விலங்குகள். அன்பு வளர்ந்து வளர்ந்து வெள்ளமாய் ஊற்றெடுத்து ஓடவேண்டும். அன்பிலிருந்து அருள் பெருகும்.

அன்புக்கும் அருளுக்கும் என்ன வேறுபாடு?

அன்பு என்பது தொடர்புடையார் மாட்டுப் பயன் கருதாமல் வைக்கும் விருப்பம்.

அருள் என்பது தொடர்பில்லாதவர்களிடத்தில் வைக்கும் கருணை. அழுகின்ற தன் குழந்தைக்குத் தாய் பால் தருகின்றாள். இது அன்பு.

தெருவில் அழுகின்ற வேற்றுக் குழந்தையை எடுத்து அணைத்துப் பாலும் பழமுந் தந்தால் அது அருளாகும்.

தொடர்புடைய நண்பனுக்கு ஒரு சிறிதும் பயன் கருதாமல் புரியும் உதவி அன்பின்பாலதாகும்.

தெருவில் உணவும் உடையும் இன்றிக் கோடைப் பயிர்போல் வாடி நிற்கும் ஒருவனுக்கு அவன் கேளாமுன் குறிப்பறிந்து உண்டியும் உடையும் தந்து கடமையுணர்ச்சியுடன் செய்கின்ற உபகாரம் அருளாகும்.

இந்த அருளுடையார் தெய்வமாக நின்று உலகம் போற்ற விளங்குவார்.

ஆசையுடையார் — விலங்கு
அன்புடையார் — மனிதர்
அருளுடையார் — தேவர்

அருளுடையவர்களே கடவுளைக் காண்பார். இந்த அருட்கண்கொண்டு பார்த்தால் உலகமெல்லாம் கடவுள் சொரூபமாகத் தோன்றும்.

அருளால் எவையும் பார் என்றான். அத்தை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்டதல்லால் - கண்ட
என்னையுங் கண்டிலன் என்னேடி தோழி.

என்கின்றார் தாயுமானவர்.

அருட்கண் கொண்டு செய்கின்ற செயல்களுக்குக் கோடி மடங்கு உயர்வு பெறுகின்றது.

நாம் ஒரு வறியவனுக்கு அன்பால் செய்கின்ற உதவியினும் அருளால் செய்கின்ற உதவி அளவற்ற உயர்வுடையதாகும்.

அவன் ஒரு மனிதன். ஏழை; நாம் அவனுக்கு உபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தால் செய்கின்ற உதவியைக் காட்டிலும், அந்த ஏழை உள்ளத்தில் கடவுளைக் கண்டு அவன் கடவுளுடைய ஆலயம். அவனுக்குச் செய்யும் உதவி கடவுளுக்குத் தந்த காணிக்கையாகும் என்று செய்வது எத்துணை புனிதமானது என்று சிந்தியுங்கள். நாம் உபகரித்தோம் என்ற எண்ணமே அங்கு தலைகாட்டாது. அவன் தாழ்ந்தவன் நான் உயர்ந்தவன் என்ற மமதை உணர்ச்சிக்கும் அங்கு இடமில்லை. ஒரே அருளுணர்ச்சி தான். அருள் சேராத நெஞ்சினர்கள் இருள் மிகுந்த துன்பவுலகிலே சென்று வேதனைப்பட்டு வெதும்புவர். இறந்தவுடனே நம்முடைய வாழ்வு முடிந்துவிட்டது என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. தூலவுடம்பு நீங்கியபின் சூக்கும உடம்போடு உயிர்த் தான்

செய்த நல்வினை தீவினைகட்கு ஏற்ப இன்ப துன்ப உலகங்களை யெய்தி சுகதுக்கங்களை அனுபவிக்கின்றது.

அருளுடையார்க்கு இருளுடைய துன்பவுலகம் எய்தாது என்று முன்னே நான் கூறிய கருத்து திருவள்ளுவருடைய கருத்தாகும்.

அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள் சேர்ந்த இன்னாவுலகம் புகல்.

அதனைப் பலமுறை படியுங்கள். ஆழ்ந்து சிந்தியுங்கள். உங்கள் உள்ளம் அன்பாலும் அருளாலும் உயரும்.

அருளில்லாதார் துன்பவுலகம் புகுவார் என்ற கருத்தை நேரே அவ்வாறு கூறாமல் அருளுடையார் துன்பவுலகம் புகமாட்டார் என்று அருளோடு கூறுகின்றார் வள்ளுவர். அருளுடையார் துன்பவுலகம் புகார் என்றதனால் இருத்தாபத்தி நியாயத்தால் அருள் இல்லாதார் துன்பவுலகம் புகுவார் என்று உறுதியாகின்றது.

இந்த அருளின் உச்சியில் பழுப்பது தியாகம். அருளுடையார் தமது சொல், செயல், தமது உடைமை எல்லாவற்றையும் தியாகம் புரிந்து விடுவார். தியாகம் புரிந்தோம் என்ற எண்ணத்தையும் தியாகஞ் செய்வர். இறுதியில் தம்மையே தியாகம் புரிவர். அவர்களுடைய தியாகத்தால் உலகமெல்லாம் உயர்ந்து இன்புறும்.

இத்தகைய தியாக மூர்த்திகளால் நம் நாடு முன்னேறியது. இன்னும் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. வறுமையுற்ற புலவனுக்குத் தன் தலையைச் சேதித்துத் தர முயன்ற குமணனின் தியாகமும், அரிதிற் பெற்ற நெடு நாள் வாழச் செய்யும் அருநெல்லிக்கனியை ஔவையாருக்குத் தந்த அதியமானுடைய தியாகமும், உயிருக்கு உறுதி தந்திருந்த கவச குண்டலங்களை மாற்றான் தந்தையாகிய இந்திரனுக்கு வழங்கிய கர்ணனுடைய தியாகமும், பாணபத்திரருக்குத் தன் கருவூலத்திலிருந்த நவநிதிகள் அத்தனையும் பொதி செய்து அனுப்பிய சேரமான் பெருமாள் நாயனாருடைய தியாகமும் என்றும் நின்று இந்த நாட்டில் அணி செய்கின்றன. இவைகளை நாம் ஒரு போதும் மறக்கக் கூடாது. பணத்தாலும், படிப்பினாலும், குலத்தாலும், பதவியினாலும், அழகினாலும், உயரத்தினாலும், கனத்தாலும் ஒருவன் பெருமையடைய முடியாது. தியாகம் ஒன்றாலேயே பெருமையடைய முடியும். தனக்கென்று வாழ்கின்றவன் சிறியவன். பிறர்க்கென்று வாழ்கின்றவன் பெரியவன். தனது சொல், செயல் உடைமை எல்லாம் பிறருக்கே அர்ப்பணஞ் செய்து விட்டுப் புகழையும், புண்ணியத்தையுங் கூட விரும்பாமல் தியாகம் புரிந்து வாழ்கின்றவர்களே நாட்டைத் தாங்கும் நல்ல வைரத் தூண்களாவார்கள்.

சொல்லிலும் செயலிலும் தன்னலமிருக்கக் கூடாது. பொதுநலம் பேண வேண்டும். கடவுளிடத்தில் வேண்டுகின்ற போதுங் கூட, "கடவுளே! என்னைக் காப்பாற்று; என் குடும்பத்தைக் காப்பாற்று!" என்று கேட்கக் கூடாது. "எல்லோரையுங் காப்பாற்று; உயிர்கள் யாவும் வாழ அருள் செய்!"

என்று பரந்த நோக்கத்துடன் வேண்ட வேண்டும்.

"அப்பா நான் வேண்டுதல் கேட்
டருள் புரிதல் வேண்டும்.
ஆருயிர்கட்கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்"

என்று வரங்கேட்கின்ருர் வடலூர் வள்ளல் பெருமானுர். இத்தகைய தியாக வுணர்ச்சியே மனிதனைப் புனிதனுக்கும். தியாக சிந்தையில் சாந்தி நிலவும். உவகை ஊற்றெடுக்கும். அவர்கள் முகத்தில் ஒரு ஒளி வீசும். அவர்கள் பேச்சில் ஓர் அலாதியான இன்பச் சுவை மிளிரும். அவர்கள் புகழ் கலங்கரை விளக்குப் போல் மற்றவர்கட்கு என்றும் நின்று வழிகாட்டும்.

தலைவனில்லாமல் ஒரு தொழிற்சாலை நடைபெருது. பறவைகளுக்கு ராஜா கருடன். விலங்குகளுக்கு ராஜா சிங்கம். தேவர்களுக்கு ராஜா இந்திரன். மரங்களுக்கு ராஜா கற்பகம். நாகங்களுக்கு ராஜா ஆதிசேடன். அதுபோல உலகிலே முந்தியிருந்த - இப்போது இருக்கின்ற-இனி இருக்கப் போகின்ற எல்லா தியாக புருஷர்களுக்கும் ஒரு ராஜா உண்டு. அவர் யார்? அவர்தான் தியாக ராஜா. திருவாரூரில் இருந்து அரசு புரிகின்ருர்.

அவர் என்ன தியாகம் புரிந்தார்? என்று சிந்திப்பது இன்றியமையாதது. தேவர்கள் நரை, திரை, மூப்பு, மரணம் இவைகளைத் தவிர்க்க வேண்டி அமிர்தத்தை விரும்பித் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். மந்தரமலையை மத்தாகவும், வாசுகியைத் தாம்பாகவும், சந்திரனைத் தறியாகவும் கொண்டு பன்னெடுங்காலம் கடைந்தார்கள்.

"மாகமுக டோடகில
பாதாள லோகமுட
னேசுழல வாரியதுவே
தாழியா அமரர்
வாலிமுத லானவர்கள்
ஏனேர்களாலமுது கடை
நாளில்"

என்கின்ருர் அருணகிரிநாதர்.

இவ்வாறு கடைந்த போது எதிர் பார்த்தது அமிர்தம். அங்கு தோன்றியது நேர் மாருக ஆலகாலவிடம். அதன் வெப்பம் உலகத்தையெல்லாம் வருத்தியது. வெப்பத்தைப் பொறுக்க முடியாத விபுதர்கள் மூலைக்கு ஒருவராக ஓடினுர்கள். எல்லாருக்கும் முந்தி ஓடினுன் இந்திரன். "ஓடாதீர்கள்! ஓடாதீர்கள்! என்று சொல்லிக் கொண்டே ஓடினுர் பிரமதேவர். ஆலகால விடத்தால் உடல் கருப்புண்டார் திருமால். அத்தனை பேரும் கயிலைமலையை யடைந்து சிவபெருமான் செம்மலர் நோன்ருளை வணங்கி நின்ருர்கள்.

"தேவதேவா! மகாதேவா! கருணையங் கடலே! நாங்கள் தேவரீருடைய அடிமைகள். நீர் ஆண்டான். எல்லாம் உம்முடைய உடைமைகள். நீர் உடையவர். அடிமைகள் ஒரு விவசாயம் புரிந்தால் முதலில் விளைந்த விளைவை எஜமானுக்குத் தருவார்கள். வியாபாரத்தில் முதலில் வந்த லாபத்தைத் தலைவனுக்கே தருவார்கள். எம்பெருமானே! அடியேங்கள் பாற்கடல் கடைந்தோம். அதில் முதலில் விளைந்த விளைவு தேவரீருக்கே உரியது" என்று பேசவல்ல தேவர்கள் பேசினுர்கள்.

சிவபெருமான் அவர்கள் கூறியது உண்மையே என்று திருவுளஞ்செய்து,

சுந்தரரை நோக்கி, "அவ்விடத்தை இவ்விடத்திற்குக் கொண்டு வா!" என்று கட்டளையிட்டார். அவ்வாறே அவர் கொணர்ந்து கொடுத்த பயங்கரமான ஆலகாலவிடத்தை உண்டு, அமரர்கட்கு அமிர்தத்தை வழங்கினர். அமுதம் தேவர்கட்கும், விடம் தனக்கும் என்று கொண்ட அவர் தியாக ராஜாவாக விளங்குவது பொருத்தந்தானே?

பொன்னுபரணத்தை நமக்குத் தந்து அவர் சர்ப்பாபரணத்தைத் தரித்துக் கொண்டார். சந்தனம் களபம் கஸ்தூரி, அர்கஜா, சவ்வாது இவைகளை நமக்கு வழங்கி விட்டு அவர் சாம்பலைப் பூசிக் கொண்டார். நம்மை மாளிகையில் வாழவைத்து விட்டு அவர் மயானத்தில் இருக்கின்றார். வெள்ளி, பொன், வெண்கலப் பாத்திரங்களை நமக்குத் தந்து விட்டு அவர் தலை மண்டை ஓட்டை வைத்துக் கொண்டார். மல்லி, முல்லை முதலிய நறுமண மலர்களை நமக்குத் தந்து விட்டு அவர் தும்பை, ஊமத்தை மலர்களை அணிகின்றார். மருக்கொழுந்து, தவனம், விலாமிச்சம் இவைகளை நமக்குத் தந்து விட்டு, அவர் வில்வம், மாவிலிங்கம், நாயுருவி, நொச்சி முதலிய தழைகளைத் தரித்துக் கொண்டார். குளிர்ந்த சந்தனத்தை நாம் தரிக்க, அவர் கொடிய நெருப்பை ஏந்துகின்றார். பெண்ணோடு நாம் ஆட, அவர் பேயோடு ஆடுகின்றார். பட்டாடையை நமக்குத் தந்தார். அவர் தோலை உடுக்கின்றார். நவமணிகளை நாம் அணியக் கொடுத்து விட்டு, அவர் எலும்பை அணிகின்றார்.

அவருடைய செயல்கள் அத்தனையும் தியாகச் செயல்களே. பாலுக்குப் பாலகன் வேண்டியழுதவுடன் பால் ஒருபடி இருபடியா தந்தனர்? பாற்கடலையே கொடுத்தனர். அவருடைய தியாகம் ஒரு மலையாகக் காட்சி தருகின்றது. அதனால் பரமகுருநாதராகிய அருணகிரியார் சிவபெருமானைத் தியாகப் பொருப்பு என்று கூறுகின்றார். இதோ பாருங்கள் கந்தரலங்காரம்:

"மாகத்தை முட்டிவரு நெடுங்கூற்றன்
வந்தால் என் முன்னே
தோகைப் புரவியில் தோன்றிநிற்பாய்
சுத்த நித்த முத்தித்
த்யாகப் பொருப்பைத்
த்ரிபுராந்தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும்
பரம் கல்யாணிதன் பாலகனே"

முக்கட்பெருமான் பொன்னும் மணியும் போகமுந் தருவதுடன் வேறு எவராலுந் தரமுடியாத தூய முத்தியையுந் தருவார். அதனால் தான் இவ்வரிய 'சுத்த நித்த முத்தித் தியாகம்' என வருகின்றது. நித்தம் - அழிவில்லாதது. இறைவர் நமக்குத் தரும் முத்திப்பேறு அழிவில்லாதது.

ஆகவே நாம் தியாகராஜாவாகிய சிவமூர்த்தியைச் சிந்தித்தும், வந்தித்தும், வாழ்த்தியும் வருவோமாயின், உயிர்கள் சார்ந்த தன் வண்ணமாகும் பெற்றியுடையவாதலின் நாமும் தியாக மூர்த்திகளாகத் திகழ்ந்து உலகம் போற்றும் உயர்வினை அடையலாம்.

உ
சிவமயம்

மணிவிழாச் செல்வரைப் பற்றி........

* திருவளரும் தேவைநகர்ச் செழும்வணிகர் கொழுங்குடியின் திலகம் போன்றோன்
மருவளரும் கோநகர்வாழ் மாதேவப் பெயர்க்குரிசில் மகிழும் மைந்தன்
தருவளஞ்சால் வேங்கடா சலப்பெயரோன் பண்டுசெயும் தவத்தால் வந்தோன்
இருவளனும் ஒருநிகரா யெய்துநலன் எமதன்பன் இராம நாதன் (1935)

மாதேவா மைந்தருமம் மாதேவா போலாதே
யாதாவர் தந்தைமகன் ஆமன்றே — மாதேவா
பத்திமொழிக் கண்டன்றே பாவல! நின் னூல்களெலாம்
தித்தித் தொழுகுறு செந் தேன் (1940)

புலமை உலகம் போற்றும் கலைமலி
இராம நாத ஏந்நலாம் சீரினன்

—கரந்தைக் கவியரசு
ஆர். வேங்கடாசலம் பிள்ளை
(1948)

* வீறுசேர் தமிழ்த்துறையில் இலக்கியமும் இலக்கணமும் விளங்கக் கற்றீண்
டீறிலாப் பரசிவத்தைப் பாமாலை புனைந்தேத்தும் இராம நாதன்

—பண்டித ரெ. இராமமூர்த்தி ஐயர்
(1935)

* .... தூய வித்தையும் சீலமும் அறிவும்
இருப்பிட மாக எழில்பெற வாழும் இராமநா தன் எனு மணியே.

—பொ. முத்தையா பிள்ளை,
சித்தாந்தப் பேராசிரியர். (1935)

* பூமகள் கடாக்ஷம் பொருந்துபதி தேவைநகர் புரிதவப் புண்யபதி மா
புனிதபதி செந்தமிழ்ப் புலவர்மெச் சும்பதி புகழ்ச்சிமிகு பதிகோ நகர்
போற்றுபதி மாதேவ பூபதிய ளித்தபதி புதனைநிகர் மதிகாண் பதி
புலமைமிகு பதிகவிகள் புகழுமுயர் பதிகலைகள் புந்திவர வாய்ந்துறு பதி
நாமகள் கடாக்ஷமிக நண்ணுபதி நிதிகொள்வயி நாகர மடைந்தபதி சீர்
நாடுபதி தன்மமிக நாடுபதி நன்மைவள நாடுபதி நற்ப்ர சங்க
நவிலுறும் பதியரு ணயத்தகவி பற்பல நயந்தரப் பாடிடு பதி
நலமிகக் கொளிராம நாதனென வுலகுபுகழ் நாமனுயர் தரவாழியே

கவிச்சக்கரவர்த்தி
இராம. வயித்தியநாத சர்மா
(1936)

* தருமருவு காதலன் றிருமகளு மருமகள் சந்தோஷமிக வடைதலாற்
சாலமிக நிறைதருஞ் செல்வமுங் கல்வியுந் தழைத்தோங்கு
நன்மையாளன்
தகுவஞ்சிகலிஆசி ரியம்வெள்ளை நற்கவி சடிதியிற் சாற்றும் வல்லோன்
தான்வளரு மொவ்வொராண் டதனுக்கு நூலொன்று சாற்றிடு நியதி
பூண்டோன்
வருமருவு கந்ததள வம்புனையு மார்பினன் வைசியர் குலசிரேட்டன்
வளர்பால கவியென்று பெரியோர்கள் தருபட்டம் வாய்ப்பமகிழ்
புலவர்திலகன்
வன்மைமிகு பாலரு வாயர்துணை யெனநம்பி வழிபடும் இராம நாதன்

—வித்துவான்
சொ. வேலுச்சாமிக் கவிராயர்.
(1936)

* ஆயவனுர் என்றிடினே ஆலவாய்ச் சுந்தரர்க்குத்
தூயபணி செய்குலத்தோர் தோன்றல்பொருள் — மேயபன்னூல்
கற்றவன் பால கவிராம நாதப்பேர்
உற்றவன்சன் மார்க்கமுடை யோன்.

—மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்
(1937)

* மங்கலநன் மாடமமர் மதுரைநா யகன்கோவில் வயங்கும் வண்ணம்
துங்கமிகும் திருப்பணிசெய் பெருங்குடும்பம் சுவிகரித்த தொன்மை யாள
தங்குபுகழ் உயர்சைவப் பற்றுடைய மகாதேவர் தவப்பு தல்வ
பங்கமிலா இனியதமிழ்க் கவிபாடும் திறம்வாய்ந்த பரம வாழ்க!
சீலமுறும் செந்திருவுக் கிருப்பிடமாய் வளமாரும் தேவ கோட்டைப்
பாலகவி எனும்அரிய பட்டம்பெற் றுலவுறுநற் பரிவிற் கேற்பக்
கோலமிகும் வாணிபத்தில் நுனித்தறியும் பேரறிவுக் கோட்பா டெய்திச்
சாலமகிழ் உயர்கல்வி அறிவடக்கம் ஒழுக்கமிகும் சமர்த்த வாழி!

வலமமர்வை சியமரபில் பொருள்கல்வி அருள்செல்வம் மல்கப் பெற்று
நலமமர்வ தானவயி நாகரம்வே எனும்ராம நாத! வாழி!

—பண்டிதரத்னம்
புழலை திருநாவுக்கரசு முதலியார்
(1938)

* கண்டெனப்பா கெனஇனிமை கனிந்துதரு வளம் படைத்துக்
கவினும் மேலாம்
தண்டமிழின் இலக்கணநூல் இலக்கியநூல் எலாமுறையே தகவின்
ஆய்ந்து
கொண்டமதி வளனுமறி வொழுக்கமுநின் இளம்பருவங் குலவக் கண்டு
வெண்டிரைவா ரிதிபுடைசூழ் உலகில்விய வாதவர்யார் விளம்புங் காலே

எங்குநிறை பரம்பொருளை இனிதேத்தாக் கல்விபயன் எய்தா தென்று
சங்கையிலா மனத்தெண்ணி ஆண்டுதொறும் அரும்பெருநூல் சால்பில்
செய்து
செங்கரத்து வேல்வைத்த தேவுதிரு வடிக்கண்ணும் சீரார் காழிப்
புங்கவன்தன் அடிக்கண்ணும் புனைந்துவழி பாடுசெயும் புலமை
நன்றே.

சாலவரும் கலைகளிலும் சைவசாத் திரங்களிலும் சாரும் ஏனை
நூல்களிலும் அரும்பொருள்கள் நுனித்துணர்ந்து நயங்காணும் நுட்பம்
எல்லாம்
பாலினிமை எனப்பலவாம் அவைதொறும்சொற் பொழிவியற்றும்
பான்மை கண்டோர்
மேலிவனைப் பயந்தவர்செய் தவம்என்கொல் எனப்பெரிதும்
வியப்ப ராலோ.

—வித்துவான் மு. அருணசலம் பிள்ளை,
ரீடர், அண்ணமலைப் பல்கலைக்கழகம்.
(1940)

* சீத நாண்மலர்ச் செல்வியாம் திருவும்வெண் சலசப்
போதின் மீதுறை புனிதையா கியபுல மகளும்
ஓதும் நான்முகன் உவணகே தனனென உவந்தெப்
போதும் வாழ்வுறு புண்ணியம் நண்ணிய புலவன் (1948)

தொண்டர்தம் புராணந் தன்னிற் சொல்லும்நுண் பொருளை எல்லாம்
கண்டுகற் றவர்க்கெந் நாளுங் கரதலா மலகம் போன்று
விண்டிடும் விறலோன் வெற்றி வேற்கர னமிச ரான
தண்டமிழ்ச் சைவங் காத்த சம்பந்தச் சண்பை வேந்தர்

தந்திருப் பெயர்வீ திக்குத் தந்துமச் சமய சீலர்
பந்தணை யறுக்கும் பேராற் பாலரு வாயர் தூய
அந்திரு நிலைய மென்ன வகத்தினுக் கருட்பே ரிட்டும்
சிந்தணை யவர்க்கே யாக்கும் திகழ்தன வணிகச் சீமான்.

—சு. நல்லசிவன் பிள்ளை,
ஆசிரியர், மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை.
(1950)

* அறியாமை யிருள்விலகப் பதிபசுபா சத்தியல்பை அகத்தில் வீசும்
நெறியாகுஞ் சைவசித்தாந் தக்கதிரைக் கையேந்தி நிலவுஞ் சான்ரேன்
செறிவான வளந்திகழும் தேவகோட் டைப்பதியில் திகழ்வோன் தீமை
குறியாத நல்லுளத்தன் பாலகவி யெனப்புகழ்கொள் குணத்தின்
மிக்கான்

பயிலுகந் திங்களொடு நண்புசெயுஞ் செஞ்சடையான் பண்பைப் பாடிப்
பயிலுவ லன்சைவ மெய்கண்டான் திருவடியிற் பற்று மிக்கான்
வயிநாக ரம்ராம நாதனெனும் பெயராளன் மலர்வெண் ணீறும்
உயனுடும் உருத்திராக் கக்கலனும் ஒளிரன்பின் உருவி னுனே.

சைவநெறி வளர்க்கின்ற மடங்களெலாம் பாராட்டுந் தகவோன்
மென்மை
தைவருநற் சொல்லினிக்கச் சித்தாந்தப் பொருளினிக்கச் சாற்றும்
வன்மை
கைவருமெய்த் திருவாளன் இந்நாளெங் கருத்தினிக்கக் கேட்போ
ருள்ளம்
உய்வுபெறுஞ் சிவஞான முனிவருரை சித்தியிலே உணர்த்தி னுனல்.

—புலவர் அரசு,
துணை ஆசிரியர், கலைக்களஞ்சியம்.
(1959)

* நிராமயமாய் நிட்களமாய் நின்றசிவம் தானே
இராமனுக்கு நாதன்பேர் ஏற்றுப் — பராவும்
உருவினில்வந் தாட்கொண் டொளிரின்பம் சேர்க்கும்
குருவெனவென் னெஞ்சமே கூறு.

— க. அருணகிரி,
அண்ணாமலை நகர்.
(1969)

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் இயற்றிய நூல்கள்

I பாநடை :

1.	குன்றக்குடிச்சுப்பிரமணியர் தோத்திரப்பதிகம்	1931
2.	திருஞானசம்பந்தர்பதிகம்	... 1932
3.	மயூரகிரிஉலா	... 1934
4.	திருஞான சம்பந்தர் இரட்டை மணி மாலை	... 1934
5.	திருப்பரங்கிரிமும் மணிக்கோவை	... 1935
6.	நடராஜர் நவமணி மாலை	... 1935
7.	குமரகுருபர சுவாமிகள் போற்றித் திருவகவல்	... 1935
8.	ஞானசம்பந்தர் நான்மணி மாலை	... 1937
9.	திருச்செந்திலிருபா விருபஃது	... 1937
10.	ஞானசம்பந்தர் நவமணி மாலை	... 1939
11.	ஆவினன்குடி அந்தாதி	... 1939
12.	ஞானசம்பந்தர் திருப்பள்ளியெழுச்சி	... 1941
13.	திருவேரக வருக்க மாலை	... 1941
14.	கோமதியம்மை பஞ்சரத்னம்	... 1943
15.	இசைப்பாட்டு	... 1944
16.	தமிழிசைப் பாடல்கள்	... 1946
17.	சேக்கிழார் வரலாற்றுச் சிந்து	... 1947
18.	முருகன்	... 1952
19.	முருகன் என் காதலன்	... 1953
20.	சேக்கிழார் சமயவாதி	... 1953
21.	ஞானசம்பந்தர் உலா	... 1956
22.	குன்றுதோருடல் வெண்பா	... 1956
23.	ஞானசம்பந்தர் ஒருபா ஒருபஃது	... 1956
24.	பழமுதிர்சோலைப் பதிற்றுப்பத்தந்தாதி	... 1956
25.	ஞானபுரீசுவர சுவாமிபதிகம்	... 1956
26.	திருக்கானப்பேர் வரலாறு	... 1959
27.	இலுப்பக்குடித்தல புராணம்	... 1959
28.	மரத்தாண்டவர் பதிகமும், காவடிச்சிந்தும்	... 1961
29.	கண்டி, செல்வவிநாயகர் பதிகம்	... 1968
30.	சிங்கப்பூர் தண்டாயுதபாணி பதிகம்	... 1969
31.	கோலாலம்பூர் ,, ,,	... 1969
32.	அலோர்ஸ்டார் ,, ,,	... 1969
33.	மீனுக்ஷி சுந்தரேசுவரர் திருவூடல் வர்ணனை	... 1969
34.	கொப்புடையம்மன் வருகைப்பத்து	... 1972

35. மீனாக்ஷி சுந்தரேசுவரர் பதிகம் பொழிப்புரை ... 1972
36. போற்றிப் பஃறொடைகள் ... 1973
37. சந்தானுசாரியார் புராணசாரம் ... 1973

[குறிப்பு: சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் அவ்வப்போது பாடிய தனிப் பாடல்கள் ஆயிரக்கணக்கானவை. மற்றும் திருப்புகழ்ச்சந்தத்தில் நூற்றுக் கணக்கான பாடல்கள் பாடியுள்ளார்கள். அவற்றில் மருதமலைக்கு ஒரு பாடல் இருப்பது குறிக்கத்தக்கது. - மலர்ப் பதிப்பாசிரியர்]

II உரைநடை :

1. திருமுறைப் பெருமை ... 1941
2. உதயண குமாரன் ... 1957
3. இலுப்பைக்குடித்தல புராணம் ... 1959
4. சைவானுட்டானவிதி ... 1962
5. சிவபூஜா விதி ... 1962
6. சமயாசாரியர் நால்வர் சரித்திரம் ... 1966
7. சைவானுட்டான விதியும் விளக்கங்களும் ... 1967
8. சிவாகம நெறித் திருமண முறை ... 1967
9. காவிரிப்பூம் பட்டினத் தல வரலாறு ... 1969
10. கும்பாபிடேகதத்துவம் ... 1971
11. வணிகரில் ஐவர் ... 1972
12. சிவாலய தரிசன விதி ... 1974

III உரைநூல் :

1. நற்றிணை உரை (செட்டி நாடு ... 1955
வார இதழில்) முடிய
2. திருக்கழுக்குன்ற மகிமா சங்கிரகஸ்தவம் ... 1972
3. குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள் ... 1973
(குமரகுருபரன் திங்களிதழில்) முடிய

IV பதிப்பித்த நூல்கள் :

1. எண்ணிய எண்ணியாங்கு எய்தும்
திருமுறைத்திரட்டு ... 1973
2. திருஞான சம்பந்த மூர்த்திசுவாமிகள்
பிருதாவளி ... 1970

சைவ சித்தாந்தம்

புலவர்மணி, சைவ சித்தாந்த வித்தகர், *முரு. பழ. இரத்தினம் செட்டியார்*

முப்பொருள் உண்மை

இறை, உயிர், தளை ஆகிய முப்பொருட்களும் அநாதி நித்தியம் (என்றும் உள்ளவை) என்பது சைவ சித்தாந்தக் கொள்கையாகும்.

> "பதி, பசு, பாசம் எனப் பகர் மூன்றில்
> பதியினைப் போல் பசு, பாசம் அநாதி".
>
> திருமந்திரம்

கடவுள் உண்டா?

உலகில் பொருட்கள் தோன்றுகின்றன; சிலகாலம் நிற்கின்றன; பின்னர் அழிகின்றன. ஞாயிறு சிறுகச் சிறுகத் தன் ஒளியை இழந்து வருவதால், ஒருநாள் அழிந்துபோகும் என்றே விஞ்ஞான நூல்கள் கூறுகின்றன; அழிகின்ற ஒன்றுக்குத் துவக்கம் இருந்தே தீரவேண்டும். இதனால் அனைத்துப் பொருட்களும் தோற்றம், அழிவு ஆகிய இரண்டிற்கும், உட்பட்டவை என்பது தேற்றம். *தோற்றத்திற்கு அழிவு முரணாகும்.* தோன்றுதல், அழிதல், ஆகிய இருவகைச் செயல்களும் தாமாக நடைபெறுகின்றன என்றோ, உலக மூலமாகிய இயற்கைக்கு இத்தகைய ஆற்றல் இயல்பாக உண்டென்றோ, நாத்திகர் கூறுவர். இயற்கையை அறிவுடைய பொருளாக அவர் கூறுவதில்லை. கூறினால் அது கடவுளை ஒப்புக் கொண்டதாக முடியும். நாத்திகர் கூறுவதுபோல இச்செயல்கள் தாமாக நடைபெறுகின்றன என்றோ, இயற்கைக்கு இத்தகைய ஆற்றல் உண்டென்றே வைத்துக் கொள்வோம். தோற்றுவிக்கும் ஆற்றல் கூடுதலான வலிவுடையதாக இருக்குமானால், அழிப்பிக்கும் ஆற்றலை அது செயல்படவிடாமல் நிறுத்திவிடும்; அழிப்பிக்கும் ஆற்றல் கூடுதலான வலிவுடையதாக இருக்குமானால், தோற்றுவிக்கும் ஆற்றலை அது செயல்படவிடாது. இருவகை ஆற்றலும் தம்முள் சமவலிமையுடையனவாக இருக்குமானால், இரண்டு செயல்களுமே நடைபெறுமற்போகும். முரண்பட்ட இவ்விருவகைச் செயல்களும், ஒன்றுக்கொன்று கூடுதலான வலிமையோ, சமவலிமையோ உடையனவாக

இல்லாமல் வேறு வகையாக இருக்க முடியாது. அப்படியானுல் முரண் பட்ட இவ்விருவகைச் செயல்களும் தாமாக நடைபெற இடமில்லை. அறிவற்ற இயற்கை இவ்வாற்றல்களைத் தம்மகத்தே இயல்பாகக் கொண்டுள்ளது என்று வைத்துக் கொள்வோம். அறிவற்ற ஒன்று தன் ஆற்றலை உள்ளவாறு தான் வெளிப்படுத்துமாதலால், ஒன்றுக்கொன்று கூடுதலாகவோ, சமமாகவோ உள்ள இவ்வாற்றல்கள் அதனிடத்திலிருந்து செயல்படுமாறில்லை. இயற்கைக்கு அறிவு இருக்குமானுல் முரண்பட்ட இவ்வாற்றல்களை அடக்கியும் விடுத்தும் செயல்படுத்தும் எனக் கொள்ளலாம். அறிவற்ற ஒன்றுக்கு விகற்பித்துச் செயல்படுத்தத் தெரியாது. இயற்கைக்கு அறிவில்லை என்பதை நாத்திகர், ஆத்திகர் இருவரும் ஒப்புகின்றனர். எனவே அறிவுள்ள ஒரு பொருளே, அறிவற்ற இயற்கையினிடத்தே நின்று முரண்பட்ட இவ்விருவகைச் செயல்களையும், அடக்கியும், விடுத்தும் விகற்பித்துச் செயல்படுத்தி வருகிறதென்று கொள்ளவேண்டியிருக்கிறது. அறிவுள்ள ஒரு பொருள் இல்லையென்ருல், முரண் உடைய இவ்விருசெயல்களும் உலகில் நடைபெற இயலாது. இவ்வறிவுப் பொருள் எத்தகையதாக இருக்க வேண்டும்? அழிகின்ற ஒரு பொருள் தோற்றமுடையதாகவே இருக்கும். அத்தோற்றத்திற்கு வேருெரு பொருள் வேண்டும். இப்படியே சென்று பார்த்தால் முடிவில் தோற்றமோ, அழிவோ இல்லாத ஒரு பொருள் இருந்தாக வேண்டும் என்பதும், இல்லையேல் தோன்றுதல், அழிதல் ஆகிய இருவகைச் செயல்களும் நடைபெற முடியாதென்பதும் புலனுகும். அழியாததாய், அதாவது என்றும் உள்ளதாய், முழு அறிவும், முழு வல்லமையும் உடையதாய் ஒரு பொருள் இருந்தால் அன்றி அறிவற்ற இயற்கையினிடத்தே இவ்வுலகம் தோன்றி ஒடுங்க இயலாதென்பது தெளிவு. இப்பொருளுக்கே "கடவுள்" என்று பெயர். கடவுள் என்றும் உள்ள பொருளென நாம் தெளிவதால், அவரை யார் உண்டாக்கினுர்? என்னும் வினு பொருளற்றதாகப் போகிறது. இதனுலேயே இறை அநாதி நித்தியம் எனச் சைவசித்தாந்தம் கொள்கிறது.

உலகு எவ்வாறு தோன்றிற்று?

உலகத்துப் பொருட்களைத் தோற்றுவிக்கவும் அழிப்பிக்கவும், அறிவுடைய கடவுள் ஒருவர் வேண்டுமெனத் துணிந்தோம். கடவுள் இப்பொருட்களை எவ்வாறு உண்டாக்கினுர்? கிறித்துவமும், இஸ்லாமும் "உலகு உண்டாகுக" எனக் கடவுள் சங்கற்பித்ததும் அது தோன்றியது எனக் கூறுகின்றன. சங்கற்பித்ததும் தோன்றியதென்ருல் கடவுளிடத்திலிருந்தேதான் அது தோன்றியிருக்க வேண்டும். வேறு வழியில்லை. முழு அறிவுப் பொருளாகிய அவரிடமிருந்து அறிவற்ற மண், நீர், காற்று, நெருப்பு, வான் ஆகிய பொருட்கள் தோன்ற முடியாது. இறைவனின் சக்தி என்பது அவனன்றி வேறன்ருதலால், அறிவுமயமாகிய அதினின்றும், அறிவற்ற உலகம் தோன்ற இயலாது. இறைவன் எல்லாம் வல்லவனுதலால், அறிவற்ற பொருட்களையும் உண்டாக்க முடியும் என்ருல், அவன் தன்னிலிருந்து அவற்றை உண்டாக்காமல் தன்னின் வேருகிய ஒரு பொருளிடத்திருந்தே

உண்டாக்கியிருக்க வேண்டும். எல்லாம் வல்லவன் என்பதற்காகத் தன்னிலே அறியாமையும் உடையவனுக அவன் விளங்க வராது. அறிவற்ற உலகப் பொருட்களுக்கு மூலமாக அறிவற்ற ஒரு பொருள் உண்டு என்றும் இறைவன் அதிலிருந்து உலகை உண்டாக்குகிருன் என்றும் கொள்வதே பொருத்தமாகும். இதனுலேயே "இயற்கையை" அறிவற்றதென நாத்திகர் கூறுவதைச் சைவ சிந்தாந்தமும் ஏற்கிறது. அறிவற்ற மூலமாகிய "இயற்கை" என்னும் ஆற்றல், அறிவுடைய இறைவனிடமிருந்து உண்டாக முடியாததாதலால், அஃது இறைவனைப் போலவே யாராலும் உண்டாக்கப்படாத,என்றும் உள்ள (அநாதி நித்தியமான) ஒரு பொருளாகவே இருக்க வேண்டும். இப்பொருளுக்கு "மாயை" எனச் சைவசித்தாந்தம் பெயரிட்டிருக்கிறது. மாயை அறிவற்ற பொருளாதலால், அது தானே உலகமாகத் தோன்றி ஒடுங்காதென்றும், அறிவுடைய இறைவனே தோற்றியும், ஒடுக்கியும் அதனைச் செயல்படுத்த வேண்டுமென்றும் அது கொள்கிறது.

உலகை இறைவன் ஏன் படைக்க வேண்டும்?

மாயை அறிவற்ற பொருள்; அதற்கு உலகம் தேவை இல்லை. இறைவனே எந்தத் தேவையும் அற்றவன்; அவனுக்கும் உலகம் வேண்டுவதில்லை. உயிர்கள் உடலோடு கூடி உலகிடை வாழ்ந்து இன்ப, துன்பங்களை நுகர்ந்து அறிவு விளக்கம் பெறுகின்றன. எனவே, உயிர்களுக்கு உலகம் தேவைப்படுகின்றது. இறைவன் அவை பயன் பெறும் பொருட்டே உலகைத் தோற்றுவித்திருக்க வேண்டும்.

உயிர்களுக்கு ஏன் உலகம் தேவை?

உடலைவிட்டு உயிர் பிரிந்ததும், உடல் அழுகி அழிந்துபோகிறது. உயிரில்லாத உடலில் அறிவு இல்லை. உடலோடு கூடிய உயிரில் அறிவு விளங்குகிறது. இதனுல், அறிவு உயிர்க்கே உரியதாக இருக்க வேண்டும். உடலின் கூறுகள் மண், நீர், நெருப்பு, காற்று, வான் ஆகிய வற்றின் தன்மையைக்கொண்டனவாக இருப்பதால், மாயையிலிருந்து உலகைத் தோற்றுவித்த இறைவன், உயிர்களுக்குரிய உடலையும் அதனின்றே தோற்றுவித்திருக்க வேண்டும். உயிர்கள் அறிவுடையனவாக இருப்பினும்,தமக்குரியஉடலைப் படைத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றனவாக இல்லை. கண்ணையோ, கையையோ இழந்த உயிர்கள் எத்தனை முயன்றும் அவற்றைப் படைத்துக் கொள்ள இயலாதிருப்பதைக் காண்கின்ருேம். இறைவன்தான் அவற்றிற்கு உடலைப் படைத்தளித்திருக்க வேண்டும். உயிர்கள் எவ்வாறு உண்டாயின? உலகம் கடவுளுக்கு எப்படித் தேவையில்லையோ, அது போலவே உயிர்களும் அவனுக்குத் தேவை இல்லை. இல்லாத உயிர்களைப் புதிதாகப் படைத்து, அவற்றிற்கு இன்ப, துன்பங்களை ஊட்டி விளையாட வேண்டிய அவசியம் இறைவனுக்குச் சிறிதும் இல்லை. எனவே உயிர்களும் யாராலும் உண்டாக்கப்படாத அநாதி நித்தியப் பொருட்களாகவே இருக்க வேண்டும். உலகத்துப் பொருட்களுக்கு "மாயை" என்னும் அறிவற்ற ஒரு மூலப்பொருள் வேண்டும் என்று

கொண்டோம். அறிவுள்ள உயிர்கள் தோன்றுவதற்கும் ஒரு மூலப்பொருள் வேண்டுமா? என்னும் ஐயம் எழலாம். சிற்றுயிர்க்குக் கூடத் தன்னைப் பாது காத்துக் கொள்ளும் உணர்வு இருக் கிறது. இதனுல், ஒவ்வோர் உயிர்க்கும் விளங்கியோ, விளங்காமலோ தன் உணர்வு இருப்பது புலனுகிறது. அறிவு விளக்கமும் நுகர்வு விருப்பமும் ஒவ்வோர் உயிர்க்கும் தனித்தனியே நிகழ்வதால், உயிர்கள் அனைத்துக்கும் மூலமாக ஒரு பொருள் இருக்க வராது. அவை தனித்தனியே பல என்றே கொள்ள வேண்டும். இதனுலேயே உயிர்கள் அநாதிநித்தியம் என்றும் அவை எண்ணில என்றும் சைவ சித்தாந்தம் கொள்கிறது. அறிவு உயிர்க்கே உரியதெனக்கண்டோம். மனம், மூளை, பொறி ஆகிய அனைத்தும் உயிரில்லையேல் அறிவற்றசடமாக விளங்குவது கண்கூடு. ஆனுல் உயிர் இக்கருவிகளோடு கூடினுல்தான் அறிவு விளக்கம் பெறுகிறது. கருவி யினின்றும் நீங்கினுல் அறிவின்றிக் கிடக்கிறது. தூக்கம், மயக்கம், ஆகிய நிலைகளில் இது புலனுகிறது. அறி வுடைய உயிர் கருவியினின்றும் நீங்கி யதும், ஏன் அறிவற்றுப் போக வேண்டும்? பொருளின் இயல்பு எப் பொழுதும் பொருளுடனேயே இருக்கும். கருவியினின்றும் நீங்கினுலும், உயிர் அறிவுடனேயே விளங்க வேண்டும். அறிவு, அறியாமை, ஆகிய இரு முரண்பட்ட தன்மைகள் ஒரு பொருளிடத்திருக்க வராது. இதனுல் இயல்பாக உள்ள உயிரின் அறிவை, அதனின் வேருக உள்ள ஏதோ ஒரு பொருள் மறைப்பதாலேயே இவ்வறி யாமை நிகழ்கிறதெனக் கொள்ள வேண்டியிருக்கிறது. இறைவன் உடலைப் படைத்தளிக்காத நிலையில், உயிர்களின் அறிவு இப்பொருளால் முழுதும் மறைக்கப் பட்டிருக்க வேண்டுமெனவும், உடலோடு கூடுவதன் மூலம் இம்மறைப்பி னின்றும், உயிர் ஓரளவு விடுபடுகிற தெனவும் நாம் முடிவுக்கு வரவேண்டிய தாகிறது. இப்பொருள் யாதாக இருக்கும்? மாயையினின்றும் தோன்றிய உடல் இம்மறைப்பை நீக்க ஓரளவு துணை செய்வதால், இப்பொருள் மாயைக்கு வேறுபட்ட ஒன்ருகவே இருக்க வேண்டும். இதனுல், அது மாயையினின்று தோன்றியிருக்க முடியாது. அறிவை மறைக்கின்ற பொருள் அறிவற்ற ஒரு பொருளாகவே இருக்குமாதலால், அறிவுள்ள இறைவனிடமிருந்தும் தோன்றியிருக்க முடியாது. அவனுக்கு இப்படியொரு பொருளைப் படைக்க வேண்டிய அவசியமும் இல்லை. எனவே, இந்தப் பொருளும், இறைவனைப் போல யாராலும் உண்டாக்கப்படாத அநாதி நித்தியப் பொருளாகவே இருக்க வேண்டும். உயிர்கள் அநாதி எனத் துணிந்தோம்; இப்பொருளும் அநாதி என்ருல், உயிர் களின் அறிவை இஃது அநாதியே மறைத்திருக்க வேண்டும் என்றும் இம்மறைப்பு நீங்குவதற்கு ஒரு துணையாகவே உடலோடு கூடிய உலக வாழ்வை உயிர்களுக்கு இறைவன் வழங்கி இருக்கிருன் என்றும் தீர்மானிக்க வேண்டியிருக் கிறது. இப்பொருளுக்கு, ''ஆணவ மலம்'' எனச் சைவச் சித்தாந்தம் பெயரிட்டிருக்கிறது.

ஆணவமலம் ஒன்ரு? பலவா?

உலகத்துப் பொருட்கள் அழிவ தாலேயே அவைகளுக்கு மூலமாக

அழியாத "மாயை" என்னும் ஒரு பொருள் இருத்தல் வேண்டுமெனக் கொண்டோம். ஆணவமலம் ஒரு மூலப்பொருள் என்றும், உயிர்களின் அறிவை அது தனித்தனியே மறைப்பதால் பலபொருளாக அது மாறுகிற தென்றும் கொள்ளலாமா? என ஒரு வினு எழலாம். அறிவற்ற மாயை தானே பலபொருளாகத் திரிய முடியாததாதலால், கடவுள் அதனின்றும் பலபொருட்களைப் படைக்கிருர் என்று கூறினேம். ஆணவமலமும் அறிவற்ற பொருளாதலால், இறைவனே அதினின்றும் பல பொருட்களைத் தோற்றுவிக்க வேண்டும். இறைவன் உயிரின் அறிவை விளக்குவதற்கு மாயையினின்றும் பொருட்களைத் தோற்றுவிக்கிருன். அவனுக்கு எந்தத் தேவையும் இல்லாவிட்டாலும் கருணை காரணமாக இதனைச் செய்கிருன். உயிர் அறிவை மறைப்பதற்காக இறைவன் ஆணவமலத்தைப் பல பொருளாக்குகிருன் என்ருல் அது அவன் கருணைக்கு இழுக்காகும். எனவே ஆணவமலம் ஒன்றே என்றும், இருள் ஒன்ருக இருந்தும் எல்லாக் கண்களையும் மறைப்பதுபோல, இம் மலம் ஒன்ருக இருந்தே உயிர்களின் அறிவை மறைக்கிற தென்றும் கொள்வதே பொருத்தமாகும்.

இறைவன் ஏன் ஆணவமலத்தை உடனே நீக்கவில்லை?

அநாதியாக உள்ள உயிர்களின் அறிவை அநாதியாக உள்ள ஆணவமலம் மறைக்கும் பொழுது, இறைவன் உடனே அம்மறைப்பினின்றும் உயிர்களை விடுவித்திருக்கலாம். அல்லது அம்மலத்தையே அழித்திருக்கலாம். ஏன் மாயாகருவிகளை வழங்கிச் சிறுகச் சிறுக அறிவு விளக்கம் பெறுமாறு செய்ய வேண்டும்? உயிர் அறிவுடையது; இதனுல் அதற்கென இச்சையும் செயலும் உண்டு. அறிவுள்ள பொருளுக்கு அதன் இயல்புப்படியே சென்று பயிற்றினுல்தான் பயன்பெறும். தன் வல்லமை கொண்டு அதன் அறிவை அடக்கினுலோ, மாற்றினுலோ, கல், மண் போல் அது செயலற்றுப்போகும். படிமுறைப் பயிற்சிதான் அறிவுடைப் பொருளுக்கு ஏற்றதாகும். இதனையே "சோபானமுறை" எனச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. தன் வல்லமையை மட்டும் இறைவன் நிலை நாட்டுவதில் பெருமையில்லை; உயிர் பயன்பெற வேண்டும். மாயா கருவிகளைப் பற்றி நல்வினை, தீவினைகளைச் செய்து, இன்ப துன்பங்களை அனுபவித்தால்தான் உயிரின் அறிவு உரம் பெற்று, மலப்பிடிப்பினின்றும் நீங்கி இறைவனைப் பற்றிப் பேரின்பம் எய்தும். ஆணவமலம் அநாதியாதலால் அழியாது; இறைவன் அழிக்கின்ருன் என்றே வைத்துக் கொள்வோம். அழித்தால் உயிர் அநுபவம் பெற்று இறைவனைப் பற்றிப் பேரின்பம் எய்த இடமில்லாமற் போகும். இல்லாத ஒன்றை இறைவன் உண்டாக்கிப் பயிற்சி பெறச் செய்தால், அது தொல்லை என்றே கொள்ளவேண்டி வரும். அநாதியாக உள்ள ஒரு பொருளின் மறைப்பால் உயிர்பயிற்சி பெற வாய்ப்பிருக்கும்போது, இறைவன் அதனை அழிப்பது நியாய மாகாது. எளிய அறிவுள்ள உயிர்க்குப் பேரறிவுப் பொருளாகிய இறைவன் படிமுறையாக உதவுவதே பொருத்த மாகும். அநாதியே உயிர்கள் தம் எளிய இயல்பால் ஆணவமல மறைப்புக்குள்ளாகி இருக்கின்றன.

உலகையும், உடலையும் உயிர்களுக்கு வழங்குவதன் மூலம் அவை படி முறையே அறிவு விளக்கம் பெற்று நல்வினை, தீவினையை இயற்ற முடிகிறது. இவ்வினைகளுக்குரிய இன்ப, துன்ப அனுபவம் ஏற, ஏற உயிர் மலப்பிடிப்பினின்றும் நீங்கி இறைவனைப்பற்றி "அந்தமில்இன்பத்" தழிவில் வீடு பெறுகிறது. இறைவனை உயிர் முழுமையாகப் பற்றியதும் ஆணவமலம் அதன் அறிவை மறைக்க முடியாமற் போகிறது. மலமறைப்பு நீக்கத்தையே மலநீக்கம் அல்லது பாசநீக்கம் எனச் சாத்திரம் கூறுகிறது.

மூலகன்மம்:-

உயிர் தன் எளிய இயல்பால் ஆணவமல மறைப்புக்குள்ளாகிற தெனக் கண்டோம். ஆணவமலம் உயிர் அறிவை மறைக்கும்பொழுது, உயிரும் அதனைப் பற்றி அதனுள் அழுந்துகிறது. இதனுல்தான் உடனே அது விடுதலைபெற இயலாமல் சிறுகச் சிறுக விடுதலை பெறுகிறது. அநாதியே உள்ள உயிர்களை அநாதியே உள்ள மலம் மறைக்கும் பொழுது, பற்றுத லாகிய இச்செயலும் அநாதியே நிகழ்கிறது. நெருப்பு என்று உண்டோ அன்றே சுடுதலாகிய தொழிலும் நிகழ்வதுபோல, மலம் என்று உண்டோ அன்றே அதனைப் பற்றுத லாகிய செயலும் நிகழ்கிறது. இச் செயலுக்கு "மூலகன்மம்" என்று பெயர். இது அநாதியாதலால், "கன்மம்" அநாதி எனச் சைவசித்தாந்தம் கூறு கிறது. உயிர்கள் பிறவிதோறும், உலகப் பொருட்களைப் பற்றிப் பற்றி நல்வினை, தீவினைகளை இயற்றுகின்றன. இவ் வினைகளும் இவற்றின் பயன்களும் உயிரைக் கட்டுப்படுத்துமாதலால், இவற்றிற்குக் "கன்மமலம்" எனச் சாத்திரம் பெயரிட்டிருக்கிறது. இக் கன்மமலம் பிறவிதோறும், உயிரைத் தொடர்வதால், பிரவாக அநாதி என்று கூறப்பெறும். கன்மம் ஒரு பொருள் அன்று. இருப்பினும் ஒரு பொருள் போல உயிரைப் பந்தப்படுத்துவதால் "மலம்" என உபசரித்துக் கூறப்படு கிறது. "மூலகன்மம்" என்பது "விருப்பு, வெறுப்பு" எனச் சைவ சித்தாந்திகளுள் சிலர் கூறுவர். சூக்கும உடல் வாய்த்த பின்னரே உயிரிடத்து விருப்பு, வெறுப்புக்கள் தோன்ற முடியும். இதனுல் விருப்பு, வெறுப் புக்கள் சூக்கும கன்மமே அன்றி மூல கன்மம் அன்று. அநாதியே "மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாய்" எனச் சிவஞானபாடியத்துள் சிவஞான சுவாமிகள் கூறுவது கொண்டு, அநாதியே உயிர் மலத்தைப் பற்றிய செயலே, "மூலகன்மம்" என அறிய லாம். பிறவிதோறும் ஈட்டப்படும் நல்வினை, தீவினைகள், தூலகன்மம் எனப்படும். ஆணவமலப்பிடிப்பின் நிலைக்கேற்பப் பல்வேறு பிறவிகளை உயிர் எடுக்கிறது. பிறவிதோறும் அது வினைப்பயன்களை நுகர்ந்து, அறிவு விளக்கம் பெற்று இறுதியில் இறைவனை அடைந்து, பேரின்பம் எய்துகிறது. மூலகன்மம் அநாதியே நிகழ்வதாலும், கன்மமலம் பிரவாக அநாதியாக இருப் பதாலும், கன்மம் அநாதி என்றும் இதனுல் அது நித்தியம் என்றும் உபசரித்துச் சொல்லப்படுகிறது.

முப்பொருளும் அநாதி -

இதுகாறும் ஆராய்ந்தவாற்ருல், இறை, உயிர், ஆணவம், மாயை, கன்மம் ஆகியவை அநாதி நித்தியம் என்பது புலனுகும். "ஆணவம்

கன்மம், மாயை'' மூன்றையும் ''தளை'' எனச் சாத்திரம் கூறும். இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) ஆகிய மூன்றும் அநாதி எனத் திருமந்திரம் கூறுவதன் கருத்து இஃதே ஆகும்.

பிறசமயக் கருத்துக்கள்:-

சங்கரர் வேதாந்தம் உயிரும் தளையும் வெறும் தோற்றமே அன்றி உண்மைப்பொருள் அல்லவென்றும், பிரமப்பொருள் ஒன்றே உள்ளது என்றும் கூறும். பிரமப்பொருள் ஒன்றுதான் உள்ளதென்ருல், தோற்றம் அதற்குத்தான் ஏற்பட வேண்டும். முற்றறிவுப் பொருளாகிய பிரமத்திற்குப் பொய்த் தோற்றம் உண்டாவது இழுக்காகும். இதனல் சங்கரர் வேதாந்தம் கூறுவது பொருத்தமாக இல்லை. வைணவம் உயிரும் தளையும் இறைவனுக்கு உடல் எனக் கூறும். உடலுக்கு வரும் இன்ப, துன்பம் உயிரைப் பாதிப்பதுபோல, உயிர்க்கு வரும் இன்ப, துன்பங்கள் இறைவனைப் பாதிக்கவேண்டும். இறைவன் பாதிக்கப்படமாட்டான் என்ருல் உடல் எனச் சொல்வதில் பொருளில்லை. உயிரும் தளையும் வெவ்வேறு பொருட்களே என்றும் இறைவன் அவற்றுள், கலப்பால் ஒன்ருகியும், தன்மையால் வேருகியும், செலுத்துவதால் உடனுகியும் இருக்கின்ருன் என்றும் கொள்வதே பொருத்தமாகும். சாங்கியம், நியாயம் வைசேடிகம், யோகம், சமணம் முதலியவை இறைவனை ஒப்புக் கொள்ளாமல் உயிரையும் தளையையும் ஒப்புக்கொண்டு, உயிர் தன்முயற்சியால் தளையினின்றும் விடுபடும் எனக் கூறுகின்றன. உயிர்க்குத் தானே விடுவித்துக் கொள்ளும் ஆற்றல் இருந்தால் தளைப்படக்காரணம் இல்லை. ஆற்றல் இல்லாமையால்தான் தளைப்பட்டிருக்கிறது. எனவே இறைவன் துணை இன்றி விடுதலை பெற இயலாது. ''விடுதலை'' என அவை பேசுவதால் இறைவனை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். பௌத்தம் உயிருண்மையை ஏற்றுக்கொள்ளாமலே அதற்கு விடுதலை பேசுவது ஒரு விந்தையாகும். நாத்திகர் இயற்கையை ஒப்புக் கொண்டு கடவுளை மறுப்பர். ஆனல், தோன்றுதல் அழிதல் ஆகிய செயல்கள் நடைபெறுவதற்குச் சரியான காரணம் காட்டாது நெகிழ்வர். சைவ சித்தாந்தம் ஒன்றே தன் கொள்கையைச் சரியான காரணம் காட்டி நிறுவுகிறது. இதனைச் சித்தாந்த சாத்திரங்களில் பரக்கக் காணலாம்.


பரம்பொருளும் தேடிய பொருள்

ஊதி யம்பெறும் வழியினை உணர்ந்தனம் உவந்தோம்
நீதி யெம்பரம் பொருளுமுன் தேடிய செல்வம்
தீதி லம்பிர ணவப்பொருள் பெற்றுயர் செம்மல்
கோதி னம்பெரு மானுறை ஏரகம் குறிப்பாம்


—பாலகவி

இவர் தம் 26 - ஆம் ஆண்டுநிறைவில் பாடிய '' திருவேரக வருக்கமாலை '' என்னும் நூலிலிருந்து.


சைவ ஞாயிற்றின் தகைசால் குடும்பம்




மணிவிழாச் செல்வரின் பெற்ருேர்கள்
மகாதேவ முருகப்பச் செட்டியார்,
சீதை ஆச்சி



மணிவிழாச் செல்வரின்
சுவீகாரத்தந்தை
வயிநாகரம். வேங்கடாசலம் செட்டியார்




மணிவிழாச் செல்வரின் மகன் குடும்பம்



மணிவிழாச் செல்வரின் மகள் குடும்பம்


இரணியூர்




வயிரவன்பட்டி




இளையாற்றக்குடி




சூரைக்குடி







◀- மாற்றூர்

இலுப்பைக்குடி-▶







நேமம்



பிள்ளையார்பட்டி



வேலன்குடி



ஒன்பது நகரக் கோயில்கள்

வாமதேவ நாம சி. வீர. நடராஜன் செட்டியார்,
நிருவாண தீட்சிதர், தேவகோட்டை.

"அண்ணல் ஆலவாய்
நண்ணி னான்றனை
எண்ணியே தொழத்
திண்ணமின்பமே"

சோழநாட்டின் தலைநகரமாகிய காவிரிப்பூம்பட்டினம் முற்காலத்தில் உலகம் எல்லாம் புகழப்பெற்றிருந்தது. அக்காலத்தில் அங்கே வாழ்ந்திருந்த மகுடதன வைசியர்களாகிய நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் குபேரனும் பொருமை கொள்ளத்தக்க பெருஞ்செல்வவளத்துடன், அரசாங்க முன்மரியாதைக்கு உரியவர்களாகிச் சிவபக்தி, சிவனடியார் பக்தியில் சிறந்து, அறத்தின் வழிப் பொருள் ஈட்டிச் சிவபுண்ணியங்களைச் செய்து வாழ்ந்து வந்தார்கள்.

பாண்டிய மன்னன் தனது நாட்டிற்கு நற்குடி மக்கள் வேண்டும் என்று விரும்பிச் சோழநாட்டில் வாழ்ந்துவந்த நகரத்தார்களை அழைத்துக்கொண்டு வந்து, கடற்கரைக்கு மேற்கு, வையை ஆற்றிற்கு வடக்கு, பிரான்மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கு ஆகிய நான்கு எல்லைகட்கு உட்பட்ட ஊர்களில் குடியேற்றியதுடன் அவர்கள் வேண்டுகோளுக்கு ஏற்ப, மிகப் பழைய ஒன்பது சிவாலயங்களைப் பரிபாலன உரிமையோடு அவர்களுக்கு அளித்தான். அத்திருக்கோயில்கள்,

1. இளையாற்றக்குடி.
2. மாற்றூர்.
3. வயிரவன் கோயில்.
4. இரணியூர்.

5. பிள்ளையார்பட்டி. 6. நேமம்.
7. இலுப்பைக்குடி. 8. சூரைக்குடி.
9. வேலன்குடி.

என்பவை ஆகும்.

இவற்றுள், இளையாற்றக்குடிக் கோயில்மரபினர், ஒக்கூர்உடையார், பட்டணசாமியார், பெருமருதூருடையார், கழனிவாசற்குடியார், கிண்கிணிக் கூருடையார், பேரசெந்தூருடையார், சிறுசேற்றூர் உடையார் என்னும் ஏழு பிரிவினராகவும்,

மாற்றூர்க் கோயில்மரபினர், உறையூர் உடையார், அரும்பாக்கூர் உடையார், மணலூர் உடையார், மண்ணூர் உடையார், கண்ணூர் உடையார், கருப்பூர் உடையார், குளத்தூர் உடையார் என்னும் ஏழு பிரிவினராகவும்,

வயிரவன்கோயில் மரபினர், சிறுகுளத்தூருடையார், கழனிவாசல் உடையார், மருதேந்திரபுரம் உடையார் என்னும் மூன்று பிரிவினராகவும் உள்ளனர்.

ஒன்பது கோயில்களின் சுவாமி, அம்மை திருப்பெயர்கள் வருமாறு:-

1. இளையாற்றக்குடி:	கைலாசநாதர்,	நித்திய கல்யாணி
2. மாற்றூர்:	ஐந்நூற்றீசர்,	பெரியநாயகி
3. வயிரவன் கோயில்:	வளரொளி நாதர்,	வடிவுடை அம்மை
4. இரணியூர்:	ஆட்கொண்ட நாதர்,	சிவபுரந்தேவி
5. பிள்ளையார்பட்டி:	கற்பக விநாயகர்;	
	திருவீசர்,	சிவகாமவல்லி;
	மருதீசர்,	வாடாமலர் மங்கை
6. நேமம்:	செயங்கொண்ட சோழேசர்,	சௌந்தர நாயகி
7. இலுப்பைக்குடி:	தான்தோன்றியீசர்,	சௌந்தரநாயகி
8. சூரைக்குடி:	தேசிகநாதர்,	ஆவுடைநாயகி
9. வேலன்குடி:	கண்டீசர்,	காமாட்சி

பிள்ளையார்பட்டிக் கோயிலில் ஆவணித்திங்களில் விநாயக சதுர்த்தித் திருவிழா 10 நாட்களும், இலுப்பைக்குடிக் கோயிலில் சித்திரைத் திங்களில் பிரும்மோத்சவம், தெப்பத் திருவிழாவுடன் 10 நாட்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இளையாற்றக்குடிக் கோயில் மரபினர்,
“கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான
குலசேகரபுரத்தில்………………உடையார்” என்றும்
மாற்றூர்க் கோயில் மரபினர்,
“கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில்
மாற்றூரான வீரபாண்டிய புரத்தில்………உடையார்” என்றும்

வயிரவன்கோயில் மரபினர்,

"கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்தெருவான
வீரபாண்டிய புரத்தில்.........உடையார்" என்றும்

இரணியூர்க் கோயில் மரபினர்,

"கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான
குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான
இராசநாராயணபுரத்தில் இரணியூர்த் திருவேட்பூர்
உடையார்" என்றும்

பிள்ளையார் பட்டிக் கோயில் மரபினர்,

"கல்வாச நாட்டில் இளையாற்றக் குடியான
குலசேகர புரத்தில் இரணியூர் மருதங்குடியான
இராசநாராயண புரத்தில், பிள்ளையார் பட்டியான
திருவேட்பூர் உடையார்" என்றும்

நேமங்கோயில் மரபினர்,

"கேரளசிங்க வளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில்
தேனாறு பாயும் இளநலமுடையார்" என்றும்

இலுப்பைக்குடிக் கோயில் மரபினர்,

"கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில்,
இலுப்பைக் குடியான புகழிடம் கொடுத்த பட்டினத்தில்
சூடாமணி புரம் உடையார்" என்றும்

சூரைக்குடிக் கோயில் மரபினர்,

"கேரளசிங்க வள நாட்டில் சூரைக்குடியான தேசிகநாராயண
புரத்தில் புகழ்வேண்டிய பாக்கம் உடையார்" என்றும்

வேலன்குடிக் கோயில் மரபினர்,

"கேரளசிங்க வளநாடாகிய பாலையூர் நாட்டில் வேலன்குடியான
தேசிகநாராயணபுரத்தில், கழனிநல்லூர் உடையார்" என்றும்

திருமணமுறி முதலிய ஆவணங்களில் குறிக்கப் பெறுகின்றனர்.

ஒன்பது கோயில் நகரத்தார்களும் அவரவர்களுக்கு உரிய கோயில்களில் பாக்கு வைத்து, சுவாமிக்குச் சாத்திய மாலை விபூதிப் பிரசாதம் பெற்றே தம் வீட்டுத் திருமணங்களை நடத்தி வருகிறார்கள். அரசினர் வைத்துள்ள பதிவு முறையைவிட இது சிறந்ததாக அமைந்துள்ளது.

பாரத நாட்டில் பல்வேறு சமூகத்தினர்களாக வாழும் மக்கள், தத்தம் குடிகளை மூலபுருடர்களின் பெயர்களால் அமைந்த கோத்திர முறையில் கொண்டிருக்கின்றார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் மட்டுமே யாவருக்கும் குடி முதல்வராகிய சிவபரம்பொருளைத் தம் குடிமுதல்வராகக் கொண்டு, தம்மைச் சிவகோத்திரத்தார் என்று குறித்து, மேற்கூறிய ஒன்பது கோயில்களின் மூலத்தானச் சிவலிங்க மூர்த்திகளால் தம் குடிப்பிரிவுகளை விளங்கச் செய்து வாழ்ந்து வருகிறார்கள்.

சங்க இலக்கியங்களில் சைவம்

கு. சுந்தரமூர்த்தி, M. A.,
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

சிவபரம்பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடப் பெறும் சமயம் சைவ சமயமாகும். இந்நெறி மிகவும் தொன்மையானதாகும். சிவ பெருமானை அம்மையப்பராகக் கண்டு வழிபடும் நிலையும் மிகவும் தொன்மை யானதாகும்.

1 "தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"
என வரும் மணிமொழியால் இவ்வுண்மை புலனாகும்.

இந்நெறியைப் போற்றிக் காத்த பெருமை சமயகுரவர்களுக்கும், சந்தான குரவர்களுக்கும், அவர்கள் காலத்தில் வாழ்ந்த பேரரசர்களுக்குமுண்டு. எனினும் இந்நெறி சங்ககாலத்திலேயே பரவிப் போற்றப் பெற்றது. சைவம் என்னும் சொல் வழக்கு, சங்ககாலத்தில் இன்றேனும் அந்நெறிக்குரிய சிவபரம் பொருளே முழுமுதற் கடவுள் என்ற உண்மை அவ்விலக்கியங்களில் கூறப் பெற்றுள்ளது.

2 "நீலமணி மிடற்றொருவன் போல
மன்னுக பெரும நீயே"
3 "தொன்முது கடவுட் பேணிய"
"நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலா"
4 "பிறவா யாக்கைப் பெரியோன்"
என வரும் சான்றுகள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

இனிச் சைவ சமயத்தில் கூறப்பெறும் முப்பொருள் உண்மையைக் காண்போம்.

5 "பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி"

1. திருவாசகம்
2. புறநானூறு
3. மலைபடுகடாம்
4. சிலப்பதிகாரம்
5. திருமந்திரம்

என்பதே சைவசமயத்தின் அடிப்படையான கொள்கையாகும். பதி—இறைவன். பசு—உயிர். பாசம்—தளை. இறைவன் உண்டு என்பதைச் சங்க இலக்கியங்கள் பல்வேறிடங்களிலும் வலியுறுத்துகின்றன.

இதற்கு மேற்கூறிய சான்றுகளேயன்றிப் பின்வருவனவும் அரணாக உள்ளன.

1 "வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப"

2 "கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

3 "வினையின் நீங்கி விளங்கிய அறிவின்"

4 "முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்குப்
பணிகநின் தலையே"

என்பன அவற்றுட் சில.

இரண்டாவதாக எண்ணப்படும் வினையுண்மையும் மிகப் பலவிடங்களில் வலியுறுத்தப் பெற்றுள்ளது. மேற்கூறிய

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்" என்ற தொடரே, இறைவன் இயல்பாகவே வினையின் நீங்கியவன் எனக் கூறுமுகத்தால் உயிர்கள் இயல் பாகவே வினைகளுடன் இயைந்துள்ளன என்னும் உண்மையையும் அறிவிக் கின்றது. பால்வரை தெய்வம், வினை என வரும் தொல்காப்பியச் சொற்களும் ஈண்டுக் கருதத்தக்கன.

5 "நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது
திறவோர் காட்சியில் தெளிந்தனம்"

6 "ஊழ்வினை உருத்து வந்தூட்டும்"

7 "வினையின் வந்தது வினைக்கு விளைவாயது"

என வருவன காண்க. உயிர்களுக்கு வரும் நன்மையும், தீமையும் அவ்வுயிர்கள் செய்த வினைப் பயன்களாலேயாகும். இவ்வுண்மையைத்

8 "தீதும் நன்றும் பிறர்தரவாரா"

9 "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என வருவனவாற்றால் அறியலாம்.

உயிர்கள் பல என்பதும், அவை இறைவனைப் போன்றே அனாதி என்பதும் சைவசமயத்தின் பிறிதொரு உண்மையாகும்.

1, 2, 3- தொல்காப்பியம்
4. புறநானூறு
5. புறநானூறு
6. சிலப்பதிகாரம்
7. மணிமேகலை
8. புறநானூறு
9. திருக்குறள்

[1] ''வீயாது ஈயும் உயிர்தவப் பலவே''

என வருவது கொண்டு உயிர்கள் பல என்பதையறியலாம். 'மன்னுயிர்'— என்பதால், அதன் அநாதித்தன்மை புலப்படும். மன்னுயிர்—நிலைபெற்ற உயிர்.

இத்தகைய உயிர்கள் தமக்குள்ள வினையினின்றும் நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வைப் பெற வேண்டுமென்றால் இறைவழிபாடு ஒன்றே அதற்கு உறுதுணையாவது என்பதைப் பண்டைச் சான்றோர் நன்குணர்ந்திருந்தனர்.

[2] ''இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு''

[3] ''வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல''

என வருவன இவ்வுண்மையை விளக்கும்.

இங்ஙனம் இறைவனை வழிபாடாற்றுவதில் நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடு ஆகிய இரண்டும் இருந்தன.

[4] ''சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு''

என வருவதால் இவ்வுண்மை தெளியப்படும்.

எனவே சைவசமயத்தின் உண்மைகள் தொகுப்பாகவும், நெறியாகவும் பிற்காலத்தே பேணப்பட்டு வளர்தற்குச் சங்ககாலம் அடிப்படையாக அமைந்தது என்பதும், அக்காலத்தேயே இந்நெறியும் உண்மையும் கொண்டு வாழும் சமுதாயம் மிக்கிருந்தது என்பதும் புலனாகும்.

---

1. புறநானூறு
2, 3, 4 – திருக்குறள்

சிவனருளாய்ச் செழித்து வாழி

மகாதேவன் மலரடியே சிந்தித்த மகாதேவ
முருகப்பர் மகனாய்க்கோ நகரில் தோன்றிச்
சிகாமணியாய்ச் சிவப்பணிசெய் வயிநாக ராமகுல
வேங்கடா சலனார்தம் மகனா யோங்கி
யுகாதிபர சிவனைவழி படுகின்ற செல்வத்தை
ஈசான குருவருளால் அன்பர்க் கீயும்
சிகாமணியே தத்புருஷ தேசிகச்சீர் வள்ளலே
சிவனருளாய்ப் பல்லாண்டு செழித்து வாழி.

- சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்,
காரைக்குடி.

ஸ்ரீ-ல-ஸ்ரீ தத்புருஷ தேசிகரின் சேவை

பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை

'நாமார்க்குங் குடியல்லோம்' என்ற முறையில் நாவலர் பெருமான் வெளியிட்ட கருத்தொன்றை, இந்தச்சந்தர்ப்பத்தில் வாசித்துக்காட்ட விரும்புகிறேன். அது பின்வருமாறு:

''நம் மன்பர்களே! நெடுங்கால அநுபவத்தால் அறிந்த உண்மைகளைத் தேசாபிமானத்தினுலும், சமயாபிமானத்தினுலும் உங்களுக்கு வெளிப்படுத்திய நம்மை உங்களுக்குப் பகைவரெனக் கொண்டு தூஷித்துத் திரியாது, மேலே பேசப்பட்ட குறைபாடுகளை விரைவில் அகற்றி, உங்கள் இகபர லாபங்களை அடையும்படி முயலக்கடவீர். நம்மை நீங்கள் எப்படித் தூஷிக்கினும் உங்களுக்கு நன்மையாக முடிபவைகளை உங்களுக்கு வெளிப்படுத்துதற்கு நாம் சிறிதுந் தடைப்படாவண்ணஞ் சிவபெருமான் திருவருள் செய்க. பொதுவாகப் பலருக்கும் நன்மைகளைச் சொன்னேம். திருந்த விருப்பமுடையவர் திருந்தட்டும். திருந்த விருப்பமில்லாதவர் தமக்குப் பயன் படாதாயினும் பிறர் சிலருக்காயினும் பயன் படலாமே என்றெண்ணி வாய் மூடிக் கொண்டிருக்கட்டும். நாங்கள் எப்படி நடக்கினும் நடப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்பார்க்கு, நாம் எப்படிக் கண்டிப்பினுங் கண்டிப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்போம். பிறர் செய்யும் அநீதிகளைக் கண்டித்தற்கு நீர் யார்! கடவுளோ, அரசரோ என்பார்க்கு, கடவுள் கட்டளைக்கும், அரசர் கட்டளைக்கும் மாருகவே பிறர் செய்யும் அநீதிகளை, அக்கட்டளைகட்கு அமைந்து கண்டித்தலாகிய நமது நீதியைக் கண்டித்தற்கு நீர் யாரோ சற்றே பேசும் என்போம். ஆகா! பல மனிதராலும் பகைக்கப்பட்டீர் இனிக் கெட்டீர் என்பார்க்கு, ஓகோ! கடவுளுக்கு அஞ்சும் அச்சம் பெருகப் பெருக மனிதருக்கு அஞ்சும் அச்சம் குன்றிக் குன்றிவிடும் என்பதறியீர் போலும் என்போம். எவ்விதத்தானும் வாயெடுக்க ஒட்டேம் ஒட்டேம்''.

இந்த வீரம் வீறிட்டெழுகின்ற வார்த்தைகள் அமைந்த பகுதி, இற்றைக்கு ஏறக்குறைய நூருண்டுகளுக்கு முன், நாவலர் பெருமான் எழுதி வெளியிட்ட 'யாழ்ப்பாணச்

[10-7-68 புதன்கிழமை இரவு 7 மணியளவில் சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களுக்கு நடாத்தப்பட்ட பிரியாவிடைக் கூட்டத்தில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் நிகழ்த்திய பாராட்டுரை.]

சமயநிலை' என்ற துண்டுப் புத்தகத்தில் வருகின்றது.

அன்று யாழ்ப்பாணத்தை மூடிய கிறிஸ்தவ இருளைப் போக்கி, சைவமக்களைத் துயிலெடை செய்தற்கு நாவலர் பெருமான் பெருமுயற்சிகள் செய்து அருளினர்.

இன்று பல்வேறுவகையில் சைவத்துக்குத் தாக்கங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. நாவலர் பெருமானிருந்தால், அவரது முயற்சிகள் பல்வேறு வகையில் அமைவதோடமையாமல், 'ஈழநாட்டுச் சமயநிலை' என்று ஒரு புத்தகமும் வெளிவந்திருக்கும். இவ்வாறுயதொரு நிலை கைகூடாத பொழுதும், நாவலர் பெருமானின் ஆத்மசக்தி ஸ்ரீ-ல-ஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களை, சைவபரிபாலன சபையின் மூலம் இந்த நாட்டுக்கு உபகரித்திருக்கின்றது.

தேசிகர் அவர்கள் நாவலர் பெருமான் அவதரித்த யாழ்ப்பாணத்தை இராசதானியாக்கி, ஈழநாட்டின் முக்கிய இடங்களுக்குத் திக்குவிஜயஞ் செய்து பிறழ்வு நெறிகளை அஞ்சாது தலைநிமிர்ந்து கண்டனங்கள் செய்து, சைவத்தனியரசை நாட்ட நன்முயற்சிகள் செய்திருக்கிறார்கள். மூன்றுமாச காலம் அவர்களது நன்முயற்சி நடந்திருக்கின்றது.

உபந்நியாசத்தினாலும், தீட்சையினாலும், சித்தாந்த வகுப்பாலும் தேசிகர் அவர்கள் இந்த நூற்றாண்டில் இங்கே செய்த சேவை, சைவசமய சரித்திரத்தில் என்றும் நிலவுவதாயிருக்கும்.

சீர்திருத்தக்காரர்கள் எதைப் பிறழ்வு என்று கருதுகின்றார்களோ, அது எந்த மூலதத்துவத்தின் பிறழ்வு என்று அறியாத வழி, அவர்கள் செய்யுந் திருத்தமும் பிறழ்வுகளில் ஒன்றாய் விடும் என்பது தத்துவஞானி ஒருவரின் கருத்து.

தேசிகர் அவர்கள் போதிக்குந் திருத்தங்கள், மூலதத்துவத்தை உணர்ந்து அதற்கு மாறின்றி இருப்பவைகள்; ஞானிகளுக்கும் ஞான சாத்திரங்களுக்கும் உடன்பாடானவைகள்.

இவ்வாற்றால் தேசிகர் அவர்கள் நமது நாட்டுக்கு என்றும் இன்றியமையாதவர்கள். அவர்களுக்குப் பிரியாவிடை அளிப்பது புத்தியாகாது.

பிரிவைப் பாலை என்று சொல்லுவது பொருளிலக்கண வழக்கு. பிரிந்து சென்றார் வரவைக் காத்திருப்பது முல்லை எனப்படும். இப்பிரியாவிடை முல்லையாய் அமையவேண்டும்.

ஆடுஉக்களிலும், மகடூஉக்களிலும் விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலராவது, சிவஞானபோதத்தில் எட்டாஞ் சூத்திரத்தில் வரும்,

"தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த"

என்ற தொடரின் பொருளைச் சிந்தித்துத் தெளிந்து, சாதகநிலை தலைக்கூடுவராயின், தேசிகர் அவர்கள் நாம் நினைக்கும் போதெல்லாம் நமக்குத் தரிசனம் அளித்து நல்லுபதேசம் செய்துவைப்பார்கள்; நாவலர் பெருமானுக்கு நாட்டுஞ்சிலை வாய் திறந்து பேசுவதாயுமிருக்கும்.

— இந்துசாதனம் (12-7-68)

ஸ்ரீலஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம்

குருவே, வணக்கம்.

'யாழ்ப்பாண மண்ணிலே ஒரு நல்ல வித்தை நம்பி வித்துதல் செய்யலாம்; என்றாயினும் ஒரு காலத்தில் அவ்வித்து முளைகொண்டு வளர்ந்து விளைவு தரும்' என்று பெரியார் ஒருவர் கூறிய வாக்கொன்றுண்டு.

யாழ்ப்பாண மண்ணின் அடித்தளத்தில் நல்லதோரூற்று இருக்கின்றது; அது கந்தபுராண ஊற்று. அந்த ஊற்றைப் பகிரங்க யாழ்ப்பாணத்திற் காணமுடியாதாயினும் கிராமங்களாகிய அந்தரங்க யாழ்ப்பாணத்திலே அதனைக் கண்ணிறையக் காணலாம். கந்தபுராணம் என்னும் நித்திய கன்னிகையின் புக்ககம் யாழ்ப்பாணம்.

ஒரு காலத்திலே கிறிஸ்தவ சண்டமாருதம் சவிமடியும் பொருட்டு, தன் ஏகபுத்திரனை அந்த நித்திய கன்னிகை நமக்கு அருளினள். அந்த நித்திய கன்னிகை ஒவ்வொரு தாய் தந்தையின் உதிரத்திலுங் கலந்திருக்கின்றாள். அன்று அவள் அருளிய ஏகபுத்திரர் ஆறுமுகநாவலர் பெருமானே யாவர்.

இன்று ஏகான்ம வாதமாகிய மாயாவாத சண்டமாருதம், வேதாந்தம் என்ற பெருமைவாய்ந்த பெயரைத் தரித்துக் கொண்டு, முன்னொரு காலத்திலே பௌத்தத்தைப் புறங்கண்டது, இக்காலத்திலே அதனோடு தோழமை பூண்டு, தோளோடு தோளிணைந்து, பருமரங்களை யெல்லாம் முறிவு செய்து, வெகு வேகமாக எங்கும் பரவி வருகின்றது. சினிமா நிலையங்களும், கல்வித்தானங்களும், புதிய சிருட்டிகளான பத்திரிகைகள் புத்தகங்கள் என்பவைகளும், இன்னோரன்ன பிறவும், உலகாயதக் கரங்களை நீட்டி, மாயாவாத மாருதத்தை வரவேற்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்திலே கடவுளுடைய பெருங்கருணை தங்களிடமாக எங்களுக்கு வெளிப்பட்டிருக்கிறது.

சிவஞான சித்தியார் என்கின்ற தெய்வீக சிந்தாமணியை மாயாவாதம் என்கின்ற பாசி படருகின்ற யாழ்ப்பாணக் குட்டத்திற் போகட்டிருக்கின்றீர்கள். சைவ சித்தாந்தம் என்கின்ற ஞானச்சுடர் விளக்கைத் தூண்டி அதன் பிரகாசத்தை எமக்குச் சற்றே புலஞ் செய்திருக்கின்றீர்கள். கந்தபுராணக் கண்ணினாலே காணக் கூடியதாய் அது பிரகாசிக்கின்றது.

'நகரம்' என்ற சொல் எழுத்து நிலைமாறி 'நரகம்' ஆயிற்று என்பது ஒரு நவீன ஆராய்ச்சி. நகரம் தங்கள் அருமையை அறியாதிருப்பினும் கிராமங்கள் அறிய வல்லன. அவைகள் கந்தபுராண கிராமங்கள். அக்கிரா

மங்கள் தங்கள் வருகையை எத்தனை முறையுங் கரங்களை நீட்டி வரவேற்ற படியே இருக்கும்.

குருவே,

கிராமங்கள் வாயிலாக இந்த யாழ்ப்பாணத்திலே-நாவலர்பெருமான் அவதரித்த மண்ணிலே — சைவசித்தாந்தத் தனியரசை நாட்டுங்கள்.

'புத்தி' என்னும் அந்தக்கரணம் தங்கள் உபநியாச உபதேசத்தினுலே தெளிவு அடைவதாகுக.

'அகங்காரம்' என்னும் அந்தக்கரணம், தங்கள் தீக்ஷையினுலே பக்குவம் எய்தி 'மானம்' என்கின்ற அருமந்த மணியைப் பேணுவதாகுக.

'உபதேசம்' 'தீக்ஷை' இரண்டும் ஒருங்கு கைகூடுவதற்கு, 'மனம்' என்னும் அந்தக்கரணம், மாசு நீங்கித் தவம் புரிவதாகுக. தவத்தைப் பெருக்கும் ஔஷதமாகக் 'கந்தபுராணம்' திகழுக.

திரிகரணங்களையும் ஓம்படை செய்து தங்களைப் பிரார்த்திப்போமாக. சைவ சித்தாந்த கற்பகதருவை யாழ்ப்பாணத்தில் நாட்டி, வருடந்தோறுஞ் சமூகஞ் செய்து, அன்புநீர் பாய்ச்சி அதனை வளர்த்தருளுதலை வேண்டுகின்ருேம்.

வணக்கம்.
சித்தியார் வகுப்புக்காக,
சி. க.

நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை
யாழ்ப்பாணம்.

நன்றி. "இந்துசாதனம்"

மணிவிழாச் செல்வரிடம்
21-8-74 வரை
தீட்சை பெற்றவர் எண்ணிக்கை

ஆசாரியாபிடேகம்	—	1
சாதகாபிடேகம்	—	2
நிருவாண தீட்சை	—	31
விசேட தீட்சை	—	134
சமய தீட்சை	—	1415

மணிவிழாச் செல்வரைப் பற்றி ஒரு விஞ்ஞாபனம்!

பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள்

யாழ்ப்பாணத்தில் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையிலே, நாடோறும் மாலை ஐந்து மணி தொடக்கம் சைவ சித்தாந்த வகுப்பொன்று நடந்து வருகிறது. தேசிகர் அவர்கள் நடத்தி வருகின்றார்கள். அமிர்த பொக்கிஷமான சித்தியார் பாடம் நடக்கிறது.

நாவலர் வித்தியாசாலையோடு ஐம்பது வருஷத்துக்கு மேற்பட்ட தொடர்பு எனக்குண்டு. 1917 கார்த்திகை தொடக்கம் 1927 புரட்டாசி வரை மேற்படி வித்தியா சாலையிலேயே வசித்து வந்தேன். மேலும் 1938 வரை நெருங்கிய தொடர்பு இருந்தது.

சைவ சித்தாந்தப் பேரறிஞரான சபாரத்தின முதலியார் அவர்கள் முதிர்ந்த பட்டதாரிகளுக்குச் சைவ சித்தாந்த பாடம் நடத்தியதும், சைவ சித்தாந்த சமாஜம் வருடந்தோறும் நடந்து வந்ததும் நான் கண் குளிரக் கண்டவை.

அங்கே நடந்த, நடக்கின்ற வைபவங்களுள், நாவலர் பெருமான் சாந்தி எய்தி மனப்பூர்வமாக ஆசி வழங்குவதொரு வைபவம் உண்டே யானால், அது தேசிகர் அவர்கள் மேற்கண்ட வகுப்பை மரபுநெறி பிறழாது நடத்தும் வைபவமாயே இருக்கும் என்பதை எனது எழுபதாம் வயசில் தெட்டத்தெளியத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மகான் செந்திநாதையர் நாவலர் வித்தியாசாலையில் எட்டு வருஷம் தலைமை உபாத்தியாயராயிருந்தவர்; நாவலர் செய்த பிரசங்கங்களை எழுத்துத் தவறாமல் எழுதிக் கொண்டவர். அவருடைய பெயரை ஈசான சிவாசாரியார் அவர்கள் உச்சரிக்கும் போது நாத்தழுதழுப்பதையும் கண் கலங்குவதையும் நாம் பலமுறை நேரே கண்டிருக்கின்றோம். அப்படிப் பட்ட சிவாசாரிய சுவாமிகளிடம் முறையாகப் படித்துத் தீக்ஷைகளும் ஆசாரியாபிடேகமும் பெற்றவர்கள் தேசிகர் அவர்கள். ஞானப் பிரகாச ருக்குப் பிறகு, தாய்நாட்டுக்குச் சென்று அரும்பெருந் துறவிகளாய், சைவசித்தாந்த அநுபவ ஞானிகளாய் ஒழுக்க சீலர்களாய் விளங்கியவர்கள் இருவர். ஒருவர் இலக்கணம் சுவாமி; வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர். மற்றையவர் செப்பறைச் சுவாமி; வரணியை அடுத்த மந்துவிலைச் சேர்ந்தவர். இருவர் சுவாமிகளோடும் நெருங்கிய தொடர்பு படைத்தவர்கள் தேசிகர் அவர்கள். தேசிகர் வழி, நாவலர் வழி. தேசிகர் ஞான பரம் பரையால் நமது யாழ்ப்பாணத்தவரே யாவர்.

சைவ சித்தாந்தச் செல்வரான சொக்கலிங்கச் செட்டியார் நாவலரின்

உத்தமோத்தம சீடர். அவர் சீடர் தேசிகர் என்பதும் நினைவு கூரற்பாலது.

நாவலர் வித்தியாசாலையில் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் தலைமையில் சிறந்ததொரு காவிய வகுப்பு நடந்து வந்தது. அவ் வகுப்பின் கடைமாணவன் நான். 1922-ல் புலவர் அவர்கள் மறையக் காவிய வகுப்பு ஒடுங்கியது. நான் கலங்கவிழ்ந்த நாய்கன் ஆயினேன். என்னிலைமைக் கிரங்கிப் புலவர் அவர்களின் இடத்துக்கு வித்துவான் ந. சுப்பையாபிள்ளை நியமிக்கப் பட்டார். அவர் சேனுவரையம் முதலிய கடின இலக்கணங்களையும் தருக்க சங்கிரகம் அன்னம்பட்டீயத்தையும் எனக்குப் பாடஞ் சொன்னுர். பரீட்சையிற் சித்தி எய்தினேன். அது நிற்க.

வித்துவான் அவர்கள் சிதம்பரம் நாவலர் வித்தியாசாலையில் முறையாகத் தமிழும் சமஸ்கிருதமுங் கற்றவர். இங்கே நூற்றுக் கணக்கில் பண்டிதர்களை உற்பத்தி செய்தவர். வித்துவ சிரோமணி கணேசையர் அவர்கள் இலக்கண விஷயங்களில் வித்துவான் அவர்களின் கருத்தை அறிவதுண்டு. இப்படிப்பட்ட வித்துவான் அவர்கள், தேசிகர் அவர்களின் சித்தியார் வகுப்பில், வெகு சிரத்தையுடன் கலந்து கொள்வதைக் கண்டதும் எனக்கு உள்ளங் காலிலிருந்து உச்சிவரை குளிர்ந்தது. ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்லறிவு படைத்த பெண்மணிகள் பலர் வகுப்பில் தவருது பங்குபற்றுகின்றுர்கள். இதற்கு மேலே வகுப்பின் இன்றியமையாமையையும் பாடஞ் சொல்லுந் திறமையையும் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. தேசிகர் அவர்களின் வருகை யாழ்ப்பாணத்தின் வரப்பிரசாதம்.

நாவலருக்கு ஒன்று செய்ய வேண்டும் என்பவர்களும், சைவ அபிமானிகளும், சைவ சமய பாடங் கற்பிக்கும் ஆசிரியர்களும், பண்டிதர்களும் இவ்வகுப்பிற் பங்குபற்றி இதனை நிலைபெறச் செய்யக் கடவர்கள்.

சித்தியாருக்குப் பின் இருபா இருபஃது நடக்க வேண்டுமென்பது எனது அவா. பதினுன்கு சாத்திரங்களையும், சிவஞான பாடியத்தையும், திருமந்திரம் உள்ளிட்ட திருமுறைகளையும் தேசிகர் அவர்கள் தொடர்ந்து நடத்துவதற்கு, யாழ்ப்பாணத்துச் சைவமக்கள் முன் வந்து ஆவன செய்ய வேண்டும். அதுவே நாவலர் பெருமானுக்குச் செய்யும் நன்றிக் கடனுகும்.

தொடர்ந்து சிலகாலம் தேசிகர் அவர்கள் இங்கே வசிக்க உடன்படுவார்களாயின், உடன்படச் செய்ய முடியுமாயின், 'மிண்டிய மாயாவாதமென்னுஞ் சண்டமாருதம்' மலய மாருதமாய் மாறும்; 'உலகாயதன் எனும் ஒண்டிறற் பாம்பின் கலா பேதத்த கடுவிடம்' நீலகண்டத்தைச் சேரும்.

'இது நல்ல சமயம்! இனி வாய்க்காது சமயம்!' என்பது நாவலர் பெருமானின் வாக்கு.


— நன்றி. "இந்துசாதனம்"




மலேசியாவில் வரவேற்பு
(பினாங்கு கப்பல் துறையில்)



மலேசியாவில் பிரியாவிடை
(கப்பலினுள்)



வியட்நாம் செய்கோனில் பாராட்டு விழா




இலங்கையில் பிரியா விடை
(விமான நிலையத்தில்)

வடநாட்டு யாத்திரையில்



யாத்திரைக் குழுவினர்




ஸ்ரீ காசி விசுவேசருக்கு
நம் மணிவிழாச் செல்வர்
வழிபாடு ஆற்றுதல்



கம்போடியா நாட்டில்
அங்கோர்வாட் சிவாலயத்தின் முன்




அங்கோர் வாட்டில் உள்ள
கற்பகப் பிள்ளையாருடன்



இரங்கூனில்
வரவேற்பு
(விமான
நிலையத்தில்)



பர்மா, கம்பையில்
மணிவிழாச்
செல்வருக்கு
வரவேற்பு



கோலாலம்பூரில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து
கும்பாபிடேகம் செய்தல்.

*நம்பனின் அருளினில் வாழி!

வித்துவான் க. சொக்கலிங்கம், பி. ஏ.
(தலைவர், நாயன்மார்கட்டு, சைவ அபிவிருத்திக் கழகம்,
யாழ்ப்பாணம், இலங்கை).

அரியதா மனிதப் பிறவியை யடைந்தார்
அவலமா மாணவ முனைப்பை
இரியவே முயல லிலக்கெனக் கொள்ளா
திகத்தினிற் பற்றுமிக் குற்றுத்
திரியவுங் கண்டு கருணையா லவரின்
தீநெறி விலக்குதல் குறித்த
பெரியவர் சிலருட் பிறங்கிய புகழோய்!
பேசுதத் புருடதே சிகனே!

அஞ்சுதல் அறியாய், கெஞ்சுதல் தெரியாய்
அமலனின் செம்மலர் நோன்ருள்
தஞ்சமே யாகத் தானெனு முனைப்பைத்
தடுத்திடு முயற்சிமேற் கொள்வாய்
விஞ்சிடு ஞான விளக்கினை யேற்றி
வெந்துயர்ப் பாசமா மிருளைக்
கொஞ்சமே யாக வலிகெடுத் திடுவை
குலவுதத் புருடதே சிகனே!

சதுர்மறை தம்மோ டாகம மற்றுஞ்
சாற்றுபன் னிருதிரு முறைகள்
பதியுணர் பதினுன் காகிய மெய்ந்நூல்
பரவுசாத் திரபுரா ணங்கள்
கதியளித் திடுபத் ததிகளோ டரிய
கனிச்சுவைப் பிரபந்த மனைத்தும்
விதியுறக் கற்றே யுணர்வுமிக் குள்ளாய்.
மேதைதத் புருடதே சிகனே!

---

* மணிவிழாச் செல்வர் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் 68-ஆம் ஆண்டுவிழாத் தலைமை ஏற்றபோது வாழ்த்திய வாழ்த்து.

புறப்புறச் சமயம் புறத்தொடே யகமாம்
 புலனுணர் வற்றமார்க் கங்கள்
அறப்பெருந் தடையா மநாதியை யடைய
 வானவை யல்லவென் றுணர்ந்தே
சிறப்புறச் சைவ சித்தாந்த நெறியின்
 செம்மைக ளுணர்ந்துயர் வுற்றுய்
உறப்பெரும் புகழி னுயர்ந்திடு குரிசில்!
 ஓங்குதத் புருடதே சிகனே!

கதித்திடு மிளமைக் காலத்திற் கவிதை
 கண்டென வினித்திட யாத்து
விதித்திடு மிறையி னருளினு லோங்கி
 மிகுபுகழ் பெற்றநற் புலவ!
உதித்திடு 'பால கவி'யெனச் சான்ரு
 ருளங்கொளுந் தகைமையா லன்ஞேர்
மதித்திடு நிலையிற் பிறங்கிடு மண்ணுல்!
 வாழுந்தத் புருடதே சிகனே!

அறிவிலா மாக்க ளாசையுட் பட்டே
 யந்நிய மதத்தின ராகிக்
குறைவுறல் கண்டு கொதித்தெழுந் துண்மை
 கூறியே நன்னெறி யுய்த்த
இறையருள் ஞான நாவலன் றன்னை
 இதயத்தே யிருத்தினை யவனின்
நெறிமுறை யொழுகி நிதநிதம் புகழி
 னீடுதத் புருடதே சிகனே!

எண்பதிற் ருண்டின் மேலதா யெங்க
 ளீழத்திற் சைவநன் னெறியைக்
கண்ணெனப் போற்றிப் பாலனஞ் செய்து
 கதியினைக் காட்டிடுஞ் சிறந்த

பண்புறுஞ் சைவ பரிபாலன சபையார்
பாங்குற வறுபதெட் டாண்டி
லெண்ணுற வெடுத்த மாநாட்டுத் தலைவ!
இலகுதத் புருடதே சிகனே!

சற்குரு மணியாய் நல்லைநா வலரைச்
சால்புற வேற்றசொக் கலிங்க
விற்பனன் றன்னைக் குருவெனக் கொண்ட
மேன்மையோய்! செப்பறைச் சுவாமி
மற்றுமிவ் விழத் திலக்கண சுவாமி
மதிவல ரிருவரு மன்புச்
சுற்றமே யாகச் சிவகதி யுணர்ந்தோய்!
தூயதத் புருடதே சிகனே!

நாவலர் சைவ வித்தியா சாலை
நயனுற வொழுங்குசெய் வகுப்பிற்
சீவனை மலத்தைச் சிவத்தினை விரிக்குஞ்
சித்தியார் நூலினை விளக்கி
யாவலா யிழச் சைவர்கள் கேட்க
வரியநல் லறிவுரை வழங்கி
நாவலர் சைவ மரபினைப் பேணும்
நல்லதத் புருடதே சிகனே!

இத்துணைச் சிறப்பு மித்துணைத் திறனு
மித்துணை ஞானமு மொருங்கே
யெத்துணைப் பிறப்பை யெய்தியு மடைதற்
கியலுமோ எனவயிர்த் திடுவோம்
அத்துணைப் பெருமை யமைந்திடு முன்னை
யகத்தினில் வணங்கியே யாங்கள்
நற்றுணை யாக நயந்தனங் குருவே!
நம்பனி னருளினில் வாழி!

வாழ்க பாலகவி

சு. நடராஜன் (நடனம்), பினங்கு, மலேசியா.

தேவகோட்டையில் 1958-ல் நடைபெற்ற கந்தர்சஷ்டி விழாவிற்குச் சென்றிருந்தேன். அவ்விழாவில் ஒரு நாள் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் "கந்தன் கருணை" எனும் தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினர்கள். அன்றையப் பேச்சின் ஒரு கட்டத்தில், பாலகவி அவர்களைப் பற்றி வாரியார் சுவாமிகள் பின்வருமாறு பாராட்டியது, இன்னும் என் நினைவில் பசுமையாய் இருக்கிறது.

"இவ்வூரில் (தேவகோட்டையில்) எனக்கு பல அன்பர்கள் உண்டு. அவர்களிடையே குறிப்பிடத்தக்கவர்களில் பாலகவியும் ஒருவர். இவர்கள், கவிதாசக்தியில் முதிய நிலையில் பிரகாசிப்பவர்கள்; பாவலர்; நாவலர். சிவானுட்டானங்களைத் தவருமல் கடைப்பிடிப்பதில் உறுதி உள்ளம் படைத்தவர்கள். மேலும், சைவ நூல்களையும், தமிழ் இலக்கண இலக்கியங்களையும் முறையாய் ஓதி உணர்ந்து அறிந்தவர்கள். ஈசான சிவாச்சாரிய சுவாமிகளிடம் நான்கு சிவதீக்ஷைகளும் ஆசாரிய அபிடேகமும் பெற்று அன்பர்களுக்கு சிவபூசை நிருவாண தீட்சை எழுந்தருள்விப்பவர்கள். இந்த கந்தசஷ்டி விழாவை அவர்கள் முன்னின்று நடத்துவது பாராட்டிற்குரியது. மேற்காணும் கருத்துப்படக் கூறினர்கள்.

பாலகவி அவர்கள் 1960-ல் மலேயாவுக்கு வருகை தந்திருந்த போது, நான் அவர்களைக் கோலாலம்பூரிலும், குவாந்தானிலும் சந்தித்தேன்;

அவர்களது அறவுரைகளைச் செவி மடுத்து இன்புற்றேன். குவாந்தானில் இரண்டு மூன்று தினங்கள் தங்கியிருந் தார்கள். நான் அப்போது குவாந் தானுக்குச் சென்றிருந்தேன். அங்கு, அவர்களது நிகழ்ச்சிகள் அனைத்திலும் நான் கலந்து கொண்டேன். அவ்வூர் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில், பல அன்பர்களுக்குச் சமயதீக்கை அளித் தார்கள். நானும் அவர்களிடம் அங்குச் சமயதீக்கை பெற்றுக் கொண்டேன்.

குவாந்தானுக்கு மேற்கே சுமார் 67 மைல் தொலைவில் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் என்னும் காட்டுக் கோயில் ஒன்றிருக்கிறது. அது அமைதியான சூழ்நிலையில் இருந்து வருகிறது. அங்கே ஒரு புராதனமான மரத்தடி யில் வேலை வைத்துப் பூசை செய் கிருர்கள். வேலுடன் முருகன் விக்கிரகம் ஒன்றும் வைத்துப் பூசிக்கப் படுகிறது. நாள்தோறும் ஏராளமான மக்கள் வந்து மரத்தாண்டவரை வணங்கிச் செல்கின்றனர்.

அந்தக் கோயிலின் தலைமைத்தரும கருத்தா, பாலகவி அவர்களை அவ் வாலயத்திற்கு அழைத்துச் சென்று, சுவாமி தரிசனம் செய்து வைத்தார்; ஸ்ரீ மரத்தாண்டவர் விஷயமாய் ஒரு பதிகம் பாடித்தர வேணும் என்று அவர் இவர்களிடம் வேண்டிக் கொண் டார். பாலகவி அவர்கள் அவ் வேண்டுகோளை மகிழ்வுடன் ஏற்று, "ஸ்ரீ மரத்தாண்டவர் பதிகம்" பாடி அளித்தார்கள். அப் பதிகம் நூலாய் வெளிவந்து, ஆலயத்தாரால் விற்கப் படுகிறது.

1969-ல் மறுமுறை பாலகவி அவர்கள் மலாயாவுக்கு வருகைதந்து பல சொற்பொழிவுகள் ஆற்றியதோடு பலருக்குச் சிவதீக்கைகளும் செய்து வைத்தார்கள். இவர்கள் பல நூல்களை ஆக்கி, வெளியிட்டுள்ளார்கள்.

பாலகவி அவர்கள், கோலாலம் பூருக்கு இருமுறை விஜயம் செய் திருந்தபோதும், அங்குள்ள விவேகானந்த ஆச்ரமத்தில் தொடர்ந்து "சித்தாந்த வகுப்புகள்" நடத்தினுர்கள். சித்தாந்தப் பாடஞ் சொல்லுவதிலும், ஆழ்ந்த சித்தாந்தக் கருத்துக்களை தெளிவோடு எடுத்து விளக்குவதிலும், அவர்களுக்கு இயல் பாய் அமைந்திருந்த ஆற்றலையும் புலமையையும் கண்டு நான் வியந்த துண்டு. பலர் அவர்களது சித்தாந்த வகுப்புகளுக்கு வந்து பாடங்கேட் டனர்; இறுதியில் அவர்களுக்குப் பாராட்டு விழாவும் நடத்திச்சிறப்பித் தனர்.

பாலகவி, பல சைவமடங்களுடன் தொடர்புடையவர்கள். இலங்கையில் யாழ்நகரில் நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு சித்தாந்த மாநாடு ஒன்றில் தலைமைதாங்கினுர்கள். அப்போது யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் பல விரிவுரைகள் ஆற்றினுர்கள்; பலருக்குத் தீக்ஷையும் செய்வித் தார்கள். செய்கோன், பர்மா, சிங்கப் பூர் ஆகிய நாடுகளுக்கெல்லாம் சென்று, சித்தாந்தப் பிரச்சாரம் செய் துள்ளார்கள்.

இவர்கட்கு 60-ஆண்டு நிறைவை அறிந்து, பெரிதும் மகிழ்ந்து நான் பாராட்டுகிறேன். பாலகவி அவர் களும், அன்னுரது குடும்பமும், சிவ பெருமான் திருவருளால், எல்லா நலன் களும் எய்தி, இனிது வாழ்வாங்கு வாழ அவ்விறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஞானசிரியர் பல்லாண்டு வாழ்க.

அகோரதேவநாம
அரு. மு. மு. அருணுசலம் செட்டியார்,
காரைக்குடி.

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க, ஆதீனங்களில் புலவராக வீற்றிருந்தும், சைவம் வளர்க்கும் சங்கங்களில் தலைமைப் பொறுப்பேற்றும், பல ஊர்களில் சாத்திர வகுப்புக்கள் நடத்தியும், அரிய நூல்களைப் பதிப்பித்தும், தாமே நன்னூல்கள் எழுதியும் தேன்மழையெனச் சொல்விருந்து ஆற்றியும் உயர் பணிகள் பலவும் புரிந்து வருகின்றார். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களில் புலமை நலம் சான்றவர். வடமொழியும் கற்றவர். காரைக்குடி சைவ சித்தாந்தச் செல்வர், சிவஸ்ரீ சொக்கலிங்க ஐயா அவர்களிடமும், கொரடாச்சேரி சிவஸ்ரீ வாலையானந்த சுவாமிகளிடமும் சைவ சித்தாந்த சாத்திரம் கேட்டவர். பன்னிரு திருமுறைகளைப் பல்காலும் ஓதியுணர்ந்தவர். பழனி, சைவ சித்தாந்த சரபம், சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்களிடம் சைவ சாத்திரம் கேட்டும், சமய, விசேட, நிருவாண தீட்சைகளும், ஆசாரிய அபிடேகமும் பெற்றும், இந்தியாவிலும வெளிநாடுகளிலும் 1500 க்கும் மேற்பட்ட அன்பர்களுக்குத் தீட்சையும் சிவ பூசைப் பேறும் நல்கியுள்ளார். தேவகோட்டைச் சிவாகம பரிபாலன சங்கத்திற்குப் பல்லாண்டு காலமாகத் தலைவராக இருந்து வருகின்றார். அச்சங்கம் பதிப்பித்த அரிய சிவாகமங்களையும், சித்தாந்த நூல்களையும் பாதுகாத்து அன்பர்க்கு வழங்கி வருகின்றார். அறுபதாண்டு நிறைவு, கோயில் குடமுழுக்கு முதலிய விழாக்களைச் சிவாகம விதிப்படி முன்னின்று நடத்திவருகின்றார்.

இளமையிலேயே கல்வித் திறனும் கவிதை புனையும் ஆற்றலும் கைவரப் பெற்றுப் 'பாலகவி' என்று சிறப்பிக்கப் பெற்றார். இத்தகைய சிவஞானப் பேராசிரியரைத் தமிழகத்திற்கு அளித்த குடும்பம் பெருஞ்சிவபுண்ணியஞ் செய்த குடும்பம் ஆகும். அதுவே அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பம். நகரத்தார்களில் முதன்முதலாகத்

திருக்கோயில் திருப்பணி செய்தவர்கள் அக்குடும்பத்தில் தோன்றிய சிவத்திரு நாகப்ப செட்டியார் அவர்களே. அவர்களும் இளவல் வேங்கடாசலம் செட்டியார் அவர்களும் அவர்களின் வழித் தோன்றல்களும் பலகோடி ரூபாய் செலவிட்டுத் திருக்கோயில் திருப்பணிகளும் வேதபாடசாலை, சத்திரம், நந்தவனம் ஆகிய திருப்பணிகளும் செய்துள்ளமை தமிழகச் சமய வரலாற்றில் சிறப்பிடம் பெறுபவையாகும். மதுரையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரருக்குக் கலியாண மண்டபம் முதலிய தருமங்கள் செய்து, பலமுறை எழுப்ப முயன்றும், இயலாமல் இருந்த மொட்டைக் கோபுரத்தை நிறைவு செய்யும் பணியை நாகப்ப செட்டியார் தொடங்கிவைத்து, அவர்தம் இளவல் வேங்கடாசலம் செட்டியார் கட்டி முடித்தமை உலகறிந்த செய்தியாகும்.

நாகப்பனுருக்கு ஸ்ரீ மீனாட்சியம்மை காட்சியளித்திருக்கின்ருர். ஒருமுறை அவர் அமராவதி புதூரிலிருந்து மதுரைக்கு வண்டியில் வந்தபோது இரவு நேரத்தில், மதுரையின் அருகே உள்ள ஊரில் தங்கினுர். உணவுகொள்ளாமல் ஸ்ரீ மீனாட்சியம்மையைச்சிந்தித்தவாறு கண்ணயர்ந்தார். அம்பிகை அவருக்கு அர்த்தசாம தரிசனம் நல்கி, பிரசாதம் உண்ணும்படி கூறினுர். அவர் கண்விழித்தார். தாம்பாளம் நிறையப் பிரசாதம் வந்திருந்தது. தாமும் உண்டு உடனிருந்தவர்களுக்கும் வழங்கினுர். மதுரை சேர்ந்து தாம்பாளத்தைக் கோயிலுக்கு அனுப்பினுர். இதற்கு இடையில் அதனைக் காணவில்லை என்று விசாரித்துக் கொண்டிருந்த அதிகாரிகள், நடந்ததை அறிந்து நாகப்பசெட்டியார் அவர்களிடம் பெருமதிப்பும் பக்தியும் கொண்டு பழகினுர்கள். அம்மையின் அருள்பெற்ற நாகப்பனுரின் நற் குடும்பத்தில், இன்று நம் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர், பன்னூறு அன்பர்கள் சிவ வழிபாடு செய்து அருளுக்கு ஆளாம் வண்ணம் தீக்கைப் பேறு அளித்து வருகின்ருர். நகரத்தார் குலத்தில் ஆசாரிய அபிடேகம் பெற்றுச் சிவாகம முறையில் பூசை எழுந்தருள்விக்கும் முதல் ஞானசிரியர் இவர்களே.

இஞ்ஞானசிரியருடன் நானும் என் மனைவியும் உள்ளிட்ட அன்பர்கள் 63 பேர் திருக்கேதார யாத்திரை செய்தது, மறக்கவியலாத அனுபவமாகும். ஐயா அவர்கள் ஸ்ரீ கேதார நாதரின் சந்நிதியில் 15 நிமிடங்களுக்கு மேல் ஒன்றி ஆனந்த வெள்ளத்தில் இருந்த காட்சி இன்றும் என் கண்களை விட்டு அகலவில்லை. எங்கள் யாத்திரை சிவபுண்ணிய யாத்திரையாக, அருளுரை, அறிவுரை ததும்பிய யாத்திரையாக அமையக் காரணராக இருந்த அவர்களுக்கு நாங்கள் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்ரேம்.

ஐயா அவர்களிடம் நான் நிருவாண தீட்சை பெற்று, வழிபாட்டில் அளவிலா ஆனந்தம் பெற்றுவருகின்றேன். தீட்சை செய்து வைப்பதில் அவர்க்கு நிகர் அவரே. சீடர்கட்கு எழும் ஐயங்களைத் திருமுறைச்சான்றும் அருமறைச் சான்றும் காட்டித் தெளிவிப்பது அவர்தம் சிறப்பியல்பு. அவரும் அவர்தம் மனைவியாரும், குடும்பத்தினரும் பல்லாண்டு வாழச் சிவபரம்பொருளை வந்தித்து வாழ்த்துகின்றேன்.

குருநாதர் தொடர்பு

● அ. கணபதி ஐயா

திருவருளே எல்லாவற்றையும் இயங்கச்செய்கின்றது. அத்திருவருள் நாட்டம் கருணையாற்பெற்ற பெரியோர்கள் அதனை நன்கறிந்து ஈடும் எடுப்புமில்லா இன்ப வெள்ளத்தில் திளைத்து இரவு பகலற்ற நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்கள் தாங்கள் பெற்ற பேற்றினை நம்மனோர் உணருமாறு தெய்வச்செந்தமிழ்ப் பாசுரங்களால் தெளிவித்துள்ளார்கள். திருவருள் நாட்டம்பெறாத எம்போன்ற மந்தப் பக்குவிகளும் ஒருவாற்றால் உணரவே செய்கிறார்கள். நம்பிக்கையே அதற்கு முக்கிய காரணமாகும்.

கொங்கு நாட்டில் சிறு கிராமத்தில் பெரு நிலக்கிழாரின் மகனாகத் தோன்றிய நான் இளமையிலேயே பெற்றோரை இழந்தேன். உடன் பிறந்தோரின் வஞ்சகச் செயலால் சொத்துக்களும் ஏமாற்றப்பட்டன. ஆகவே வீட்டைவிட்டுப் பதினைந்து வயதில் வெளியேறினேன். சில சாதுக்களின் உதவியால் கோவிலூர் மடத்தை அடைந்து அருள் மூர்த்தியாகிய மகாதேவ ஞானதேசிக சுவாமிகளின் திருவடிகளில் சரண்புகுந்தேன். அவர்களின் பெருங்கருணையால் வேதாந்த நூல்கள் சில கற்றேன். அதன்பிறகு தமிழ் இலக்கண இலக்கியங்கள் கற்க வேண்டுமென்ற அவாவினால் வானவர் விழையும் கோனகர் குறுகினேன்.

அங்கு நம் தத்புருஷ தேசிகர் தந்தையும் தருமப்பிரபுவும் தத்துவ ஞான வள்ளலும் இமைப்பொழுதும் இடைவிடாது மகாதேவனை மனத்திற் கொண்டு எந்தநேரமும் மகாதேவா மகாதேவா என்னும் நாமமே பயிலும் நாவினை உடையவரும் ஆகிய உத்தமரைக் கண்டேன். அவர்கள் கோநகர்ச் சிவன்கோவிலின் எதிரில் 'கற்பக விநாயக கலாசாலை' 'வாணி மந்திர புத்தகசாலை' "ஞான சம்பந்த நற்சபை" ஆகியவற்றை நிறுவி ஐந்து ஆசிரியர்களைக்கொண்டு தமிழ், ஆங்கிலம், வடமொழி, தேவாரம், சொற்பொழிவு பயிலல் ஆகியவற்றை மிகச்சிறப்பாக நடத்தி வந்தார்கள். நான் மகாதேவா அவர்களைக் கண்டு வணங்கியபோது அன்போடு "நீங்கள் யார்?" என்று வினவினார்கள். நான் உடனே என் பெயரைச் சொல்லிக் கோவிலூர் மடத்திலிருந்து வருகிறேன்;

தங்கள் கலாசாலையில் தமிழ் படிக்க விரும்புகிறேன்'' என்றேன். அவர்கள் கோவிலூர்ச் சுவாமிகளின் பெயர் என்ன? என்றுர்கள். நான் உடனே ''ஸ்ரீலஸ்ரீ மஹாதேவஞான தேசிக சுவாமிகள்'' என்று சொன்னேன். அவ்வளவில் நிறுத்தி வீட்டுக்கு அழைத்து வந்து உணவு உண்பித்துக் கலாசாலையில் சேர்த்து விட்டார்கள். அப்பொழுது நம் குருநாதருக்குப் பதினைன்கு வயதிருக்கலாம். பிரவேச பண்டிதத் தேர்வு முடித்துக் கலாசாலையை நடத்தி வரும் பொறுப்பேற்று நடத்தி வந்தார்கள். அவர்கள் பெரியவர்களிடம் பெருந்தன்மை காட்டியும் சிறுர்களோடு ஆடியும் வந்தார்கள். தனித்த முறையில் வீட்டில் தேவார ஆசிரியரிடம் பண்முறை பயின்று வந்தார்கள். என்மீது மிகவும் அன்புகாட்டுவார்கள். உணவு, உடை, உறையுள், புத்தகம் எல்லாம் தாராளமாக வழங்கியதோடு எங்கள் அன்னை சீதை ஆச்சி அவர்களால் தங்கள் மகனாகவும் ஆக்கி விட்டார்கள். என்னை அயலார் அன்னையிடம் இதுயார்? என்று கேட்டால் என் மகன் என்று அன்புத் திருவாக்கினுல் சொல்வார்கள். அவர்கள் அவ்வாறு கூறுவதற்கு முக்கிய காரணம் நம் ஆச்சார்ய மூர்த்தி அவர்களே ஆவார்கள். ஆகவே மகாதேவாவும் அன்னை அவர்களும் நம் குருநாதரும் முறையே தந்தையும் தாயும் உடன் பிறந்தாரும் ஆயினர்.

கோநகரில் கல்வி முடிந்ததும் திருவையாற்று அரசர் கல்லூரியில் வித்துவான் தேர்வுக்குக் கற்றுக் கொண்டிருந்தேன். பிறகு சில ஆண்டுகள் தலயாத்திரை செய்தேன். சில ஆண்டுகள் நோய்வாய்ப்பட்டுப் பிறகு குணமானபோது திரும்பவும் தேவகோட்டை சென்றேன். நம் ஆச்சாரிய மூர்த்திகளின் மேற்பார்வையில் நடந்த சைவப் பிரகாச வித்தியாசாலையில் தலைமை ஆசிரியனுக அமர்த்தினுர்கள். இரண்டொரு ஆண்டுகளில் தங்கள் சொந்தச்செலவில் எனக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். பிறகு மூன்றுண்டுகள் கழித்துத் தேவகோட்டையை விட்டுச் சிவகிரிக்கு அருகில் ஒரு கிராமத்தில் ஐந்து ஆண்டுகள் தனிப்பள்ளி வைத்து நடத்தினேன். முத்தூர்க்கிராமத்தில் அன்பர்களுக்குத் தேவாரம் பயிற்றி வந்தேன். அப்பொழுது நம் குருநாதர் சென்னிமலை ஸ்ரீஈசான சிவாச்சார்ய சுவாமிகளிடம் நிருவாண தீட்சை செய்துகொண்டார்கள். அந்தத் தீட்சை விழாவுக்குக் குடும்பத்துடன் சென்றிருந்தேன். பிறகு 1950ஆம் ஆண்டு கருவூர்நகர் மன்ற உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியனுக அமர்ந்தேன். கருவூர்த் திருவள்ளுவரகம் உயர்திரு. ராம. சண்முகானந்தா அவர்களுடன் நட்பு ஏற்பட்டது. அவர்கள் தீட்சைபெற்றுச் சிவபூஜை செய்ய விரும்பினுர்கள். அதனுல் இருவரும் திருவாவடுதுறை ஆதீனத்தையும் பிற இடங்களையும் நாடிச் சென்று பயன் கிட்டாமல் திரும்பினேம். வரும் வழியில் திருவையாற்றில் கல்லூரிப் பேராசிரியர் உயர்திரு. கோவிந்தசாமிப் பிள்ளையவர்களைச் சந்தித்தோம். அவர்களிடத்தில் எங்கள் விருப்பத்தைத் தெரிவித்தோம். உடனே அவர்கள் தேவகோட்டைப் ''பாலகவி'' ஐயா அவர்கள் ஆச்சாரியாபிடேகம் பெற்று இதுவரை ஐந்நூறுக்கு மேற்பட்ட சீடர்களுக்குத் தீட்சை செய்து சிவபூஜையும் எழுந்தருளப் பண்ணியுள்

ளார்கள். நீங்கள் ஏன் பிறவிடங் களுக்குப் போகவேண்டும். நேரே அங்கு செல்லுங்கள் என்று ஆற்றுப் படுத்தினர்கள்.

ஈரோடு திருமுறை மகா நாட்டுக்குத் தலைமை தாங்க நம் குருநாதர் அவர்கள் வருவதை அறிந்து அங்கு சென்று தரிசித்துச் சொற் பொழிவும் கேட்டு முடிவில் எங்கள் கருத்தை விண்ணப்பித்தோம். அதற்குக் கருணை கூர்ந்து சம்மதம் தெரிவித்து தேவகோட்டையில் ஒரு நல்ல நாளில் கருவூர் உயர்திரு ராம. சண்முகானந்தா அவர்களுக்கும் அவர் மனைவியார் திருமதி மீனுட்சியம்மா ளுக்கும் சமய விசேட தீட்சைகள் செய்து சிவபூஜையும் எழுந்தருளச் செய்து கொடுத்தார்கள். என்னையும் தீட்சை செய்து கொள்ளும்படி வற் புறுத்தினர்கள். எனக்கு அவா இருந்தும் வசதிக் குறைவினுல் தீட்சை செய்து கொள்ளவில்லை. மீண்டும் திருவருட் செயலால் சமய விசேட தீட்சைகளும் சிவபூஜைப் பேறும் நம் குருநாதர் மனமுவந்து நல்கப் பெற்றுப் பூஜை செய்து வந்தேன். சில ஆண்டு களுக்குப் பிறகு நிருவாண தீட்சை செய்து கொள்ளும் வாய்ப்பு வந்த போது இரண்டு முறை தீட்சை செய்து கொள்ளும்படி ஆணையிட்டார்கள்.அப் பொழுது கைகூடவில்லை.

பிறகு அமராவதி புதூர் உயர் திருவாளர் கரு அவர்கள் உதவியால் அவர்களோடு நானும் காவிரிப்பூம் பட்டினத்தில் நிருவாண தீட்சை பெற்றுச் சிவபூஜை புரிந்து வருகி றேன். இதுவே எனது ஆசாரிய மூர்த் தியின் நீண்டகாலத் தொடர்பாகும்.

அப்பர் மூர்த்திகள் குறிப்பிட்டது போல ஈன்றதாயும் தந்தையும் உடன் தோன்றலும் கோநகரில் திருவருள் அமைத்துத் தந்ததோடு பிறவிப்பிணி தீர்க்கும் பெருமருந்தாகிய உபதேச குருவாகவும் தோன்ருத் துணையாய் நின்று செய்த பெருங்கருணைத் திறம் என் சிந்தைக்கும் எட்டாத செய லாகும். அத்தகைய குருமூர்த்திகள் அறுபதாண்டு நிறைவுற்று இப்புனித நன்னுளில் மங்கலத்திரு மீனுட்சி ஆச்சியுடன் மங்கலாபிஷேகம் புரிந்து கொள்ளும் காட்சியைக் கண்களிப்பக் கண்டு கழிபேருவகை உறுகின்றேன். அவர்கள் திருவடிகளை வணங்கி நீடுழி வாழ்க என வாழ்த்துகிறேன்.

எங்கள் ஆச்சாரிய மூர்த்தி தத் புருஷ தேசிகரவர்கள் பதினுருவது ஆண்டு முதல் ஒவ்வோராண்டு நிறை விலும் ஒவ்வொரு நூலியற்றி வெளி யிட்டு வந்துள்ளார்கள். அவைகளில் சில நூல்களுக்கு அடியேன் தந்த சாற்றுக்கவியும் இடம் பெற்றுள்ளதை அன்பர்கள் அறிவார்கள். அவர்கள் நூல் நிலையத்தில் தமிழ் நூல்களும் வடமொழி நூல்களும் ஒருவர் வாழ் நாள் முழுவதும் படித்தறியத் தக்க அளவில் சேர்த்துவைத்து அவற்றை ஆராய்ந்துள்ளார்கள். சிவபூஜைக் குரிய கருவிகளும் சிவபூஜை செய் கின்ற முறைமையும் அதில் கொண் டுள்ள சிரத்தையும் பிறரொருவ ரிடத்தில் காண இயலாததாகும். காரைக்காலம்மையார் கூறியது போல ("பிறந்து மொழி பயின்ற பின் னெல்லாம் காதல் சிறந்துன் திரு வடியே சேர்ந்தேன்") பிறந்து கலை பயின்ற பின் இதுநாள் வரையிலும் தமிழ்த்தொண்டும் சமயத்தொண்டுமே

புரிந்ததன்றி மற்ருெரு தொழிலில் மனம் நாடவில்லை. பெரும்பாலோர் நாற்பதாவதாண்டிலும் இன்னும் சற்று முன்னும் பின்னுமாகக் கண்மங்கல் ஏற்பட்டுக் கண்ணுடித் துணையராவர். நம் ஆச்சாரிய மூர்த்திகள் அறுபது நிரம்பியும் கண்ணெளி இளைஞர்க்குரிய கண்ணெளியே போல் இலங்க வாழ்கின்ருர்கள். இன்னும் அவர்களின் மனேதைரியம், எடுத்த செயலை விரைந்து முடிக்கும் ஆற்றல், குறிப்பறியும் நுண்மாண் நுழைபுலம் ஆகியவை இயற்கையாகவோ திருவருளாலோ அமையப் பெற்றுள்ளார்கள்.

நம் தத்புருஷ தேசிகரவர்கள் சமயம் வளர்க்க அவதாரபுருஷர் என்று கூறினுல் அது மிகையாகாது. ஏனெனில் பெற்ருேர்கள் இருவரும் சைவ சமயத்தை வளர்க்க அந்நாளில் ஞானசம்பந்தர் அவதரித்தது போல ஒரு தவப்பெரியார்' தங்களுக்கு மகவாகத் தோன்ற வேண்டும் என்று தவம் புரிந்தார்கள். அவ்வாறு பிறந்த மகவுக்காகவே தங்கள் சொந்தப் பொருளில் கற்பகவிநாயக கலாசாலையை நிறுவிச் சிறப்பாக நடத்தி வந்தார்கள். சமயம் வளர்க்கும் பிள்ளைக்காக ஞானசம்பந்த நற்சபையும், ஆராய்ச்சி செய்வதற்காக வாணீமந்திர புத்தகசாலையும் ஏற்படுத்திஞர்கள். அவைகள் எம் போன்ற எளிய மாணவர் பலருக்கும் செல்வர் வீட்டுப் பிள்ளைகட்கும் பெரும் பயன் தந்தது. நம் ஆச்சாரிய மூர்த்திகள் இந்தப் பிறவியில் கற்ற கல்வியால் முன்னேறிவிடவில்லை. மேலைத் தொடர்புடையவர்கள் ஆகலின் அரிய கல்விகளையும் எளிமையில் கற்றுவிட்டனர். அதனேடு ஏழாவது வயதிலேயே சங்கராச்சார்ய சுவாமிகளின்மீது கவிதை இயற்றி வாசித்தளித்துப் "பாலகவி" என்ற பட்டமும் பெற்ருர்கள். இன்னும் அவர்கள் பெருமை கூறப்புகின் அது மிகவும் விரியும். அவர்கள் ஆண்மக்களும் பெண்மக்களும் பேரக்குழந்தைகளும் அருகிருந்து போற்றிக்களிக்க அறுபதாண்டு நிறைவு விழாப் பெறுகிருர்கள். எல்லாவல்ல இறைவன் மீனுட்சி சுந்தரேசுவரர் திருவருளால் நீடுழி வாழ்க என வாழ்த்தி இறைஞ்சுகின்றேன்.

வாழ்க குருநாதர்.

இங்ஙனம்,

அ. கணபதி ஐயா.

மணிவிழாச் செல்வரின் இளமை


திருவண்ணாமலை ஆதீனப்புலவர்
பண்டித மு. முத்து வேங்கடாசலமய்யர்
பள்ளத்தூர்.

நமது மதிப்பிற்குரிய தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர், பாலகவி, வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியாரவர்களின் இளமை மாண்பை உடன் பயின்றவன் என்ற முறையில் இக்கட்டுரையில் வரைய மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கோநகர்க் கற்பக விநாயக கலாசாலை, செந்தமிழ்ச் செழுங்கலை நியமமாக ஒளி வீசிய காலம்; அதனுறுப்பாய் விளங்கிய ஞானசம்பந்த நற்சபையில் தமிழ்நாட்டுப் பெரும் புலவர்கள் ஆண்டுதோறும் வந்து அருஞ்சொற் பொழிவுகள் நிகழ்த்தி அறிவொளியூட்டினர்; மற்றோருறுப்பாம் வாணிமந்திர புத்தகசாலை அரும்பெரும் நூல்கள் நிறைந்த சீரிய நூல்நிலையம் ஆகும்.

இத்தகு முத்திறத்த நிறுவனங்களை நிறுவித் தமிழ் வளர்த்த பெரியார் திருவாளர் மகாதேவ முருகப்ப செட்டியார் அவர்கள். அவர்கள் எப்போதும் 'மஹாதேவ மஹாதேவ' என்றே கூறிவரும் இயல்புடையவர்கள். அத்தகு சான்றோரின் தவப்புதல்வராக நம் பாலகவியவர்கள் தோன்றினார்கள். அவர்கள் தோன்றியது ஆனந்த மார்கழி 26. சோதி நன்னாள்.

அடியேன் இல்லம் கலாசாலைக்கு மிக அண்மையில் அமைந்திருந்தது. அடியேனும் அதே ஆண்டில் பிறந்தவன் ஆதலின், நாங்கள் இருவரும் சிறு வகுப்பு முதல் உடன் பயின்று வந்தோம். நாங்கள் இணைபிரியாத் தோழர்களாகவும் இருந்து வருகிறோம்.




குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தில்
தேசிகன், முத்துவேங்கடாசலம் ஐயர், புலவர்மணி சோமசுந்தரம் செட்டியார், குன்றக்குடி அடிகளார், கி. வா. ஜகந்நாதன், மணிவிழாச் செல்வர், அ. சா. ஞானசம்பந்தம்.



அமர்ந்திருப்போர்:
மணிவிழாச் செல்வர், மறை. திருநாவுக்கரசு சாத்தூர் தூ. சு. கந்தசாமி முதலியார், நாகர்கோவில் ஆறுமுக நாவலர், சிதம்பரம் டி. தண்டபாணிப் பிள்ளை.

பெருமக்களுடன் மணிவிழாச் செல்வர்



சிங்கப்பூர் தமிழ வேள் கோ. சாரங்கபாணியுடன்

இவர் தினமும் அதிகாலையிலேயே வீட்டை விட்டுக் கலாசாலைக்கு வந்து விடுவார். நானும் அதே நேரத்தில் கலாசாலைக்குச் செல்வேன். அங்கு இருவரும் பல்துலக்கி நீராடி நந்த வனத்திற்குச் சென்று மலர்கள் கொய்து வந்து கலாசாலையில் எழுந்தருளியுள்ள கற்பக விநாயக மூர்த்திக்கும் சமயகுரவர் நால்வர்க்கும் மாலைசூட்டிச் சாத்தி வழிபட்டுப் பின்னரே தத்தம் வீடு செல்வோம்.

"நிலைபெறு மாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன்அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டு"

என்ற அப்பர் பெருமானது அருள் மொழியின் ஆழ்பொருளை அறியாத அவ் விளமைப்பருவத்திலேயே எங்கட்கு இவ்வழிபாடு வாய்த்தது பெரும் புண்ணியம் என்றே கூறல் வேண்டும்.

இளமையிலேயே இவர் "தருப்பை நுனி" எனக் கூர்த்த மதியினர்; இசையிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். 'ஹார்மோனியம்' என்ற இசைக் கருவியில் இசைப் பாடல்களை வாசிக்கும் ஆற்றலுண்டு. திருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளில் அளவற்ற ஈடுபாடு உடையவர். தேவகோட்டையில் தனக்கெனக் கட்டப்பெற்ற திருமனைக்கும் 'பாலருவாயர் நிலையம்' என்று பெயரிட்டனர்.

அப்பாலருவாயர்பால் முறுகி எழுந்த தியானத்தாலேயே இவர் ஞானக் கவிதைகள் பல மொழியும் ஆற்றல் கைவரப்பெற்றுர்.

ஆதிசங்கரர் தாம்பாடிய 'சௌந்தர்யலஹரி'யில்

"தருணி தனத்தில் தழைந்திடு பால்,சிந்தை தன்னில் உண்டாய்
அருள்வாழ் வளிக்கு மதுரக் கவியலை ஆழ்கடலே
பருகுங் கவுணியக் கன்றெனு மேகம் பவனடிக்கே
பெருகுமெய்ஞ் ஞானக் கவிதை மழைதனைப் பெய்ததுவே"

என்று திருஞானசம்பந்தர் பெருமையை வாயார வாழ்த்துகிருர். இவர் பிறந்து மொழிபயின்ற பின் எல்லாம் காதல் சிறந்து அம்மை ஞானப்பால் உண்ட ஆளுடைய பிள்ளையைத் தியானித்து மெஞ்ஞானக் கவிதைகள் பல வழங்கும் பேறு பெற்றுர்.

இளமைப் பருவத்தில் என் பேச்சில் இடையிடையே பார்ப்பனர் பேசும் வடமொழிச் சொற்கள் பொருள் அறிந்தோ அறியாமலோ மலிந்து கிடக்கும்; உடனே இவர் அச்சொல்லைக் கேட்டுப் பொருள் யாது என என்னை உசாவுவார். நான் பொருள் அறியாது திகைப்பேன். இவர் அச்சொல்லை மறவாமல் நினைத்து வைத்துக்கொண்டு எவ்வாருே பொருள் தெரிந்து கொள்வர். எனக்கு இது பெருவியப்பை நல்கும். அத்தகு பேச்சில் 'ஈஷிக்கொண்டேன்' என்ற ஒரு சொல் இன்றும் என் நினைவுக்கு வருகிறது.

தொடக்கத்தில் கலாசாலைத் தலைமையாசிரியர் வித்துவான் ஸ்ரீ S. ஆழ்வாரையங்கார் அவர்களிடம் நாங்கள் தமிழிலக்கிய இலக்கணம் பயின்றோம். பின் நான் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் சேர்ந்து கல்வி பயிலலானேன். பின்னர் இவர்கள் காரைக்குடி சொக்கலிங்க ஐயா அவர்கள் முதலானோரிடம் முறையாகச் சமய நூற்பாடங்கேட்டு, தேவகோட்டை வந்ததும் திருவாளர் பொ. முத்தையா பிள்ளை பெரிய மைனர் உலகம்பட்டி இலக்குமணசுவாமி, கொரடாச்சேரி வாலையானந்த சுவாமி இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமி இவர்களுடன் அளவளாவி ஞான நூற்பரப்பின் நிலை கண்டுணர்ந்தார்.

இவ்வாறு வரன் முறையாகச் செந்தமிழ் பயின்றார் ஆதலின் இவர் பிறர்க்குப் பாடஞ் சொல்லும் ஆற்றலும் எளிதே பெற்றனர்.

இவரது பத்திரிக்கைத் தொண்டும் பலர் பாராட்டும் பாங்குடையது; 'செட்டிநாடு' இதழ் ஆசிரியராய் இருந்த காலத்துக் கணக்கற்ற இலக்கிய சமயக் கட்டுரைகள் எழுதிச் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க அரும்பணி செய்துள்ளார்.

15 வயதிலேயே குன்றக்குடிச் சுப்பிரமணியர் தோத்திரப் பதிகம் பாடும் திருவருள் பெற்றவர். உழுவலன்பால் அந்நூலை எளியேனுக்கு அனுப்பி என் சிறப்புப்பாயிரம் பெற்றார். ஒவ்வோராண்டிலும் தான் பிறந்த நாளில் ஒரு நூலை இயற்றி வெளிப்படுத்துவார். ஒவ்வோராண்டிலும் எளியேன் சிறப்புப் பாயிரமும் இடம்பெறும்.

ஆங்கீரச ஆண்டு கார்த்திகைத் திங்களில் அதாவது இவர்களின் 18 ஆவது வயதில் நடந்த ஒரு நிகழ்ச்சி இன்றும் நினைவில் இருக்கிறது.

மதுரையிலிருந்து நான் கோநகர் வந்திருந்த போழ்து ஒருநாள் மாலை முருகன்மீது நான் பாடிய அஷ்டநாகபந்த வெண்பா ஒன்றையிவர்களிடம் கூறினேன். உடனே 'நாளை அதிகாலையில் நான் ஒரு பாடலுடன் வருகிறேன்' என்று கூறி இல்லம் சென்று மறுநாள் காலையில் பொருள் வளமும் சொல்வளமுமிக்க அஷ்டநாகபந்த வெண்பா ஒன்று 'ஞான போனகர்' மேற்பாடிக் கொணர்ந்தார். பாடல் வருமாறு:

"சேறு மடியர் திகழ அருளுமே
யாரு மிருளு மகற்றுமே – மேறுவா
யேல நல மாமே யிடியிமை யோர் கூறு
பாலரு வாயர் பதம்" என்பது.

மொழித் திறத்தின் முட்டறுத்து, முதல் நூற் பொருள் உணர்ந்து சிவாகம ஞான பானுவாய் விளங்கிய பழநி சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய ஸ்வாமிகள் அவர்களிடம் சமயதீக்ஷை, விசேடதீக்ஷை, நிர்வாணதீக்ஷை, ஆசாரிய அபிடேகம் ஆதியன பெற்றுத் தம்பால் அணையும் அனைவர்க்கும் திருவைந்தெழுத்தை உச்சரிக்குங் கேண்மை உணர்த்திச் சிவபூசையில் ஈடுபடுத்தும் பெருமாண்பு மிக்கவர் இவர்.

குன்றக்குடியில் நடந்த சைவர் மாநாட்டுத் தலைவர்க்கும், சைவ மாதர் மாநாட்டுத் தலைவியர்க்கும் அடியேன் வரவேற்பிதழ் பாடியளித்தேன். பல ஆண்டு கட்கு முன்னர்க் குன்றக்குடியில் நடந்த சைவ இளைஞர் மாநாட்டுக்குத் தலைமையேற்ற எனக்கு அன்பர் பாலகவி அவர்கள் சிறந்த வரவேற்பிதழ் பாடியளித்தார். இஃது அவர்களின் 'அடக்கமுடைமை'ப் பண்பிற்கு நல்ல எடுத்துக்காட்டு.

சொற்பொழிவாற்றும் வேளையில் இவர்களின் இனிய குரலும், பொருள் களை அலசி விளக்கும் தோரணையும் அகஸ்மாத்தாகக் கேட்பவர்களையும் காந் தத்தைப்போல் இழுக்கும். திருச்சி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, கோவை முதலிய பல பெருநகரங்களில் தொடர்ந்து பாட வகுப்புக்களைத் திறம்பட நடாத்திப் பெரும்புகழ் அடைந்துள்ளார்கள்.

இளமைத்தோழர், உழுவலன்பர் பாலகவி அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் தொடர்ந்து பெரும் பணியாற்றிப் பல்லாயிரவரைச் சிவபூசையில் ஈடுபடுத்தி ஆயிரம் பிறையை அழகுறக்கண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ்க எனக்கச்சியை இச் சித்த காமக் கொடியின் கழலிணை மலர்களை மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகிறேன்.

திருமறையும் திருமுறையும்

கலைகளாகக் காணப் பெறுபவை அனைத்திற்கும் கர்த்தா சிவபெருமானே. இதனை, "ஈசானஸ் ஸர்வ வித்யாநாம்" என்று தைத்திரீய ஆரணியக உபநிடதம் உணர்த்துகின்றது. திருஞான சம்பந்த சுவாமிகள் திருவிற்கோலத் திருப்பதிகத்தில், "தொகுத்தவன் அருமறை, அங்கம் ஆகமம் வகுத்தவன்" என அருளியிருப்பதும் நினைவு கூர்தற்குரியது.

—யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் சைவமாநாட்டுத் தலைமையுரையில் மணிவிழாச் செல்வர் கூறியது.

மணிவிழாச் செல்வரின் தமிழ்க் கல்வி

○ ● ○

எஸ். ஆழ்வாரையங்கார்

முன்னைய அறுபதாண்டின் கண்ணதாகிய நளஹூ ஆவணி மீ 192 கோநகர்க்கற்பக விநாயகசாலையில் அப்பொழுது தலைமையாசிரியராயிருந்த பிரமஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்களுக்கு உதவித் தமிழாசிரியனுயமர்ந்தேன். அக்கலாசாலை மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை போன்ற தனித்தமிழ்க் கலா சாலையாகும். அதனைச்சார்ந்து ஸ்ரீ ஞானசம்பந்த நற்சபையும், வாணீ மந்திர புத்தகசாலையும் திகழ்ந்தன. இம்மூன்றும் தமிழ்க் கல்வியைக் கற்பித்தலிலும், பரப்புதலிலும் இணையற்று விளங்கின. கலாசாலையில் பலநூற்றுக்கணக்கான பெரிய சிறிய மாணவர்கள் தமிழ்க்கல்வி பயின்றுர்கள். தமிழை முதன்மையாகக்கொண்டு, ஆங்கிலம், வடமொழி, தேவார திருவாசகங்கள் உபபாடங்களாகக் கற்பிக்கப் பட்டன. ஆங்கில உயர்தரப் பள்ளிகளிலும், தனித்தமிழ்க் கல்லூரிகளிலும் சேர்ந்து பயில்வதற்குத் தகுதியாகப் பாடங்களும் அமைக்கப்பட்டுப் பழமை யையும் புதுமையையும் தழுவிப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இயல், இசைத் தமிழ்கள் இக்கலாசாலையால் நன்கு வளர்ச்சியுற்றன. இதிற் பயின்ற மாண வர்கள் பலர் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் "பிரவேச பண்டித" பரீக்ஷையிற் றேர்வுற்று ஆங்கில கலாசாலைகளில் தமிழ்ப்பண்டிதராயுள்ளார்கள். ,ஸ்ரீ கோபாலை யரவர்கள் முதல் மாணவராகிய தமக்கும் பலப்பல உயர்ந்த தமிழ்ப் பண்டிதர் களுக்கும் ஆசிரியரும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பத்திராசிரியரும் அச் சங்கக்கலாசாலைத் தலைமையாசிரியருமாகிய ஸ்ரீ உ. வே. திருநாராயணையங் காரவர்களைத் தம் திறமை கண்டு மகிழும் பொருட்டும், நன்றியறிவின் பொருட்டும் மூன்று மாதங்கட்கொருமுறை வந்து மாணவர்களைப் பரீக்ஷிக்கும்படி பரீக்ஷகராக ஏற்படுத்திக் கொண்டார்கள். ஒருமுறை அவர்களுடன் யான் வந்திருந்தபொழுது இதன் கட்டிடங்களையும் இதன் பெருமையையும் அறிந்து இதில் ஆசிரியனுயமரும் பேறு கிடைத்தால் நலமென்று நினைத்துச் சென்றேன். அதனைப் பின் இறைவர் நிறைவேற்றி வைத்தார்.

தொடக்கமுதல் தலைமை ஆசிரியராயமர்ந்து இக்கலாசாலையை வளர்ச் சியும் பெருமையும் பெறச் செய்தவர்கள் பிரமஸ்ரீ பண்டித அ. கோபாலையரே

ஆவார்கள். அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் கல்வி பயின்று முதல் மாணவராய்த் தேறிப் பட்டமும் பரிசும் பெற்றுச் சில ஆண்டுகள் அக்கலாசாலைத் தலைமை ஆசிரியராகவும் அமர்ந்திருந்து அச் சங்கத்தலைவர் ஸ்ரீ மான் பொன் பாண்டித்துரையவர்களால் மிக அபிமானிக்கப்பெற்றவர்கள். அவர்கள் திறமையறிந்தே இக்கலாசாலைத் தலைமையாசிரியராய் நியமித்தார்கள். முதல் உதவியாசிரியனுய்த் தொண்டு புரிந்தவனே எளியேன். பின் ஓராண்டு தலைமையாசிரியராயிருந்து R.வேங்கடாசலம் பிள்ளையவர்கள் விலகிச் சென்ருர்கள். அதன்பின் பண்டிதமணி திருமிகு மு. கதிரேசச் செட்டியாரவர்களின் சொற்படி எளியேனையே தலைமையாசிரியனுக ஆக்கினர். அக்காலை, தமிழ் பயின்றவர்களே உயர்திரு பாலகவி வே. இராமனுதன் செட்டியாரவர்கள்.

இனி இதனைச் சார்ந்த நற்சபையின் பெருமைகள் நவிலுதற்குரியன. இச்சபை மாதத்திற்கொரு முறையும் சிறந்த புலவர்கள் வந்துள்ள பொழுதும் நடைபெறும். சைவசமயாசாரியர்கள் குருபூஜா காலங்களிலும் நடைபெறும். பெரும்புலவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். இதன் ஆண்டுவிழா இரண்டு மூன்று நாட்கள் மிகமிகச் சிறப்பாக நடைபெறும். அக்காலத்து நுண்மாண் நுழைபுல மிக்க நல்லிசைப் புலவர் பலரும் கலாசாலை மாணவர் பலரும் இடைவிடாது சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். இச்சபை நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டு பட்டமும் பரிசும் பெற்றுப் போகாத புலவர்கள் அக்காலத்தில் ஒருவருமில்லையென்றே கூறலாம். இரண்டு மூன்று நாட்களும் பெருங்கோயிற்றிருவிழாக்கள் போன்று விளங்கும்.

வாணி மந்திர புத்தகசாலை

இதில் சீரிய நுண்ணிய பொருள் பொதிந்த நூல்கள் உண்டு. அவைகளை வாங்கிப் பேரறிவு பெற்றுப் புலவராகத் திகழ்ந்தவர் மிகப்பலராவர்.

இம்மூன்றையும் மிகப்பெரிய மண்டபங்கட்டித் தமிழ்த்தாயை அதில் சிங்காசனத்தில் அமரச்செய்து முடிசூட்டி அத்தெய்வத்தாயின் முன்னிலையில் அவள் அருள் பெற்று வளர்ந்த பெரியார் சு. மு. முருகப்ப செட்டியார் ஆவார்கள். அவர்கள் எப்பொழுதும் *மஹாதேவ* என்றே எதற்கும் சொல்லிக் கொண்டிருந்தமையால் அப்பெயர் நீங்கி *மஹாதேவா* என்பதே அவர்கள் பெயராயிற்று. இப்பெயரை அவர்கள் உச்சரிக்கும் ஒலியைக் கொண்டே அவர்கள் இன்ன சொல்லுகிருர்களென அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் இறையன்பும், தமிழன்பும் இணையற்றவை. அவர்கள் அதி வீரராமபாண்டியன் பாடிய குட்டித் திருவாசகமாகிய திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியிலுள்ள

"இருக்கினும் நிற்கும்போதும் இரவுகண் துயிலும்போதும்
பொருக்கென நடக்கும்போதும் பொருந்தியூண் துய்க்கும்போதும்
முருக்கிதழ்க் கனிவாயாரை முயங்கிநெஞ் சழியும்போதும்
திருக்களாவுடைய நம்பா சிந்தையுன் பாலதாமே"

என்ற திருப்பாடலுக்கும் "வழுக்கி வீழினும் உன் திருப்பெயரல்லால் மற்று நானறியேன் மறுமாற்றம்" என்ற திருமொழிக்கும் இலக்காக உள்ளவர்கள்.

மேலும் அவர்கள் பெருமை என்னுரையுள் அடங்குவதன்று. அவர்கள் இட்ட சோற்றுச் செருக்கே எளியேன் தமிழ் கற்பிக்கும் திறமையுடையவனுதற்கும் பாலகவியவர்கள் உயர்தமிழ் நூற்பயிற்சியிலும் ஆராய்ச்சியிலும் சொற்பொழிவிலும் செய்யுளியற்றுமிக்க திறமையிலும் இறையன்பிலும் சிறந்து விளங்குவதற்கும் காரணம் ஆயிற்று. தம் பொருள் முழுமையையும் தமிழுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் சைவத்திற்கும் வாரியிறைத்த பெருவள்ளல் ஆவார்கள். அவர்கள் இல்லம் *கோயிலார் வீடு* என்ற பெருமை பெற்றது. இத்தகைய பெரியாரே நம் மணிவிழாச் செல்வரின் திருத்தந்தையாராவார்கள். இவர்கள் திருமகனுர் எவ்வாறு இருப்பர்? "மகனறிவு தந்தையறிவு" என்ற மணிமொழிக்கும்,

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்றந்தை
என்னேற்ருன் கொல்லெனும் சொல்"

என்ற பொய்யாமொழிக்கும்,

"என்ன நோன்பு நோற்ருள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்"

என்ற திருவாக்கிற்கும் இலக்காகத் தானே இருப்பர்? வேறு எவ்வாறு இருக்க இயலும்? இவர் தமையனுரும் தமிழ்க் கல்வியிற் சிறந்தவரே. இவர்கள் குடும்பத் தாரனைவரும் தமிழ்க் கல்வியுடையவர்களே. இவர்களைத்தத்துக் கொண்ட முன்ஞேர்களும் தமிழறிவு சான்ற குடும்பத்தாரே. பாலகவியவர்கள் தமிழ் கற்கும் பொழுது சங்கநூல்களும் ஏனைய நூல்களும் கற்பிக்குமுன்னமே இவர் நெஞ்சிலும் வாயிலும் புகுந்து நடனமிடும். இவர் ஆசிரியரிடம் கற்றது சாந்திபினி முனிவரிடம் கண்ணன் கற்றதே போன்றது தான். இவர் கற்கும் இத் திறமை கண்டு மிகவியப்பும் அன்பும் கொண்டேன். "நெஞ்சுற அருங்கலைகள் கற்குமவர் தம்மளவில் நேய நிகழாதவர் யார்" என்ற வில்லிபுத்தூரார் வாக்கு ஈண்டு உணரத் தக்கது. அருச்சுனன் விராடநகரத்து உருமாறியிருந்த பொழுது படைகொண்டு போர் புரியவந்த பொழுது அந்நகரத்தரசன்குமாரன் உத்தரனுக்குத் தேரோட்டிச் சென்று அக்குமாரன் போர்க்களங்கண்டு போர் செய்ய அஞ்சினமையாலும் தங்கள் அஞ்ஞாதகாலம் நீங்கினமையாலும் வெளிப்பட்டுத்தானே போர் செய்தான். அக்காலை தன் ஆசிரியராகிய துரோணர் தன்னேடு போர் செய்ய வர, "எனக்கு உண்மைத் தெய்வம் நீர். உம்மோடு போர் செய்வது பெரும்பாவம்" என அருச்சுனன் கூற, அவர் நீ என்னிடம் கற்று நீங்கிய பின் தேவர்களின் பகைவ ராகிய திரிமூர்த்திகளாலும் வெல்ல இயலாத நிவாதகவசர், காலகேயரையெல்லாம் வென்றழித்தாயெனக் கேள்வியுற்றேன். அத்திறமையை நான் நேரில் அறிய வேண்டும். ஆதலால் நீ என்னுடன் போர்செய் என்று கூறினுர். அது போன்று மணிவிழாச் செல்வரின் தமிழ்க்கல்வி வளர்ச்சியையும் பெரும்புலவரும் வியக்குமாறு தமிழில் சொற்பொழிவாற்றுந் திறமை முதலியவைகளையுங் கேள்விப்பட்டு அவைகளை நேரில் காண விரும்பி மதுரையில் நாங்கள் நடாத்திய இலக்கிய விழாவிற்கு அவர்களை அழைக்கச் செய்து சொற்பொழிவாற்றும் திறமையையும் ஆராய்ச்சித்திறன் நுண்ணறிவு முதலியவைகளையும் கண்டு களித்து உள்ளமும் உடலும் களித்துப்பூரிப்படைந்தேன். அவ்வமயம் என்னை ஞானபிதாவென்றும்

ஸ்ரீபண்டித அ. கோபாலையரவர்களைத்தம் ஞானத்தாத்தாவென்றும் அப்பேரவையின் மத்தியில் குறிப்பிட்டார்கள். அது கேட்டு ஆனந்தமும் வெட்கமுமுற்றேன். அருச்சுனன்தான் கற்பித்ததைக் காட்டிலும் பதின்மடங்கு உயர்ந்திருக்குந்தன்மை கண்டு அவன்பால் துரோணர் கற்கநினைத்தார் என்று பாரதத்தில் வில்லி குறிப்பிட்டுள்ளார். அதே போன்று யானும் நினைத்ததுண்டு.

யான் முன்பு ஆண்டு தோறும் தேவகோட்டை சென்று அவர்களுடைய செல்வமாளிகையில் சில பல நாட்கள் தங்குவேன். அப்பொழுது தம் பெருமை முழுமையையும் மறந்து எளியேனை உபசரிப்பார்கள். அதுகண்டு குசேலர் கண்ணன் உபசரிப்பைக் கண்டு மகிழ்ந்ததைப்போல் மகிழ்ந்தேன். அவரில்லந்தமிழகமே. புலவர் உறைவிடமே. இன்னும் அவர்கள் தமிழ்க்கல்வியறிவும் நற்குணங்களும் புகழ்களும் அளவில்லாதன. விரிவஞ்சி விடுக்கின்றேன். அவர்கள் மேலும் பல்லாண்டு பல்லாண்டு பார்மிசை நலம் பலவும் நீண்ட ஆயுளும் நல்லுடலும் பெற்று வாழ்வார்களாக எனக் கூறி அமைகின்றேன். இறைவன் அருள் பெருகுவதாகுக.

நாவிருந்தும் நாளைக் கழிப்பதேன்?

ஏத்தித் துதிக்க நாவிருந்தும்
எண்ணிப் பரவ நெஞ்சிருந்தும்
ஆத்தம் வைத்துத் தொண்டுசெய
அரிய மனித உடம்பிருந்தும்
மூத்து நாளைக் கழிக்கின்ற
மூடர் அந்தோ அலோர்ஸ்டாரில்
பூத்த தண்டா யுதவேளைப்
பொருந்தார் என்னோ வருந்துவதே.

பாலகவி பாடிய
அலோர் ஸ்டார் ஸ்ரீ தண்டாயுதபாணி பதிகம்.

மணிவிழாச் செல்வரின் இயற்றமிழ் ஆசிரியர்

(S. ஆழ்வாரையங்கார் வரலாற்றுக் குறிப்பு)

டாக்டர் சுப. அண்ணாமலை.

○●○

பிறப்பு: சிவகாசிக்கு ஐந்துமைல் தூரத்திலுள்ள எதிர்க் கோட்டையில் சென்ற துன்முகி ஆண்டு பங்குனி மீ 8உ (19-3-1891)

ஊர்: அருப்புக்கோட்டையின் அருகிலுள்ள கல்லூருணி.

தந்தை: அவ்வூர் K. ஸ்ரீநிவாஸையங்கார். இவர் பழங்காலத்து ஓவர்சியர். ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு, தூத்துக்குடி உப்பளம், ஆழ்வார்திருநகரி அணைக்கட்டு, தென்திருப்பேரை அணைக்கட்டு இவர் மேற்பார்வையில் நடைபெற்றவை. தென்திருப்பேரை அணைக்கட்டைக் கட்டும் பொழுது அவ்வூரில் மாரடைப்பால் திடீரென இறந்தார்.

தாயார்: எதிர்க்கோட்டைச் சோலை ஐயங்கார் குமாரத்தி தங்கம் என்ற வேங்கடம் அம்மாள். இவர் ஸ்ரீநிவாஸையங்காருக்கு மறுதாரம். ஆணொன்றும் பெண்ஒன்றும் பிறந்து வளர்ந்து இறந்தபின் 18 ஆண்டுகள் சென்றபின் 1897 மார்ச்சு துன்முகி பங்குனி 8- ஆம் தேதி பிறந்தவரே ஆழ்வாரையங்கார்.

தந்தையிறக்கும் பொழுது வயது மூன்று. பின் தாயின் ஊராகிய எதிர்க் கோட்டையே சொந்த ஊர் ஆயிற்று. 18 ஆண்டுகள் பிள்ளையில்லாமல் இருந்தபடியால் தந்தை தன் மிக்க வருவாய் முழுமையையும் தரும காரியங்களில் செலவிட்டு விட்டார். பிதிர் ஆர்ஜிதமாகக் கிடைத்தவை முந்நூறு வெண்பொற்காசுகளே. தாய் எளிமை வாழ்வு நடத்தினாள். சென்னையிலிருந்த மாமன் தெலுங்குப் பள்ளியிலும் வடமொழிப் பள்ளியிலும் படிக்கச் சொல்லியும் இவர் முடியாதென்று சொல்லி விட்டார். எதிர்க்கோட்டையிலிருந்த பெரியாரிற் சிலர் சிறிது நல்ல தமிழும் வடமொழியும் கற்பித்தனர். தாயும் உறவினரும் எந்த வேலையாவது பார்த்துச் சம்பாதிக்கச் சொன்னார்கள். அவர் ஞாதி ஒருவர் மதுரைக்கு அழைத்துச் சென்றார். வேலை பிடிக்காமல் தமிழ் கற்பதிலேயே மனம் சென்றது. ஸ்ரீஉ. வே. திருநாராயணையங்காரைச் சரணமடைந்து அவர்கள் பேரருளால்

ஐந்தாண்டுகள் மதுரைத் தமிழ்ச்சங்கக் கல்லூரியில் கற்றுப் பரீக்ஷையில் தேறினர் கற்கும் பொழுது சங்கத்தார் தந்த சிறு பொருள் காணுமல் உண்டி உடை பெற மிக வருந்திக் கற்ருர். பரீக்ஷையில் தேறியதும் பண்டித அ. கோபாலேயர் அவர்கள் பேரருளால் அவருக்கு உதவியாசிரியராயமர்ந்தார். பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அருளால் தலைமைப்பதவி பெற்ருர். செல்வர் பலருதவி யால் மணம் செய்து கொண்டு நல்வாழ்வு நடத்தினுர். மனைவியார் ஜானகி என்ற பெயரினர் ஆவார். பிறந்தவைகளில் ஒரு ஆணும் இரண்டு பெண்ணுமே தங்கின.

மூத்தபெண் மணம் செய்தபின் வாழ்ந்து சில ஆண்டுகட்கு முன் இறந்தனள். இப்பொழுதுள்ளவர் ஓர் ஆணும் பெண்ணுமே. ஆண்மகன் பெயர் ஸ்ரீநிவாசன். P.R.C.ல் வேலைபார்க்கிருன். மகள் பெயர் கமலா. வீணைப் பரீக்ஷையில் தேறி பலருக்கு வீட்டிலிருந்தே வீணை கற்பிக்கின்றனள். மருமகன் தமிழ் M.A. தேறி சரஸ்வதி நாராயணன் காலேஜில் பேராசிரியராயுள்ளார். கண்ணன் என்பது அவர் பெயர்.

கோநகர் வேலையைத் தீயூழால் 1935ல் இழக்க நேர்ந்தபின் சென்னை யுனிவர்சிட்டி வித்துவான் பரிக்ஷையில்தேறி ஸ்ரீ உ. வே. திருநாராயணையங்கார் உதவியால் மதுரை சூசையப்பர் பெண்கள் உயர்தரப் பள்ளியில் தலைமையாசிரிய ராயமர்ந்தார். கோநகரில் 20 ஆண்டுகளும் மதுரையில் 25 ஆண்டுகளும் வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளார். அவர் நல்லூழ் கல்வியையும் பெரும்புலவர் களாலும் பெரியோராலும் மதிக்கப்படுதலையும் பெருஞ்செல்வர் நட்பையும் தந்தது.

வேடர் ஓட்டும் குதிரை

ஐந்து வான்பொறி வேடுவர் ஆசையாம் கயிற்றை
நைந்து சோர்வுறச் சிந்தையாம் குதிரைக்கு நாட்டி
மைந்து சார்தரு மாநில வனத்திடை வதைப்பர்
பைந்து ழாயரி மருகனுர் ஏரகம் பணிவாம்

— பாலகவி

இவர்தம் 26 ஆம் ஆண்டு நிறைவில்
பாடிய "திருவேரகவருக்கமாலை"
என்னும் நூலிலிருந்து.

சொல்லாமல் சொன்னவர்

பேராசிரியர் அரு. இலக்குவன், எம். ஏ., எம். ஏ.,
முதல்வர், பூம்புகார்க் கல்லூரி,
பூம்புகார், தஞ்சை மாவட்டம்.

இவ்வுலகம் உய்ய வழிவகை செய்து கொடுக்கும் முக்கியப் பொறுப்பை ஏற்றுள்ளவன் ஆசான். ஊனக்கண் விழிப்புறுவதற்குக் கல்விக்கூடங்களின் ஆசிரியர்களும், ஞானக்கண் திறக்கச் சமயாசாரியர்களும், ஞானிகளும் உதவு கின்றனர். அறம் பல செய்து இத் தெய்வத் தமிழ்நாட்டில் புகழ் பெற்று விளங்கும் வயிநாகரம் குடும்பத்தைச் சேர்ந்தவரும், கல்வி கேள்விகளில் சிறந்த வருமான பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார், தத்புருஷ தேசிகர் என்று பல்லோராலும் போற்றப் பெறும் ஆசாரியர். அன்னாரின் மணிவிழாவை ஒட்டி வெளிவரும் இம்மலரில் அண்டங்களுக்கெல்லாம் நாயகனும், உலகத்தை வாழ்விக்கும் பரம்பொருளுமாகிய சர்வேஸ்வரனின், ''சொல்லாமல் சொல்லி, இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டும்'' மூர்த்தமாகிய தெக்ஷிணு மூர்த்தியின் திருவுருவத்தைப் பற்றிய தத்துவத்தைக் கல்வித் துறையில் ஆசிரியனுகப் பணி யாற்றும் எளியேனின் சிற்றறிவுக்குத் தெரிந்தவரையில் வடித்துக் கொடுக்கின் றேன். குணத்தைக் கொண்டு மற்றதை விடுக.

ஆசிரியன் மற்றையவருக்கு அறிவு புகட்டக்கூடிய அளவுக்குத் தேர்ச்சி பெற்றவனுக இருக்க வேண்டும். சொல்லிக் கொடுப்பதை ஐயந்திரிபற அழுத்த மாகச் சொல்லக் கூடியவனுக இருக்க வேண்டும். ஆசாரியனுடைய வாக்குக்கு ஈடாக எந்த வாக்கும் கிடையாது என்ற நிலையை அவன் அடைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் மாணுக்கர் அந்த ஆசிரியரிடத்தில் பயிலுவதில் நாட்டம் கொண்டிருப்பர். அல்லாவிடில் அந்தப் பீடத்துக்குக் கொடுக்கப்பட வேண்டிய மதிப்பை முதலில் கொடுத்தாலும், படிப்படியாக நிலை மாறி பீடத் திற்கு மதிப்பு தரப்படுவதில்லை. இது இன்றைய நடைமுறை. இது எக்காலத் துக்கும் பொருந்தும் முறை. இதை உலகுக்கு எடுத்துக்காட்டு முகத்தான் அமைந்தது தக்ஷிணு மூர்த்தியின் திருவுருவம்.

கூத்தப்பிரானுடைய திருவுருவம் ஆனந்தத்தைச் சிறப்பாகக் காட்ட அமைந்ததுபோல் ஆலமர் செல்வனின் திருவுருவம் ஞானத்தைச் சிறப்பாகக்

காட்டுவதாக அமைந்துள்ளது. இத்திருவுருவம், நெளிவு ஏதுமின்றி அழுத்தத்தை வெளிப்படுத்துவதாகவும், நவரசத்தில் சாந்தத்தை உடையதாகவும், மூக்கின் நுனியையொட்டி அமைந்த பார்வை ஆழ்ந்த நோக்கைப் புலப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இத்திருவுருவச் சிறப்பை ஆதிசங்கரர் பொதுவாக விளக்கியுள்ளார். தக்ஷிணுமூர்த்தி உபநிஷத், சூக்த சம்ஹிதா, போன்ற நூல்கள் இம்மூர்த்தியைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன.

'தென்திசை நோக்கி வீற்றிருப்பதால் தென்திசைக் கடவுள்—தக்ஷிணுமூர்த்தி—என்று பெயர் அமைந்தது' என்பது ஒரு சிலர் கருத்து. 'ஆலமர் கடவுளின் பெயருக்கு அதுவல்ல காரணம்; ''தக்ஷிண'' என்ற வடசொல்லுக்கு ஞானம் என்று பொருள்; ஞானத்தின் தலைவர் என்பதால் தக்ஷிணுமூர்த்தி என்று பெயர் ஏற்பட்டது' என்பது மற்றொரு சாரார் கருத்து.

இம்மூர்த்தியை நான்கு நிலைகளில் அமைக்கிறார்கள். அவையாவன: (1) வியாக்கியான மூர்த்தி, (2) ஞானமூர்த்தி, (3) யோகமூர்த்தி, (4) வீணுதர மூர்த்தி ஆகியனவாம். இவைகளுள் வியாக்கியான தக்ஷிணு மூர்த்தியின் திருவுருவ அமைப்பையே பெரும்பாலான கோயில்களில் காண்கிறோம்.

வியாக்கியான தக்ஷிணுமூர்த்தி தனித்த ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ் புலித்தோலின்மேல் அமர்ந்துள்ளார். இருக்கையிலிருந்து தொங்கிக் கொண்டிருக்கும் அவர் வலதுகால் அபஸ்மார புருஷன்மேல் ஊன்றியதுபோல அமைந்துள்ளது. இடதுகால், வலதுதொடைமீது மடக்கி வைக்கப்பட்டுள்ளது. இது யோகாசன அமைப்பிலோ அல்லது வீராசன அமைப்பிலோ இருக்கும். நான்கு கரங்களையும், முக்கண்களையும் உடையவராக இம்மூர்த்தி காட்சியளிக்கிறார். முன் வலதுகை வியாக்கியான முத்திரையைக் காட்டுகிறது. முன் இடதுகை ஒரு சுவடியை வைத்துக் கொண்டு இடது முழங்காலின்மேல் படிந்துள்ளது. பின் வலக்கையில் ஜபமாலை காணப்படுகிறது. பின் இடக்கையில் அக்னியோ அல்லது நாகமோ காணப்படுகிறது. உடலில் எவ்வித வளைவு நெளிவும் கிடையாது. கொண்டது விடாத கொள்கையை அவர் தோற்றம் புலப்படுத்துகிறது. அவருடைய ஜடாமுடி பட்டபந்தத்தினல் கட்டப்பட்டுள்ளது. கொன்றை, ஊமத்தை போன்ற மலர்களும், நாகம், பிறை, கபாலம், சிறுமணிகள் ஆகியவைகளும் ஜடாமுடியை அலங்கரிக்கின்றன. ஜடாபாரத்தின் மத்தியில் கங்கையின் சிரித்த முகம் அமைந்துள்ளது. சிவனுக்குரிய எல்லாவிதமான அணிகலன்களும் காணப்படுகின்றன. புலித்தோல் அல்லது வெண்ணிற ஆடை உடுத்தியுள்ளார். திருமுகம் நிஷ்களங்கமாகத் திகழுகிறது. அவரிடம் ஞானபோதனை பெற முனிவர் நால்வர் முன்னமர்ந்துள்ளனர்.

இனி, இத்திருவுருவத் தத்துவமாகிய நுண்பொருட் குறிப்பு யாதென அறிய முற்படுவோம். அவருடைய காலின்கீழ் அழுத்தப்பட்டுள்ள அபஸ்மார புருஷன் மக்களின் அறியாமையைக் குறிக்கிறான். அறியாமை அழுத்தப்பட வேண்டிய ஒன்று என்பதை இது காட்டுகிறது. அவர் கையில் பொதியும் சுவடி

சொல்லாமல் சொன்னவர்

பேராசிரியர் அரு. இலக்குவன், எம். ஏ., எம். ஏ.,
முதல்வர், பூம்புகார்க் கல்லூரி,
பூம்புகார், தஞ்சை மாவட்டம்.

இவ்வுலகம் உய்ய வழிவகை செய்து கொடுக்கும் முக்கியப் பொறுப்பை ஏற்றுள்ளவன் ஆசான். ஊனக்கண் விழிப்புறுவதற்குக் கல்விக்கூடங்களின் ஆசிரியர்களும், ஞானக்கண் திறக்கச் சமயாசாரியர்களும், ஞானிகளும் உதவுகின்றனர். அறம் பல செய்து இத் தெய்வத் தமிழ்நாட்டில் புகழ் பெற்று விளங்கும் வயிநாகரம் குடும்பத்தைச் சேர்ந்தவரும், கல்வி கேள்விகளில் சிறந்தவருமான பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார், தத்புருஷ தேசிகர் என்று பல்லோராலும் போற்றப் பெறும் ஆசாரியர். அன்னாரின் மணிவிழாவை ஒட்டி வெளிவரும் இம்மலரில் அண்டங்களுக்கெல்லாம் நாயகனும், உலகத்தை வாழ்விக்கும் பரம்பொருளுமாகிய சர்வேஸ்வரனின், "சொல்லாமல் சொல்லி, இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டும்" மூர்த்தமாகிய தெக்ஷிணு மூர்த்தியின் திருவுருவத்தைப் பற்றிய தத்துவத்தைக் கல்வித் துறையில் ஆசிரியனுகப் பணியாற்றும் எளியேனின் சிற்றறிவுக்குத் தெரிந்தவரையில் வடித்துக் கொடுக்கின்றேன். குணத்தைக் கொண்டு மற்றதை விடுக.

ஆசிரியன் மற்றையவருக்கு அறிவு புகட்டக்கூடிய அளவுக்குத் தேர்ச்சி பெற்றவனுக இருக்க வேண்டும். சொல்லிக் கொடுப்பதை ஐயந்திரிபற அழுத்தமாகச் சொல்லக் கூடியவனுக இருக்க வேண்டும். ஆசாரியனுடைய வாக்குக்கு ஈடாக எந்த வாக்கும் கிடையாது என்ற நிலையை அவன் அடைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் மாணுக்கர் அந்த ஆசிரியரிடத்தில் பயிலுவதில் நாட்டம் கொண்டிருப்பர். அல்லாவிடில் அந்தப் பீடத்துக்குக் கொடுக்கப்பட வேண்டிய மதிப்பை முதலில் கொடுத்தாலும், படிப்படியாக நிலை மாறி பீடத்திற்கு மதிப்பு தரப்படுவதில்லை. இது இன்றைய நடைமுறை. இது எக்காலத்துக்கும் பொருந்தும் முறை. இதை உலகுக்கு எடுத்துக்காட்டு முகத்தான் அமைந்தது தக்ஷிணு மூர்த்தியின் திருவுருவம்.

கூத்தப்பிரானுடைய திருவுருவம் ஆனந்தத்தைச் சிறப்பாகக் காட்ட அமைந்ததுபோல் ஆலமர் செல்வனின் திருவுருவம் ஞானத்தைச் சிறப்பாகக்

காட்டுவதாக அமைந்துள்ளது. இத்திருவுருவம், நெளிவு ஏதுமின்றி அழுத்தத்தை வெளிப்படுத்துவதாகவும், நவரசத்தில் சாந்தத்தை உடையதாகவும், மூக்கின் நுனியையொட்டி அமைந்த பார்வை ஆழ்ந்த நோக்கைப் புலப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இத்திருவுருவச் சிறப்பை ஆதிசங்கரர் பொதுவாக விளக்கியுள்ளார். தக்ஷிணுமூர்த்தி உபநிஷத், சூக்த சம்ஹிதா, போன்ற நூல்கள் இம்மூர்த்தியைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன.

'தென்திசை நோக்கி வீற்றிருப்பதால் தென்திசைக் கடவுள்—தக்ஷிணுமூர்த்தி—என்று பெயர் அமைந்தது' என்பது ஒரு சிலர் கருத்து. 'ஆலமர் கடவுளின் பெயருக்கு அதுவல்ல காரணம்; "தக்ஷிண" என்ற வடசொல்லுக்கு ஞானம் என்று பொருள்; ஞானத்தின் தலைவர் என்பதால் தக்ஷிணுமூர்த்தி என்று பெயர் ஏற்பட்டது' என்பது மற்றொரு சாரார் கருத்து.

இம்மூர்த்தியை நான்கு நிலைகளில் அமைக்கிருர்கள். அவையாவன: (1) வியாக்கியான மூர்த்தி, (2) ஞானமூர்த்தி, (3) யோகமூர்த்தி, (4) வீணுதர மூர்த்தி ஆகியனவாம். இவைகளுள் வியாக்கியான தக்ஷிணு மூர்த்தியின் திருவுருவ அமைப்பையே பெரும்பாலான கோயில்களில் காண்கிறோம்.

வியாக்கியான தெக்ஷிணுமூர்த்தி தனித்த ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ் புலித்தோலின்மேல் அமர்ந்துள்ளார். இருக்கையிலிருந்து தொங்கிக் கொண்டிருக்கும் அவர் வலதுகால் அபஸ்மார புருஷன்மேல் ஊன்றியதுபோல அமைந்துள்ளது. இடதுகால், வலதுதொடைமீது மடக்கி வைக்கப்பட்டுள்ளது. இது யோகாசன அமைப்பிலோ அல்லது வீராசன அமைப்பிலோ இருக்கும். நான்கு கரங்களையும், முக்கண்களையும் உடையவராக இம்மூர்த்தி காட்சியளிக்கிருர். முன் வலதுகை வியாக்கியான முத்திரையைக் காட்டுகிறது. முன் இடதுகை ஒரு சுவடியை வைத்துக் கொண்டு இடது முழங்காலின்மேல் படிந்துள்ளது. பின் வலக்கையில் ஜபமாலை காணப்படுகிறது. பின் இடக்கையில் அக்னியோ அல்லது நாகமோ காணப்படுகிறது. உடலில் எவ்வித வளைவு நெளிவும் கிடையாது. கொண்டது விடாத கொள்கையை அவர் தோற்றம் புலப்படுத்துகிறது. அவருடைய ஜடாமுடி பட்டபந்தத்தினுல் கட்டப்பட்டுள்ளது. கொன்றை, ஊமத்தை போன்ற மலர்களும், நாகம், பிறை, கபாலம், சிறுமணிகள் ஆகியவைகளும் ஜடாமுடியை அலங்கரிக்கின்றன. ஜடாபாரத்தின் மத்தியில் கங்கையின் சிரித்த முகம் அமைந்துள்ளது. சிவனுக்குரிய எல்லாவிதமான அணிகலன்களும் காணப்படுகின்றன. புலித்தோல் அல்லது வெண்ணிற ஆடை உடுத்தியுள்ளார். திருமுகம் நிஷ்களங்கமாகத் திகழுகிறது. அவரிடம் ஞானபோதனை பெற முனிவர் நால்வர் முன்னமர்ந்துள்ளனர்.

இனி, இத்திருவுருவத் தத்துவமாகிய நுண்பொருட் குறிப்பு யாதென அறிய முற்படுவோம். அவருடைய காலின்கீழ் அழுத்தப்பட்டுள்ள அபஸ்மார புருஷன் மக்களின் அறியாமையைக் குறிக்கிருன். அறியாமை அழுத்தப்பட வேண்டிய ஒன்று என்பதை இது காட்டுகிறது. அவர் கையில் பொதியும் சுவடி

அறிவின் சின்னம். அது ஆன்மாக்களுக்கு அறிவுப் பேற்றை நல்கி உய்விக்க வல்லது. ஜபமாலை தத்துவங்களைக் குறிக்கிறது. பேரிருள் சூழப்படர்ந்து விரிந்துள்ள ஆலமரம் மாயையைக் குறிக்கிறது. ஆன்ம விளக்கம் பெற்று பக்குவம் அடைந்த மகரிஷிகளுக்கு, பாசம் எனும் சம்சார சாகரத்தினின்று விடுபடுதற் பொருட்டு, அவர் உபதேசம் செய்தருளுகின்றார்.

அவர் முன் வலக்கை காட்டும் வியாக்கியான முத்திரை சைவ சித்தாந்தக் கருத்தை ஒரு குறியீட்டுக்குள் முழுமையாக அடக்கி வெளிப்படுத்துகிறது என்றால் அது மிகையாகாது. விலங்கினத்தினின்று மனிதனை வேறுபடுத்திக் காட்டுவனவற்றுள் கட்டை விரலும் ஒன்று. (குரங்குக்கு கட்டை விரல் இருந்தாலும் அது மற்றைய விரல்களைப் போலவே அமைந்துள்ளது.) மனித இனத்தின் சிறப்பு உறுப்பான இக்கட்டைவிரல் ஏனைய நான்கு விரல்களையும் விடுத்து தனித்து நிற்கிறது. இதனுடன் நெருங்கிய தொடர்புடைய ஆள்காட்டிவிரல், விரல்களில் கட்டை விரலுக்கும் அடுத்த சிறப்பைப் பெறுகிறது. கட்டைவிரலும் ஆட்காட்டி விரலும் முறையே பதியையும் பசுவையும் குறிக்கின்றன. ஏனைய மூன்று விரல்களும் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றைக் குறிக்கின்றன. இயற்கையில் ஆட்காட்டி விரல் கட்டை விரல் தவிர்த்த ஏனைய மூவிரல்களுடனும் கூடி இருப்பதுபோல் ஆன்மாவும் இயல்பாகவே மும்மலங்களுடன் கூடியுள்ளது. மனிதனே, தன் முயற்சியினால் ஆட்காட்டி விரலை, அது சார்ந்திருக்கும் மூவிரல்களினின்று விலக்கிக் கட்டை விரலுடன் கொண்டு சேர்க்க வேண்டும். அதுபோல் உயிரே தன்னை மும்மலங்களினின்று நீக்கிக் கொண்டு பதியிடம் சென்று சேரவேண்டும். சைவ சித்தாந்தத்தின் இவ்வரிய, தெள்ளிய கோட்பாட்டினை வார்த்தைகளால் வளர்த்துச் சொல்லாமல் விரல்களாலேயே விளக்கிச் சொல்லும் இறைவனின் அளப்பருங் கருணையையும், அளவில் ஆற்றலையும் எண்ண எண்ண இன்பம் பெருகுகிறது.

"கல்லால மரத்தின் கீழமர்ந்து, நான்கு வேதங்களையும், வேதாங்கங்களையும் கற்ற கேள்வி வல்லோரான சனகாதி முனிவர் நால்வர்க்கும், சொல்லுதற்கரிய முழுமையாகவும், வேதங்கட்கு அப்பாலாகவும், எல்லாமாகவும், அல்லதுமாகவும் முப்பொருள் உண்மையினை—அது இருந்தவாறு தாமே அமைந்து காட்டி—சொல்லாமல் சொன்னவர்..........." என்று அந்நிலையினைக் கீழ்க் கண்ட பாடல் நவில்கிறது.


> " கல்லாலின் புடையமர்ந்து நான் மறையா றங்கமுதற் கற்ற கேள்வி
> வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
> எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி
> சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை
> —வெல்வாம்."

உலகம் உய்ய நல்லாசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். அத்தேவையினைப் பூரணமாய்ப் பூர்த்திசெய்து வருபவர் தத்புருஷ தேசிகர் அவர்கள். அன்னாரின் மணிவிழா மலருக்கு எளியேனின் காணிக்கையாக இச்சிறு கருத்துக் கோவையினைச் சமர்ப்பிக்கிறேன்.

"தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த..."




"உபதேச மந்திரப் பொருளாலே ..."



கரூர் திரு. இராம. சண்முகானந்தா
நிருவாண தீட்சையில்

"தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த..."



மணிவிழாக்குழுத் தலைவர்
திரு. நா. சா. சாத்தப்ப செட்டியார் நிருவாண தீட்சையின்போது



மணிவிழாக்குழுத் துணைத் தலைவர் திரு. சோம. கருப்பன் செட்டியார்,
செயலாளர் டாக்டர் சுப. அண்ணாமலை ஆகியோரின்
நிருவாண தீட்சையின்போது

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
அவர்கள் நடத்திய சாத்திர பாட வகுப்புகளில்
பாடங் கேட்டவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

1. V.K. இராஜகோபாலய்யர் B.A., L.T.,
2. சிவ. பிருந்தா தேவி.
3. வித்வான் O. நடராஜபிள்ளை
4. மு.அ.வீ. வீரப்ப செட்டியார்
5. தமிழ்வள்ளல் மெய்யப்ப செட்டியார்
6. துறைசை ஆதீன—திருஞான சம்பந்தத்தம்பிரான் சுவாமிகள்
7. சித்தாந்த ஆசான்—பகவதிப் பெருமாள் பிள்ளை
8. பண்டித வித்வான்—K.C. தாணு
9. புலவர் அரசு
10. சைவப்புலவர் P.A. நடேசபிள்ளை
11. சி. வள்ளிநாயகம்பிள்ளை B.A.,B.L.,
12. வித்வான் அழகப்பபிள்ளை
13. M.A. பெரும்படையான்பிள்ளை B.A., B.L.,
14. சி.ச. அருணாசலம்பிள்ளை
15. முத்து கரு. அரு. கரு. அருணாசலம் செட்டியார்
16. சுப. திண்ணப்பன் M.A.,
17. பழ. ஷண்முகம் செட்டியார்
18. ச. மெய்யப்பன் M.A.,
19. G. வரதராஜபிள்ளை B.A.,
20. A.P.G. முருகேசன் செட்டியார்
21. A.P.A. வெங்கடாசலம் செட்டியார்
22. சொ. கிருஷ்ணன்
23. ப. மூக்கப்பிள்ளை
24. T.M. நாராயணசாமி பிள்ளை B.A., B.L.,
25. (ஆடூர்) ஆ.சு. கணபதிபிள்ளை
26. பண்டிதமணி கணபதிபிள்ளை
27. பண்டித சுப்பையாபிள்ளை

அந்தர்யாகம்

K. கணேச பட்டர்,
கோவில் ஸ்தானிகம், மதுரை – திருச்சுழியல்.

1. அந்தர்யாகம் பூஜை.

ஹ்ருதயாகாசத்தில் சிவபூஜைக்கு உகந்த ரத்னமயமான மண்டபம் ஒன்று மனதினுல் நிர்மாணம் செய்து, பூஜைக்கு வேண்டிய சாமான்களை மனதிலே சேகரித்து, பிர்மரந்திரத்தில் உள்ள சந்திர மண்டலத்திலிருந்து வருகிற அமிர்த தாரையால் அர்க்கிய பாத்திராதிகளை நிரப்பி, த்வாரபாலகாள், கணேச, குரு வணக்கம் செய்துகொண்டு, மாணிக்கவர்ண நாபிகந்தத்திலிருந்து முளைத்த நீலநிறத் தாமரைத் தண்டின் மேல் எட்டு இதழ்கள் உள்ள தாமரைப்பூ கரணிகையில் குண்டலினி சக்தி ரூபமான, விந்துவாகிற பீடத்தில் நாதரூபமான தீபசிகாகார வடிவமான லிங்கத்தைத் தியானித்து, சக்தியாதி சக்தி பரியந்தம் பூஜை செய்து லிங்கத்தில் வித்யாதேக சிவமூர்த்தியையும் சிவத்தையும் ஆவாஹனுதி க்ரமமாகப் பூஜை செய்யவேண்டும். பரமசிவனை அமிருதத் தாரையால் அபிஷேகம் செய்து, வஸ்த்ரம், ஆபரணம் இவைகளாலும், வைராக்கியம் எனும் சந்தனத்தாலும் அலங்கரித்து அஹிம்சை முதலான எட்டுப் புஷ்பங்களால் ஆராதித்தல் வேண்டும். பின்பு, மனமென்னும் பாத்திரத்தில் பிராணனுகின்ற அக்னியில் அகங்கார தூபம் கொடுக்கவேண்டும். சிவஞானத்தையே தீபமாகக் காண்பிக்க வேண்டும். விஷயங்களிலிருந்து திரும்பிய மனத்தையே நேவேத்திய மாகக்கொடுக்கவேண்டும். ஸுஷும்நா மார்க்கத்தில் பிராண வாயு போய்வருதலையே ஜபமாகச் சமர்ப்பித்துப் பிரதக்ஷணம் நமஸ்காரங்கள் செய்து அவரிடம் அக்னிகார்யம் (அந்தர்யாகம்) செய்ய அனுமதி பெறல் வேண்டும்.

2. அக்னிகார்யம்.

சரீரத்தில் நாபியில் 3மேகலையோடு கூடிய விருத்த குண்டத்தில் இயற்கையாயுள்ள பிரசித்தமான அக்னியைத் தியானித்துச் சிறிது அக்னியை ராக்ஷஸ அம்சத்தினுல் பாவனை செய்து, குண்டத்திலுள்ள அதை நிருதி திக்கில் தியாஜ்யம் செய்து, குண்டத்திலுள்ள அக்னியை நிரீக்ஷணம் முதலானவைகளால் சோதனை செய்து, அதைச் சிவாக்னியின் ஸ்ரூபம் ஆவதற்கு வன்னி சைதன்யத்தை ஹ்ருதயத்துக்குக் கொண்டுபோய், அங்குள்ள

ஞானுக்னியோடு சம்யோஜனம் செய்து, மறுபடியும் த்வாதசாந்தத்துக்குக் கொண்டுபோய் அங்குள்ள பரமசிவனிடம் சேர்ப்பித்து, அந்த தேஜஸ் அக்னியை அநேக ஆயிரம் சூர்யப்ரபை போல் பாவித்து, அந்த ஞான ரூபமான அக்னியைத் திரும்ப நாபி குண்டத்தில் வைத்துச் சிவ சமானமான ஆயுதங்களுடனும் த்யானித்து அந்த அக்னி பகவானுடைய ஹ்ருதயத்தில் ஆஸனம் மூர்த்தி முதலான பூஜைகளுடன் சிவனை ஆவாஹனம் செய்து, ஸுஷும்நா என்ற ஸ்ருவத்தினுல் அமிருதமாகிய ஆஜ்யம் கொண்டு மூல மந்திரத்தினுல் 1008, 108, 28, 8 தடவைகள் ஹோமம் செய்து பின்பு சக்தி மண்டலத்திலுள்ள அமிர்தத்தில் நிறைந்த இதயகமலத்தில் அடையாளம்செய்யப்பட்ட உள்சிருக்கினுல் பூர்ணுஹுதி செய்து அக்னியில் உள்ள சிவனை நாபி மார்க்கத்தில் மறுபடியும் ஹ்ருதய கமலத்தில் பூஜை செய்யப்பட்ட சிவனுடன் சேர்ப்பித்து பூஜையை முடித்தல் வேண்டும்.

3. பின்பு புருவ மத்தியில் சகல அவயவ சம்பூர்ண சுத்த தீப, வடிவமாகப் பூசிக்கப்பெற்ற சிவத்தையும், பூசித்த தன்னையும் ஒன்ருக்கும் சிவோகம் பாவனை என்னும் சமாதியிலிருக்கவேண்டும். இதுதான் அந்தர் யாகம். இது ஆத்மசுத்தியின் பின் பகுதி. இவைகளைச் செய்து கொண்டு தான் வெளிப்பூஜை செய்ய சிவாகமம் இடம் கொடுக்கிறது.

வாழும் வாய் எது ?

செப்பும் புகழ்மிகுதி
சேர்கோலா லம்பூரில்
அப்பனைக் கையில்தண்
டாயுதனை — எப்போதும்
பேசும்வாய் வாழ்வாய்
பிறவாயெல் லாம்இரைக்கு
மூசும்வாய் சாவாய் மொழி.

கோலாலம்பூர், செந்தூல் ஸ்ரீ தெண்டாயுதபாணி பதிகம்
இந்நூல் மணிவிழாச் செல்வர் இயற்றியது.

வயிநாகரம் குடும்ப வமிசாவளி

வயி. நாக. ராம. இராமநாதன் செட்டியார்.

- நாகப்ப செட்டியார் (1820-1882)
  - இராமநாதன் செட்டியார்
    - நாகப்ப செட்டியார்
      - சிதம்பரம் செட்டியார்
        - நாகப்ப செட்டியார்
          - நாகப்பன்
        - சோமசுந்தரம் செட்டியார்
          - லெட்சுமணன்
          - சிதம்பரம்
          - சுப்பிரமணியன்
          - சொர்ணமூர்த்தி
    - வேங்கடாசலம் செட்டியார்
      - * இராமநாதன் செட்டியார்
        - மகள் மீனாட்சி. சொக்கலிங்கம் செட்டியார்
          - மகள் மீனாட்சி.
          - சோமசுந்தர
          - இராமநாதன்
- வேங்கடாசலம் செட்டியார் (1822-1888)
  - இராமநாதன் செட்டியார்
    - சோமசுந்தரம் செட்டியார்
      - கருப்பன் செட்டியார்
        - சோமசுந்தரம் செட்டியார்
          - கருப்பன் செட்டி
      - இராமநாதன் செட்டியார்
        - சோமசுந்தரம்
        - கருப்பன் செட்டி
- அண்ணாமலை செட்டியார்
  - இராமநாதன் செட்டியார்
    - நாகப்ப செட்டியார்
      - இராமநாதன் செட்டியார்
        - நாகப்பன்
        - வேங்கடாசலம்
      - வேங்கடாசலம் செட்டியார்
        - நாகப்பன்
        - சோமசுந்தரம்
        - இராஜாராம்
  - வேங்கடாசலம் செட்டியார்
    - சுப்பிரமணியன் செட்டியார்
- சுப்பிரமணியன் செட்டியார்
  - லெக்ஷ்மணன் செட்டியார்
    - நாகப்ப செட்டியார்
      - லெட்சுமணன் செட்டியார்
        - நாகப்பன்

---

* மணிவிழாச் செல்வர்

சிறு விளக்கும் தீப்பந்தமும்

தேவகோட்டை நகரத்தார் உயர்நிலைப் பள்ளியில் ஆண்டுவிழா நிகழ்ந்தது. அதற்கு மணிவிழாச் செல்வரும் சென்றிருந்தார். விழாவில் சிறப்புரை ஆற்ற வந்திருந்தவர், கரந்தைக் கவியரசு, வேங்கடாசலம்பிள்ளை. அவரை வரவேற்ற உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர், பிள்ளையவர்களின் பெருமையினைக் கூறக்கருதி "நம் ஊர்ப் பாலகவி அவர்கள், வேங்கடாசலம் பிள்ளையிடம் இலக்கியம் கற்ற மாணவர் என்றால், பிள்ளையவர்களின் சிறப்பினைச் சொல்ல வேண்டுமா?" என்று குறிப்பிட்டார். பிள்ளையவர்கள், தம் சொற்பொழிவில், "திருவிழாவில் தீப்பந்தம் ஏந்திச் செல்வார்கள். அகலிடத்தையும், ஆண்டவனின் திருமுகப் பொலிவையும் விளக்கமாகக் காட்டி, ஒளி வீசி விளங்குவது தீப்பந்தம். அதை ஒரு சிறு விளக்கில்தான் கொளுத்திக் கொள்கின்றார்கள். பாலகவி, தீப்பந்தம் போன்றவர். நான் சிறு விளக்குப் போன்றவன்" என்று நயமாகக் கூறித் தமது அவையடக்கத்தைப் புலப்படுத்தினார்.

நோட்டும் ரொக்கமும்

நம் மணிவிழாச் செல்வர், தமது 14ஆம் வயதில், பலவான்குடி மணிவாசகர் சங்க ஆண்டுவிழாவில் சொற்பொழிவு ஆற்றச் சென்றிருந்தார். விழா நிகழ்வதற்கு முன், தம் உறவினரின் இல்லத்தில், சொற்பொழிவுக்காகக் குறிப்பு எழுதிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த அவருடைய உறவினர், திட்டை இராமசாமிச் செட்டியார் (தஞ்சையை அடுத்த திட்டை என்னும் தலத்தில் கோயில் திருப்பணி செய்தவர்) "என்ன எழுதுகிறாய்?" என்று வினவினார். இளம் பேச்சாளர், "பேசுவதற்கு "நோட்ஸ்" எடுக்கிறேன்" என்றார். "நோட்ஸ் எல்லாம் கூடாது. எல்லாம் ரொக்கமாக இருக்க வேண்டும்" என்று சட்டெனக் கூறினார் இராமசாமிச் செட்டியார். அன்று முதல் குறிப்பு எழுதி வைத்துக் கொள்ளாமலேயே பழகி, நிரல்படப் பேசுவதில் வல்லமை பெற்றார் நம் மணிவிழாச் செல்வர்.

வீடு பேறு

வாம தேவ நாம
நா. சா. சாத்தப்ப செட்டியார், ஒக்கூர்.
மணிவிழாக் குழுத் தலைவர்.

குருநாதர் சிவஸ்ரீ தத்புருஷதேசிகர் அவர்களுக்கு மணிவிழா நடத்திக் காண்பது மிகவும் பொருத்தமாகும். தமிழுக்கும் சைவ சமயத்திற்கும் தேசிகரவர்கள் செய்திருக்கும், செய்து கொண்டிருக்கும் சேவை அளவிடற்கரியன. ஆகவே மணிவிழாக்குழுச் செய்யும் இக்காரியம் பாராட்டத்தக்கது.

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள் இளம்பிராயத்திலேயே கல்வி அறிவு பெற்றுக் "கற்றதனுலாய பயனென்கொல் வாலறிவன் நற்றுள் தொழாஅ ரெனின்" என்ற பொய்யா மொழியின் வாக்கிற் கிணங்க, ஞான அறிவு கைவரப் பெற்றுச் சாத்திர தோத்திரங்களையும், வடமொழி ஆகம நூல்களையும் ஓதி உணர்ந்தவர்கள். சமய, விசேட, நிருவாண தீட்சை, ஆசாரியாபிடேகமும் பெற்றுச் சைவ சமய நெறியில் நின்று அதனுல் வந்த இன்பத்தைத் தான் மட்டும் அடைதல் தகாதென்று நினைத்து, திருமூலர் வாக்கின்படி, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று பறைசாற்றி, விரும்பினேர்க்குச் சமய, விசேடத் நிருவாண தீட்சைகள் செய்து அவரவர்களுக்கும் வழி முறைகளை விளக்கமாகச் சொல்லிப் போதித்து வருகின்ருர்கள். தமிழ் மாநிலத்தில் இருப்பவர்களுக்கு மட்டுமின்றிப் பிற மாநிலம், மலேசியா, பர்மா, சிலோன் நாடுகளில் இருப்பவர்களுக்கும் அங்கங்குச் சென்று தீக்ஷைகள் செய்து வைத்து ஆயிரத்துக்கு அதிகமான பெயர்களை நன்னெறிப்படுத்தி இருக்கின்ருர்கள். சைவ சமயச் சொற்பொழிவு சாத்திரச் சொற்பொழிவுகளால் பற்பல இடங்களில் பல்லாயிரக் கணக்கான பேர்களுக்குச் சமயப் பற்றை ஊட்டி இருக்கின்ருர்கள்.

சுமார் 95 ஆண்டுகட்கு முன் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் அரும்பாடுபட்டு மக்களுக்கு நல்லுபதேசம் சொல்லி நன்னெறியில் நிற்கச் செய்தமையைச் சரித்திரவாயிலாகத்

தெரிந்திருக்கிறோம். அந்த முறையில் நமது சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்களும் செய்து வருகின்றார்களென்பதை நேரில் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம்.

சாதாரணமாக உலகியலில் ஓர் ஊர்விட்டு ஓர் ஊர் செல்ல வேண்டுமானால் வழி சொல்ல ஒருவர் வேண்டும். அவரிடம் சென்று கேட்டால் ஊருக்குச் செல்லும் வழியைச் சொல்லுவார். அப்படிக் கேட்டுத் தெரிந்துகொண்டு போனால் அவ்வூருக்குச் சுலபமாய்ப் போய்ச் சேரலாம். "வீட்டிற்கு வாயில் எனுந் தொடை சாத்து சொல்வேந்த" என்று அப்பர் சுவாமிகளை விளித்து சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையில் சொல்கின்றார். இது கொண்டு, வீடுபேறு அடைதற்கான வழியை அப்பர் சுவாமிகளின் தேவாரத்தால் அறியலாம் என்பது தெளிவு. ஆனதால் நாம் வீடுபேறு அடைவதற்கு முயலவேண்டும். முயற்சி இருந்தால் அடையலாம். கீழேயுள்ள முதுமொழியைக் கூர்ந்து நோக்குங்கள்.

தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே

முயற்சியாற் கருமமெல்லாம் முடிந்திடும் எவர்க்குஞ்சால
முயற்சியை யின்றிமற்று முடிவதே தொன்று மின்று
முயற்சியுற் றுழலும் சீயம் முரண்யானை தன்னை யுண்ணும்
முயற்சி யற்றுறங்கின் வாயின் முடுகி வீழ்ந்திடுமோ யானை

என்று முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கின்றார்கள்.

நாம் முயன்று தகுந்த குருவாகிய சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்களிடத்தே அனுகித் தீக்ஷை கேட்டு "நறுமலர் நீருங்கொண்டு நாள்தொறும் ஏத்தி வாழ்த்திச் செறிவன சித்தம் வைத்துத் திருவடி சேரும் வண்ணம்" முயன்றால், வீடுபேறு அடைவது திண்ணம் என்பதை அன்பர்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

இரவகன் றதுகுணத் திரவிமே லமர்ந்தான்
இன்னிசை பாடிநின் றேத்துகின் றார்புன்
கரவினைப் பொருமிருள் கரந்தது நெல்வாய்க்
கறைமிடற் றிறைமிகு காதலோ டீந்த
தரைபுகழ் சிவிகைபெற் றஞ்செழுத் தோதிச்
சமயமின் றமிழ்மிகத் தழைக்கவென் றேறும்
பரைபெறு வெங்குருப் பாலரு வாயெம்
பார்த்திபனே! பள்ளி யெழுந்தரு ளாயே.

— *பாலகவி.*

ஸ்ரீ வரமஹா கணபதி

மந்த்ராக்ஷராவளி ஸ்தோத்திரம்

கா. ம. வேங்கடராமையா, திருப்பனந்தாள்.

உமாதேவியார் ஒருசமயம் சிவபெருமானிடம், “இறைவ, தவம், தியானம் ஹோமம், ஜபம் இவை ஒன்றுமே செய்யாமல் எளிதில் விநாயகரை மகிழ்ச்சியுடையச் செய்வதற்குரிய வழி யாது” என்று கேட்டருளினர்.

சிவபெருமான் உமையைப் பார்த்து:

“மகா கணபதிக்குத் திருப்தியை அளிப்பது; தீய மனத்தினர்க்குக் கிடைக்காதது; தூயோர்க்கு எளிதில் கிடைப்பது; சகல சௌபாக்கியங்களை அளிப்பது; 28 எழுத்துக்கள் கொண்ட மகாகணபதிமந்திரத்திலடங்கிய எழுத்துக்களை வரிசையாக உடையது; இத்தகைய தோத்திரத்தை உன் காது குளிரக் கேட்பாயாக” என்றருளி ஸ்ரீவர மகாகணபதி மந்த்ராக்ஷராவளி ஸ்தோத்திரத்தைக் கூறியருளினர்.

இத்தோத்திர நூல் 32 வடமொழி சுலோகங்களால் ஆயது. முதல் மூன்று பாடல்கள் பார்வதி பரமேசுவரர் பேசிக்கொண்டதாக அமைவனவாம். 4 முதல் 31 முடிய 28 பாடல்களின் தொடக்கத்தில் ஸ்ரீவர மகாகணபதி மந்திரத்தில் கண்ட 28 எழுத்துக்கள் வரிசையாக உள்ளன. அம்முதலெழுத்துக்களை மட்டும் வரிசையாக எழுதிக் கொண்டால் பிற்கண்டவாறு அமையும்:—

“ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே வர
வரத ஸர்வ ஜநம்மே வசமாநய ஸ்வாஹா”

—இதுவே மகாகணபதி மந்திரம். முதல் சுலோகத்தில் உமாதேவியாரின் வாக்கில் கண்டவண்ணம் "தவம் தியானம் ஹோமம் ஜபம் ஆகியவைகளைச் செய்யாமல் விநாயகப் பெருமானை மகிழ்ச்சியடையச் செய்யும் மந்திரம்' இதுவாகும்.

4 முதல் 31 வரை கண்ட செய்திகள் :—

கருப்பஞ்சாறு நிறைந்த கடல். இது ஓங்கார எழுத்துப் போன்று வளைந்த வடிவினது; வெண்மையான அலைகளாகிய மாலைகளையுடையது.

இக்கடல் நடுவில் மணித்வீபம்; இது மிகப் பெரியது; பல பொருள்கள் நிறைந்தது; மிகுந்த மகிழ்ச்சியை விளைவிக்கவல்லது.

இம்மணித்தீவில் கற்பகவிருக்ஷங்கள் அடங்கிய பகுதி; அதில் ஒரு மணி மண்டபம் ; அது ஒளிகளுக்கு இருப்பிடமானது; கதிரவனும் வெள்குமாறு சிறந்த ஒளிகளால் விளங்குவது.

அந்த மணிமண்டபத்தில் மஹா கணபதி விற்றிருந்தருள்வதற்குரிய மணி மயமான ஸிம்ஹாஸநம்.

அதில் எட்டிதழ்த் தாமரை. அது த்வீரா முதலாகிய நவபீட சக்திகளால் வணங்கப்படுவது; தர்மாதிதேவதைகட்கு இருப்பிடமானது ; அகரமுதல் க்ஷகாரம் வரையிலுள்ள 50 எழுத்துக்களின் வடிவமானது.

அந்த எட்டிதழ்த் தாமரையின் நடுவே ஒரு முக்கோண மண்டலம்; அதில் ஸ்ரீகணபதி விற்றிருக்கிறார்; அவர் கடலைப் போன்று கம்பீரமானவர்; மடியில் லக்ஷ்மியை உடையவர்; உதய சூரியன் போன்று செந்நிறமுடையவர்; கதை, கரும்புவில், சூலம், சக்கரம், தாமரைப்பூ, பாசம், நீலோற்பலமலர், நெற்கதிர், ஒடிந்த தந்தம், மாதுளம்பழம், இரத்ன கலசம் ஆகியவற்றைத் தாங்கிய கைகளையுடையவர்; ண என்ற எழுத்திலிருந்து ஆருவது எழுத்தான ந என்ற எழுத்தின் பொருளான இல்லாமையை (வறுமையை) ஒழிப்பதான துதிக்கையுடையவர்; (கன்ன) மதப்பெருக்குடையவர்; ஆனந்த வடிவினர்; அடியவர்தம் இடர் களைபவர்; அறிவுக்கடலாக இருப்பவர் — இத்தகைய மகா கணபதியைத் தரிசனம் செய்து கொள்கிறேன்.

மணிமண்டபத்துக்குக் கிழக்கில் ஒரு வில்வமரம்; அதன் அடியில் ஒரு பீடம்; எல்லா சுபங்களையும் தருகிற லக்ஷ்மி நாராயணர் அங்கு வீற்றுள்ளனர்—அவர்களைத் தியானிக்கிறேன்.

அந்த மணி மண்டபத்தின் தென்திசையில் ஒரு ஆலமரம்; அதன்கீழ் அணிகலன்கள் ஆயுதங்களுடன் உமையோடுகூடிய பரமேசுவரன் வீற்றிருக்கிறார்—அவரை வணங்குகிறேன்.

அந்த மண்டபத்தின் மேற்கில் பிப்பல மரத்தடியில் இணைபிரியாது மிக்க அழகுடன் ரதி மன்மதர்கள் உள்ளனர் — அவர்கட்கு வணக்கம்.

வடக்குத் திசையில் பிரியங்கு மரம் உள்ளது. அங்கு உலகைக் காப்பவர் களும் கம்பீரமான தோற்றத்தையுடையவர்களுமான பூமிதேவியும் ஸ்ரீவராக மூர்த்தியும் உள்ளார்கள் — அவர்களைப் பூஜிக்கிறேன்.

முக்கோணத்துக்கு வெளியில் ஆறுகோணங்கள்; ஹ்ருதயம் சிரஸ் சிகை நேத்ரம் கவசம் அஸ்திரம் என்ற ஆறு அங்கங்களின் தேவதைகள் அங்கு உளர்; அன்னோர் எல்லா திசைகளையும் ஒளி செய்வர் — உடலுறுப்புக்களைக் காப்பாற்று வீராகுக என்று அவர்களைத் துதிக்கிறேன்.

தந்தத்தின் ஒளியாகிய நிலவில் திகழ்பவர்; மதப்பெருக்குடையவர்; *சித்தி* என்னும் மனைவியையுடையவர் — *ஆமோத கணபதி*; இவரை வணங்குகிறேன்.

இரண்டு கன்னங்களிலிருந்து வழியும் மதப்பெருக்காகிற மேகத்தோடிருப் பவர்; மின்னல் போன்று ஒளி செய்யும் "*ஸம்ருத்தி*" என்ற மனைவியையுடை யவர்-*ப்ரமோத கணபதி*; இவரைச் சிந்திக்கின்றேன்.

ஒளி மிகுந்தவர்; *காந்தி* என்ற மனைவியுடையவர்; (அடியவர்க்கு நிழல் செய்து ஆறுதலளிக்கும் கற்பகவிருக்ஷமாக இருப்பவர் — *ஸுமுக கணபதி*; இவரை வணங்குகிறேன்.

சந்திரன் போன்று குளிர்ச்சி பொருந்தியவர்; பருத்த வயிறுடையவர்; *மதனுவதீ* என்ற மனைவியுடையவர் — *துர்முக கணபதி*; இவர்க்கு வணக்கம்.

இந்திரனுல் பூசிக்கப்பெற்றவர்; உலகுக்கு மங்களம் உண்டாக்குபவர்— *மதத்ரவா, விக்நன்*; இவ்விருவரையும் பாவங்கள் தொலைதற் பொருட்டு வணங்கு கிறேன்.

தேவாசுரர்களால் வணங்கப் பெறுபவர்; சிருங்கார ரசத்தால் அழகு டையவர் — *த்ராவிணிதேவி, விக்நக்ருத்* என்ற கணபதி — இவ்விருவரும் ஏழ்மை யை ஒழிப்பாராகுக.

ஆறுகோணத்தின் வலது பக்கத்தில் *வஸுமதி* (வஸுதாரா) *சங்கநிதி* என்ற இருவர் உளர்; இவர்கள் பக்தர்களுக்கு நன்முத்துக்களைப் பொழிவர்; இவ்விருவரையும் சொன் மலரால் துதிக்கின்றேன்.

ஆறுகோணத்தின் இடதுபக்கத்தில் *வஸுதா, பத்மநிதி* என்ற நிதி தேவதைகள்; இவர்கள் இளஞ்சூரியன்போன்று செந்நிறம் உடையவர்கள்; தம்மை வணங்குவார்க்கு இரத்தின மழை பொழிபவர்; இவ்விருவருக்கும் வணக்கம்.

(எட்டிதழ்த் தாமரையில்) பிராம்மீமுதலிய சக்திகள் உளர்; அவர்கள் மனக்கவலை, உடற்பிணி ஆகியவற்றைப் போக்குவர்; தொடர்ச்சியாக இன்பம் தருவர்; உடல் உள்ளம் இவற்றின் வளர்ச்சிக்காக அச்சக்திகளை வணங்குகிறேன்.

இந்திரன் முதலாய எட்டுத் திசை காப்பாளர்கள் :- இவர்கள் அதிக பலம் உடையவர்; ஐராவதம், வஜ்ராயுதம் முதலியன உடையவர்; இவர்களால் வணங்கப்பெறும் ஸ்ரீ மகா கணபதியை வணங்குகிறேன்.

புதிய தளிரைப்போன்ற சிவந்த உடலையுடையவர்; மதத்தால் நனைந்த கன்னமுடையவர் யாகம் செய்பவர்- யாகம்; யாகத்தால் பூசிக்கப்படும் தேவதை ஆகியவைகளாக இருப்பவர்; எல்லோரையும் அடக்கி ஆள்பவர்; தன்னடக்கம் உள்ளவர்களால் வணங்கப் பெறுபவர்; தன்னடைந்தார்க்கு எளியர்; பேராநந்த வடிவினர்; தானே தோன்றியவர்; ஸ்வயம் ப்ரகாசர்; ஸ்வயம் சக்தர்; முத்தொழிலும் செய்பவர்; முத்துமாலை கண்டாபரணம் கைவளைகள் தோள்வளைகள் கர்ண குண்டலங்கள் ஆகியவற்ருல் அலங்கரிக்கப் பெற்றவர்; விக்நங்களைப் போக்குபவர்—ஸ்ரீவர மஹாகணபதி; இவரை நான் வணங்குகிறேன்.

32-வது சுலோகத்தில்: "இதுகாறும் மந்த்ராக்ஷராளி ஸ்தோத்திரம் கூறப்பெற்றது; எல்லாவிதமான அபீஷ்டங்களையும் மங்களங்களையும் இந்தத் தோத்திரத்தைப்படித்து அடைவாயாக" என்று கூறப்பட்டுள்ளது.

இதுகாறும் கூறியவற்றின் சுருக்கம்:

கருப்பஞ்சாறு நிறைந்த கடல்-அதில் மணித்தீவு-அதன் கண் மணி மண்டபம்- அதில் மணி மயமான ஸிம்ஹாஸநம்- அதில் எட்டிதழ் தாமரை- அதன் நடுவில் முக்கோண மண்டலம்- அங்குக் கணபதி வீற்றிருக்கிருர்.

மணி மண்டபத்தின் கிழக்கில்—வில்வ மரத்தடியில் லக்ஷ்மீ நாராயணர்; தெற்கில்—ஆலமர நிழலில் உமா பரமேசுவரர்; மேற்கில் பிப்பல மரத்தடியில் ரதிமன்மதர்; வடக்கில் பிரியங்கு மரத்தடியில் பூமிதேவி வராகமூர்த்தி.

முக்கோணத்துக்கு வெளியில் ஆறு அங்கங்களின் தேவதைகள் உளர்; சித்தியோடு ஆமோதகணபதி, ஸ்ம்ருத்தியோடுப்ரமோத கணபதி, காந்தியோடு ஸுமுக கணபதி, மதனுவதியுடன் துர்முக கணபதி, மதத்ராவுடன் விக்நகணபதி, த்ராவிணியோடு விக்நக்ருத் கணபதியும் உளர்.

ஆறு கோணத்து வலதுபக்கம் சங்கநிதியும், இடதுபக்கம் பதும நிதியும் உளர்.

எட்டிதழ்த் தாமரையில் பிராம்மீ முதலிய சக்திகளும், எட்டுத் திசை காப்பாளரும் உளர்.

இவற்றின் நடுவில் ஸ்ரீவரமஹாகணபதி வீற்றிருக்கிருர்.

நன்றியுரை:

இங்ஙனம் அமைந்த இத்தோத்திர நூல் மேலும் இரு கணபதி தோத்திர நூல்களுடன் வெளியிடப் பெற்றுள்ளது. வெளியிட்டோர்: ஸ்ரீ அழகிய கன்னி விநாயகர் கோவில் டிரஸ்ட், தோவாளை அஞ்சல், கன்யாகுமரி மாவட்டம். இலவச வெளியீடு; தமிழாக்கத்துடன் கூடியது; தமிழாக்கம்: திரு. வி. எஸ். வி. குருஸ்வாமி சாஸ்திரிகள். இக்கட்டுரை எழுத உதவியாயிருந்த இந்நூல் பதிப்பாளர்க்கும் உரையாசிரியர்க்கும் நன்றி.

இந்நூலைப் பெற்றுப் படித்து ஸ்ரீவர மஹா கணபதியின் அருளை அன்பர்கள் பெறுவாராகுக.

விநாயகனே வெவ்விணையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினல்
கண்ணிற் பணிமின் கனிந்து.

எண் குணம் யாவை?

சிவபெருமான் சாத்துவிகம், இராசதம், தாமதம் ஆகிய குணங்கள் இல்லாத நிர்க்குணராயிருந்தும், முற்றறிவு, வரம்பில் இன்பம், பாசநீக்கம், தன்வயம், பேரருள், முடிவில் ஆற்றல், இயற்கை உணர்வுடைமை தூய உடம்பு உடைமை ஆகிய எண் குணத்தராய் இலங்குகின்ருர். அவரது முற்றறிவு, ஆன்மாக்களின் பக்குவ அபக்குவங்களை அறிந்து, அவற்றிற்கேற்ப, அருள்புரிவதற்குச் சாதனமாயிருக்கும். வரம்பிலின்பம், அழிந்து போகின்ற இன்ப துன்பங்களிற் பட்டு அல்லலுறும் உயிர்களுக்கு, ஆரா இன்பத்தை வழங்கும். பாசநீக்கம், அவற்றை உடைய உயிர்களுக்கு, அவை நீங்குமாறு செய்யும். தன் வயம், எதையும் பிறர் உதவியின்றி முடிப்பதற்கு அனுகூலமாயிருக்கும். பேரருள், பட்சபாதமின்றி, எல்லா உயிர்களின் உய்தியிலும் திருவுளத்தை நிறுத்தும். முடிவிலாற்றல், கருவி காலமாகிய துணைகள் இன்றி, எப்போதும் எதையும் எண்ணத்தினலேயே முடிப்பதற்கு முன்னிற்கும். இயற்கையுணர்வு, பிறர் அறிவிக்காமலேயே, எல்லாவற்றையும் அறியும். தூய உடம்பு தோற்றக் கேடுகளுக்கு இடமில்லாததாய் அருள் வடிவமாய் விளங்கும்.

- யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின்
சைவ மாநாட்டுத் தலைமையுரையில்
மணிவிழாச் செல்வர்.

"தேடிக் கண்டு கொண்டேன்"

தத்புருஷ தேவ நாம. திரு. ராம. சண்முகானந்தா,
கருவூர்.

○●○

சைவ சமயாசாரியர்களாலும், சந்தானுசாரியர்களாலும் தழுவிக் கொள்ளப் பெற்ற திருக்குறளை உலகிற்கு வழங்கியருளிய தெய்வப் புலமைத் திருவள்ளுவ தேவநாயனுரை குருநாதராகக் கொண்டு, சாத்திரப் பாடங்களுடன் திருக்குறளையும் கற்றுப் போற்றி, தொன்மை மரபுப்படி திருவள்ளுவ தேவநாய ஞருக்கு திருவுருவப்படம் எழுதச்செய்து, அதனை இல்லத்தில் நிறுவி, இல்லத் திற்கும் "திருவள்ளுவரகம்" எனப் பெயர் சூட்டித் தினந்தோறும் நாட்பூசனை யும் ஆண்டுதோறும் மாசியுத்திரத்தில் குருபூசையும் செய்து மகிழ்ந்து வந்தார் எம் தந்தையார் சிவத்திரு. கோ. தெ. இராமசாமி முதலியார் அவர்கள். இந் நாளில் பழைய மரபைக் கைவிட்டுவிட்டு திருவள்ளுவ தேவநாயனுர் திருவுரு வத்தை தத்தம் கருத்துக்களுக்கேற்ப திரிபு செய்து எழுதி வருகிருர்கள். எம் தந்தையார் எழுதுவித்து இன்றும் எங்கள் இல்லத்தில் பூசையில் இருந்து வருகிற திருவள்ளுவ தேவநாயனுர் திருவுருவப்படம் அப்பெருமானது வாழ்க்கை யையும் திருவாக்கையும் புலப்படுத்தும் முறையில் விபூதி, உருத்திராக்க தாரணம், சடைமுடி, சின் முத்திரை, அக்கமாலை ஆகியவற்றுடனும் சடைமுடியில் சிவலிங்கத் திருவுருவக் காட்சியுடனும் அமைக்கப் பெற்று விளங்குகிறது. எங்கள் குலகுருவிடம் முறைப்படி சிவதீட்சைகள் பெற்று எம் அன்னையார் அவர்களுக்கும் தீட்சை செய்வித்து வாழ்ந்து வந்ததோடு கருவூருக்கு அண்மையிலுள்ள வெண்ணெய்மலை ஸ்ரீமுருகப் பெருமான் மீது "திருவெண்ணெய்மலை முருகரந்தாதி" என்ற நூல் ஒன்றை இயற்றி சைவா நுஷ்டானங்களைக் கைக்கொண்டு, நெசவுத் தொழில், வணிகம், அச்சகம் ஆகியன திருவள்ளுவர் பேராலமைத்து சைவநெறியில் வாழ்ந்து, வந்த எல்லோ ருக்கும் குறள்நெறி போதித்து, சன்மார்க்க சைவர்களாக்கி நல்வாழ்வு வாழ வழிவகுத்த எம் தந்தையார் செய்த நற்செயல்களால் அவருக்கு மூன்ரும் ஆண்மகனுகப் பிறக்கும் பேறுபெற்ற யான் சைவநெறிப்படி தீட்சைகள் பெற்று அநுட்டித்து வர விருப்பங் கொண்டிருந்தேன்.

எங்கள் குல குருவாகவிருந்த ஆசாரியர் சிவத்திரு இம்முடி. பரஞ்சோதி சுவாமிகள் பரிபூரண மெய்திய பிறகு, அவர்களது வழித் தோன்றல்கள்

ஆசாரியாபிஷேகம் பெற்றுக் கொள்ளாமையால் எனக்கு குருநாதரைத் தேடும் பொறுப்பு ஏற்பட்டது. மணிவிழாச் செல்வரின் குருநாதரும் எனது ஞான பரம்பரைப் பாட்டனருமான சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளிடம் செல்லப் பலமுறை முயன்றேன். அதற்குரிய பேறு அந்த வேளையில் முற்றுப் பெருமை யாலோ, என்னவோ அவர்களைத் தரிசிக்கும் வாய்ப்பு கிட்டாது போயிற்று,

பின்னர் திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய ஆதீன கர்த்தர்களாகிய குருநாதர்களிடம் தீட்சை பெற்றுக் கொள்வது பொருத்தமாயிருக்குமென்று எண்ணி எம்வித்யாகுரு. சிவத்திரு அ. கணபதிஐயா அவர்களுடனும் மற்றும் பல அன்பர்களுடனும் சென்றபோது ஆதீனங்களின் வாயிலினுள் நுழையும் வாய்ப்பே பெறமுடியவில்லை. அங்குள்ள நிர்வாகி அவர்கள் ''உங்கள் போன்ற வர்கட்கெல்லாம் ஆதீன கர்த்தர்கள் தீட்சை செய்து வைக்க மாட்டார்கள்: சிவராத்திரி நாளில் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் ஞான தீட்சைதான் செய்து வைப்பார்கள்'' எனக் கூறக் கேட்டு மிகவும் மனம் நொந்து திரும்பி வந்தேன்.

இந்நிலையில் தேவார, திருவாசகங்களையும் மற்றும் சைவ சாத்திர நூல் களையும் படித்துவரும் போது, சிவாகமங்களின் சாரமாகிய 'சைவ சமயநெறி' என்னும் நூலில்

''சந்யாசி பாரியுட னேவனத்தில் தங்குமவன்
என்னுமிவர் தேசிகரன் றே.'' எனவும்
''பிர்ம்மச்சரி க்ருஹி என்னவே பேசும்
இருவருமே தேசிகரென் றெண்.'' எனவும்

வருகின்ற குறட்பாக்கள் சிவதீட்சைகள் செய்து வைக்கத் தக்க குருநாதர் ஆசிரமங்களைப் பற்றி கூறியிருப்பதுகண்டு, ஆதீனகர்த்தர்களிடம் சென்று, முயன்று முடியாமற் போனது விதியைக் கடைப்பிடிப்பதாகிய ஓர் நன்மைக்கே என்று மகிழ்ந்து சிவபெருமான் நம்மை மரபு வழுவாமலிருக்கச் செய்திருக்கிருர் என்ற திருவருட் குறிப்பைப் பெரிதும் உணர்ந்து கொண்டேன்.

இல்லற நெறியில் நிற்பவனுகிய எனக்கு அவ்வில்லற நெறியே கடைப் பிடித்தொழுகும் குருநாதர் ஒருவர் அமைவதே பொருந்தும் என்ற முடிவு தோன்ற அதன் பின்னர் அதற்கான முயற்சியிலீடுபட்டேன். சிவாச்சாரியர்க ளாகிய குருக்கள்மாரிடம் தீட்சை பெற்றுக்கொள்ளலாம் எனக்கருதி என்னிடம் நெருங்கிப் பழகுகின்ற குருக்கள் ஒருவரிடம் சென்று கேட்டபோது அவர் தனக்குச் சிவதீட்சை செய்து வைத்துப் பழக்கமில்லை யென்றும், மற்ருெரு குருக்களைக் கொண்டு தானும் கூடஇருந்து செய்து வைக்க ஏற்பாடு செய்யலா மென்றும் கூறித் தங்களிருவருக்கும் செய்ய வேண்டிய சம்பாவனைத் தொகை முதலியவற்றை அதிகமாக வலியுறுத்திஞரேயன்றி தீட்சைக்குரிய திரவியங்கள் முதலியவற்றில் ஈடுபாடு கொண்டாரில்லை. அதனுல் அவரிடமோ, அவரால் குறிப்பிடப் பெற்றவரிடமோ எனக்கு நாட்டஞ் செல்லவில்லை.

பின்னர் ஈரோட்டில் நிகழ்ந்த சைவ சித்தாந்த மகாநாடு ஒன்றிற்கு நம் மணிவிழாச் செல்வர் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் எழுந்தருளி அருளுரை வழங்குகிருர்கள் என்று கேள்வியுற்று யானும்எம் வித்யாகுரு. சிவத்திரு அ. கணபதிஐயா அவர்களும் ஈரோடு சென்றிருந்தோம். அம்மகா நாட்டில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமை தாங்கி

''இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை''

என்ற திருவள்ளுவ தேவ நாயனுர் திருவாக்கிற் கேற்ப வாழ்ந்து வரும் நம் மணிவிழாச் செல்வரை அறிமுகப் படுத்தும்போது அவர்களது சாத்திர ஞானம், இலக்கண, இலக்கியப் புலமை முதலியவற்றையும் ஆசாரியபிஷேகம் வரை பெற்று நியமமாக சிவபூசை செய்து வருவதுடன் நம்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல அன்பர்களுக்குச் சிவதீட்சை செய்து வைத்து அவர்களைச் சிவநெறிப்படுத்தும் சிறப்பையும் கூறியருளினுர்கள். அதனைச் கேட்டவுடன் இஞ்ஞானுசிரியரிடம் தீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்து இதனை எம்வித்யாகுரு சிவத்திரு. அ. கணபதி ஐயா அவர்களிடம் தெரிவித்தேன். அவர்களும் மணிவிழாச் செல்வரிடம், ''இவர் தீட்சைபெற என்ன செலவாகும்? எவ்வளவு குருகாணிக்கை செலுத்த வேண்டும்?'' எனக் கேட்டார்கள். அதற்கு மணிவிழாச் செல்வர் அவர்கள் தீட்சைச் செலவுத் திட்டம் பற்றிக் குறிப்பிட்டு, ''சீடன் வைக்கும் காணிக்கையின் அளவைப் பொருட்படுத்துகின்ற குருவும், தனது தகுதிக்குக் குறைவாக காணிக்கை வைக்கின்ற சீடனும் குறித்த பயனைப் பெற மாட்டார்கள். அதனுல் நம்முடைய குரு பாரம்பரியத்தில் காணிக்கை பற்றிச் சிந்திப்பதில்லை.'' என்றும் ''தீட்சைக்குரிய திரவியங்களைக் குறைவின்றித் தயாரித்துக் கொண்டு, காணிக் கையைச் சீடர் தகுதிக் கேற்ப வைக்கலாம்'' என்றும் கூறியருளினுர்கள். இவர்களது எளிய கருணை உள்ளப் பண்பைக் கண்டு, கேட்டுப் பேருவகை யடைந்தேன்.

அதன் பின்னர் குரோதன ஆண்டு ஆனிமீ 29உ ஞாயிறு 12-7-1964ல் மணிவாசகர் திருநாளன்று தேவகோட்டையில் எனக்கும், என் மனைவி மீனுட்சிக்கும் சமய, விசேட தீட்சைகள் செய்து க்ஷணிகலிங்கபூசை எழுந்தருளுவித்து அருளினுர்கள். அச்சிவ தீட்சைப்பேறு பெற்ற யானும் என் மனைவியும் நாள்தோறும் அநுட்டானுதி, சிவபூசை செய்து வருவதைக் கண் ணுற்ற எம் புதல்வர்களான 19 வயது நிரம்பிய இரா. ச. பரஞ்சோதியும், 17 வயது நிரம்பிய இரா. ச. நேமநாதனும் தங்களுக்கும் தீட்சைகள் செய்வித்து அருளக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் விருப்பத்திற்கிணங்க 9-1-1965ல் அவர்களிருவருக்கும் சமய, விசேட தீட்சைகள் செய்து க்ஷணி கலிங்க பூசை எழுந்தருளுவித்து எங்கள் இல்லத்தில் மேலும் சில அன்பர் களுக்குச் சிவதீட்சைகள் செய்து வைத்தருளினுர்கள்.


1966–ல் சித்தாந்த சாத்திரப் பாடங் கேட்கும் ஆர்வம் மிகுந்த எனக்கும் என்மனைவிக்கும் விசுவாவசு ஆண்டு மார்கழித் திங்கள் 21–ம் நாள் 5-1-66 நன்னாளில் கருவூரில் எங்கள் 'திருவள்ளுவரக'த்தில் நிர்வாண தீட்சை செய்து உடையவர் பூசை, மெய்கண்ட சாத்திரம் எழுந்தருளச் செய் தருளினார்கள். அதுபோது எங்களுக்கு எழுந்தருளுவிக்கப் பெற்ற பரிவார மூர்த்திகளில் குருஸ்தானத்தில் திருவள்ளுவ தேவநாயனாரும் இடம் பெற் றுள்ளார். நிர்வாண தீட்சையின் பூர்வாங்க, உத்திராங்கக் கிரியைகள் நிகழ்ந்த இருநாட்களிலும் இன்னும் சில அன்பர்களுக்குச் சமய, விசேட தீட்சைகள் பெறும் வாய்ப்பு கிடைத்தது.

எனது ஆன்மார்த்த பூசை முதலானவற்றைப் பார்த்த எங்கள் மர பினர் ஒருவர் தமது புதல்வன் திருமணத்தை நடத்தி வைக்கும்படி கேட்டார். அதற்குயான், ''தன்னளவில் மட்டும் பயன் தரத்தக்கதாகிய நிர்வாண தீட்சை வரைதான் நான் பெற்றிருக்கிறேன். பிறருக்கு எதையும் செய்து வைக்கும் உரிமையைத் தருகின்ற அனுமதியை எனது ஞானாசாரியரிடம் பெற்றால்தான் உங்கள் புதல்வன் திருமணத்தை நான் செய்து வைக்க முடியும்'' என்று அவ ரிடம் சொல்லி, பின்னர் இதனைக் குருநாதர் அவர்களிடம் கேட்டபோது பின் வந்த சௌமிய ஆண்டு மாசி மாதத்தில் 23ம் நாள் 6-3-1969 சிவராத்திரித் திருநாளன்று அவர்கள் சைவ சோடசக் கிரியைகளை செய்து வைக்கும் உரிமையை எனக்கு வழங்கி சாதகாபிஷேகம் செய்து வைத்தருளினார்கள். அன்று சில அன்பர்களுக்குச் சிவதீட்சைகள் பெறும் வாய்ப்பும் கிட்டியது.


யான் பலகால் முயன்றும், அன்பர்கள் பலர் உதவியுடன் பல ஊர் களுக்குப் பெரும் பயணச் செலவுகள் செய்தும் எய்தப் பெறாத சிவதீட்சைப் பேற்றை எங்களுக்கு வழங்கி அருளியவர்களும் நால்வர் காட்டும் நன்னெறியில் வாழ்பவர்களுமாகிய ''என் ஞானாசாரியரைத் தேடிக் கண்டு கொண்டேன்''. என்று இக்கட்டுரை மூலமாக அன்பர்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியுறு கின்றேன்.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற முதுமொழிக் கேற்பப் பலரும் நம் ஞானாசாரியரிடத்தில் தீட்சைகள் பெற்று முத்தியின்பத் திற்கு அடிகோலிக் கொள்க' என்று வேண்டுகிறேன்.


நம் ஞானாசாரியர் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் திருமேனி நலத் துடன் பல்லாண்டு வாழ எம் ஆன்ம நாயகராகிய (ஆநிலையப்பர்) ஸ்ரீ அலங்காரவல்லி, ஸ்ரீ சௌந்தரநாயகிசமேத ஸ்ரீ கல்யாண பசுபதீசுவர சுவாமியை மனம், மொழி மெய்களால் முறையே சிந்தித்து, வாழ்த்தி, வணங்கு கிறேன்.



தலைவர்
வாமதேவநாம
திரு. நா. சா. சாத்தப்ப செட்டியார்,
ஒக்கூர்.




துணைத்தலைவர்,
தத்புருஷ தேவநாம
திரு. வயிநாகரம் சோம கருப்பன் செட்டியார்
அமராவதிபுதூர்.



துணைத்தலைவர்,
அகோர தேவநாம
திரு. அரு. மு. மு. அருணாசலம் செட்டியார்
காரைக்குடி.

மணிவிழாக் குழுவினர்



பொருளாளர்
ஈசான தேவ நாம
சொ. தீ. சொ. மு. சொக்கலிங்கம் செட்டியார்
இராமச்சந்திரபுரம்.



செயலாளர்
ஈசான தேவ நாம
டாக்டர் சுப. அண்ணாமலை
தேவகோட்டை.

திருவருள் பெறும் வழி

தத்புருஷ தேவ நாம இராமலிங்கம்,
சீகம்பட்டி.

சிவபெருமான் ஒருவரே பிறவாதவர். இறவாதவர். இன்பமே உள்ளவர். ஈரடியால் மூவுலகையும் அளந்தவனும் காண முடியாதவர். மேரு மலையை வில்லாக வளைத்தவர். பிரமன் தலையைக் கிள்ளியவர். எமனை உதைத்தவர். மன்மதனைக் காய்ந்தவர். முப்புரத்தைச் சிரித்து எரித்தவர். இன்னும் எண்ணிலாத பெருமையுடையவர். அவருக்குச் சமமான தெய்வம் இல்லை. உயிர்களாகிய நாம் பிறந்தும் இறந்தும் துன்ப அலைகளையுடைய பிறவிக்கடலினின்றும் கரையேற மாட்டாது தவிக்கிறோம். இந்தத் துன்பம் நீங்கிப் பிறவாமலும் இறவாமலும் இருக்க வேண்டுமென்றால் நீலகண்டராகிய சிவபெருமான் திருவடியைச் சாரவேண்டும். சார்ந்தாரை மரணம் பிறப்பு என்ற இவ்விரண்டையும் ஒழித்துத் தன்னைப் போலவே சிவமாக்குவார். இவ்வுண்மையை ஒரு வாசகமும் இணையில்லாத திருவாசகம் பாடிய கருணைமலையாகிய ஸ்ரீமாணிக்க வாசக சுவாமிகள், திருக்கோத்தும்பி 9வது பாட்டில் அருளிச் செய்கின்றார்.

கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தான்எனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

இந்தப் பாட்டில் கறைமிடற்றன் என்னும் சொல் மிகவும் அருமையானது. திருப்பாற் கடலிலிருந்து விஷம் வந்த போது விஷ்ணு முதலான தேவர்கள் பயந்து ஓட்டம் பிடித்துச் சிவபெருமானிடம் சென்று முறையிட்டார்கள். கருணை மூர்த்தியாகிய பெருமான் அவர்களுக்கு வந்த கண்டத்தை நீக்கி விஷத்தைத் தமது கண்டத்தில் நிறுத்தியருளினார். அது முதல் அவருக்குக் கறைக்கண்டன் என்னும் திருநாமம் விளங்குகிறது. இந்நிகழ்ச்சியை உண்மையும் சுவையும் ததும்பக் கூறுகின்றார் குமரகுருபர சுவாமிகள். விஷத்தைச் சாப்பிட்டுச் சிவ பெருமானது கண்டம் கறுப்படைந்து பொன்னுலகத்தைக் காப்பாற்றியது. இவருடைய கழுத்துக் கறுப்பாகவில்லையானால் தேவமாதர்களுடைய கையும் மார்பும் சிவந்திருக்குமாம். தேவர்கள் இறந்து விடுவார்கள். அவர்கள் மனைவிமாரெல்லாம் கையால் மார்பில் அடித்து அழுவார்கள். அதனால் கைகளும் மார்பு

களும் சிவந்து விடும் என்ற சாதுரியம் நினைவுகூரத்தக்கது. சிவபெருமானது பெருங்கருணையையும் சர்வ வல்லமையையும் வேதங்களும் கூறமுடியாமல் இளைக்கின்றன. விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ, ஒருவரும் உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய் என்று புறச்சமய நூலாகிய சிலப்பதிகாரமும், கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே என்று திவ்யப்ரபந்தமும் கூறுகின்றன. இவற்றை உணர்கின்ற சைவர்களாகிய நாம் எவ்வளவு பெருமிதம் கொள்ள வேண்டும். விஷ்ணு முதலாகிய தேவர்கள் அனைவரும் சிவபெருமானைப் பூஜை செய்துதான் ஒவ்வொரு பதவிகளைப் பெற்று வாழ்கிறார்கள். துர்வாசர் கொடுத்த மாலையை இகழ்ந்த தேவேந்திரனைப் பார்த்து துர்வாசர் கூறுகின்றார்:

வண்டுளரும் தண்டுழாய் மாயோன் இறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்
அண்டர் தொழ வாழுன்னிறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்

சைவர்களாயிருப்பவர்கள் சிவபூசை பண்ணுகிறவர்களில் சிலர்கூட வேறு தெய் வங்களை அதிலும் மிக இழிந்த துஷ்ட கிருத்தியமும், கும்பிடுகிறவனைக் கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையையுமுடைய, வீணே பலிகவர்கின்ற அப்பாவித் தெய்வங்களை வணங்குகிறார்கள், நம்புகிறார்களென்றால் இது மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயம். வியாச முனிவர் வேதபுராண சாஸ்திரம் சக லமும் கற்று அறிந்து இயற்றியுமருளியவர். அவர் காசிக்குச் சென்றார். திரு நந்திதேவர் அவரைப் பார்த்து யார் பரம்பொருள் என்று கேட்டார். அப்போ தவர் திருமாலே பரம்பொருள் என்று கையைத் தூக்கினார். உடனே நந்தி தேவர் தூக்கிய கையை தூக்கியபடியே நிறுத்தி விட்டார். பதினெட்டுப் புராணங்களிலே சிவபெருமானுக்கு மாத்திரம் பத்துப் புராணம் சொல்லிய நீ பொய் கூறலாமா என்றார்.

ஐயிரு புராணநூல் அமலர்க் கோதியும்
செய்ய பன்மறைகளும் தெரிந்து மாயையால்
மெய்யறு சூள்புகல் வியாதன் நீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவோம்

என்று கச்சியப்ப முனிவர் பாடுகிறார். இவற்றைப் படித்துணர்கின்ற சைவர்கள் கனவிலும் வேறு தெய்வத்தைக் கருத மாட்டோம் என்ற உறுதி கொள்ள வேண்டும். கல்லால் நீழல் அல்லாத்தேவை, நல்லார் பேணார் அல்லோம் நாமே, என்று திருஞானசம்பந்த சுவாமிகள் அருளுகின்றார்கள். மேலே சொன்ன விஷயங்கள் தெளிவு படவேண்டுமானால் ஞானசாரியராகிய சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரிடம் கேட்டு உணர வேண்டும். எவ்வளவு நூல்கள் படித்தாலும் குரு வாக்கியத்தைப் பெறாதவனுக்குத் தெளிவு பிறக்காது. பகு சாஸ்திரம் பகுகிலே சமாம்,

ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்
பெருகுதவம் சித்திஎலாம் பெற்றும்—குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்த சலனமாந் தினம் என்பார் குருஞானசம்பந்தர்.

கல்லெறியப் பாசி கலைந்து நன்னீர் காணும் நல்லோர் சொல்லுணரின் ஞானம் பராபரமே என்பார் தாயுமானவ சுவாமிகள்.

சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்க்குநலம் வந்துறுமோ—ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு.

என்றருளுகின்றது திருக்களிற்றுப் படியார்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே

என்கிறது திருமந்திரம்.

ஒன்றுமில்லாத நம்மையும் எல்லாமுடைய அவரையும் ஒன்று படுத்தி வைக்கும் பேரருளாளர் யாரோ அவர்தான் சாலப் பெரியார். அப்பெரியாரைத்தான் குருவென்றும், தேசிகரென்றும், ஞானசாரியரென்றும் நம்முடைய ஞானநூல்கள் கூறுகின்றன. பாண்டி நாட்டு முதலமைச்சர் ஞானசாரியர் எப்பொழுது வருவார் என்றே எண்ணிக் கொண்டிருந்தாராம். பரஞ்சோதி முனிவர் பாடுகிறார். அது

வேதவாகமச் சென்னியில் விளைபொருள பேதம்
பேதமாகிய பிணக்கறுத் திருட்பிணி யவிழ்த்து
நாதனாகிய தன்னையு மென்னையும் நல்கும்
போதனாகிய குருபரன் வருவதெப்பொழுதால்

என்பது.

இதற்கடுத்த பாட்டில் மிக உறுதியான கருத்து வருகிறது. அஃதாவது புணையில்லாமல் கடலைக் கடக்க முடியாது. அதுபோல் குருவருளில்லாமல் பிறவிக் கடலைக் கடக்க முடியாது என்று பேசுகிறார். சுவாமியைக் கும்பிட்டால் போதுமென்றும் குருஎன்று ஒருவர் வேண்டியதில்லை என்றும்—நாம்தாம் படித்திருக்கிறோமே என்றும் எண்ணிக் காலத்தை வீணே கழிக்கின்றார்கள். இவர்களை எண்ணி முந்நூற்றறுபது நாட்கள் அருளைச் சிந்தித்து, ஒரு பாட்டுப் பாடுகிறார் திருமூலதேவநாயனார். அப்பாட்டு

சிவனை வழிபட்டோர் எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட் டங்காமா றென்றில்லை
அவனை வழிபட்டு ஆமாறு காட்டும்
குருவை வழிபடல் கூடலுமாமே

இதனுல்தான் முன்னைய பள்ளிப் படிப்பில் குருவே துணை என்று கூறினுர்கள். குருவின் துணையில்லாமல் சிவனருளைப் பெற முடியாது என்பது திண்ணம். உயிர்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூன்று பிரிவினர்களாவார்கள். விஞ்ஞானகலருக்குத் தன்மையில் சோதி வடிவாயும், பிரளயாகலருக்கு முன்னிலையில் தோடுடைய செவியன் முதலாகிய கோலத் தோடும், சகலராகிய நமக்குப் படர்க்கையில் நம்மைப் போலவே மானுடச் சட்டை சாத்தியும் நின்று சிவபெருமான் அருள் புரிவார் என்று நம்முடைய ஞான நூலாகிய சிவஞான சித்தியரர் கூறுகின்றது. தரையிலாசான் மூர்த்தி யாதாரமாகித் தரித் தொழிப்பன் மலஞ் சதுர்த்தா சத்திநி பாதத்தால் என்பது அது. ஆகவே சிவகுருவைத் திருவருளால் அடையப் பெற்றவர்கள் குருவை நம்போன்றவரென்று கிஞ்சித்தாவது எண்ணினுர்களேயாயின் அவர்கள் அதி மூடரென்னும் பட்டம் பெற்று அவர்கள் செய்யும் பூசையின் பலனையும் பெற மாட்டார்களென்பது உறுதி. திருமூலர்

சுத்தசிவன் குருவாய்வந்து தூய்மை செய்து
அத்தனை நல்கருள் காணு அதிமூடர்
பொய்த்தகு கண்ணுல் நமரென்பர் புண்ணியர்
அத்தன் இவனென்று அடிபணிவாரே

என்கிறுர்.

சைவர்களாகிய நாம் உறுதியாகக் கொள்ள வேண்டிய வழிபாடு மூன்று இடங்களில். அவை குருலிங்க சங்கமம் என்பன. வழக்கமாகச் சொல்லும் இந்த வாக்கியத்திலிருந்தே முதலில் குருவழிபாடு என்பதைத் தெரிந்து கொள்ளலாம். சிவபெருமானே குருவாக வந்து அருள் புரிகின்றுர் என்று ஐயமற உணரவேண்டும்.

அருபரத்தொருவன் அவனியில் வந்து
குருபரன்ஆகி அருளிய பெருமையைச்
சிறுமை யென்றிகழாதே

என்று மணிவாசகப் பெருமான் அருளுகின்றுர். தேசிகர் தம்மைச் சிவநேசர் தம்மையும் ஈசனெனவே யுளத்துளெண்—என்று சைவ சமயநெறி கூறுகின்றது. நாம் செய்த புண்ணியத்தாலும் சிவபெருமான் திருவருளாலும் வேதாகமக் கடலாகியும் குணமலையாகியும் ஞானநூல்களை முறையாகக் கற்று, கற்ற வழியில் தான்நின்றும் மாணுக்கர்களை நிற்கச் செய்தும் கைம்மாறு கருதாது சிவஞானச் செல்வத்தை வாரி வழங்கியும் கருணைக்கடலாய் விளங்குகின்ற சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

நமக்குக் குருவாகக் கிடைத்திருப்பதால் நாம்தான் பெரிய பாக்கியம் செய்த வர்கள் என்பதில் சந்தேகமில்லை. அதிக புண்ணியம் செய்தவர்களுக்குத்தான் இந்த உணர்வு வரும். இதுவரை கூறியவற்ருல் உணர்ந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் நான்கு. 1. சிவபெருமான் ஒருவரே எப்போதும் உள்ளவர். 2. அவரை அடைவதே நமது குறிக்கோள். 3. சிவனிடம் சேர்ப்பிப்பவர் குரு ஒருவரே. 4. ஒப்பில்லாத குரு நம் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரே.

பரப்பிரமம் இவன் என்றும் பரமசிவன் தான்என்றும்
பரஞானம் இவன் என்றும் பராபரன் தான்என்றும்
அரன்றருஞ்சீர் நிலையெல்லாம் இவனே என்றும்
அருட்குருவை வழிபடவே அவன் இவன்தான் ஆயே
இரங்கிய வாரணம்யாமை மீன்அண்டஞ் சினையை
இயல்பினெடு பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதாம் ஆக்குமாபோற் சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந்தானே

என்று சிவஞான சித்தியார் கூறிய வழியில் நின்று திருவருள் பெற்றுய்வோமாக.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணிலா னந்த அருவிநீர் பாயக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினுல் நீடி அறிவரும் பதிகம்
பாடினுர் பரவினுர் பணிந்தார்.

— பெரிய புராணம்.

சக்தியாகிச் சிவமாய் ....

பழ. சூடிக்கொடுத்தாள்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி".

என்கிறார் மாணிக்க வாசகப் பெருந்தகை. கேட்கும்போதே தென்னாட்டின் பெருமை தேனெனப் பாய்கிறது காதுகளில். குறிப்பாக "யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்!" எனத் தாம் அடைந்த சிவானந்தத்தை அன்பர்களுக்கு வழங்கி வரும் குருநாதர் அவர்களுக்கு எத்தனை முறை பிறவியெடுத்துக் கடன் பட்டாலும் காணாது. அந்தப் பேறு பெற்றவர்கள் என் கணவரும் நானும். நிற்க, அந்தப் பெருந்தகையின் மணி விழா மலரிலே என் சிற்றறிவுக்கு எட்டியதை எழுத வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தருமத்தில் சிறந்தோர் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள். தென்னாட்டில் 108 சிவத்தலங்களிலும் நகரத்தார் உபயம் மகா சிவன்ராத்திரியன்று நடைபெறுகிறது. சிலர் சக்தி பெரிதா? சிவம் பெரிதா? என வழக்காடுகிறார்கள். மன்றத்தில் பேச நன்றாக இருக்குமே ஒழிய, சக்தியையும் சிவத்தையும் பிரித்துப் பார்க்கவே முடியாது. உலகியலில் சர்வ சாதாரணமாகப் பாமரரும் அறியும் நாணயத்தில் ஒரு பக்கம் மட்டும் இருந்தால் அதற்கு மதிப்புண்டா? இரண்டு பக்கம் இல்லாத நாணயம் தான் உண்டா? ஆனால் என் வாதம் என்னவென்றால், சக்தியாகிச் சிவமாதல் மிக்க பெருமையுடைத்து என்பதுதான். மகளிர் அந்தக் காலத்தில் கணவனைத் தெய்வமாக வழிபட்டார்கள். கணவன் வழிகொண்டு தெய்வத்தை வழிபட்டார்கள். இன்று நாகரிகம் முற்றிப் பெண்கள் நாடாளத் தொடங்கி விட்டகாலம். நாடு மாறலாம், பெண்கள் பழக்க வழக்கத்தில் மாற்றம் ஏற்படலாம். அதற்காக தெய்வ சிந்தனையில் மாற்றம் இருக்கக் கூடாது. சக்தியையும் சிவத்தையும் மானசீகமாக அறிந்து இன்புறுவதற்குச் சிவபூஜை ஒன்றே சிறந்த வழி.

இல்லறத்தில் இருப்பவர்கள் சிவ பூஜைக்கு ஏற்றபடி தூய்மையாக இருக்க இயலாது என்று எண்ணி அநேகத் தாய்மார்கள்—சகோதரிகள் சிவபூஜை செய்ய அஞ்சுகிருர்கள். இல்லறத்திலிருந்து பூஜை செய்தல் மிக்க சிறப்புடையது. பெரும்பாலான பெண்கள் மாதவிடாய் நின்றபின் பூஜை எடுக்க நினைக்கிருர்கள். அவசியமே இல்லை! மாதவிடாய் நம் உடம்பில் இயற்கையாய் நடைபெறுவது. இயற்கைக்கு மாற்றே இல்லை—குறையே இல்லை. சிவபூஜை செய்தலின் நோக்கம் சிறிது சிறிதாக உலக இன்பங்களை ஒதுக்கி—ஐம்புலன்களை அடக்கிப் பேரின்பத்தைக் காண்பதாகும். மாடு, மனை, மக்கள் செல்வங்கூட வராது. நாம் செய்யும் தர்மமும் அந்தப் பரம்பொருளின் கருணையும்தான் கூடவரும். மாவீரர் அலெக்சாந்தர் படுக்கும்போது இரண்டு கைகளையும் சிலுவைபோல் நீட்டிப் படுப்பாராம். ஏனெனில், "நான் இறந்து விட்டால் ஒன்றும் கைகளில் எடுத்துச் செல்லப் போவதில்லை என்பது உலகுக்குத் தெரியட்டும்" என்பாராம். அவரைவிட நாடு பிடித்த அரசர் யாருமில்லை இறுதியில் கூடச்சென்றது ஒன்றுமில்லை. சிவபூஜை செய்யத் தொடங்கிய சில நாட்களிலேயே நாம் பெரும் பாக்கியசாலி என்ற எண்ணம் நிறைகிறது. எதற்காகவும் மனதில் கவலை கொள்ளும் நிலை மறந்து அவனிடத்தில் பாரத்தைப் போட்டு மன அமைதி பெறும் பழக்கம் நேருகிறது.

நம்மவரிடையே சிவபூஜை என்பது பெரியதொரு தொண்டாகக் கருதப்பட்டு வருகிறது. "நேரம் இருக்காது" என்பது பல பெண்களின் வாதம். ஏன் இருக்காது? நாம் தலைவாரவில்லையா? பூச்சூடவில்லையா? பொட்டிட்டு மையிடவில்லையா? இதற்கெல்லாம் நேரம் ஒதுக்கும்போது நம் ஆன்ம மூர்த்தியை—கருணுகரனைச் சற்று நேரம் சிந்திக்கத்தானு நேரமிருக்காது! "எல்லாச் சோலியும் முடிந்து பின்னர் சிவபூஜை எடுக்கலாம்" என்கிருர்கள். பிரயோஜனமேயில்லை, கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்த கதைதான். நமக்கு எப்போது ஓய்வு? மனிதராய்—அதுவும் பெண்ணுய்ப் பிறந்த அன்றிலிருந்து இறக்கும்வரை நமக்கு ஓய்வே இல்லை. ஏனெனில் மனம் அப்படிப்பட்டது. முதலில் நாம் பெற்ற மக்களுக்குத் திருமணம் செய்து பின்னர் பூஜை எடுக்க நினைப்போம். ஆயிற்று, திருமணச் சடங்கு முடிந்த பத்தாம் மாதம் பேரனே பேத்தியோ நம்மை ஆக்கிரமிப்பார்கள். அதற்காக நான் பேரன் பேத்திகளைப் பார்க்கவோ, வளர்க்கவோ வேண்டாம் எனக் கூறுவதாகப் பொருள் கொள்ளக் கூடாது. நம் அன்றுடக் கடமைகளில் பூஜையும் ஒன்றுக அவசியம் கொள்ள வேண்டும் என்று தாய்க் குலத்தைத் தாள் பணிந்து வேண்டுகிறேன்.

நாம் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது என்று நினைத்தால், குருவி கோபுரத்தைத் தாங்குவது போலாகும். எம்பெருமான் ஆட்டுவிக்கிருன். நாம் ஆடுகிறோம். இதுதான் தத்துவம். நாமெல்லாம் கடலில் விடப்பட்ட தெப்பம். காற்று எந்தப்பக்கம் அடிக்கிறதோ அந்தப் பக்கம் அடித்துச்

செல்லப் படுகிறோம். "அவனன்றி ஓர் அணுவும் அசையாது." நமக்கு மேல் ஒரு சக்தி இருக்கிறது. அதுதான் பரம்பொருள். அவனை அடைவதற்கு அவன் அருள் வேண்டும். "அவன ருளாலே அவன் தாள் வணங்கி" என்பது திருவாசகம்.

குறிப்பாக, கணவன் சிவபூஜை செய்பவரானால் மனைவி அவசியம் செய்தே ஆகவேண்டும். அப்போது தான் பழம் நழுவிப் பாலில் விழுந் ததைப் போன்ற பேரின்பம் கிடைக்கும். உமையைச் சரிபாதி யாகத் தன் உடலில் கொண்ட உமையொரு பாகன் உணர்த்துவதே மனைவி—கணவனில் பாதிஎன்பது தான். அப்படியிருக்க, ஒருபாதி சிவ பூஜை எப்படி சிறப்புடையதாகும்.

பகுத்தறிவாளர் என்ற ஒரு சாரார் கடவுள் இல்லை என்று பிரச் சாரம் பண்ணி வருகிறார்கள். இன் றைய மாணவர்களை அவர்களின் கோஷம் கவராமல் இருக்க தாய் மார்கள்தாம் பெரும் பங்கேற்க வேண்டும். கருவிலேயே குழந்தை களுக்குத் திருவை வளர்க்க வேண்டும். பிரகலாதன் கருவில் திருவுடையோன். இன்றைய சமூகம் சீர்பெற வேண்டு மானால் தாய்மார்கள் சிவநேச முடையவராய் இருத்தல் வேண்டும். வெளிப்பகட்டில் மயங்கும் கணவன் கூடத் தன் மனைவியின் சிவசிந்தனை கண்டு சிவநேசனாக மாறக்கூடும்.

ஆக, சக்தியாகிய நாம் (பெண்கள்) முதலில் சிவதீட்சை பெற்று, நம் தலைவரையும் சிவபூஜை செய்ய ஊக்குவித்துச் சக்தியாகிச் சிவமாகும்படி வேண்டுகிறேன்.

மரக்காலால் அளந்தவர்கள்

நகரத்தார்கள் சிவ தருமத்தை முன்னிட்டுக் கொண்டே வாழ்பவர்கள். இன்ன கோயிலுடையார் இவர்கள் என்று வழங்குவதே இதற்குச் சான்றாகும். வயிநகரம் குடும்பத்தார் துவாதசாந்த க்ஷேத்திரமான மதுரையில் சென்ற நூற்றாண்டில் பல லட்ச ரூபாய் செலவழித்துத் திருப்பணி செய்த குடும்பத் தினராவர். இக் குடும்பத்தின் பெருமை குறித்துச் சத்திரம் சோம.அவர்கள் அமராவதி புதூர்க்காரர்கள் சிவ புண்ணியத்தை மரக்காலால் அளந்தவர்கள் என்று வியந்து கூறுவார்கள்.

— சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார்.